69/86

வெளியீடு 26-10-1985 Issued 26—10—1985

2722

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மார்ச் 18, 1985 - தொகுதி II எண் 5

Monday the 18th March 1985 - Volume II No 5

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Madras - 600 009**

விலை: ரூ. 3-50 காசுகள்

( Price Rs, 3-50 paise

2822

T.N.L.A. Debates

Official Report

Vol-II No5

18th March 1985.

D I
V211, 31 N85
N85.2.5
136369

V2'.81 N85
N85.2-5
136369
சென்னை-600 008.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை. I

**1985, மார்ச் 18, திங்கட்கிழமை.**

**பங்குனி 5, ரக்தாட்சி, திருவள்ளுவர் ஆண்டு-2016.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப்படும்."

கேட்டவர் பலரும் வெறுக்கும்படியாகப் பயனில்லாத சொற்களைச் சொல்லுகின்றவன் எல்லோராலும் இகழப்படுவான்.

## 1. வினாக்கள் — விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### அடையாற்றுக்கு வெள்ளத் தடுப்புச் சுவர்

4—(*வினா எண் 222) — திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதை மறைமலை அடிகள் பாலத்திலிருந்து நந்தம்பாக்கம் பாலம் வரை திடீர் நகர், கோதா மேடு, நெருப்பு மேடு, செட்டி தோட்டம், விநாயகபுரம், சாரதி நகர், முத்தாரங்கம் பிளாக் போன்ற ஆற்றோர பகுதிகளை வெள்ள அபாயத்திலிருந்து பாதுகாக்க வெள்ள தடுப்பு சுவர் கட்டும் பணி காலதாமதம் ஆகக் காரணம் என்ன?

(ஆ) பணி எப்பொழுது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : ஜாபர்கான்பேட்டை தாம்பாலம் முதல் அடையாறு பாலம்வரை அடையாற்றை மேம்பாடு செய்ய அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. நில ஆக்கிரமிப்பினால் இப்பணியை துவக்க இயலவில்லை.

(ஆ) நில ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்ட பின்னர் இப்பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## உள்ளடக்கம்

18—3—1985


| | | பக்கங்கள். |
|---|---|---|
| 1. | வினாக்கள்—விடைகள்—<br>உடுக்குறியிட்ட வினாக்கள் | 563—567 |
| 2. | தகவல் கோரல்—<br>ஒவ்வொரு நாளும் வினாப் பட்டியலில் அதிக வினாக்களை இடம் பெறச் செய்தல் | 567—568 |
| 3. | கவன ஈர்ப்பு—<br>கடலூர், தேவனாம்பட்டினம் கடற்கரையில் மாசிமக விழாவில் ஏற்பட்ட படகு விபத்து | 568—569 |
| 4. | அறிவிப்பு—<br>சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு 1985 (ஆ.இ.) | 579 |
| 5. | அரசினர் சட்ட முன்வடிவுகள்— | |
| | (அ) சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு 1985 | 580—591 |
| | (ஆ) சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு 1985 | 591—613 |
| | (இ) கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த] சட்ட முன்வடிவு 1985 | 614—542 |
| | (ஈ) நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு 1985 | 642—669 |
| | (உ) மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு, 1985 | 663—672 |
| | (ஊ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1985 | 673—722 |
| | (எ) ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1985 | 673—723 |
| | (ஏ) ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு 1985 | 673—724 |
| 6. | பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 725—727 |


D 2 A 10—1

**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1978-லிருந்து அந்தப் பணி நடைபெறாமல் இருக்கிறது. நில ஆக்கிரமிப்பாளர்களை அகற்றுவதற்காக ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதா? அந்த ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றுவதற்கு அரசு அதிகாரிகள் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். நடப்பு நிதியாண்டிலேயே அந்த வேலைப் பணி துவங்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்குப் பொறுத்தமட்டிலும் அரசு ஆணை எண். 2281, பொதுப் பணித் துறை, நாள் 6—11—1982 அன்றே இந்தத் திட்டத்திற்கான ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது. நான் முன்பே சொன்னது போல், நில ஆக்கிரமிப்பின் காரணமாகத்தான் அந்த திட்டத்தினை மேற்கொள்ள முடியவில்லை. நில ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டுமென்பதற்காக சம்பந்தப்பட்ட வருவாய்த்துறை அதிகாரிகளோடு துறை கலந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. தற்போது சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகி ஆக்கிரமிப்பாளர்களை அகற்ற நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு நிதி ஆண்டிலேயே ஆக்கிரமிப்பாளர்களை அகற்றும் பணி முடிவுற்று, வேலைப் பணி ஆரம்பிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல், இந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுவிட்ட காரணத்தினால் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டவுடன் உடனடியாகப் பணி தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. வி. க. பாலம் அருகில் உள்ள கோட்டூர் கனால் பாங்க் ரோடு, மல்லிகா நகர் பகுதியிலுள்ள மக்களுக்கு வெள்ளம் ஏற்படும்போது பாதிப்பு ஏற்படாத அளவுக்குத் தடுப்புச் சுவர் கட்டும் பணியை மேற்கொள்ள அரசுக்கு உத்தேசம் உண்டா?



அதே போல், நீண்ட காலமாக அடையாற்றில் தூர் வாராத காரணத்தினால், தூர்வாடையும், கொசு உற்பத்தியும், தண்ணீர் போக்குவரத்துத் தடையும் ஏற்படுகிறது. இதை நீக்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அரசுக்குத் திட்டம் உண்டா?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** பேரவை தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய இரண்டு வேண்டுகோள்களும் ஏற்கனவே இந்தத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டே, இந்தத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வர அரசு தீர்மானித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. டி. ஆர். வெங்கட்ரமணன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்பாளர்களை நீக்குவதற்காக நடவடிக்கை எடுப்பது பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நமது உயர்நீதிமன்றத்தைச் சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகளை — பொதுவாக நீதித் துறை மிகவும் மெதுவாகச் செயல்படும் என்று சொல்வார்கள்; ஆனால் மிக விரைவிலே உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு, ஆக்கிரமிப்புகளை — மிக விரைவிலே அகற்றியிருக்கும் போது, சைதைப் பகுதியிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற ஏன் தாமதம் ஆகிறது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆக்கிரமிப்பாளர்களை அகற்றுவதில் இருக்கக்கூடிய இடர்பாடுகள் என்னைவிட வழக்கறிஞராகிய மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும் என்று கருதுகிறேன்.

## வேளச்சேரி ஏரியில் நீர்க்குறைப்புப் பணி.

5.—(*வினா எண். 307)—**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளச்சேரி ஏரியில் நீர்க்குறைப்பு பணியால் நேரு நகர் மற்றும் வேளச்சேரி பகுதிகளில் வாழும் ஆறாயிரம் குடும்பங்கள் பயன்பெறும் திட்டத்திற்கான உத்தரவு பிறப்பித்தும், பணிகள் துவங்க காலதாமதம் ஆவது ஏன்?

(ஆ) நடப்பு நிதியாண்டில் பணிகள் துவங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்** (அ) இத்திட்டத்திற்கான மதிப்பீடு தலைமைப்பொறியாளர் (பாசனம்) அவர்களின் ஆய்வில் உள்ளது.

(ஆ) திட்ட மதிப்பீடு அரசுக்கு கிடைக்கப் பெற்று, அரசு ஒப்புதல் வழங்கப்பெற்ற பின் பணி மேற்கொள்ளப்படும்.

**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டமும் அதே போல் காலங்கடந்துகொண்டு வருகிறது. திட்டம் ஆய்விலிருக்கிறது என்றே சொல்லிக் கொண்டு வருகிறார்கள். எனவே, இந்தத் திட்டத்தினை நடப்பு நிதி ஆண்டில் சேர்த்துக் கொண்டு பணி துவங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** தலைவரவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தமட்டில், இந்தத் திட்டம் நிறைவேற்றப்படாவிட்டால் அந்த ஏரியின் கொள்வாயிலிருக்கிற இந்திரா நகர், பெரியார் நகர், கக்கன் நகர், திரௌபதி நகர் முதலிய பகுதிகள் தண்ணீரால் பாதிக்கப்படும். இந்த ஏரி நிரம்பும் போது அந்தக் குடியிருப்புகள் நீரில் மூழ்கிவிடும் என்பதால், அதை அரசு உணர்ந்திருப்பதால், ஏற்கனவே இருக்கக் கூடிய ஏரி நீர் மட்டத்தை நான்கு அடி குறைக்க தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கக்கூடிய வகையில் அரசு தலைமைப் பொறியாளரைப் பணித்திருக்கிறது. 23—3—1985 க்குள் அதற்கான கோப்புகளை அனுப்புவதாக அவர் தெரிவித்திருக்கிறார். அவை வந்தபின்னால் அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. சா. துரைசாமி:** தலைவரவர்களே, 1978 ஆம் ஆண்டு வெள்ளச்சேதம் ஏற்பட்டபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கே உத்தரவிட்டார்கள். இருந்தபோதிலும் அந்த வேலை இன்னும் தொடங்கப்படாமல் நிலுவையில் இருக்கிறது என்று தலைமைப் பொறியாளர் சொல்கிறார். அரசு அதை வற்புறுத்தி, நடப்பு நிதியாண்டிலாவது இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ள ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல மக்களுக்கு ஏற்படுகின்ற இன்னல்களை உடனடியாகக் களைய வேண்டுமென்ற சீரிய நோக்கத்தில் இந்த அரசு செயல்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே இந்தத் துறைக்கு தகுந்த அறிவுரைகள் வழங்கியிருக்கிறார்கள். அந்த அறிவுரைகளை மேற்கொண்டு அரசு உரிய நடவடிக்கைகளைத் துரிதமாக எடுக்கும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி. பி. சிந்தன்:** பேரவைத் தலைவரவர்களே, இதே முறையில் என்னுடைய வில்லிவாக்கம் தொகுதியிலும் பல பிரச்சனைகள் இருக்கின்றன. அதையும் தீர்த்து வைக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படிப்பட்ட பிரச்னை எல்லாத் தொகுதிகளிலும்தான் இருக்கும்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக ஒரு கேள்வி போட்டால் நிச்சயமாக அதற்குரிய பதிலை நான் அளிக்க இயலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள் — விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 2. தகவல் கோரல்.

ஒவ்வொரு நாளும் வினாப்பட்டியலில் அதிக வினாக்கள் இடம் பெறச் செய்தல்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய நிகழ்ச்சி நிரலில் 'வினாக்கள்—விடைகள்' பகுதி மிகவும் முக்கியமானதாகும். முன் வரிசையில் இருக்கக்கூடியவர்களைவிட பின் வரிசையில் இருக்கிறவர்கள் தங்களுடைய தொகுதியில் இருக்கிறபிரச்சனைகளை எடுத்துச் சொல்லி, அரசாங்கத்தின் மூலம் அவற்றுக்குத் தீர்வுகாண நினை

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1985 மார்ச் 18

கிறார்கள். அதைப்போன்று அரசாங்கம் தன்னுடைய திட்டங்களை, சாதனைகளை எடுத்துச் சொல்வதற்கும் இது ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும். ஆனால் என்ன காரணத்தாலோ ஒரு நாளைக்கு இரண்டு வினாக்கள்தான் என்ற முறையில் வந்து கொண்டிருக்கிறது. இதிலே என்னுடைய ஐயம் என்னவென்றால் — மாண்புமிகு சைதை உறுப்பினர் அவர்கள் தவறாக எண்ணக் கூடாது — வருகின்ற இரண்டு வினாக்களும் சைதை தொகுதி பற்றி மட்டும் இருக்கின்றன. சைதை தொகுதியைப்பற்றி வருவதிலே எங்களுக்கு ஆட்சேபணை கிடையாது. அதைப் போன்று மற்ற தொகுதிப் பிரச்னைகளும் வரவேண்டுமென்பது தான் எங்களுடைய ஆசை. ஒரு நாளைக்கு 20 கேள்வி, 18 கேள்வி என்று வந்தால்தான் மற்ற தொகுதிப் பிரச்னைகளும் வரும்.

(முற்பகல் 9-10.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வி போடுகிறார்கள். அவை ஆய்வு செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி வைக்கப்பெறுகின்றன. துறைகளிலிருந்து பதில் வந்தவுடன் இங்கே எடுத்துக்கொள்ளப்படும்; அதிலே தாமதம் ஏற்படாது. சைதை துரைசாமி அவர்களுடைய வினாக்கள் வந்துகொண்டிருப்பதற்குக் காரணம் அவர்கள் தனிப்பட்ட முயற்சி எடுத்துக்கொண்டு, சம்பந்தப்பட்ட துறைகளிலிருந்து பதில்பெற ஏற்பாடு செய்கிறார்கள். (குறுக்கீடு) அதைப்போல் எல்லோரும் செய்ய வேண்டுமென்று நான் சொல்லவில்லை. விரைவில் பதில்கள் வந்துவிடும். நான் ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர்களுக்கு வேண்டுகோளும் விடுத்திருக்கிறேன். அவர்களும் துரிதமாகப் பதில் அனுப்ப ஏற்பாடு செய்வார்கள். பதில் வந்தவுடன் அவையில் எடுத்துக்கொள்ளப்படும்.

### 3. கவன ஈர்ப்பு.

#### கடலூர், தேவனாம்பட்டினம் கடற்கரையில் மாசிமக விழாவில் ஏற்பட்ட படகு விபத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாளர்கள், இரா. தாமரைக்கனி, வ. பொன்னுரங்கம், டி. ஆர். வேங்கடராமணன், மா. கதிர்வேலு, வி. கோ. செல்லப்பா, கு. ரமணி,



1985 மார்ச் 18] (பேரவைத் தலைவர்)

கோ. வீரய்யன், எம். செல்லமுத்து, ஜே. ஹேமச்சந்திரன், வி. பி. சித்தன், சு. சிவராஜ், குமரி அனந்தன், எல். என். இராமசாமி, ந. சிவஞானம், மெ. ஆண்டி அம்பலம், எஸ். சிவராமன், ப. தீர்த்தராமன், கே. எம். தங்கமணி, சி. பழனிமுத்து, சு. பாலன், கு. சுப்பராயன், பொ. உத்திராபதி, டாக்டர் தே. குமாரதாஸ், அ. ரகுமான்கான் மற்றும் எஸ். வேணுகோபால் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, "6—3—1985 அன்று கடலூர் அருகே தேவனாம்பட்டினம் கடற்கரையில் மாசி மகம் திருவிழாவை முன்னிட்டு சாமி கும்பிடச் சென்றவர்கள் படகு கவிழ்ந்து இறந்தது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதல் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தேவனாம்பட்டினம் கடற்கரை கிராமம் கடலூரின் புதிய நகரத்தின் கிழக்கு பாகத்திலுள்ளது. அங்கு மாசிமகம் ஆண்டு தோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. அச்சமயம் பொது மக்கள் கட்டுமரங்களை பயன்படுத்தி கடலில் சுற்றிப் பார்ப்பது வழக்கம். அதுபோன்று இவ்வாண்டு 6—3—1985 அன்று மாசி மகம் கொண்டாடப்பட்டது. அன்று காலை 9.45 மணியளவில் 30' நீளம் 9' அகலமுள்ள 'கல்பனா' என்கிற இயந்திரப் படகை அதன் சொந்தக்காரரான தேவனாம்பட்டினத்தைச் சேர்ந்த திரு. மன்னாங்கட்டி என்பவர் சுற்றிப்பார்ப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார். அவர் திரு. ஆறுமுகம் மற்றும் திரு. செல்வராஜ் ஆகிய இரண்டு படகு ஓட்டுநர்களை நியமித்துள்ளார். காவல்துறை மற்றும் தேவனாம்பட்டினம் பஞ்சாயத்தார் ஆகியோரின் எச்சரிக்கையையும் மீறி படகின் சொந்தக்காரர் தன் சகாக்களுடன் பொதுமக்களிடம் தலை நபருக்கு ஒரு ரூபாய்

(திரு. இரா. தாமரைக்கனி) [1985 மார்ச் 18

3 பேர்களோ அல்லது 4 பேர்களோ போகலாம் என்ற ஒரு வரை
முறை இருக்கிறது. இதுமாதிரியான உச்சவரம்பு இந்த படகில்
ஏறிச்செல்வதற்கும் இருக்கிறதா? குறிப்பிட்ட நபர்களுக்கு
மேல் இதில் ஏறிச் செல்லக்கூடாது என்று தடை விதிக்கப்படுமா?
இந்த விபத்து ஏற்பட்டதற்குக் காரணம் படகில் கோளாறு
ஏற்பட்டிருக்கிறது. இந்த மாதிரியான படகை, அங்கே உள்ள,
ஆர். ஐ., தாசில்தார், பொதுப்பணித்துறை அதிகாரிகள் சோதனை
செய்திருக்கிறார்களா என்பதை அறிய ஆசைப்படுகிறேன்.
அப்படி சோதனை செய்யாமல் கடமையிலிருந்து தவறிய
அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன்வருமா
என்பதோடு, இந்த மாதிரி திருவிழாக் காலங்களில் அதிகமான
பேர்கள் ஏற்றிச் செல்லாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்
படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத்
தலைவர் அவர்களே, இது மாதிரி படகுகளும், மற்றும் உள்ள
பல்வேறு படகுகளும் அன்றைக்குச் சுற்றியிருக்கின்றன.
ஒவ்வொரு படகிலும், 50 பேர்கள், 60 பேர்கள், 70 பேர்கள் என்று
படகுக்குத் தகுந்த மாதிரி அழைத்துச் செல்வது எப்போதுமே
வழக்கமாக இருந்து வருகிற ஒன்று. இந்த விபத்து ஏற்பட்ட
தற்குக் காரணம், அந்தப் படகிலே ஒரு கோளாறு ஏற்பட்டு
அதனால் கடல் தண்ணீர் உள்ளே புக ஆரம்பித்திருக்கிறது.
உள்ளே புகுந்த தண்ணீரை வெளியேற்றுவதற்காக, படகி
லிருந்த கை பம்பை உபயோகித்து இருக்கிறார்கள். அப்படி
உபயோகிக்கும்போது, கை பம்பு இருந்த பலகையின்
ஒரு பகுதி கடலில் விழுந்துவிட்டது. எனவே கடல்
தண்ணீர் ஏராளமாக உள்ளே புகுந்திருக்கிறது. கடல்
தண்ணீர் உள்ளே புக ஆரம்பித்தவுடன், எல்லோரும் பயந்து
படகின் ஒரு பக்கத்தில் குவிய ஆரம்பித்தனர். எல்லோரும்
ஒரே பக்கம் குவிய ஆரம்பித்ததால், படகு கவிழ்ந்துவிட்டிருக்
கிறது. அதிலே 50 பேர்கள் தப்பித்துக்கொண்டார்கள். மீதி
பேர்கள் தப்பிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு, 53 பேர்கள்
அதிலே இறந்து விட்டதாக — இந்த அறிக்கையில் கொடுத்
திருப்பதிலிருந்து — தெரிய வந்திருக்கிறது. அவர்கள் எப்படி
லைசன்ஸ் வாங்கினார்கள் என்பதற்கான விதிமுறைகள் எனக்கு
தற்போது தெரியவில்லை. சாதாரணமாக நாட்டுப் படகுகள்,



1985 மார்ச் 18] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மற்றும் மீன் பிடிக்கின்ற படகுகள் இதிலே பயன்படுத்தி வருகி
றார்கள். இந்த மாதிரியான விபத்துக்கள் தற்போதுதான்
நடைபெற்றிருக்கிறது. இதுவும் இந்தப் படகிலேதான் நடை
பெற்றிருக்கிறது. ஆகவே இதற்குக் காரணம் படகிலே ஏற்பட்ட
கோளாறுதான்.

**திரு. ப. பொன்னுரங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே,
இந்த அறிக்கை ஒரு முரண்பட்ட அறிக்கையாக இருக்கிறது.
ஏன் என்றால் விபத்து 6 ஆம் தேதி காலை 9.45 மணிக்கு நடை
பெற்றிருக்கிறது. 6 ஆம் தேதி சாயங்காலமோ, இரவிலோ விபத்து
நடக்கவில்லை. காலையில் நடைபெற்றிருக்கிறது, என்று
இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டு இருக்கிறது. 6 ஆம் தேதி
காலை 9.45 மணிக்கு நடைபெற்ற அந்த விபத்திற்கு மீட்புப்
பணிக்காக, 7 ஆம் தேதிதான் ஹெலிகாப்டர் போகிறது. மீட்புப்
பணிகள் ரொம்ப அவசரமாகச் செய்திருக்கிறார்கள். ஆகவே
அந்த இடத்திலே அட்மினிஸ்ட்ரேசன் எப்படி இருந்திருக்கிறது
பாருங்கள். அங்கேயிருந்த எஸ்.பி., கலெக்டர் போன்றவர்கள்
எல்லாம் என்ன செய்தார்கள். துரித நடவடிக்கை ஏன் எடுக்கப்
படவில்லை. (மணியடிக்கப்பட்டது). தலைவர் அவர்களே,
நான் இந்தப் பிரச்னை பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்
திருந்தேன். தாங்கள்தான் அதை கவன ஈர்ப்புத் தீர்மானமாக
மாற்றியிருக்கிறீர்கள். ஒத்திவைப்புத் தீர்மானமாக இருந்தால்
நான் அதன்மீது பேசுவேன். எனவே நான் நடந்த விஷயங்
களைக் கொஞ்சம் 'நேரேட்' செய்து பின்னர் கேள்விக்கு
வருகிறேன். அந்த போட்டிலே அதிகமான பேர்களை ஏற்றிச்
செல்லக்கூடாது என்று எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது.
யார் செய்திருக்கிறார்கள் என்றால் பஞ்சாயத்தாரும், போலீ
சாரும். ஆக்வே போலீசாரின் எச்சரிக்கையையும் மீறிச் சென்ற
அந்தப் படகுக்காரர்களின் மேல் ஏன் நடவடிக்கை எடுக்க
வில்லை? அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே
அங்கு சரியான அட்மினிஸ்ட்ரேசன் இல்லை என்று தெரிகிறது.

அது மட்டும் அல்லாமல், இன்னொரு ஹெலிகாப்டர், மீனம்
பாக்கம் விமான நிலையத்தில் ஸ்டாண்ட்பையில் வைத்திருக்கிறோம்.
அதைப்பயன்படுத்தியிருந்தால் கூட விபத்தின் ஒன் அவர், ஒரு
மணி நேரத்திற்குள் அங்கே போய் மீட்புப் பணிகளைச் செய்

இருக்கலாம். முயற்சி செய்திருந்தால் பலன் ஏற்பட்டிருக்கலாம். அக்கறை இல்லை. அட்மினிஸ்ட்டிரேஷன் அப்படி இருக்கிறது .......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவ்வளவு எக்ஸ்பிளெய்ன் பண்ணியது போதும். கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ப. பொன்னுரங்கம்: ஒரு உயிருக்கு 2 ஆயிரம் ரூபாய்தான் காம்பன்சேஷன் என்று வைத்திருக்கிறோம். அது முறையா, சரியா? தவிர, இதுபோன்ற விபத்துக்களுக்கு எதிர்காலத்தில் என்ன தடுப்பு நடவடிக்கை? ஆண்டுக்காண்டு வருகிற விழா என்று நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். மாசிமகம் போன்ற இப்படிப்பட்ட விழாக்களில் தக்க பாதுகாப்பு செய்ய என்னென்ன நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்? அத்தோடு இந்த நஷ்ட ஈட்டுத் தொகையையும் உயர்த்தித் தர அரசு முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையைப் பொறுத்த வரையில் முரண்பாடு எதுவும் இல்லை. இந்த அரசு தீவிர அக்கறையை எந்த முறையில் எடுக்க வேண்டுமோ அந்த முறையில் எடுத்துக் கொண்டதனால்தான், எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள், எடுக்கப்பட வேண்டிய வழியில், எடுக்கப்பட வேண்டியவர்களால் வகுக்கப்பட்டு எடுக்கப்பட்டு வருகிறது.

அப்படி இந்த விபத்து நடந்த உடனேயே அதற்கான செய்திகள் சம்பந்தப்பட்டவர்களுக்குப் போய் எந்தெந்த துறையில் எந்தெந்த அலுவலர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதெல்லாம் பின்னால் ஆராய்ச்சி செய்து விரிவான அறிக்கையில் நமக்குத் தெரிவிக்கக் கூடும். தற்போது மாவட்ட ஆட்சியாளர், மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர், வட்ட நியமைப்பு அலுவலர் கடலூர், துறைமுக அலுவலர் கடலூர் மற்றும் உதவி இயக்குநர் மீன் துறை ஆகியோர் விரைந்து மீட்புப் பணிகளை மேற்கொண்டனர்.

[illegible] போவதற்கு முன்னாலேயே பக்கத்திலே இருக்கிற நிலைச் சார்ந்த மீனவர்கள் வந்து விபத்தில் அகப்பட்டவர்களுக்கு அவர்களால் ஆன உதவியைச் செய்திருக்கிறார்கள்.





ஹெலிக்காப்டர் மதுரை போயிருப்பு என்றால் அதற்குக் காரணம், அந்தச் செய்திகள் எல்லாம் வந்து இவர்கள் எல்லாம் போய் பார்த்து அதற்குப் பிறகு மீட்புப் பணிக்கு ஹெலிகாப்டர் தேவை என்று தெரிந்தது. ஹெலிகாப்டர் மாலை 6 மணிக்கு மேல் அங்கே போக முடியாது. மறுநாள் காலையில்தான் போக முடியும். இப்படி எத்தனையோ பிரச்னைகள் இருக்கின்றன. அதற்கான முழு விவரங்கள் இல்லை. அறிக்கையாகக் கேட்டால் முழு விவரங்களையும் சேகரித்துத் தருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்று சட்டத்தை மீறி அவர்கள் ஏதாவது செய்திருந்தால், சட்டப்படி தண்டிக்கப்பட வேண்டியவர்களாகத்தான் அவர்கள் இருப்பார்கள். அதைப் பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும். என்ன நடந்தது என்ற முழு விவரம் தற்போது இல்லை.

இது குறித்து கடலூர் துறைமுகக் காவல் நிலையத்தில் இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 304 (ஏ)-ன் கீழ் குற்ற எண். 28/85-ல் பதிவு செய்யப்பட்டது. விசாரணைக்குப் பின் இவ்வழக்கு இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள் 282 மற்றும் 304 ( ii ) ஆக மாற்றப்பட்டு விசாரணையிலுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று எச்சரிக்கை செய்தும் அவர்கள் மீறி நடந்திருந்தால், அவர்கள் கைது செய்யப்பட்டிருந்தால், அதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அதை எடுக்க அரசு முயலும்.

திரு. வி. கோ. செல்லப்பா: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் அவர்கள் கூறியதிலிருந்து இன்னும் அங்கே உள்ள, இந்த விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணப் பணம் போய்ச் சேரவில்லை என்று தெரிகிறது. அவர்களுக்கு இப்படி 2 ஆயிரம் ரூபாய் என்று அறிவித்துள்ளது மிகவும் குறைவானத் தொகை. அதை தயவுசெய்து 10 ஆயிரமாக உயர்த்தித் தர அரசு முன் வருமா? எதிர் காலத்தில் இது போன்ற படகு விபத்துக்கள் நடைபெறாமல் தடுப்பதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதையும் தெரிவிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் இறுதியாக்கில் மற்றவைகள் நடக்கும்போதெல்லாம் போதாமல் அங்கிருந்து.

பெற்றுக் கொண்டு சுற்றிப்பார்ப்பதற்காக படகில் அழைத்துச் சென்றுள்ளார். அப்படகில் மொத்தம் 100 பேர் இருந்ததாகக் கூறப்படுகின்றது. படகு கடலூர் துறைமுகத்தை நோக்கி சென்று கொண்டிருந்தபோது கடலில் 1½ கிலோ மீட்டர் தூரத்தில் படகின் இயந்திரத்தில் ஏதோ கோளாறு ஏற்பட்டு ஓட்டம் தடைப்பட்டிருக்கிறது. படகின் சொந்தக்காரர் படகில் புகுந்த நீரை வெளியேற்ற கைப்பம்பை பயன்படுத்தியிருக்கிறார். அவர் அப்படி நீரை வெளியேற்றிக் கொண்டிருக்கும்போது கைபம்பு இருந்த பலகையில் ஒரு பகுதி கடலில் விழுந்திருக்கிறது. எனவே தண்ணீர் படகில் புகுந்துவிட்டிருக்கிறது. அதைப் பார்த்தவுடன் பம்பின் பக்கத்திலிருந்து பொது மக்கள் படகின் மறுபக்கத்திற்கு விரைந்திருக்கின்றனர். அதன் காரணமாக படகின் மறு பக்கத்தில் பாரம் அதிகமாகவே படகு கவிழ்ந்துவிட்டது.

2. இவ்விபத்தை பார்த்தவுடன் சோனாங்குப்பத்தைச் சேர்ந்த மீனவர்கள் கட்டுமரங்களில் விரைந்து சென்று சுமார் 50 பேரை மீட்டிருக்கின்றனர். படகில் இருந்த எஞ்சியுள்ள மக்களை காப்பாற்ற முடியாமல் போய்விட்டது. இவ்விபத்து தெரியவந்தவுடன் மாவட்ட மருத்துவ அலுவலரின்கீழ் மருத்துவர் குழு உடனே கடற்கரைக்கு விரைந்து மருத்துவ உதவிபுரிந்துள்ளனர். மாவட்ட ஆட்சியாளர், மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர், வட்ட இணைப்பு அலுவலர், கடலூர், துறைமுக அலுவலர், கடலூர் மற்றும் உதவி இயக்குநர், மீன்துறை ஆகியோர் விரைந்து மீட்புப் பணிகளை மேற்கொண்டுள்ளனர். அரசுக்கு உடனே தகவல் பெறப்பட்டு மீட்புப்பணிக்காக ஹெலிகாப்டர் அனுப்பி வைக்கப் பட்டது. அனைத்து துறைமுக அலுவலர்கள், இணைப்புத் துறை, காவல்துறை, வருவாய் மற்றும் பிற துறைகளைச் சேர்ந்த அனைத்து அலுவலர்களும் மீட்புப்பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளின் பேரில் 6—3—1985 அன்று 13 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. மீட்புப்பணிகளில் மீனவர்களும் ஈடுபட்டனர். உடல்கள் கிடைக்கப் பெற்றவுடன் அடையாளம் கண்டு உறவினர்களுக்கு தெரிவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 6—3—1985 அன்று மீட்கப்பட்ட 13 உடல்களும் பிரேத பரிசோதனைக்குப்பின் அடையாளம் கண்டு





உறவினர்களிடம் சேர்க்கப்பட்டுள்ளன. விபத்தில் உயிர் தப்பிய 6 பேர்களுக்கு கடலூர் அரசு மருத்துவ மனையில் சிகிச்சையளிக்கப்பட்டது.

3. அரசின் ஹெலிகாப்டரும், இந்திய கடற்படையின் கப்பலொன்றும் 7—3—1985-ல் மீட்புப் பணியை மேற்கொண்டன. அதன் பயனாக மேலும் 23 உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதுவரையில் 53 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. அவற்றில் 22 ஆண்கள், 20 பெண்கள், 5 சிறுவர்கள் 6 சிறுமிகள். இன்னும் 2 உடல்களை அடையாளம் கண்டுபிடிக்க முடியாமல் உள்ளன. அவைகளையும் அடையாளம் கண்டுபிடிக்க செய்தித்தாட்கள் மூலமாக தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

4. இவ்விபத்தில் மரணமடைந்த ஒவ்வொருவருக்கும் ரூ. 2,000 என்ற விகிதத்தில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி வழங்க அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. இதுவரை ரூ. 1,04,000 நிதி உதவி வழங்கியுள்ளதாக மாவட்ட ஆட்சியாளர் தெரிவித்துள்ளார்.

5. இவ்விபத்து குறித்து கடலூர் துறைமுக காவல் நிலையத்தில் இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 304 (A)-ன் கீழ் குற்ற எண் 23/85 பதிவு செய்யப்பட்டது. விசாரணைக்குப்பின் இவ்வழக்கு இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள் 282 மற்றும் 304 (II) ஆக மாற்றப்பட்டு விசாரணையிலுள்ளது.

6. மீட்புப்பணிகள் அவசரகால அடிப்படையில் மேற்கொள்ளப் பட்டன. இறந்தவர்களின் குடும்பங்களுக்கு நிதி உதவி தாமதமின்றி வழங்க அரசின் ஆணையின் பேரில் மாவட்ட ஆட்சியாளர் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளார். அரசு மேற்கொண்ட மீட்புப் பணிகள் மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து எவ்வித குற்றச்சாட்டும் எவரிடமிருந்தும் பெறப்படவில்லை. இவ்விபத்து குறித்து சட்ட ஒழுங்கு பிரச்சனை எதுவும் இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவனாம்பட்டினம் கடற்கரையில் மாசிமகம் திருவிழாவை முன்னிட்டு சாமி கும்பிடச் சென்றவர்களில் சுமார் 100 பேருக்கு மேலாக படகில் சுற்றிப் பார்க்கச் சென்றிருக்கின்றனர். சாதாரணமாக ஆட்டோ, டாக்சி என்றால், அதிலே

[1985 மார்ச் 18

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்ற அந்த நிலைமைகளை ஆராயும்படியாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அதன் பேரிலே இந்திய தண்டனைச் சட்ட பிரிவின் கீழ் வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன. அதற்கு பிறகு இந்த விசாரணை என்ன முடிவிற்கு வருகின்றதோ அந்த முடிவின் அடிப்படையில், அந்த தண்டனைச் சட்டத்தின் அடிப்படையில், உள்ளபடியே, முறையை மீறி, சட்டத்தை மீறி நடந்திருப்பவர்கள், முறைப்படி தண்டிக்கப்படக்கூடியவர்களாக இருப்பார்கள். உறுப்பினர் கூறுவது போன்று எதிர்காலத்தில் இப்படிப்பட்ட விபத்துக்கள், ஒரு அலட்சிய போக்கினாலே, அல்லது அக்கறை இன்மையினாலே ஏற்படாமல் இருப்பதற்கு அவற்றைத் தடுப்பதற்கு என்ன முறைகளை கையாளலாம், என்ன முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுக்கலாம் என்பது இந்த விசாரணை அறிக்கையின் தண்டனை பற்றிய விவரங்கள் வந்த பிறகு அரசு எடுக்கும்.

**திரு. குமரி அனந்தன்:** இந்தப் படகிலே 100 பேர்கள் ஏறிச்சென்றதாக இந்த விவர அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் மீட்கப்பட்ட சடலங்கள் 53 என்றும், காப்பாற்றப்பட்ட நபர்கள் 50 பேர்கள் என்றும் இந்த அறிவிப்பிலே குறிப்பிட்டிருப்பதன் அடிப்படையிலே பார்த்தால் 103 பேர்கள் கணக்கு வருகிறது. ஆனால் இதில் 100 என்று எழுதப்பட்டிருக்கிறது. இவ்விபத்தை பார்த்தவுடன் சோனாங்குப்பத்தைச் சேர்ந்த மீனவர்கள் கட்டுமரங்களில் விரைந்து சென்று அவர்களை மீட்டிருக்கின்றனர். அவர்களை பாராட்டி பரிசினை வழங்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். நான் இங்கே வினாவாக கேட்க விரும்புவது, இந்த துன்பம் வந்தபிறகு, மூழ்கியவர்களை கண்டுபிடிக்க குழியாட்கள் நாகப்பட்டினத்திலிருந்து வந்திருக்கிறார்கள். சென்னையிலோ அல்லது அதைச் சுற்றியுள்ள பகுதியிலோ குழியாட்கள் கிடைக்கவில்லை என்பதா? மேலும் மாசிமகம் போன்ற விழாக்கள் வருகின்றபோது அரசாங்கமே அந்த படகு போக்குவரத்தை ஏற்று அங்கிருக்கின்ற மக்களுக்கு ஆபத்து இல்லாத சூழ்நிலையை உண்டாக்க முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.



1985 மார்ச் 18]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்களே, மாசி மகம் விழா ஆண்டுதோறும் பலயிடங்களில் நடை பெறுகின்றன. பெரும்பாலும் கடலோரப் பகுதிகளில்தான், போராற்றுப் பகுதிகளில்தான் நடைபெறுகின்றன. இது, பல ஆண்டுகளாக நடைபெற்று வருகின்ற ஒன்றுதான். இந்த ஆண்டு ஏற்பட்ட இந்த விபத்து ஒரு தனிப்பட்ட தன்மையில இந்தப் படகில் ஏற்பட்ட கோளாறு காரணமாகத்தான் என்றளவிற்கு நமக்கு வந்திருக்கிறது. இதைப் பொறுத்தவரையில் எதிர்காலத்தில் எப்படிப்பட்ட எச்சரிக்கை நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டும் என்பதற்கான முறையில் விசாரணையினுடைய அறிக்கையை நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே அந்த வகையில் இந்தப் படகுகள் அத்தனையையும் அரசாங்கமே ஏற்று ஆங்காங்கே நடத்தும் என்ற முடிவிற்கு வருவது கடினமானதாக இருக்கும். அரசாங்கமே ஏற்று நடத்துவது இயலாது. ஆனால் அரசாங்கம் இப்படிப்பட்ட விபத்துக்கள் ஏற்படாமல் இருக்க என்னென்ன முன் எச்சரிக்கையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமோ அதை எடுப்பதற்கும் இந்த அனுபவத்தின் மூலமாகவும் இந்த விசாரணை அறிக்கையின் மூலமாகக் கிடைக்கப்படுகிற தகவலை வைத்துக்கொண்டும் எதிர்காலத்தில் எடுக்கப்படவேண்டிய தேவையான முடிவுகள் எடுக்கப்படவும் அதை நடைமுறைப்படுத்தவும் அரசு முயலும்.

(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஐந்து உறுப்பினர்கள் கேள்வி கேட்க அனுமதிக்கலாம் என்றிருக்கிறது. ஐந்து பேர்கள் கேள்வி கேட்க அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

### 4. அறிவிப்பு.

**சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு 1985 (ஆ.இ.)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 3/1985) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

## 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு 1985.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 3/1985) * ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26 ஆம் நாள் இப்பேரவையில் 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து (a) அமைச்சர்கள், சட்டமன்றப் பேரவைத் தலைவர், மேலவைத் தலைவர், சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர், சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் ஆகியோரின் சம்பளம் மாதமொன்றுக்கு மேலும் ரூ. 200 அதிகரிக்கப்படும். (b) நிதியாண்டு ஒன்றுக்கு ரயில்வே கூப்பன் தொகை 3,000 ரூபாயிலிருந்து 4,000 ரூபாயாக அதிகரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பையொட்டி (தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 3, 4, 5, 6 A (1) 12 (1) (a), 12-A (1) ஆகிய பிரிவுகளைத் திருத்த கருதப்பட்டுள்ளது.

2. உறுப்பினர்களுக்கு 12-A (1) பிரிவின்படி ரயில்வே கூப்பன்கள் வழங்குவதுபோல், முதலமைச்சர், பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர், மேலவைத் தலைவர், மேலவைத் துணைத் தலைவர், அமைச்சர்களின் பேரவைச் செயலாளர்கள் (Parliamentary Secretaries) உட்பட அமைச்சர்களுக்கு வழங்கப்படும்.

3. சட்டமன்றப் பேரவைத் துறையும், சட்டமன்ற மேலவைத் துறையும் தலைமைச் செயலகத்தின் தனித் துறைகளாக இருந்து வந்தன; அதற்குப் பதிலாக அவற்றை தனித்தனிச் செயலகங்

* 1985 ஆம் ஆண்டு மார்ச் 14-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.





களாக அமைக்கப்பட்டதன் காரணமாக, 12 (4-A) (b) பிரிவில் வருகின்ற சட்டமன்றப் பேரவைத் துறைபற்றிய குறிப்பீடுகளையும் மேலவைத் துறைக் குறிப்பீடுகளையும் அந்தந்தச் செயலகத்தைக் குறிக்கும் குறிப்பீடுகளையும் அந்தந்தச் செயலகத்தைக் குறிக்கும் குறிப்பீடுகளாக மாற்றக் கருதப்பட்டுள்ளன. மேலும் மேற்கூறிய சட்டத்தின்கீழ் செய்த அல்லது பிறப்பிக்கப்பட்ட யாதொரு விதி, அறிக்கை, படிவம் அல்லது ஆணை ஒன்றில் அந்தந்தத் துறைகள் பற்றி வருகின்ற குறிப்பீடுகளை சம்பந்தப்பட்ட செயலகத்தைக் குறிப்பிடுகின்ற குறிப்பீடுகளாகப் பொருள் கொள்ள வேண்டும் என்பதற்கான விதிமுறையை இயற்றவும் கருதப்பட்டுள்ளது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 9.30)

மேற்கூறியவற்றை அமுல்படுத்துவதற்கு தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளம் வழங்கல் (இரண்டாவது திருத்தச்) சட்டமுன்வடிவு சட்டப் பேரவையில் 1984 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 9 ஆம் நாள் அறிமுகம் செய்யப்பட்டது. ஆனால், சட்டமுன்வடிவு சட்டப் பேரவையில் ஆய்விற்கு எடுத்துக்கொள்வதற்கு முன்பாகவே சட்டமன்றங்கள் நாள் குறிப்பிடாமல் 1984 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15 ஆம் நாள் அன்று ஒத்தி வைக்கப்பட்டன. மேலும் சட்டமன்றக் கூட்டத்தொடர் ஆளுநரால் 1984 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31 ஆம் நாள் அன்று முடிவாக்கப்பட்டது. பிறகு சட்டப் பேரவை 1984 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 15 ஆம் நாள் பிற்பகல் கலைக்கப்பட்டது. சட்டப் பேரவையில் ஆய்வுக்காக நிலுவையில் வைக்கப்பட்டிருந்த சட்டமுன்வடிவு காலவதியாகி விட்டது. மேற்கூறிய காரணத்தால் மேலே கூறப்பட்ட சலுகைகளை அமுல்படுத்துவதற்கு தற்பொழுது ஒரு புதிய சட்டமுன்வடிவு சட்டப்பேரவையில் அறிமுகப்படுத்த கருதப்பட்டுள்ளது. அந்த முறையிலேதான் இந்தச் சட்டமுன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டமுன்வடிவு நிறைவேற்றப்படுமானால், 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து கூடுதல் சம்பளம் உறுப்பினர்களுக்கு கிடைக்கும். அதற்கு வகை செய்வதற்கு இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது.

* திரு. கு. ரமணி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட முன்வடிவை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில், இந்த சம்பள உயர்வை நாங்கள் எதிர்க்கிறோம். நமது மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் பல பேருக்கும் இதுவே கொஞ்சம் ஆச்சரியமாக இருக்கும். திரு. அனந்தன் அவர்கள் இதிலே மகிழ்ச்சியில்லை என்று சொல்லுகிறார். இருந்தாலும், நாங்கள் சொல்லக்கூடிய விஷயங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் கொஞ்சம் கவனத்தில் எடுத்துக்கொள்வது நல்லது அல்லவா என்பதை உங்களுடைய சிந்தனைக்கு விடுகிறோம். ஏற்கனவே, நமக்கு இருந்த சம்பளம் ரூ. 300. 400 ரூபாய் அலவன்ஸ். டெலிபோனுக்கு கொடுக்கப்படுவது ரூ. 350. இப்படி ஒட்டு மொத்தமாக ரூ. 1,050 வாங்கிக் கொண்டிருக்கிறோம். இப்போது சம்பளத்தை ரூ. 300 லிருந்து ரூ. 500 ஆக உயர்த்துகிறார்கள். அப்போது ரூ. 1,250 ஆகும். அதே மாதிரி மற்றவர்களுக்கும், அமைச்சர்கள், சபாநாயகர் அவர்கள், உதவி சபாநாயகர் அவர்கள், அதேபோல் கவுன்சிலிலே இருக்கும்படியான சேர்மன், டெபுடி சேர்மன் ஆகியோருக்கும் இந்த சம்பள உயர்வு கொடுக்கப்படுகிறது. இதற்காகும் மொத்தச் செலவு எவ்வளவு என்பதையும் இதிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

ஜனங்களைப் பற்றியும் நீங்கள் சிந்திக்க வேண்டும். சம்பள உயர்வு கொடுப்பதற்கான ஆர்கியூமென்ட்டைச் சொல்வதில் பயனில்லை. இன்றைக்கு நிலைமை என்ன? இப்போது வந்திருக்கக்கூடிய பட்ஜெட் பிரகாரம், ஒவ்வொரு குடும்பத்திலும், ஒவ்வொரு நபருக்கும் எத்தனை ரூபாய் ஒரு மாதம் அதிகச் செலவாகும் என்பது நம் கண் முன்னால் பார்க்கிறோம். பல விதமான சலுகைகளை இன்றைக்கு உழைக்கின்றவர்கள் இழந்திருக்கிறார்கள். விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு அவர்களுக்கு அமுலாக்க வேண்டியது கொடுக்கப்படாமல், அமுலாக்கப்படாமல் அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விலை ஏற்றம், வரி உயர்வு, வருமான குறைப்பு ஆகிய இப்படிப்பட்ட சூழ்நிலையில் கோடிக்கணக்கான மக்கள் வறுமையினால் துன்பப்பட்டு, அரசிடமிருந்து சலுகைகள் வேண்டுமென்றும், அரசு அவர்களுக்கு வாழ்வதற்கு வழிசெய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டும் பலவிதமான ரெப்ரசென்டேஷன், மகஜர்கள், கடிதங்கள், கூட்டங்கள், பெரிய வேலைநிறுத்தப் போராட்டங்கள் இன்று நாட்டிலே நடக்கின்றன.





இந்தச் சந்தர்ப்பத்திலே நமக்கு இருக்கக்கூடிய உரிமையினால் இந்தச் சட்டசபையில் உறுப்பினர்களாகிய நாம் எல்லாம் சேர்ந்து இங்கே சம்பள உயர்வுக்கான தீர்மானத்தைப் போட்டு, சட்டமாக ஆக்கி நாம் எடுத்துக்கொள்ள முடியும். இந்த வசதி நமக்கு இருக்கிறது என்பதற்காக நாம் இந்த சம்பள உயர்வு செய்வது சரியல்ல என்பது எங்கள் கருத்து. 1,050 ரூபாய் ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு போதுமா என்ற கேள்வியெல்லாம் கேட்கப்படலாம். அதுவல்ல பிரச்சினை. இன்றைக்கு நாட்டு மக்களுடைய பிரதிநிதிகளாகிய நாம் நமக்கு வேண்டிய சட்டத்தின் மூலம் சம்பள உயர்வை நாமே செய்ய முடியும். ஆனால், தொழிலாளிக்கோ, விவசாயிக்கோ, மற்றவர்களுக்கோ சம்பள உயர்வுக்காக ஒரு சட்டத்தை நாம் இங்கே கொண்டுவர முடியுமா? முடியாது. அந்த நிலைமையில் இப்படிப்பட்ட ஒரு நடவடிக்கையை நாம் எடுப்பது என்பது உண்மையிலேயே மக்கள் மத்தியில் வேதனையையும், சங்கடத்தையும் தான் உண்டாக்கும். அவர்களுக்கு சட்டப்படி உரிமை இருக்கிறது; அந்த உரிமையைப் பயன்படுத்தி ஒரு சட்டம் போட்டு, நாங்கள் கொடுக்கின்ற வரிப் பணத்தைக் கொண்டு, சேர்த்து வைத்திருக்கின்ற பணத்தை, அவர்கள் எடுத்துக் கொள்ளுகிறார்கள் என்ற எண்ணம் மக்களிடையே எழும். அதற்கு தெருவிலே நாம் அவர்களுக்கு பதில் கொடுத்தாக வேண்டும். இந்த நிலைமையில் மேலும் ரூ. 200 சம்பளத்தில் உயர்த்துவது என்பது அவசியமில்லை. அதை அரசு கைவிட வேண்டும் என்பது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்து. நாங்கள் இதைப்பற்றி பரிசீலனை செய்து பார்த்துத்தான் சொல்கிறோம். இப்போது அது அவசியமில்லை. பின்னால் பார்த்துக் கொள்ளலாம். ஆகவே, இப்போது அரசு இதை அமுலுக்கு கொண்டு வரக்கூடாது. அதை வாபஸ் பெறுவது நல்லது என்பது எங்களுடைய கருத்து. இதைச் சொல்லி நான் அமர்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் மட்டும் இதுபற்றிய அவர்களுடைய கருத்தை எடுத்துச் சொன்னார்கள். என்னபடியே சங்க காலத்தில் ஒரு பாடல் உண்டு.

'ஈ' என இரத்தல் இழிந்தன்று; அதன் எதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று;
கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று; அதன் எதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று

என்று ஒரு பாடல் உண்டு. சாதாரணமாகப் போய் எனக்குத் தா என்று கேட்பது மிக இழிவானது. இப்படி கேட்டதற்குப் பிறகு தர மாட்டேன் என்று சொல்வது அந்த விட இழிவானது. கொடுப்பது மிக உயர்வானது, ஆனால் கொடுப்பதே வேண்டாம் என்று சொல்வது அதைவிட உயர்வானது என்று சொன்னார்கள். அந்த நான்காவது கட்டத்திற்கு அருமை நண்பர், பேரவை உறுப்பினர் சொல்லியிருக்கிறார்கள். இப்படி அவர் வேண்டாம் என்றாலும், அந்தஸ்து கொடுப்பது தான் எங்களுடைய முறை என்கிற ஒரு காரணத்தாலே எங்களுடைய பெருந்தன்மையை எந்த அளவிற்கும் குறைத்துக் கொள்ளக்கூடாது என்கிற காரணத்தாலே அவர்களுக்கும் சேர்த்து கொடுப்பது என்கிற முறைக்கு வருகிறோம். அவர்கள் கருத்திலே ஒன்றைப் பார்க்கும்போது நாட்டு மக்கள் இப்படிப்பட்ட நிலைமைக்கு வர மாட்டார்கள். நாளிடையில் பார்க்கின்றபோது சட்டமன்றப் பேரவை, சட்டமன்ற மேலவை உறுப்பினர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற பொறுப்புகளும், கடமைகளும் ஆண்டுக்காண்டு அதிகமாகிக் கொண்டு வருகின்றன என்பது மட்டுமல்லாமல் பொது மக்களுக்காக, பொதுமக்களின் சார்பாக பொறுப்புகளை ஏற்று, இன்னும் சொல்லப்போனால், செலவினங்களைக்கூட ஏற்று அவர்களுக்காக பாடுபடவேண்டுமென்கிற சூழ்நிலை வருகின்ற போது, ஒவ்வொரு தனிப்பட்ட சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினரை பார்ப்போமேயானால், நாம் கொடுக்கின்ற சம்பளம், படி, மற்றவைகளைவிட கூடுதலாகத்தான் செலவழிக்கிறார்கள் என்கிற அளவிற்கு நாம் நன்றாகக் காணலாம்.

**திரு. கு. ரமணி**: நான் சொல்வது எங்களுக்குக் கஷ்டம் என்பது உண்மைதான். நான் இல்லை என்று சொல்லவில்லை. அந்தக் கஷ்டம் மக்களுக்குச் சேவை செய்வதிலே எங்களுக்கு நீங்கள் தரக் கூடிய பணத்திலே ஒரு குமாஸ்தாவை ஏற்படுத்துவதற்கோ, ஒரு செகரட்டரியை ஏற்படுத்துவதற்கோ நிச்சயமாக சாத்தியமல்ல. அரசு பார்த்து இந்த ரூ. 200 சம்பளத்தை உயர்த்திக் கொடுத்து, எவ்வளவு கஷ்டம் இருந்தாலும் உங்கள்





காசை வைத்து நீங்களே ஏற்படுத்திக் கொள்ளுங்கள் என்று சொல்வதற்குப் பதிலாக, சட்டசபை மெம்பர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு செயலாளரை அல்லது ஒரு டைபிஸ்ட்-கம்-செகரட்டரி என்ற அளவிற்கு ஏற்படுத்திக் கொடுத்து, அதற்காக அரசு சம்பளத்தைக் கொடுக்கும் என்று சொன்னால், நாங்கள் அதை நிச்சயமாக வரவேற்போம், இது ஜனங்களுக்கு சேவை செய்வதற்கு நிச்சயமாகப் பயன்படும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் சொல்வது சரி தான். அதை மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்களும் ஆமோதிக்கிறார்கள். கொடுக்கின்ற சம்பளத்திலே அவரவர்கள் தங்களுக்கு ஏற்றவர்களாக வைத்துக் கொள்ளலாம். ஏனென்றால், சில பேருக்கு செக்கரட்டரி தேவையில்லை. தானாகவே எல்லா காரியங்களையும் பார்த்துக் கொள்வார்கள். அந்தப் பணம் தங்களுடைய செலவினத்திற்குச் சரியாக இருக்கும் என்று நினைக்கலாம். இப்போது கூட அரசு அலுவலர்கள் பல பேருக்கு நாம் இரண்டு ஊழியர்கள் தந்தாலும் கூட, ஒரு ஊழியரை வைத்துக் கொண்டு, ஒரு ஊழியரை சரெண்டர் பண்ணிவிடுகிறோம்., அதற்கான சம்பளத்தைத் தந்துவிடுங்கள் என்று வாங்கிக் கொள்கிறார்கள். ஏன் நான் இதைச் சொல்கிறேன் என்று கேட்டால், அவர்கள் சொல்கிறபடி, சட்டமன்ற உறுப்பினர்களுக்கென்று ஒரு தனிச் சலுகை என்று வருகின்ற போது, செலவினமும் அதிகமாகும். அதிலே கூட நியாயம் இருக்கிறது என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் நிதியாதாரங்கள், நிதி ஆதாயங்கள், மற்றவைகளை வைத்துக் கொண்டு, முடிவு செய்ய வேண்டிய ஒன்று. ஆனால் அந்தச் செலவினங்கள் நாளுக்கு நாள் வளர்கின்ற தன்மைகளும், அவைகளை ஈடுகட்ட வேண்டிய நிலைமைகளும் இருப்பதன் காரணத்தினால், இந்த நிலை இங்கே கொண்டுவரப்பட்டது. ஆகவே தான் இதைக் கொண்டுவருவதனாலே மக்கள் ஒன்றும் எதிர்க்க மாட்டார்கள்.

கிட்டத்தட்ட சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 1984-85 ஆம் ஆண்டுக்கு ஏறத்தாழ ரூ. 2,500 கோடி நாம் வரவு-செலவுத் திட்டத்தில் போட்டோம் என்றால், சட்டமன்றப் பேரவை, மேலவையினுடைய நடவடிக்கைகள், அதனுடைய

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 மார்ச் 18

கூட்டத் தொடர் கூட்டங்கள், சம்பளம், படிகள், இங்கே வைக்கப் படுகின்ற வடுகள் ஆகிய அனைத்திற்கும் சேர்த்து கிட்டத்தட்ட ரூ. 1 கோடி தான் வருகிறது. ஆக இந்த அரசாங்கத்தை இயக்கு வதற்கு, மிக முக்கியமான அவையாக இருப்பதாலே நாம் அதிக மாக பொது மக்கள் பணத்தை செலவழித்து விட்டோம், பொது மக்கள் பணத்தை வீணாக்கிவிட்டோம், பாழாக்கி விட்டோம் என்கின்ற பெயர் பொதுமக்களிடத்திலே ஏற்படுவதற்கான நிலை இல்லை. ரூ. 2,500 கோடியிலே ரூ. 1 கோடி இந்த சட்டமன்றப் பேரவை, மேலவை ஆகியவற்றிற்காக செலவழிப்பதனால், மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் கூறுவது போல் தவறாக எண்ணவோ, அல்லது அதை வேறு விதமாக எண்ணுகின்ற நிலை யிலோ மக்கள் இருக்க மாட்டார்கள். என்றாலும் ஓரளவிற்கு வசதி மட்டுமல்லாமல், அந்தஸ்தும் உயர்தல் வேண்டும்.

(முற்பகல் 9-40)

சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் மதிக்கப்படுகிற சூழ்நிலை வந்தால் தான் நாட்டிலே ஜனநாயகம் கூட சிறப்பாக அமையும் அந்த வகையிலே நமக்கே கட்சி மாறு பாடுகள் இருக்கலாம், கொள்கை மாறுபாடு இருக்கலாம், கொள்கை களில் வேறுபாடு இருப்பதால் தான் ஆளும்கட்சி என்றும், எதிர்க் கட்சி என்றும் இருந்து, கருத்துக்களின் கொள்கைகளின் திட்டங் களின் தீர்மானங்களின் அடிப்படையில் அவரவர்கள் தங்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. இருந்தாலும் கூட சட்டமன்ற உறுப்பினர் மதிக்கப்படுகிற அள வுக்கு உறுப்பினர்களிடத்திலே பொதுமக்களுக்கு இருக்கிற நம் பிக்கையை நாம் ஒருவருக்கொருவர் குறைத்துக்கொள்ளுகின்ற வகையில் வாதங்களையும் மற்றவைகளையும் தெரிவிக்காமல் இருப்பது நல்லது. எல்லோரும் சேர்ந்து சட்டமன்றத்தின் மதிப்பை உயர்த்த வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களின் தனி மதிப்பையும் உயர்த்த வேண்டும். கருத்துக்களை வேண்டு மானால் காரசாரமாக விவாதிக்கலாம். கருத்துக்களின் அடிப் படையில் எவ்வளவு தாக்குதல் வேண்டுமானாலும் நடத்தலாம். வேண்டாம் என்று சொல்லவில்லை. ஒருவரை ஒருவர் தாழ்த்திக் கொள்ளுகிறோம் என்ற சூழ்நிலை வருகிற போது அது செய்தித் தாள்களில் வருகிறபோது பொதுமக்கள் இல பல சட்டமன்ற உறுப் பினர்கள் நன்கு கடமை உணர்வோடு பணியாற்றக்கூடியவர்களை



1985 மார்ச் 18] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கூட தவறாக கருதுகின்ற சூழ்நிலை ஏற்பட்டு எங்கு பார்த்தாலும் பரவி விடுகின்றது. அப்படிப்பட்ட சூழ்நிலை வந்து விடக்கூடாது. சட்டமன்ற பேரவை, மேலவை உறுப்பினர்களின் தகுதியும், மதிப்பும், மரியாதையும் உயர்த்தப்பட உயர்த்தப்பட நாட்டிலே ஜனநாயகம் செழிப்பாக அமையும். அவர்களுக்கு முழு அளவுக்கு பயன்படும் என்று கூட அல்ல, ஓரளவுக்கு பயன்படுகிற அளவுக் குத்தான் இந்தத் திட்டம் பயன்படும். மற்றும் உறுப்பினர்கள் பல் வேறு கருத்துக்களை மானிய கோரிக்கை விவாதம் வரும்போது ஆராயலாம். ஆகவே இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன் னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 3/1985) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 7.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைத் முன் னுள்ள கேள்வி:

"பிரிவு 7 சட்ட முன்வடிவின் ஒரு பகுதியாக சேர்க்கப் பெற வேண்டும்".

**திரு. டி. ஆர். வெங்கடராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"In Clause 7, for the expression 'Every Member of the Legislative Assembly or of the Legislative Council, who does not hold any of the Offices referred to in Section 3 to 6 shall for every financial

[திரு. டி. ஆர். வேங்கடரமணன்] [1985 மார்ச் 18

year, be provided with railway coupons for a value of three thousand rupees` *substitute* the expressions 'Every Member of the Legislative Assembly or of the Legislative Council including any such member who holds any of the offices referred to in sections 3 to 6A shall for every financial year be provided with railway coupons for a value of four thousand rupees'".

திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தின் 7-வது பிரிவுக்கு நான் ஒரு திருத்தம் கொண்டு வந்திருக்கிற காரணத்தால் இந்தச் சட்டத்தை எதிர்க்கிறேன் என்று யாராவது நினைத்தால் அது தவறான கருத்து என்பதை நான் முதலில் சொல்லிக் கொள்ள விழைகிறேன். 7-வது பிரிவில் ரயில்வே பயணத்திற்கு ரயில்வே கூப்பன்களை அமைச்சர் பெருமக்களும் மற்றும் இந்த மன்றத்தினுடைய தலைவர், உதவித் தலைவர், மற்றும் மேலவைத் தலைவர், உதவித் தலைவர் ஆகியோர்களுக்கு விஸ்தரிப்பதற்காக இந்தச் சட்டம் இயற்றப்பட்டு இருக்கிறது. ஆனால், இந்தச் சட்டத்தில் நம்முடைய சட்டமன்றத்தினுடைய எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் மேலவை எதிர்க்கட்சித் தலைவர், மற்றும் அரசு கொறடா ஆகியோர் விடுபட்டுப் போயிருந்தார்கள். அவர்களையும் இதிலே இணைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இதை கொண்டு வந்து இருக்கிறார்கள். நான் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்து இருக்கிற ஒரே காரணத்தால் அரசுக்கு எதிரானது என்று நினைக்காமல் ஆளும் கட்சி கொறடாவுக்கும் இதிலே ஆதரவு இருப்பதன் காரணமாக ஆளும்கட்சியினரும் இந்தத் திருத்தத்தை கவனமாக பரிசீலித்து ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திருத்தத்தைப் பற்றி சொல்வதற்கு முன்னாலே சட்டமன்றத்திலே இருக்கக்கூடிய வழக்கறிஞர் நண்பர்களுக்கு நான் ஒன்றை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**'expression excluded by necessary implication'**

என்று சட்டத்திலே, சொல்வந்ததை ஒன்றைச் சொல்லி ஒன்றை சொல்லாமல் விட்டுவிடுவார்களானால் விடுபட்டுப் போனதற்கு அந்தப் பலன்கள் கிடைக்காது என்ற சட்ட விதியின் காரணமாக நான் இதைக் கொண்டு வந்திருக்கிறேன். இந்தச் சட்டத்தில்



1985 மார்ச் 18] (திரு. டி. ஆர். வேங்கடரமணன்)

**'Every Member of the Legislative Assembly or of the Legislative Council, including any such member who holds any of the offices referred to in sections 3 to 6A'**

என்று திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதாவது இந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டு இருக்கிறார்கள். சாதாரணமாக என்னைப்போன்று உறுப்பினராக இருக்கக்கூடியவர்கள் ஒரு பகுதி, மற்றொரு பகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி மந்திரியாக இருக்கிறவர்கள், இந்த மன்றத்தினுடைய தலைவர், உதவித் தலைவர், மேலவையின் தலைவர், உதவித் தலைவர் ஆக இருக்கிறவர்கள் மற்றும் பார்லிமெண்டரி செகரட்டரிஸ் என்று சொல்லக்கூடிய பதவியை வகிப்பவர்கள் ஆகிய இந்த 4 பற்றி 3 முதல் 6 பிரிவுகள் வரையில் சொல்லப்பட்டு இருக்கிறது. பழைய சட்டத்தில் நெகட்டீவ் டெபனிஷன், எக்ஸ்குலுசிவ் **(Exclusive)** டெபனிஷன் இருந்தது. இப்போது கொண்டுவரப்பட்டுள்ள சட்டத்திலே இன்குலுஷிவ் டெப்பனிஷன் ஆக கொண்டுவரப்பட்டு இருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர், பேரவை கொறடா, மேலவை கொறடா ஆகியோர்கள் பற்றி செக்ஷன் 6 ஏ-யில் சொல்லப்பட்டு இருக்கிற காரணத்தால் இன்குலுஷிவ் டெபனிஷன் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தச் சட்டம் அமுலுக்கு வந்தால் அரசு கொறடா, எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருக்கும் இந்த கூப்பன்கள் கிடைக்க வேண்டும் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இதை இன்குலுஷிவ் டெப்பனிஷேனாக கொண்டு வருகிற காரணத்தால் இது அமலுக்கு வந்தால் எதிர்க்கட்சித் தலைவர், அரசுக் கொறடா ஆகியோருக்கு இந்தச் சட்டத்தின் பலன் கிடைக்காமல் போய்விடும். **'Exclusion by necessary implication'** என்ற சட்டவிதியை இது மீறுகிற காரணத்தால் 3 முதல் 6 வரை என்று இருப்பதை 3 முதல் 6ஏ என்று மாற்றிக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேங்கடரமணன் அவர்கள் இங்கே ஒரு திருத்தத்தைக் கொடுத்து இருக்கிறார்கள். அந்தத் திருத்தம் பெரும்பாலும் அவர்கள் விளக்கம் பெறுவதற்காக கொடுத்து இருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். ஆக இந்தத் திருத்தம் அவசியம் இல்லை.

ஏன் என்றால் முன்பு ரயில்வே கூப்பன் கொடுப்பது பொறுத்தவரை யில் செக்ஷன் 3, 4, 5, 6 ஆகியவை நீக்கப்பட்டு மற்றவர்களுக்கு ரயில்வே கூப்பன்கள் உண்டு என்று சொல்லப்பட்டு இருந்தது. அதிலே 3, அமைச்சர்களைப் பற்றியும் 4 பேரவைத் தலைவர், துணைத் தலைவர் அவர்கள் பற்றியும், 5 டெபுட்டி மினிஸ்டர் பற்றியும் 6 வது பார்லிமெண்டரி செகரட்டரிஸ் பற்றியும் சொல்லப் பட்டு இருந்தது. மற்றவர்கள் அத்தனைபேருக்கும் உண்டு என்று இருந்தது. இப்போது, இல்லை என்று இருந்தது உண்டு என்று ஆக்கப்பட்டு இருக்கிறது. ஏற்கனவே இல்லை என்று இருந்தது— எக்ஸ்க்ளூட் பண்ணியதை இப்போது இன்க்ளூட் செய்து, 3, 4, 5, 6, 6-ஏ பிரிவுகள் அப்போதும் பெற்றுக் கொண்டு இருந்தார்கள். இப்போதும் அவர்களுக்கு ரயில்வே கூப்பன்கள் உண்டு. அவர்கள் தடுக்கப்பட மாட்டார்கள். அந்த வகையில் எல்லோருக்கும் என்று வந்த விட்டதன் காரணமாக இப்போது 2 பிரிவுகள் என்று பிரிக்கவேண்டிய அவசியம் இல்லை. எல்லோ ரும் ஒரே பிரிவாக இருக்கிற காரணத்தால் இந்தச் சட்டத்தின் மூலமாக எதிர்க்கட்சித் தலைவரும், கொறடாவும் பாதிக்கப்பட மாட்டார்கள். ஏற்கனவே இந்த ரயில்வே கூப்பன்கள் பெறு வதற்கு அரசு கொறடாவும், எதிர்க்கட்சித் தலைவரும் மற்றவர் களும் உரிமை பெற்று இருந்தார்கள். ஏற்கனவே வாங்கிக் கொண்டு இருந்தார்கள். ஏற்களவே நீக்கப்பட்டு இருந்தவர்கள் இப்போது சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப் பினர் திரு. வேங்கடரமணன் அவர்கள் கூறுவது போன்று அவர்கள் ஒதுக்கப்படுகிற அல்லது நீக்கப்படுகிற நிலைமை இல்லை. ஆகவே இதை சீர் செய்வதற்கு இந்தத் திருத்தம் கொண்டுவரவில்லை, எனவே இந்தத் திருத்தத்தை வலியுறுத்த வேண்டிய அவசியம் இல்லை என்பதை கூறிக்கொள்ள விரும்பு கிறேன்.

திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன் னுள்ள கேள்வி—

"பிரிவு 7 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்"



தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று பிரிவு 7 நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 8 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 3/1985) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**(ஆ) சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு 1985.**

**திரு. ப. பொன்னுரங்கம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்—

"ஆளுநர் அவர்களால் 19—11—1984 ஆம் தேதியன்று பிறப் பிக்கப்பெற்ற 1984 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (இரண் டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 19/1984) இப்பேரவை நிராகரிக்கிறது"

**திரு. அ. செல்வராசன் :** இதை நான் வழிமொழிகிறேன்.

(முற்பகல் 9-56)

**திரு. ப. பொன்னுரங்கம் :** பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். அவர்கள் மூவ் செய்வதைப்பற்றிக் கூட எனக்கு ஆட்சேபனை இல்லை. எந்த மினிஸ்டர் வேண்டுமானாலும் மூவ் செய்யலாம் என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால், இந்த நிகழ்ச்சி நிரலில் என்ன

போடப்பட்டிருக்கிறது என்றால், "மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன், உள்ளாட்சித் துறை அமைச்சர்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர் உள்ளாட்சித் துறை அமைச்சர்தானா அல்லது சத்துணவு அமைச்சரா? சத்துணவு அமைச்சராக இருந்தாலும் கூட அவர் மூவ் செய்வதைப்பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால், என்ன நேமில் செய்யப்பட வேண்டும் என்றுதான் கேட்கிறேன்; யார் பெயரில் இருக்க வேண்டுமென்று தான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதுவரையில் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சர்தான். இதுவரையில் அவைக்கு வேறு தகவல் வரவில்லை. அப்படி வந்தபிறகுதான் அதைப்பற்றி முடிவு செய்ய வேண்டும். எனவே, தகவல் வரும் வரையில் இவர்தான் உள்ளாட்சித் துறை அமைச்சர். எனவே, இதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"1985 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 5/1985) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. பொன்னுரங்கம் அவர்களுடைய தீர்மானமும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய தீர்மானமும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன.

**திரு. ப. பொன்னுரங்கம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி தனி அதிகாரியின் பதவிக் காலத்தை நீட்டிப்பதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கும் சட்டமுன்வடிவு இது. அதன் மீதுதான் நான் கொடுத்த நிராகரிப்புத் தீர்மானம் இருக்கிறது. கடந்த 1974 ஆம் ஆண்டு என்று கருதுகிறேன், அதிலிருந்து இது வரையில் தனி அதிகாரிகளை வைத்து நிர்வாகம் நடத்தப்பட்டு வருகிறது. ஆனால் இப்பொழுது இருக்கின்ற நல்ல

@ 1985-ம் ஆண்டு மார்ச் 14-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





அம்சம் என்னவென்றால், நிதியமைச்சரவர்கள் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடந்த விவாதத்திற்குப் பதில் அளிக்கின்றபொழுது ஒரு உறுதியை அளித்திருக்கிறார்கள். எழுத்து மூலமாக வேண்டுமானாலும் தரத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுவரைக்கும் மகிழ்ச்சி. ஆகஸ்ட் மாதத்தில் தேர்தல் வரப்போவதாக அறிவித்திருக்கிறார்கள். ஆனால், இதே சட்டமன்றத்தில் உள்ளாட்சித் தேர்தல், மாநகராட்சித் தேர்தல், நகராட்சித் தேர்தல் போன்றவைகளெல்லாம், தேதி குறிப்பிடப்பட்டு, அறிவிப்பு தந்து, ஏன், பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்கள் போன்றவற்றிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு நாமினேஷன்கூட வாங்கப்பட்டு, டெப்பாசிட்கூட வாங்கப்பட்டு, பிறகு திடீரென்று கோர்ட்டைக் காரணம் காட்டி அந்தத் தேர்தல் நிறுத்தப்பட்டது.

ஆனால் இன்றைக்கு நான் நிதியமைச்சர் அவர்களுடைய உறுதிமொழியை நம்புகிறேன். ஆகஸ்டிலே நடக்கும் என்று அறிவித்திருக்கிறார்கள்; அதை நம்புகிறேன். இதை நான் வலியுறுத்துவதற்குக் காரணம், உடனடியாக உள்ளாட்சி, நகராட்சித் தேர்தல்களை நடத்த வேண்டுமென்று வலியுறுத்துவதற்குக் காரணம் இப்பொழுது இருக்கின்ற நம்முடைய அமைச்சர் திரு. சௌந்திரராஜன் அவர்கள்கூடச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி ஒரு எம்.பி.யே அவரிடம் மகஜர் கொடுக்கின்ற அளவிற்கு— கொசுத் தொல்லை தாள முடியவில்லை, கொசுக்கள் இரத்தத்தை உறிஞ்சுகின்றன, தூக்கம் இல்லை என்று மக்கள் சொல்லுகின்ற அந்தக் குறையை முறையான மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தினால், நாடாளுமன்ற உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் அதைப்பற்றி எடுத்து வைக்க வேண்டிய துர்ப்பாக்கியமான நிலைமை கடந்த 10, 11 ஆண்டுக்காலமாக சென்னை நகரத்தில் காணப்பட்டு வருகிறது. இப்பொழுது இதற்கு விமோசனம் ஏற்படும் என்று கருதுகிறேன். நாவலர் அவர்கள் உறுதிமொழி கொடுத்திருக்கிறார்கள்.

கோர்ட்டுக்குச் சென்றாலும்கூட முந்தைய நிலையிலேயே நடக்கும் என்று அறிவித்திருக்கிறார்கள். இதை முன்கூட்டியே கூடச் செய்திருக்கலாம். குழந்தைவேலு அவர்கள் இருந்தபோதே அல்லது காளிமுத்து அவர்கள் இருந்தபோதேகூட இதேமுறையில், முந்தைய முறையிலேயே தேர்தலை நடத்திவிட்டு,

[திரு. ப. பொன்னுரங்கம்] [1985 மார்ச் 18

உங்களுக்கு விருப்பமானால் அதை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும், பல முன்னேற்றகரமான திட்டங்களைக் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணம் இந்தத் துறையில் உங்களுக்கு இருக்குமேயானால், தேர்தலை நடத்திவிட்டு, மக்கள் பிரதிநிதிகளை வைத்துக்கொண்டு, அதன் பிறகு இப்படிப்பட்ட திருத்தங்களைச் செய்யும்பொழுது, யாராவது வழக்குமன்றத்திற்குச் சென்றால்கூட வழக்கும் ஆடலாம், அதேநேரத்தில் கவுன்சிலர்களும் இருப்பார்கள், மேயரும் இருப்பார், மக்களும் தங்கள் குறைகளை எடுத்துச்சொல்லி அந்தக் குறைகளைப் போக்கிக் கொள்ளுகின்ற நல்ல வாய்ப்பும் இருந்திருக்கும். இந்த யோசனை அப்பொழுது இல்லாதிருந்ததற்கு வருந்துகிறேன். இப்பொழுதாவது அந்த யோசனை வந்ததே என்பதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். நான் இன்று இதன்மீது அதிகம் பேச விரும்பவில்லை. சொல்ல வேண்டுமானால் நிரம்பச் சொல்லலாம்.

எங்கள் தொகுதியைப் பொறுத்தமட்டில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் கவர்னர் உரையில் சொல்லியிருக்கிறீர்கள், கிராமங்களில் கழிப்பிடங்கள் கட்டுகின்ற அந்தப் பணி விரிவாக்கப்படும் என்று. அப்படி ஒரு கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வாறு கிராமங்களில் கழிப்பிடங்கள் கட்டுகின்ற பணி விரிவாக்கப்படும் என்று சொல்லப்படுகின்ற இந்தக் காலகட்டத்தில் சென்னை நகரத்தில் குறிப்பாக என்னுடைய ராயபுரம் தொகுதியில் இருக்கின்ற கழிப்பிடங்கள் எல்லாம் முள் வேலி போட்டு அடைக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு என்ன காரணம்? கழிப்பிடங்களில் ஏற்படுகின்ற அடைப்பை எடுக்க முடியாத ஒரு துர்பாக்கியமான நிலைமை இருக்கின்றது. புதிய கழிபிடங்களைக் கட்டுகின்ற சர்க்கார் ஏற்கெனவே இருக்கின்ற பழைய கழிப்பிடங்களில் உள்ள அந்தக் குறையை ஏன் நிவர்த்திக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய தாழ்மையான வேண்டுகோளாகும்.

அந்தத் தொகுதிக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருவார்களானால் நான் அவருக்குக் காட்டுகிறேன் முள்வேலி போட்டு அடைக்கப்பட்டிருப்பதை. அங்கே மலங்கள் எல்லாம் மேலே வந்து மிதப்பதைக் காட்டுகிறேன். அதுமட்டுமல்ல. கழிப்பிடத்திலே உற்பத்தியாகின்ற புழுக்கள் பக்கத்திலே குடியிருக்கின்ற இல்லங்களுக்கு தஞ்சம் புகுகின்றன; அங்கே அடைக்கலம் புகுகின்றன; அங்கே வாடகைக்கு செல்கின்றன. இப்படிப்பட்ட ஒரு மோசமான நிலைமை தொடர்ந்து நீடிக்கக்கூடாது. ஆனால் மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் இருந்திருந்தால் அவர்கள் உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தங்களோடு அழைத்துச் சென்று காட்டி அதைச் சீர் செய்கின்ற வாய்ப்பு ஏற்படும். ஆனால் எங்களோடு எல்லாம் வரமாட்டார்கள் அந்த அதிகாரிகள். இந்த மன்றத்திலேயே ஒருமுறை கேட்கப்பட்டது, நீங்கள் என்ன அமைச்சர்களா உங்களோடு வர, வந்து உங்களோடு இருந்து பார்க்க, என்று. ஆனால் அதேநேரத்தில் ஒரு கவுன்சிலராக இருக்கின்ற ஒரு நபர் தன்னுடன் சேனிட்டரி இன்ஸ்பெக்டர், சூப்பர்வைசர் போன்ற அதிகாரிகளை மட்டுமல்லாது கமிஷணரையே கூட அழைத்துச் சென்று காட்டுகின்ற வாய்ப்பு பெற்றவர்கள். ஆனால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதிலும் குறிப்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு உண்டா என்றால் கிடையாது.



1985 மார்ச் 18] [திரு. ப. பொன்னுரங்கம்]

இதே மன்றத்தில் அல்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. செல்வராஜ் அவர்கள், நான் ஸ்பெஷல் ஆபீஸரை என்னோடு வரும்படி அழைத்தேன்; அவர்கள் வர மறுக்கிறார்கள் என்று சொன்ன நேரத்தில் அப்போது என்ன பதில் வந்தது தெரியுமா? நீங்கள் என்ன அமைச்சரா என்று சொன்னார் ஒரு அமைச்சர். ஒருவேளை அதற்காகத்தானோ என்னவோ அவர் இப்போது அமைச்சராக இல்லையோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. இப்படிப்பட்ட சங்கடங்கள் எல்லாம் இருக்கின்றன. எனவே கவுன்சிலர்களுக்கு அதிகாரிகளை அழைத்துச் சென்று உரிய இடங்களில் உரிய நடவடிக்கைகளை எடுக்க வைக்கின்ற வாய்ப்பு உண்டு. அப்படிப்பட்ட வாய்ப்பினை கொடுக்கக் கூட மாட்டேன் என்று சொல்கிறார்கள்.

ஆனால் இப்போது தேர்தலை அறிவித்திருக்கிறார்கள். அந்தத் தேர்தல் வரையிலாவது அவர்கள் வரவேண்டும் என்று கேட்கிறேன். அதுவரைதான் அவர்கள் செய்வார்கள் என்று நம்புகிறேன். நான் ஏற்கெனவே பேசி இருக்கிறேன். இடைத் தேர்தல் வரும், அப்படி இடைத் தேர்தல் வந்தால் அந்த மக்களிடத்திலே ஓட்டுக் கேட்டு செல்லவேண்டிய நிலைமை வரும், அந்த நேரத்திலே பல்லாங்குழிகளாக இருக்கின்ற ரோடுகள் சரி செய்யப்படும், ஓட்டுக்கேட்டுச் செல்ல வேண்டியிருப்பதால் எரியாத விளக்குகள்

எரியும், ஓட்டுக்கேட்டுச் செல்ல வேண்டியிருப்பதால் தண்ணீர் வராத இடங்களுக்கு எல்லாம் டேங்குகள் அமைத்துத் தரப்படும் என்றும் எங்கள் தொகுதிக்கு ஒரு அமைச்சரைக் கொடுக்க மாட்டீர்களா என்றும் நான் பேசியிருக்கிறேன். அதுமட்டுமல்ல. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை என் தொகுதியில் வந்து இருக்கவேண்டும் என்று கூட நான் இதே மன்றத்திலே இதே மசோதாமீது ஒரு காலகட்டத்திலே பேசினேன். ஏன் தெரியுமா? ஹிந்து பத்திரிகையில் லெட்டர்ஸ் டு தி எடிட்டர்ஸ் பகுதியில் ஒரு நபர் ஒரு கடிதம் எழுதினார். அதில் அவர் என்ன சொன்னார் தெரியுமா? முன்பு நாங்கள் 6 மணிக்கு மேலே எங்கள் வீட்டிற்குத் திரும்பி வர முடியாது. லைட்டுகள் எரியாது, டாக்ஸி கூட வர முடியாது, அவ்வளவு மோசமாக ரோடுகள் இருக்கும். அப்படிப் பல்லாங்குழிகளாக இருக்கும் நிலையில் ரோடுகள் இருப்பதன் காரணத்தால் அதிகமான கட்டணம் கொடுத்து வாகனங்களை எடுத்துக்கொண்டு செல்லவேண்டிய நிலைமை இருக்கும், அப்படிப் பட்ட ஒரு துர்பாக்கியமான, மிகக் கேவலமான சூழ்நிலைகள் எல்லாம் இருந்தன. ஆனால் இப்போது அப்படி இல்லை. 5½ மணிக்கே விளக்குகள் எல்லாம் எரிகின்றன, குடிநீருக்கு பஞ்சம் இல்லை, அங்கே இப்போது எந்தவிதமான குப்பை கூளங்களும் இல்லை, குப்பை கூளங்கள் அன்றாடம் காலை, மாலையில் துப்புரவு செய்யப்படுகின்றன, இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் என்னவென்றால் அந்தப் பகுதியிலே ஒரு அமைச்சர் குடியேறியிருக்கிறாராம் என்று எழுதியிருக்கிறார்.

(முற்பகல் 10-00)

அமைச்சர் குடியேறிய காரணத்தால் அந்த அமைச்சருக்குச் செய்ய வேண்டிய அத்தனை வசதிகளை—அண்ணா நகர் பகுதி—சுற்றியுள்ள மக்கள் எல்லாம் பலன் பெற்றார்கள் என்ற ஒரு கருத்தை இந்துப் பத்திரிகையிலே குறிப்பிட்டிருந்தார்கள். என்று அன்றையதினமே குறிப்பிட்டு, என்னுடைய தொகுதி சுகாதாரச் சீர்கேட்டில் மிதந்து கொண்டிருக்கிறது; பூச்சிகள், புழுக்கள், குப்பை கூளங்கள், சாக்கடைகள் நிரம்பிய பகுதி; சென்னை நகரத்திலேயே ஒரு நரகம் உண்டு என்றால் அது இராயபுரம் பகுதி தான். ஆகவே, அப்படிப்பட்ட பகுதியில் சாதாரண அமைச்சர் குடியிருந்தால் அந்தத் தொல்லைகள் நீங்காது. எனவே, முதல் அமைச்சர் அவர்களே வந்து குடியேறினால்தான் அந்தப் பிரச்னைகள் தீரும் என்று சொன்னேன். அப்பொழுது முதல்





அமைச்சர் அவர்கள் கூட எனக்கு வேறுவிதமாகப் பதில் அளித்தார். அதைச் சொல்ல விரும்பவில்லை. ஏனென்றால், அது ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை. ஆகவே, அப்படிப் பட்ட குறைபாடுகள் ஆகஸ்ட் வரையில் நீடித்திருந்தால் பரவாயில்லை. ஆனால், அருள்கூர்ந்து வேறு ஏதாவது காரணம் காட்டி இந்தக் குறைகளை தொடர் கதையாக ஆக்க வேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதற்காகத்தான் தனி அதிகாரி தொடர்ந்து பதவியில் நீடிப்பதை எதிர்க்கின்ற முகத்தான் நான் இந்த நிராகரிப்புத் தீர்மானத்தைக் கொடுத் திருந்தேன்.

இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்திய நிலையில் நான் ஒரு திருத்தத்தைக் கொடுக்க இருந்தேன். தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீண்ட காலமாக வைக்கக்கூடாது, குறுகிய காலமாக இருக்க வேண்டுமென்பதற்காக நான் ஒரு திருத்தத்தைக் கொடுக்க இருந்தேன். அதை இப்பொழுது கையில் வைத்திருக்கிறேன். ஆனால், நேற்றைக்கு முன்தினம் நிதி அமைச்சர் அவர்கள் அறிவித்துவிட்ட காரணத்தாலே அந்தத் திருத்தத்திற்கு அவசியம் இல்லை என்ற நிலையில் அந்தத் திருத்தத்தை நான் வைத்துக் கொண்டேன். ஆகவே வாக்குறுதி தந்தது போல் தேர்தலை நடத்த வேண்டும். மக்கள் பிரதிநிதிகளுக்காக மட்டும் நான் வாதாடவில்லை. குறைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும், எங்களுக்கு மரியாதை தேடிக் கொடுங்கள் என்று கேட்டேன். ஏனென்றால், தண்ணீர் வரவில்லையா, எம்.எல்.ஏ.-யைப் பார், விளக்கு எரியவில்லையா, எம்.எல்.ஏ.-யைப் பார், சாக்கடை அடைத்துக் கொண்டால் எம்.எல்.ஏ.-யைப் பார் என்று எங்களை கவுன்சிலர்களாக நினைக்கிறார்கள். பாமர மக்கள் எங்களை எம்.எல்.ஏ.-யைப் போல நடத்த மறுக்கிறார்கள்; கவுன்சிலரைப் போல் நடத்துகிறார்கள், எங்களைக் கொஞ்சம் மரியாதையாக நடத்த மக்கள் பிரதிநிதிகளை அங்கே கொண்டு வாருங்கள் என்று கூட வாதிட்டேன். நீங்கள் தனி அதிகாரிகளுக்கு சலுகை செய்கிறீர்கள் என்று குற்றம் சாட்டுகிறேன். அதே நேரத்தில், எலெக்ட் பாடி வராமல் தடுக்கிறீர்கள். அது மட்டுமல்ல, எங்களையே இழிவாக நினைக்கின்ற அளவுக்கு இதுபோன்ற நிலைமைகள் உருவாகின்றன. எங்களுக்கு மரியாதை தேடித் தாருங்கள். மக்கள் குறைகளை நிவர்த்தி செய்ய அமைச்சர் அவர்கள் மாநகராட்சி மன்றத்திற்குப் போய் உட்காருகிறார்கள். அதை நான்

[திரு. ட. பொன்னுரங்கம்] [1985 மார்ச் 18

குறை சொல்லவில்லை. ஆனால் கவுன்சிலர் இருந்தால், எம்.எல்.ஏ.வுக்கு, எம்.பி.க்கு அந்த வேலை இருக்காது. நிதி அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்திருப்பது போல் மாநகராட்சி மன்றத்திற்கு உறுப்பினர்கள் வருவதற்கு உடனடியாக ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

நான் அச்சப்பட்டேன், அவர்கள் அறிவித்து விட்டார்கள். நீட்டிப்புக்கு சொல்கின்ற காரணம் ஐடென்டிட்டி கார்ட் கொடுப்பது என்பது. ஐடென்டிட்டி கார்ட் உண்டோ இல்லையோ, ஆனால், ஆகஸ்டுக்குள்ளே தேர்தல் வரவேண்டும். அதற்கேற்ற திருத்தத்தை இன்று கொடுக்க முடிந்தால் கொடுங்கள்; கொடுக்க முடியவில்லையென்றால் இந்தக் கூட்டத் தொடரிலேயே கொண்டு வர வேண்டும். இடைத்தேர்தல் ஏப்ரல் 24 ஆம் தேதி நடைபெற இருக்கிறது. ஆகவே, அவையைத் தள்ளி வைக்கப்போகிறோம் என்று சொன்னார்கள். இந்தக் கூட்டத் தொடரிலேயே திருத்தத்தைக் கொண்டு வாருங்கள். மாநகராட்சியைப் பொறுத்தவரையில், நான் அறிந்த வரையில், ரிசர்வேஷன் பிரச்னையால் தேர்தல் நிற்கவில்லை. ஐடென்டிட்டி கார்ட் கொண்டு வரவேண்டுமென்பதற்காக நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தக் கூட்டத் தொடரிலேயே உரிய திருத்தத்தைக் கொண்டு வாருங்கள். நிதி அமைச்சர் சொன்ன மாதிரி, ஆகஸ்ட் மாதத்தில் தேர்தலை நடத்தித் தாருங்கள் என்று கேட்டு, அமர்கிறேன், நன்றி.

**திரு. வி. பி. சிந்தன்:** மாண்புமிகு உதவி சபாநாயகர் அவர்களே, நான் இந்தச் சட்டப் பிரேரணையை பலமாக ஆட்சேபிக்கிறேன். சபை முன்னவர் அவர்கள் ஒரு உறுதியை அளித்தது உண்மைதான். ஆனால் அந்த விவாதத்தின்போது வாக்குறுதிகள் எப்படி காற்றிலே பறக்கின்றன என்று இங்கே கூறியதை நான் உங்களுடைய நினைவிற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியைத் தொடர்ந்து, அந்த இலாக்காவினுடைய பொறுப்பேற்ற அமைச்சர்கள் கடந்த ஏழு ஆண்டுகளாகக் கொடுத்த வாக்குறுதிகள் எல்லாம் மீறப்பட்டு இருக்கின்றன. நம்முடைய சபை முன்னவர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியும் தெளிவானதாகவும் இல்லை. அது தேதி நிர்ணயிக்கப்பட்ட வாக்குறுதியாக அளிக்கப்படவில்லை. ஆகவே இந்தப் பிரேரணையை நான் பலமாக ஆட்சேபிக்கிறேன்.



1985 மார்ச் 18] [திரு. வி. பி. சிந்தன்]

சென்னை மாநகரத்தினுடைய நிலைமையைப் பற்றி நான் அதிகமாக சொல்லத் தேவையில்லை. நீங்கள் இந்த நகரத்தின் நிலைமையை நன்கு அறிந்தவர் என்ற காரணத்தால் நான் அதிகமாக சொல்லத் தேவையில்லை. குடிதண்ணீர், ரோடு வசதிகள் குறித்து கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுகளாக இந்த நகரத்தில் வாழ்ந்து வருகிறவன் என்ற முறையிலே என்னுடைய கசப்பான அனுபவத்தைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. இவ்வளவு மோசமான நிலையை என்றைக்கும் நான் பார்க்கவில்லை. ரோடுகள் ஆண்டுக்கணக்கிலே பாமரிக்கப்படாமல் இருக்கின்றன. அதற்கான அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினால் நியாயமான பதில் அவர்களிடத்திலிருந்து பெற முடியவில்லை.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒருதடவை ஒரு முக்கியமான பிரச்னையில் தனி அதிகாரி அவர்களின் கவனத்தை ஈர்த்து நியாயம் பெறுவதற்காக அவருடைய அலுவலகத்திற்குச் சென்று இருந்தேன். இரண்டு, மூன்று மணி நேரங்கள் காத்திருந்ததற்குப் பின்னாலும் அந்த அதிகாரியை சந்திக்க முடியவில்லை. சற்று ஆத்திரத்தில், ஆத்திரப்பட்டிருக்கக் கூடாது—நான் எடுத்துச் சென்றிருந்த மனுவை அவர் அலுவலகத்திலேயே கிழித்து எறிந்து விட்டு வெளியே வந்து விட்டேன். அப்படிச் செய்தது தவறு என்றாலும் கூட எனக்கு ஏற்பட்ட அனுபவம் அப்படி அமைந்தது. சாதாரண மக்கள் அங்கே சென்று அதிகாரிகளைச் சந்திக்க முடியவில்லை.

வீடு கட்டுவதற்கு பல சட்டதிட்டங்கள் இருக்கின்றன. அவை பகிரங்கமாக மீறப்படுகின்றன. அந்த அதிகாரிகள் நினைத்தால் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்ற நிலை இருக்கிறது. யார் அதைத் தட்டிக் கேட்பது? வாடகை விதிப்பதிலே சென்னை மாநகரத்தில் நடக்கிற அக்கிரமம் வேறு எங்கும் நடப்பதில்லை. பம்பாயில் நடைபெறவில்லை; இன்னும் ஏனைய பெரிய நகரங்களில் நடப்பதில்லை. தேவைப்படுகிறவர்கள் யாரை அவர்கள் விரும்புகிறார்களோ அல்லது யாருடைய செல்வாக்கிற்கு அவர்கள் உள்ளாக்கப்படுகிறார்களோ அவர்களுடைய பெரிய கட்டிடங்களுக்கு குறைந்த வாடகை. உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்தின் அனுமதியைப் பெற்று ஒரு விசாரணைக் குழுவைப் போட்டால் இந்த அக்கிரமத்தை நிரூபிக்க லட்சக்கணக்

கான மக்கள் முன்வருவார்கள் என்பதில் எனக்கு சந்தேகமில்லை. ஒரு சதுர அடிக்கு இவ்வளவு வாடகை என்று ஒரு கொள்கை உண்டா? யார் அதைக் கேட்பது? ஒரு மன்றம் இருந்தால் அந்த மன்றத்திலே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அங்கே கேட்க முடியும். அந்த மன்றத்திலே மெஜாரிட்டியை வைத்து ஒரு முடிவை எடுக்க முடியும். இப்படி இல்லாத காரணத்தால் எல்லாச் சட்டங்களும் மீறப்படுகின்றன. எந்த நியாயமும் மக்களுக்குக் கிடைப்பதில்லை. எந்த ஒரு சாதாரண குடிமகனும் அங்கே சென்று அந்த அதிகாரிகளைச் சந்தித்து நியாயத்தைப் பெற முடியாது. இவையெல்லாம் ஏற்படுவதற்கு முக்கியமான காரணம், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாததுதான்.

எனக்கு ஒரு ஐயப்பாடு. ஆளுகின்ற கட்சிக்கு இந்த நகர மன்றத் தேர்தலையும், பஞ்சாயத்துத் தேர்தலையும் சந்திப்பதிலே என்ன தயக்கம் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. எத்தனை ஆண்டுகளுக்கு இப்படி நீட்டிக்கப் போகிறார்கள். அதனால் நான் இந்த மன்றத்திலே,

With all the force at my command I am opposing it.

நான் இதைச் சொல்வதற்கு காரணம் உண்டு. வெள்ளைக்காரன் இந்த நாட்டை ஆண்டபோது நாங்கள் எல்லாம் அவர்களை எதிர்த்து போராட்டத்திலே ஈடுபட்டு சிறைக்குச் சென்றோம். வெள்ளைக்காரன் ஆட்சி நடந்தபோது கிட்டத்தட்ட ஆறு ஆண்டுகள் நான் சிறையிலே இருந்தேன். எதற்காக நாங்கள் எல்லாம் சிறைக்குச் சென்றோம்* தேர்ந்தெடுக்கப்படுகிற பிரதிநிதிகள் மூலமாக ஆட்சி நடத்துகிற உண்மையான ஜனநாயக தத்துவத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதற்காகத் தானே நாங்கள் எல்லாம் போராடினோம். நாடு விடுதலை பெற்று இவ்வளவு ஆண்டுகளுக்குப் பின்னாலே ஒரு மன்றத்திலே புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட என்னைப் போன்ற ஒருவர் இங்கே வந்து சபாநாயகர் அவர்களை உடனடியாக தேர்தல் நடத்தவேண்டுமென்று வலியுறுத்த வேண்டிய துர்பாக்கியமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மற்ற மாநிலங்களில் எல்லாம் இப்படிப்பட்ட நிலைமை இல்லை. எல்லா மாநிலங்களிலும் முறையாக தேர்தல் நடத்தப்படுகிறது. காங்கிரஸ் ஆளுகின்ற மாநிலங்களில் நடத்தப்படுகிறது; காங்கிரஸ் ஆளாத மாநிலங்களிலும் நடத்தப்படுகிறது. கேரளாவிலே காங்கிரஸ் கட்சி நடைபெறுகிறது, அங்கே தேர்தல் நடைபெறு



600 008. 136369

கிறது. மேற்கு வங்கத்திலே கம்யூனிஸ்ட்டுகள் ஆட்சி நடத்துகிறார்கள், அங்கே தேர்தல் நடைபெறுகிறது. ஆனால் இங்கே மட்டும் அதற்கு விதிவிலக்கு. ஜனநாயகத்திலே சற்று நம்பிக்கை இல்லாத காரணத்தினால்தான் ஆளும் கட்சி இந்தக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறதென்று வன்மையாகச் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு நான் உள்ளாக்கப்பட்டிருக்கிறேன். ஆகவே உதவி சபாநாயகர் அவர்களே, ஒன்றை நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். தேர்தலுக்கான தேதியை நிர்ணயிக்க வேண்டும். தேதி நிர்ணயிக்கிற சட்டமாக இது வருமேயானால் நான் சார்ந்திருக்கிற கட்சி இதனை நிச்சயமாக ஆதரிக்குமென்று கூறி அமர்கிறேன்.

(முற்பகல் 10-10)

**திரு. எஸ். வேணுகோபால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றையதினம் நகரமன்றத் தேர்தல் வருகின்ற ஆகஸ்ட் மாதம் நடக்கும் என்று நம்முடைய அவை முன்னவர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். என்னுடைய கட்சியின் சார்பிலே அதை நான் வரவேற்கிறேன்.

இதற்கு முன்னாலே தேர்தல் வருமா, வராதா என்று எண்ணிக் கொண்டிருந்தபோது, ஏற்கெனவே நான் கவர்னர் உரையிலே பேசும்போது கூட நகர மன்றத் தேர்தல் வந்தாக வேண்டும் என்று சொன்னேன். அங்கே யார் ஆட்சிக்கு வருவார்கள் என்று பார்க்காமல் தேர்தலை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். நகரத்தில் இருக்கிற பெரியவர்கள் எல்லாம் பல்வேறு குறைகளைச் சொல்கிறார்கள். கொசுத் தொல்லையாலும், குடிநீர் இல்லாததாலும், சாக்கடை நீர் தெருவெல்லாம் ஓடுவதாலும்—சாக்கடை நீர் ஆறாக ஓடுகிறது என்றுகூட சொல்லலாம்—பல்வேறு சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தச் சங்கடங்களை நீக்க வேண்டும் என்றால் உடனடியாக நகரமன்றத் தேர்தலை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்றுகேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குத் தமிழகத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பல்வேறு நலப் பணிகளுக்கான திட்டங்களைத் தீட்டியிருக்கும்போது, இப்படிப்பட்ட சில பிரச்சனைகளால், பல்லாண்டுக் காலமாக தேர்தல் நடைபெறாத காரணத்தால், பெருத்த குறைபாடுகளைச் சொல்கிறார்கள். இன்று ஆளும் கட்சிக்கு அவப்

[திரு. எஸ். வேணுகோபால்] [1985 மார்ச் 18

பெயரை ஏற்படுத்துவதாக இருக்கிறது என்பதால் உடனடியாகத் தேர்தலை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் சென்னை மாநகரில் எந்தப் பகுதியை எடுத்துக் கொண்டாலும் சாக்கடை நீர் ஓடுகிறது; தெருவிளக்கு எரியவில்லை; தண்ணீர்ப் பஞ்சம் ஏராளமாக இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட பகுதியிலே படித்துப் பட்டம் பெற்று, வசதியோடு வாழ்கிறவர்கள் இருக்கிற பகுதியிலே மட்டும் தண்ணீர் கிடைக்கிறது. குடிசைப் பகுதிகள் நிறைந்திருக்கின்ற இடங்களிலே தண்ணீர் பஞ்சம் பெருமளவில் இருக்கிறது. குறிப்பாக வடசென்னையில் தண்ணீர்ப் பஞ்சம் பெருமளவில் இருக்கிறது. டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர் தொகுதியில் கொருக்குப்பேட்டையில் தண்ணீர்ப் பஞ்சம் அதிகமாக இருக்கிறது என்று ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தில் பேசும்போதும் குறிப்பிட்டிருக்கிறேன். நகர் முழுவதும் இன்றைக்குத் தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டு, மிகப்பெரும் தொல்லையாக இருக்கிறது. ஆங்காங்கே சுகாதார வசதி என்பதே இல்லை.

எந்தப் பிரச்சனையை எடுத்துக்கொண்டாலும் நகரமன்றத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால் மக்கள் சட்டமன்ற உறுப்பினர்களிடம் வந்து முறையிடுகிறார்கள். காலையில் எழுந்து சட்டமன்றத்திற்குப் போக வேண்டுமே, இன்றைக்கு என்ன சட்ட முன்வடிவு வருகிறது, அதைப்பற்றி கொஞ்சம் படித்துப்பார்க்கலாம் என்று இருந்தால் படிக்க முடிய வில்லை; குறைகளைச் சொல்ல மக்கள் வந்துவிடுகிறார்கள். தண்ணீர் இல்லை, விளக்கு எரியவில்லை, சாக்கடை ஓடுகிறது, நாற்றம் வீசுகிறது என்பதுபோன்ற குறைகளைச் சொல்கிறார்கள்.

நீங்கள் மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள். இன்னும் மக்கள் நம்மீது வைத்திருக்கிறார்கள். நகர மன்றத் தேர்தலை நடத்தினால் யார் ஆட்சிக்கு அங்கே வருவார் என்று சந்தேகப்படத் தேவையில்லை. தம்முடைய கூட்டணி ஆட்சிதான் வரும். நம்மீதுதான் மக்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்; நாம் மக்களுக்குப் பணியாற்ற வேண்டுமென்று எழுச்சியோடு மக்கள் இருக்கிறார்கள். ஆகவே, எந்தவிதமான தயக்கமும் காட்டாமல் தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1985 மார்ச் 18] [திரு. எஸ். வேணுகோபால்]

சென்னைமாநகரில் தனியார் இடங்கள் பல இருக்கின்றன. அங்கே நகர மன்றம் விளக்கு போடுவதில்லை. கேட்டால் தனி யார் சாலைகளில் நகரமன்றம் விளக்குப் போடாது, போட முடி யாது என்று சொல்கிறார்கள். அது தனியார் இடமாக இருந்தாலும் அங்கே வாழ்கின்ற மக்கள் இந்த நகரத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் அந்த இடங்களை அரசாங்கம் வாங்கிக்கொண்டோ அதிலே இடையூறு இருக்குமானால் அந்த இடங்களைக் கைப்பற்ற ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து, அந்த இடங்களை எடுத்து சுகாதார வசதிகள், ரோடு வசதிகள், விளக்கு வசதி களைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகரம் ஒரு சிங்கார நகரமாக இருக்க வேண்டும்; அழகு நகரமாக இருக்க வேண்டும். இதற்கு முன்னாலே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது இந்தக் கூவம் நதியை அழகுபடுத்தி, சீர்படுத்தி, அங்கே படகு விடும் திட்டத் தைப்போட்டார்கள். ஆனால் இன்றும் கூவம் நாற்றம் அடிக் கின்ற கூவமாகத்தான் இருக்கிறது. அதன் காரணமாக சென்னை மாநகரம் முழுவதும் நாற்றம் வீசிக்கொண்டிருக்கிறது. சாக் கடைத் தண்ணீர் தேங்குவது மட்டுமல்லாமல் பல பகுதிகளில் வசதி படைத்தவர்கள் மாடுகளைக் கட்டி வைத்திருப்பதால் அவற் றின் சாணம் சாக்கடையை அடைத்து, அதனாலும் நாற்றம் வீசு கிறது. வீதிகளில் வசதி படைத்தவர்கள் மாட்டுக் கொட்டகை களைக் கட்டி, 50 மாடு, 60 மாடு, 70 மாடு என்று அங்கே கட்டி வைத் திருக்கிறார்கள். அதனால் பெரும் தெருக்களிலே, மனிதர்கள் வாழும் தெருக்களிலே, மாட்டுச்சாணம் சாக்கடைகளை அடைத் துக் கொண்டு தண்ணீர் தேங்கி, கொசுத்தொல்லை ஏற்படுகிறது. இதைப்பற்றி புகார்கள் கொடுத்தால், அதிகாரிகள் 2 நாளைக்கு வருகிறார்கள். வந்து, 50 ரூபாய், 100 ரூபாய் அபராதம் போடு கிறார்கள்.

ஆனால் நிரந்தரமான நடவடிக்கை எதுவும் எடுக்கப் படவில்லை. நான் வடசென்னை காங்கிரஸ் கமிட்டியின் துணைத் தலைவராக இருக்கின்ற நேரத்தில் இதைப்பற்றிய புகார்களை எல்லாம் அப்போது அமைச்சராக இருந்த திரு. இராகவானந்தம் அவர்களிடம் கொடுத்திருக்கிறேன். அவர்களும் நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால் நடவடிக்கை எடுக்கப்

[திரு. எஸ். வேணுகோபால்] [1985 மார்ச் 18

பட்டதா என்று சொன்னால், நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றுதான் சொல்லவேண்டும். அங்கே மாடுகளை வைத்திருப் பவர்கள் அரசியல் கட்சியினுடைய தலைவர்களின் சிநேகத்தை வைத்துக்கொண்டு, அரசியல் கட்சியிலே உள்ளவர்களை தங்க ளுடைய கையிலே வைத்துக்கொண்டு இருக்கின்ற காரணத்தால், அதிகாரிகள் வந்து 50 ரூபாய் 100 ரூபாய் அபராதம் போடு கிறார்கள். பிறகு மறுபடியும் அவர்கள் தொடர்ந்து தெருக்களை அசுத்தப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே நான் இந்த மன்றத்தைக் கேட்டுக்கொள்வேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வேன். சென்னை நகரத்தின் வீதிகளிலே இருக்கின்ற மாடுகளை எல்லாம் டெல்லி மாநகரம் இருப்பதைப் போல, கல்கத்தா மாநகரம இருப்பதைப் போல, மற்ற மாநிலங்களிலே உள்ள தலைநகரங்கள் இருப்பதைப் போல — சென்னைக்கு அப்பால் கொண்டு போய் வைத்து, அந்தத் தொழிலை நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்படி நான் வேண்டிக் கேட்டுக்கொள்வதற்குக் காரணம் இது வெறும் பேச்சாக, வேணுகோபால் சொல்கிறானே எழுதி வைத்துக் கொள்வோம், அது ரெக்கார்டாக இருக்கட்டும் என்று கருதாமல், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு ஏழைகளின் நலன் காக்கும் அரசு என்று நாம் எல்லாம் சொல்லிக்கொண்டிருக் கிறோம். நானும் சேர்ந்துதான் சொல்கிறேன் — எனவே அந்த ஏழைகளின் கண்ணீரை, துயரைத் துடைக்கின்ற வகையில், இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்படிச் செய்தால், நகரம் சீர்படும். சென்னை நகரம் சிங்கார நகரமாக இருக்கும். தமிழகத்தின் தலைநகரம் என்று நாம் சொல்லிக் கொண்டிருக் கிறோம். நான் கேட்டுக்கொள்கிறேன், அதிகாரிகள் தங்களுடைய நெஞ்சிலே கை வைத்துச் சொல்லட்டும், என் இன்னும் ஒரு படி மேலே போய்ச் சொல்கிறேன், இங்கேயிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய இதயத்திலே கைவைத்துச் சொல்லட்டும், சென்னை நகரத்திலே கொசுக் கடிக்கிறதா? இல்லையா? இங்கே இருக்கின்ற பத்திரிகை நிருபர்களைக் கேட் கிறேன், பத்திரிகை ஆசிரியர்களைக் கேட்கிறேன், விவரம் தெரிந் தவர்களைக் கேட்கிறேன். உங்கள் இதயங்களைத் தொட்டுச் சொல்லுங்கள், கொசுத் தொல்லையிருக்கிறதா ? இல்லையா ?



1985 மார்ச் 18] [திரு. எஸ். வேணுகோபால்]

இந்தச் சென்னை நகரம், சாக்கடை நீரால் மிகவும் துர்நாற்றம் பெற்றிருக்கிறது. கூவத்தை அழகுபடுத்துகிறோம் என்று சொன் னார்கள் அப்போது இருந்த அரசாங்கத்தார். அதற்குப் பின்னாலே, அது நாற்றம் எடுக்க ஆரம்பித்தக் காரணத்தாலும், ரோடுகளில் இருக்கின்ற ஏழை மக்களின் குழந்தைகள், வீதிகளை கழிப்பிடங்களாக மாற்றுவதாலும், சென்னை நகரத்தின் அழகு சீர்குலைக்கப்பட்டிருக்கிறது. ரோடுகளிலே உள்ள குப்பைகளை அகற்றவேண்டும் என்று சொன்னால், வண்டி வரவில்லை என்று சொல்கிறார்கள். வண்டிவேண்டும் என்று அதிகாரிகளைக் கேட் டால், அரசாங்கத்திடம் சொல்லுங்கள் என்று சொல்கிறார்கள். அரசாங்கத்தைக் கேட்டால், நாங்கள் மானியம் ஒதுக்கிறோம் என்று இப்படி ஒருவருக்கொருவர் பழி சொல்லிக்கொண்டு போகி றோமே தவிர, சென்னை நகரத்தை சுகாதாரமாக வைத்துக் கொள்ள நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. ஆகவே நான் கேட் டுக்கொள்கிறேன். இந்தச் சென்னை நகரத்திலேதான் சட்ட மன்றம் கூடுகிறது. இங்கேதான் அமைச்சர்கள் இருக்கிறார்கள், இங்கேதான் கவர்னர் இருக்கிறார். இந்த சிட்டியிலேதான் மத்திய மாநில அதிகாரிகள் எல்லாம் வந்து போகிறார்கள். இங்கேயுள்ள சென்ட்ரல் ஸ்டேசனையும், எக்மோர் ஸ்டேசனையும் போய்ப் பாருங்கள். உங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். இந்த நகரம் சிங்கார நகரமாக, அழகு நகரமாக இருக்கவேண்டும் என் றால், ஏழை எளியவர்கள், குடிசையிலே இருப்பவர்கள் — வசதி யுள்ளவர்கள் ஏ. சி.யிலே இருக்கிறார்கள், அல்லது 2, 3 பேன் களைப் போட்டுக்கொள்கிறார்கள், கொசு மருந்தை வைத்துக் கொள்கிறார்கள்—வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்கள் ஆகியோருக்கு எல்லாம் நல்ல வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். இந்த நகரத்திலே கொசுத் தொல்லை இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். எனவே இந்த நகரம் சீர்படு வதற்கு, தமிழக அரசு அதிகாரிகளைக் கூப்பிட்டு, ஒன்று திரட்டி, நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போதுகூட மருந்து அடிக்கிறோம் என்று அதிகாரிகள் சொல் கிறார்கள். ஆனால் அந்த மருந்தினால் கொசு சாகிறதா என் றால் இல்லை, அது வளர்கிறதே தவிர சாகவில்லை என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. எஸ். வேணுகோபால்] [1985 மார்ச் 18

ஆகவே தான் சென்னையில் உள்ள மக்கள் நகரமன்றத் தேர்தலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பல்லாண்டுக்காலமாக சென்னையிலே இருக்கிற மக்கள் தேர்தல் நடக்கவில்லையே என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆகஸ்டு மாதம் தேர்தல் நடக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள், அதை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன்.

(முற்பகல் 10-20)

ஆனால் அதே நேரத்திலே இங்கேயிருக்கின்ற வாக்காளர்களுக்கு நீங்கள் 'ஐடென்டிட்டி கார்டு' கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்றால், இப்படி கார்டு கொடுத்தால், சென்னையிலே திருட்டு ஓட்டு யாரும் போடமாட்டார்கள். இங்கே சில கட்சிகள் திருட்டு ஓட்டுபோட்டு ஜெயித்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே ஐடென்டிடி கார்டு கொடுக்கவேண்டும். இதை என்னுடைய கட்சியின் கருத்தாக நான் சொல்லவில்லை என்றாலும் கூட என்னுடைய சொந்தக் கருத்தாகச் சொல்கிறேன். சரி என்றால் ஏற்றுக் கொள்ளுங்கள், இல்லை என்றால் விட்டு விடுங்கள். பெரிய நகரங்களில், குறிப்பாக சிங்கப்பூர் போன்ற இடங்களில் எல்லாம் இப்படி ஐடென்டிட்டி கார்டுகள் கொடுத்து விடுகிறார்கள். நடைபாஸ் என்று அதைச் சொல்லுகிறார்கள். அதற்கான போட்டோக்கள் போன்றவற்றை அவர்களே எடுத்துக் கொண்டாலும் கூட சரி, அரசாங்கம் அதை உடனடியாகச் செய்வதற்கு முன் வர வேண்டும். செய்தால் நலமாக இருக்கும்.

ஆகஸ்ட் மாதம் நடத்தப் போகிறோம் என்று சொன்னதற்குப் பிறகும் மறுபடியும் ஒரு சட்டத்தைப் போட்டு அதைக் கால நீட்டிப்புச் செய்து பின்னுக்குக் கொண்டு போகாமல், அறிவித்தபடி உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும் என்று என் கட்சியின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன். நமது நகரம் மிகச் சீரும் சிறப்புமாக நல்லபடியாக இருக்க வேண்டும் என்பதற்காகவாவது தேர்தலை நடத்துங்கள் என்று அருள் கூர்ந்து கேட்டுக் கொள்கிறேன். தேர்தலை நடத்துங்கள் அதில் நாம் கூட்டணியாக நின்று வெற்றி பெறுவோம். இந்த மாநகராட்சித் தந்தை பதவியையும் நாம் பிடிப்போம் என்று கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.



1985 மார்ச் 18]

*திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருவொற்றியூர் தொகுதியினுடைய ஒரு பகுதியான முதல் வட்டம் சென்னை மாநகராட்சியினுடைய பகுதியாக இருக்கிற காரணத்தால், அங்கேயிருக்கிற மூலக்கடை, எருக்கஞ்சேரி, கொடுங்கையூர் போன்ற பகுதிகள் மாநகராட்சியில் புதியதாகச் சேர்க்கப்பட்டிருக்கிற காரணத்தால்தான், வேகமாக முன்னேற்றம் பெறவில்லை என்று அரசு எண்ணுவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கலாம். இருந்தாலும் அந்தப் பகுதியிலே, கொசுக்களின் நிலைமை எப்படி இருக்கிறது என்றால், எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சிறப்பாக எதை நினைவு கூர்ந்தாரோ, அதையே நான் நினைவு படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய பகுதியிலே கொசுப் பண்ணைகள் ஏராளமாக இருப்பதைப் பார்க்கிறோம். கொசுப் பண்ணையினால் கொசுக்கள் நல்ல பண் இசைத்து உடல் முழுவதும் பண்பாடுகிறார்கள் ஆனாலும், காதில் மட்டும் அந்த இசையைக் கேட்கிறபோது சற்றுத் தொல்லையாகவே இருப்பதை நாம் உணர்கிறோம். குறிப்பாகச் சென்னை மாநகராட்சியிலே அதற்காக மருந்துகள் அடிக்கிறார்கள். அடித்தாலும் அந்த மருந்துகளையும் ஏற்றுக் கொண்டு, அந்த கொசுப் புழுக்கள் வளர்ந்து மேலும் அதிகமான கொசுக்களை உற்பத்திச் செய்வதைப் பார்க்கிறோம். ஆகவே கொசுக்களை ஒழிப்பதற்கு நல்ல முறையில் நம்முடைய தமிழக அரசு விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறிப்பாக பாம்பே, கல்கத்தா, டெல்லி போன்ற மாநகராட்சிகளின் மூலமாக அங்கே கொசுக்கள் ஒழிக்கப்பட்டு விட்டதாகச் சொல்கிறார்கள். மேற்படி நகராட்சிகளில் எல்லாம் எப்படி கொசுக்களை ஒழித்தார்கள் என்று பார்த்து, அதேபோன்று சென்னை மாநகராட்சியிலும் கொசுக்களை ஒழிக்கும் முறைகளை விரைவாகச் செய்து மக்களை கொசுக்கடி நோயின் பிடியிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்று இந்த அரசை கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

பிறகு மின்சார விளக்கு என்று எடுத்துக் கொண்டால், அது எங்கள் தொகுதியில் அறவே இல்லை. பல இடங்களில் மின்சாரக் கம்பங்களே இல்லை. மின்சார கம்பங்கள் இருந்தாலும் ஓவர் ஹெட் கம்பிகள் என்று சொல்கிற மின்சார கம்பிகள் இல்லை.

[திரு. ஜி. கே. ஜெ. பாரதி] [1985 மார்ச் 18

எங்கள் தொகுதியில் மின்சார குறைகள் ஏராளமாக இருக்கின்றன. அப்படிப்பட்ட குறைபாடுகளை நம்முடைய அரசு, அதிகாரிகளை அதிகாரத்தோடு கேட்காவிட்டாலும், அன்போடு கேட்டுக் கொண்டாவது அந்தக் குறைகளை நிவர்த்திச் செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சாக்கடை. எங்கு பார்த்தாலும் சாக்கடை ஓடுவதை பார்க்கிறோம். மாநகராட்சியில் குப்பை, கூளங்களை அள்ளுவதற்கும் சாக்கடைகளை சுத்தம் செய்வதற்கும் இருக்கின்ற பணியாளர்கள் வாரத்திற்கு ஒரு முறை மட்டுமே அதற்காக அங்கே வருகிறார்கள் என்று, அங்குள்ள மக்கள் கூறுகிறார்கள். அவர்கள் முறையாக வந்து தங்கள் பணிகளைச் செய்வதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும்.

பிறகு குடிதண்ணீர்ப் பிரச்சினை. குடிதண்ணீரே எங்கள் பகுதியில் இல்லை. ஆழ் குழாய்களை அந்தப் பகுதிகளுக்குப் போட்டுத் தரவேண்டும். அத்தோடு போரிங் பம்ப் என்று சொல்கிறார்களே, அத்தகைய குழாய்களையும் போட்டு, சென்னையிலே வாழ்கிற மக்களுக்கு வருகிற புழலேரிக் குடிதண்ணீரை, என் பகுதிக்கும் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, டிரைய்னேஜ் ஸ்கீம் என்று சொல்கிற அந்த திட்டம் இல்லவே இல்லை. அதையும் உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் குறிப்பிடும் முதல் வட்டம் ஆந்திர பகுதியைச் சார்ந்த தெலுங்குப் பணியாளர்கள் நிறைந்த பகுதி. அவர்கள் வாழும் வீடுகளுக்கு பட்டா இல்லாமல் துன்பப்படுகிறார்கள். அவர்கள் வசிக்கும் பகுதிகளில் சாலை வசதியில்லை. சாலைகள் ஒழுங்காக இல்லாமல் குண்டும் குழியுமாக இருப்பதால் அங்கே இருக்கிற மக்கள் மிகவும் அல்லல் படுகிறார்கள். அவர்களுடைய துன்பத்தையெல்லாம் போக்கி அவர்கள் நலமாக வாழ்வதற்கு வழி காட்ட வேண்டும் என்று தமிழக அரசை பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கழிவறைகள். குறிப்பாக பெண்கள் அதிகமாக உள்ள என் தொகுதியில், அவர்களுக்காக கழிவறைகளையும் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆகஸ்ட் மாதம் மாநகராட்சி தே[illegible] பெறவிருப்



1985 மார்ச் 18] (திரு. ஜி. கே. ஜெ. பாரதி)

பதாக தமிழக அரசினுடைய அறிவிப்பு கூறுவதைப் பார்த்து நாங்கள் உள்ளபடியே வரவேற்கிறோம். இந்தத் தேர்தலாவது குறிப்பிட்ட நாளிலே நடைபெறுமானால் இந்த மாமன்றம் ஒரு எழுச்சி பொருந்திய வரலாற்றை உருவாக்கியிருக்கிறது என்று தமிழக மக்கள் ஆர்ப்பரிப்பார்கள் என்ற உணர்வோடு கேட்டுக் கொள்கிறேன்.

ஆக தேர்தல் நடந்தால் அந்த மாநகராட்சி உறுப்பினர்கள் அந்தப் பகுதி மக்களுடைய குறைகளைக் கேட்டு, அந்த அதிகாரிகளிடம் முறையிட்டு ஆவன செய்வார்கள். நாங்கள் சட்டமன்ற பணியினை சரியாகச் செய்ய முடியாத ஒரு சூழ்நிலையில், வருகின்ற மக்கள் எல்லாம் தங்களுடைய குறைகளை சொல்வதற்கு முன்னால், அவர்கள் நகரமன்ற பிரச்சனைகளைத்தான் எங்களிடம் அதிகமாக சொல்லி காலத்தை கடத்துகின்ற சூழ்நிலையை பெற்றிருக்கிறோம். இதனை மாற்றி ஒரு சட்டமன்ற உறுப்பினர் பொறுப்புணர்ச்சியோடு நடந்துகொள்வதற்கான வழிவகையை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று மெத்த பணிவோடு கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதிகாரிகளிடம் முறையீடு செய்தால் அதிகாரிகள் எங்களை அன்போடு, கனிவோடு பேசி அனுப்பிவிடுகிறார்களே தவிர அது செயல்வடிவமாக வருகிறதா என்றால் அது கேள்விக்குறியாகவே இருக்கிறது. எனவே அரசு அதிகாரிகளுக்கு நல்ல முறையிலே உத்தரவினைப் பிறப்பித்து விரைவாகச் செயல் திட்டத்தை முடுக்கிவிட வேண்டுமென்று பணிவோடு, இந்தப் பேரரசை கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்களுடைய மூலக்கடையினுடைய பகுதியைச் சேர்ந்த மக்கள், சென்னையில் வாழ்கின்ற மக்கள் எவ்வளவு நலன்களைப் பெற்று வருகிறார்களோ அவ்வளவு நலன்களை தாங்களும் பெற வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். அப்படி ஆசைப்படுகின்ற அந்த மக்களுக்கு நல்ல நலன்களை இந்த அரசு ஏற்படுத்தித்தர வேண்டுமென்று அந்தப் பகுதியின் சார்பாக நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அந்தப் பகுதியிலே ஏராளமான குடிசைகள் இருக்கின்றன. எப்பொழுதும் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் ஏழைகளுக்கு வாழ்வு அளித்து வளம் கொழிக்கும் பெருமைகளைச் செய்து வருகிறார்கள். அந்த நல்ல பணிகள் எங்கள் பகுதியிலே இருக்கின்ற முதல் வட்டத்

திற்கும் கிடைக்கச் செய்து அழகான மாடி வீடுகளை ஏற்படுத்தி, அந்த ஏழை மக்களும் மாட மாளிகையினைப் பெறுகின்ற வாய்ப்பினை உருவாக்கித்தருமாறு, அந்தப் பகுதியினுடைய பேரவை உறுப்பினர் என்ற முறையில் கேட்டு என் உரையினை நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியினுடைய தனி அதிகாரியினுடைய காலவரையினை நீட்டிக்கின்ற இந்த சட்டத்தின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேர் பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அதில் குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் பேசுகின்றபோது தேர்தல் ஆகஸ்ட் மாதம் நடைபெறும் என்று அவை முன்னவர் அவர்கள் அறிவித்தார்கள். இந்த முறையாவது அந்த வாக்குறுதிப்படி தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்று அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்வதெல்லாம், தமிழகத்தினுடைய முதலமைச்சர், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள்— நீங்கள் எந்த அளவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மாநகராட்சி நிர்வாகத்திலே இருக்கவேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அதைவிட முழு அளவு அவர்கள் அத்தகைய எண்ணத்திலே இருக்கிறார்கள் என்பதையும், அவர்கள் நல்ல நோக்கத்தோடு சில மாற்றங்களை செய்ய வேண்டும் என்று எண்ணிய நேரத்தில் அதற்குச் சில இடர்பாடுகள் ஏற்பட்டதும், அதனால் இந்தத் தேர்தல் தாமதம் ஆனது பற்றியும் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது ஒன்றைச் சொன்னார்கள். மாநகராட்சியிலே மக்களைச் சந்தித்து குறைகளைக் கேட்கின்றபோது, மாண்புமிகு நம்முடைய பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் கூட என்னிடத்திலே மகஜரைக் கொண்டுவந்து கொடுத்தார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாத காரணத்தினால், இந்த நிலை ஏற்பட்டது என்று கூறினார். பாராளுமன்ற உறுப்பினரும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவர். அந்தக் குறைகளை பெறச்சென்ற நானும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவன். மாநகராட்சி உறுப்பினர்கள் மட்டும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்ல, நாமும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்ற வகையில்





மக்களுடைய குறைகளை நாமே எடுத்துச் சொல்வதில் எந்த விதத் தவறும் நிச்சயமாக இருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, அவர்கள் எல்லாம் விரும்புவதுபோல், மாநகராட்சித் தேர்தல், நம்முடைய அவை முன்னவர், தமிழக முதலமைச்சர் அவர்கள் அனுமதியோடு அறிவித்தபடி ஆகஸ்ட் செப்டம்பர் திங்களில் முறையாக நம்முடைய உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் தேர்தல் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

அடுத்து நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சிந்தன் அவர்கள் இங்கே பல்வேறு பிரச்சனைகளை எடுத்துச் சொன்னார்கள்.

அதில் குறிப்பாக அவர்கள் சொன்னது, அதிகாரிகளைச் சந்தித்தால் முறையாகப் பதில் வருவதில்லை என்று சொன்னார்கள். குறிப்பாக எல்லா அதிகாரிகளுக்கும், மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களை அணுகிக் கேட்கின்றபோதும், சொல்கின்றபோதும், அந்தக் குறைகளைக் கேட்க வேண்டும், அந்தக் குறைகளுக்கு உரிய நிவாரணம் செய்ய வேண்டும், அப்படிச் செய்ததற்குப்பிறகு அவர்களுக்கு முறையாக பதில் அனுப்பவேண்டுமென்று எல்லா அதிகாரிகளும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். அப்படி அவர்கள் செய்யத் தவறியிருப்பார்களேயானால், அதை எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றபோது, அதன் மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு எந்த நிமிஷத்திலும் தயங்குவது இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போலவே வரி விதிப்பதிலும், வாடகை நிர்ணயிப்பதிலும், வேறுபாடுகள் இருக்கின்றன. அதிகாரிகள் அதைப் பல்வேறு நோக்கத்தோடு அணுகுகிறார்கள் என்று சொல்கிறார்கள். வரி விதிப்பிலே குடியிருப்பவர்கள் அரசாங்கத்தோடும், மாநகராட்சியோடும் ஒத்துழைத்தால் தான், உண்மையான வாடகையை நிர்ணயிக்க, வரி விதிக்கமுடியும். இந்த வகையிலே மக்களும் ஒத்துழைக்கவேண்டுமென்ற வேண்டுகோளை வைக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து வேணுகோபால் அவர்கள் பேசுகின்றபோது, இங்கே குறிப்பாக முக்கியமான ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஐடெண்டடி கார்டு வழங்கி இந்தத் தேர்தலை நடத்தவேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஐடெண்டடி கார்டு வழங்கவேண்டுமென்று சொல்லி, அதற்குரிய நடவடிக்கைகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டன. அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, முழு வேகமாகச் செயல்படுகின்ற நேரத்தில் தான் நம்முடைய தேர்தல் வந்தது. ஆகவே அந்தப் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டன. ஐடெண்டடி கார்டு கொடுத்தால், மாநகராட்சித் தேர்தல் தாமதப் படும் என்று மாண்புமிகு உறுப்பினர் பொன்னுரங்கம் சொன்னது சரியானதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுபோல இன்னொன்றையும் மாண்புமிகு உறுப்பினர் வேணுகோபால் அவர்கள் சொன்னார்கள். அதிலேயும் பொதுமக்களுடைய ஒத்துழைப்பு வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் பாரதி அவர்கள், புதியதாக மாநகராட்சியில் சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கு முறையாக எல்லா வசதிகளும் செய்து தரப்படவேண்டுமென்று சொன்னார்கள். அவைகளுக்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சாலைகள் மிகவும் பள்ளமாகவும், போக்குவரத்திற்கு இடையூராகவும் இருக்கின்றன என்று சொன்னார்கள். அவைகளைச் சமன்படுத்துவதற்கும், சீர்படுத்துவதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

12—3—1985 அன்று நான் மாநகராட்சிக்குச் சென்றபோதே, உரிய கட்டளையிட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளச் சொல்லியிருந்து, அவைகளும் நடைபெற்றுகொண்டிருக்கின்றன. தகவல்களும் மாநகரின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்து கொண்டிருக்கின்றன. தொலைபேசி மூலமாகவும் எனக்குச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

அடுத்தபடியாக, குடிநீர்ப் பிரச்சினை, சாக்கடைப் பிரச்சினைகளைப் பற்றி இங்கே சொன்னார்கள். மெட்ரோ வாட்டர் அண்ட் சுவரேஜ் போர்டுதான் அதைக் கவனிக்க வேண்டும். அது மாநகராட்சியின் முழு பணியல்ல. அதையும் நாங்கள் செய்வதற்கு மெட்ரோ வாட்டர் அண்ட் சுவரேஜ் போர்டுக்கு





உரிய தாக்கீதுகளை அனுப்பியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அரசின்மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். சொன்னபடி நிச்சயமாக ஆகஸ்டு மாதத்தில் தேர்தலை நடத்திவிடுவோம், மக்கள் பிரதிநிதிகள் வந்துவிடுவார்கள் என்பதைச் சொல்லி, நீங்கள் தந்திருக்கின்ற, இந்தச் சட்டத்தை மறுக்கின்ற உங்களுடைய தீர்மானத்தைத் திரும்பப்பெற்றுக் கொண்டு நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு முடிக்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"1985 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1985) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன் வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"1985 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1985) நிறைவேற்றப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

[1985 மார்ச் 18

## (இ) கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு, 1985.

**திரு. ப. பொன்னுரங்கம்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"ஆளுநர் அவர்களால் 19—11—1984 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற 1984 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 20/1984) இப்பேரவை நிராகரிக்கிறது."

**திரு. மு. இராமநாதன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்தத் தீர்மானத்தை வழிமொழிகிறேன்—

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"1985 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/1985) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : திரு. ப. பொன்னுரங்கம் அவர்களுடைய தீர்மானமும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய தீர்மானமும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன.

* **திரு. மு. இராமநாதன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற இந்தச் சட்டத் திருத்தத்தை நிராகரித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் முன்மொழிந்ததை நான் வழிமொழிந்ததோடு கருத்துக்களையும் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கோவை மாநகராட்சியைப் பொறுத்தமட்டில்—இந்த மன்றத்திலே ஏற்கெனவே சென்னை மாநகராட்சியைப்பற்றிக் குறிப்பிட்டார்கள்—ஏற்கெனவே சென்னை மாநகராட்சியானது, மேயரை

@ 1985-ம் ஆண்டு மார்ச் 14-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



1985 மார்ச் 18] [திரு. மு. இராமநாதன்]

நீண்ட நெடுங்காலமாகப் பார்த்து வந்திருக்கிற மாநகராட்சியாகும். மதுரை மாநகராட்சியும்கூட மேயரை அல்லது அவரது நிர்வாகத்தை அறிந்த மாநகராட்சியாக இருக்கிறது. ஆனால் கோவை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோவை நகராட்சி என்ற பெயர்ப் பலகையை, மாநகராட்சி என்று பெயர் மாற்றம் செய்த தேதியிலிருந்து இன்று வரைக்கும் தேர்தல் நடைபெறவில்லை. அது மட்டுமல்ல, வாக்காளர்களுக்கு அடையாளக் கார்டு கொடுப்பது என்பதை மையப்படுத்தி, அவர்களையெல்லாம் போட்டோ எடுக்க வேண்டுமென்றெல்லாம் சொல்லி தனியதிகாரிகளின் பதவி காலத்தை நீடித்துக்கொண்டே வந்தார்கள்.

சட்டமன்ற உறுப்பினர்கள் மக்கள் பிரதிநிதிகளாக தேர்தலிலே வெற்றிபெற்று வந்திருக்கிறார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கிறவர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான். அதைப்போலவே அமைச்சர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான் இங்கே அமைச்சர்களாக வந்திருக்கிறோம். ஆகவே உள்ளாட்சி மன்றங்களுக்கு, நகராட்சி மன்றங்களுக்கு ஒரு கவுன்சில் வரவேண்டுமென்ற அவசியம் இருந்தாலும் கூட, சட்டமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் அந்த வேலையைப் பார்க்கலாம் என்ற அர்த்தத்தோடு சொன்னார்கள். அதிலே மறுப்பு இல்லை. ஒரு மாநகராட்சியிலே 50, 60 டிவிஷன்கள் இருக்கின்றன, சென்னையைப் போன்ற பெரிய மாநகராட்சியிலே 140 டிவிஷன்கள்கூட இருக்கின்றன என்றால் எல்லா டிவிஷன்களுக்கும் சட்டமன்ற உறுப்பினரே போய்ப் பார்த்து லைட் எரியவில்லையா என்றும், குழாயில் தண்ணீர் வருகிறதா என்றும் சாக்கடை நீர் தேங்கி நிற்கிறதா என்றும் கவனிக்க முடியாது.

உள்ளாட்சி மன்றத் தேர்தல் பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிட்ட தேதியை அறிவிக்க இல்லையென்றாலும், மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப்போல், மாண்புமிகு அவை முன்னவர் மதிப்பிற்குரிய நாவலர் அவர்கள் அதைப்பற்றித் தெரிவித்திருக்கிறார்கள். அதை வழிமொழிந்து உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஆகஸ்டு செப்டம்பரில் தேர்தல் நடைபெறும் என்று சொன்னார்கள். அதையும் இந்தச் சட்டத்திருத்தத்திலே சொல்லி இன்ன தேதியில் தேர்தல் நடைபெறும் என்று சொன்ன

வந்திருந்தால் இதன்மீது இவ்வளவு தூரம் கருத்துக்கள் தெரிவிக்க வேண்டிய அவசியம் இருந்திருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-40.)

சிங்காரச் சென்னை என்று சொல்வதைப்போன்ற நகரமாக இருக்கிற கோவை நகரத்திலே நான் வெற்றிபெற்று வந்திருக்கிற கோவை மேற்குத் தொகுதியாக இருந்தாலும், அல்லது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிற கோவை கிழக்குத் தொகுதியாக இருந்தாலும் சரி, ஜனதா கட்சி உறுப்பினர் திரு. வெங்காளியப்பன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற சிங்காநல்லூர் தொகுதியாக இருந்தாலும்சரி, திரு. நடராசன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற பேரூர் தொகுதியாக இருந்தாலும்சரி நாங்கள் எல்லாம் கோவை மாநகராட்சிக்குள்ளாக வெற்றி பெற்று வந்திருக்கிறவர்கள்தான். நாங்கள் மாநகராட்சி அதிகாரிகளிடத்திலே 3 முறை கலந்து பேசியிருக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலம், கோவை மாநகராட்சி அதிகாரிகள் அத்தனை பேரும் உட்கார்ந்து இந்த மாநகராட்சி எப்படி சீர்கெட்டு இருக்கிறது என்பதை வலியுறுத்தி உடனடியாக இதை செம்மைப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வாதித்து இருக்கிறோம். என்னதான் சட்டமன்ற உறுப்பினர் என்கிற அளவில் நாங்கள் மாநகராட்சி அதிகாரிகளிடத்தில் கருத்து தெரிவித்தாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோவை மாநகரத்திற்கு அண்மையில் வருகை தந்திருந்தார்கள். நான் அவர்களை கேட்டுக்கொள்ள விரும்புவது, அமைச்சர் அவர்கள் அல்லது அதிகாரிகள் என நீங்கள் மட்டுமே கலந்து பேசி ஒரு உள்ளாட்சி பரிபாலனம் நடத்துவது என்ற முடிவு எடுத்துவிட்டால், ஒரே ஒரு திருத்தம் தான் தேவை. நாங்கள் ஆட்சியில் இருக்கும் காலம் வரைக்கும் உள்ளாட்சி மன்றமோ, நகராட்சி மன்றமோ, மாநகராட்சி மன்றமோ மக்கள் பிரதிநிதிகளால் நிர்வாகம் நடத்தப்படக்கூடிய சூழ்நிலைக்கு நாங்கள் வைக்க மாட்டோம்: என்ற ஒரு திருத்தத்தை மட்டும் கொண்டு வந்து நிறைவேற்றிவிடலாம். ஆண்டுக்கு ஆண்டு நீங்கள் மாநகராட்சியினுடைய அதிகாரிகளுடைய ஆயுட்காலத்தை நீட்டித்து தனி அதிகாரிகளின் ஆயுட்காலத்தை நீட்டித்து, வருடா வருடம் திருத்தம் கொண்டு வந்து ஆண்டுக்கு ஒரு முறை இந்த மாமன்றத்தில் இதன் மீது கருத்து தெரிவிக்க வேண்டிய அவசியமே இல்லாமல் போய் விடும். நாங்கள்





ஆட்சி பொறுப்பில் இருக்கும் காலம் வரை நிச்சயம் உள்ளாட்சி மன்ற தேர்தல், நகராட்சி மன்ற தேர்தல், நடத்த மாட்டோம். அதுதான் எங்களுக்கு மக்கள் அளித்த தீர்ப்பு என்று ஒரு வார்த்தையில் தீர்மானத்தை நிறைவேற்றி விடுங்கள். உங்களுக்கு ஆதரவு இருக்கிறது.

மாமன்ற தலைவர் அவர்களே, உங்கள் மூலம் அமைச்சருக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், உங்களுக்கு மக்கள் இடத்தில் அந்த தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு நீங்கள் இதுவரை தெரிவித்து இருக்கிற கருத்தின்படி உங்களுக்கு பெரும்பான்மை இருக்கிறது. ஆனால் நான் என்னை தேர்ந்தெடுத்து அனுப்பி இருக்கின்ற மக்கள் சார்பில் இந்த சட்ட திருத்தத்தை எதிர்த்து கருத்து தெரிவிக்கும்போது, கோவை மாநகரம் நாற்றம் அடித்துக் கொண்டிருக்கிறது என்பதை சொல்ல விரும்புகிறேன். பழைய காலத்தில் கிராமத்தில் பாட்டு பாடுவார்கள் "பச்சைமலை, பவள மலை எங்களது நாடு, அந்த பரமேஸ்வரன் வாழ்வதும் எங்களது நாடு; கொச்சி மலை, கொடுகு மலை எங்களது நாடு, அந்த குமரேசன் வாழ்வதும் எங்களது நாடு" என்று கிராமப் பாடல் உண்டு.

ஆனால் நான் கோவையில் பார்ப்பது குப்பை மலை; மண்ணு மலை எங்களது ஊர் என்று—கோயம்புத்தூரு என்றாலே குப்பை மலைகளும் மண்ணு மலைகளும் இருக்கின்றன. குப்பையை எடுப்பதற்கு லாரிகள் கிடையாது. அதை எடுப்பதற்கு தொழிலாளர்கள் அதிகம் கிடையாது. வண்டிகள் கிடையாது வண்டியில் பூட்டப்பட்டு இருக்கிற பழைய மாடுகள் குப்பை மேட்டின் மீது அந்த குப்பைகளை இழுத்துக் கொண்டு போவதற்கு சக்தி அற்றுபோய் குப்பையினுடைய லோடு தாங்காமல் மாடுகள் மல்லாந்து விழுகின்றன. அது ஒரு விசித்திரம். கோவை மாவட்டத்தில் இவற்றை எல்லாம் அதிகாரிகள் இடத்தில் பேசினோம், அந்த தெருவிலும் சந்திலும் சிமெண்ட் சிலாப் கிடையாது.

அது மட்டும் அல்ல, 15 நாட்களுக்கு முன்பு, கோவை மாநகரத்தில் அதிகப்படியாக உயர்த்தப்பட்டு இருக்கிற குடிநீர் வரி, வீட்டு வரி பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வருவதற்காக ஒரு தந்தியை கொடுத்தேன். நான் ஒன்றை கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், மக்களுடைய பிரதிநிதிகள் அவ்வப்போது வரக்கூடிய பிரச்சினையை ஒட்டி

அமைச்சருக்குக் கடிதம் எழுதும்போது, சில நேரங்களில் தந்தி அனுப்பும்போது அது எங்களுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது, அது சம்பந்தமாக கவனிக்கிறோம் என்றாவது ஒரு பதில் வர வேண்டும். இந்த அவையில் இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் இன்று ஆளும் கட்சியாக இருக்கலாம், எதிர்க் கட்சியாக இருக்கலாம், ஆனால் உறுப்பினர்கள் கடிதங்களுக்கு உறுப்பினர்களுடைய தந்திகளுக்கு ஒரு பதில் வரவேண்டாமா? இனியாவது அமைச்சர் பெருமக்கள் அப்படி ஒரு பதிலை தந்து அந்த பிரச்சினை சம்பந்தமாக, சம்பந்தப்பட்ட அதிகாரி களிடத்தில் அதற்கான நடவடிக்கை எடுப்பதற்கான உத்திரவை பிறப்பிக்கவேண்டும் என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுக் கொள்ள விரும்புகிறேன். என் என்றால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சில் இருக்கின்ற காலத்தில், ஒரு பைப்புக்கு இரண்டு ரூபாய் வாட்டர் டாக்ஸ் என்று இருந்தது.

ஆனால் இப்போது தனி அதிகாரிகளின் நிர்வாகத்தில் அது 350 ரூபாய், 400 ரூபாய் என்று வருகிறது. கவுன்சில் இருக்கிற காலத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகம் நடக்கும் காலத்தில் ஒரு வீட்டில் நான்கு பேர் வாடகைக்கு குடியிருந்தால் ஒரு டெனன்டுக்கு எட்டு அணா எக்சைஸ் டாக்ஸ் என்று போட்டு நான்கு பேர் இருந்தால் நான்கு அரை இரண்டு ரூபாய் என்று வாங்கி ஒரு பைப்புக்கு கனெக்ஷன் கொடுத்தோம். அது மேக்சிமம் ஆறு ரூபாய் அவ்வளவு தான். ஆனால் இன்றைக்கு அது 360 ரூபாய் 400 ரூபாய் வரை வருகிறது. ஒரு கணவனும். மனைவியும் இரண்டு பேர் இருக்கும் வீட்டுக்கு அப்படி வந்தால் வீட்டு வரியை விட, தண்ணீர் வரி அதிகமாக வந்தால் தாங்க முடியுமா? ஆகவே சிலர் கோர்ட்டுக்குச் சென்று கோர்ட்டில், பழைய வாடகைப்படி பழைய வரியை செலுத்துங்கள் என்று தீர்ப்பு அளித்து, அதுவும் சட்ட சிக்கலுக்கு உரிய பிரச்சினையாகி இருக்கிறது. அதிகாரிகளை கேட்டால் என்ன சொல்கிறார்கள். இதுதான் எங்களுக்கு அரசாங்கத்தின் உத்தரவு: நீங்கள் மேலே பாருங்கள்: மேலே கேளுங்கள் என்று அதிகாரிகள் சொல் கிறார்கள். ஆகவே, இப்படி அதிகாரிகளின் கைகளைக் கட்டிவிட்டு, அவர்கள் மக்களுக்கு நன்மை செய்வதற்கான வாய்ப்பற்ற நிலையில், மந்திரிமார்களின் உத்தரவுக்குத் தீமை, கைபொம்மை போடுகின்ற பொம்மை நிர்வாகத்தைச் செய்யக்கூடிய, மாநகராட்சி மன்றம் எந்த வகையில் மக்களுக்கு நன்மை பயக்கும் என்பது தான் என்னுடைய அடிப்படையான கேள்வியாகும்.





(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அந்த அடிப்படையில்தான் நான் இந்த மன்றத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், நம்முடைய அமைச்சரவர்கள் சொன்னார்கள், மெட்ரோ வாட்டர் அன்ட் சூயஜ் போர்டு இருக்கிறது, அதுதான் கவனிக்க வேண்டுமென்று சொன்னார்கள். பேரவைத் தலைவரவர்களே, நான் உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபொழுது, சிறுவாணி குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படுவதற்காகக் கால்கோள் விழா நடத்தப் பட்டது. அப்பொழுது அதன் மதிப்பீடு 10 கோடி ரூபாய்தான். அந்தத் திட்டத்தின் ஒரு பகுதி கேரள எல்லையிலே தொடங்க வேண்டி இருந்த காரணத்தால், கேரள எல்லையிலே நிறை வேற்றப்பட வேண்டிய அந்தத் திட்டத்திற்கு அப்போதைய மதிப்பீடு ஆறு கோடி ரூபாய்தான். ஆனால் அந்தத் திட்டத்தைக் குறிப்பிட்ட காலகட்டத்தில் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை களை இன்றைய ஆளுங்கட்சி எடுப்பதற்கு அக்கறை செலுத்தாத காரணத்தால், அதைத் துரிதப்படுத்தி நடத்தாத காரணத்தால், கேரள எல்லையில் அந்தப் பகுதியிலே நிறைவேற்றப்பட வேண்டிய திட்டத்திற்கு மதிப்பீடு ஆறு கோடி ரூபாயிலிருந்து 13 கோடி ரூபாயாக உயர்ந்தது. ஆக, 10 கோடி ரூபாயிலே நிறை வேற்றப்பட வேண்டிய அந்தத் திட்டம், 32 கோடி ரூபாய்க்கு வந்து சேர்ந்தது. இப்படி 32 கோடி ரூபாய் என்ற அளவிற்கு அந்தச் சிறுவாணித் திட்டத்தின் மதிப்பீடு உயர்ந்ததற்குக் காரணம் மக்கள் அல்ல, அதற்குக் காரணம் ஆளுகின்ற ஆட்சி தான். 32 கோடி ரூபாய் என்ற இந்த தொகை உலக வங்கியிலே யிருந்தும், லைப் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷனிலிருந்தும் கடன் பெற்றிருக்கிறோம். இதற்கெல்லாம் வட்டி அதிகமாகிறது. ஆகவே, அந்த வட்டியைக் கோயம்புத்தூர் மக்கள் தலையிலே கட்டுகிறோம், ஆகவே ஆறு ரூபாய்க்குப் பதில் 360 ரூபாய் என்று வாட்டர் டாக்ஸைப் போட்டால் அது தாங்காது. மக்கள் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

நான் இன்னொன்றையும், இந்தச் சட்ட முன்வடிவை எதிர்க்கின்ற நேரத்தில் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற அந்தக் கவுன்சில் வருகின்ற வரையிலும், இந்தப் புதிய வாட்டர் டாக்ஸ் வரி உயர்வை, வீட்டு

வரி உயர்வை நாங்கள் நிறுத்தி வைக்கிறோம், அதுபற்றிய முடிவைத் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தக் கவுன்சில் முடிவு செய்து கொள்ளும் என்ற உறுதியைத் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஆகவே, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் இங்கே சொன்னார்கள், நீங்களெல்லாம் எவ்வளவு தூரம் அக்கறை கொண்டிருக்கிறீர்களோ, நீங்களெல்லாம் மக்கள் நலனில் எவ்வளவு தூரம் கவனம் கொண்டிருக்கிறீர்களோ அந்த அளவிற்கு எங்களுக்கும் இருக்கிறது என்று சொன்னார்கள். அதை நான் மறுக்கவில்லை. உங்களுக்கும் இருக்கிறது. உங்களுக்கு இருக்கிறது என்பதை நிரூபிக்கத்தான், ஆண்டுக்காண்டு இப்படியொரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து மக்களை ஏமாற்றாமல், உங்கள் நம்பிக்கையை நிலைநாட்டுகின்ற அளவிற்கு மாநகராட்சித் தேர்தலை நடத்துங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். பெருமாள் என்ற பெயருக்கு முன்னால் ஒரு வார்த்தையைப் போட்டு, பெத்த பெருமாள் என்று ஆக்குவதைப்போல, நகராட்சி என்ற பெயருக்கு முன்னால் 'மா' என்ற எழுத்தைச் சேர்த்து 'மா'நகராட்சி என்று போர்டு போடுவதற்கு ஒரு ஆட்சி தேவை இல்லை; அதற்கு ஒரு அதிகாரியே போதும். எனவே இப்படிப் போர்டை மட்டும் போடாமல், மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, உண்மையான மக்கள் தத்துவத்திற்கு மதிப்பளித்து, இந்த மாநகராட்சித் தேர்தலை நடத்துவதற்கான தேதியை அறிவியுங்கள். அவை முன்னவரவர்கள் அறிவித்த அறிவிப்பில் நாங்கள் நம்பிக்கை வைத்திருக்கிறோம், அந்த நம்பிக்கையை நிலை நாட்டுங்கள் என்று கேட்டு, இந்தச் சட்ட முன்வடிவை எதிர்க்கிறேன்.

**திரு. கு. ரமணி:** தலைவரவர்களே, இந்தக் கோவை மாநகராட்சி திருத்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில் 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12 ஆம் தேதி தனி அதிகாரி நியமிக்கப்பட்டு, மூன்று ஆண்டுகளுக்குள்ளே அங்கே புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற கவுன்சிலர்களிடமும், அந்தச் சேர்மனிடமும் நிர்வாகத்தை ஒப்படைக்கின்ற வகையிலே தடை பெற வேண்டுமென்ற வகையில் முதலிலே போடப்பட்டிருந்த சட்டம் இருந்தது.



(முற்பகல் 10-50)

இது புதிய மாநகராட்சியாக இருந்தாலும் சட்டப்படி செய்திருக்க வேண்டிய வேலையாகும் இது. ஆனால் அது செய்யப்படவில்லை. ஏன் செய்யப்படவில்லை என்பதற்கான தகுந்த காரணங்கள் இதுவரையில் இன்றைக்கு இருக்கின்ற இந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உள்பட இந்த மூன்று வருஷ காலத்திற்குள் ஏன் நிறைவேற்றப்படவில்லை என்பதற்கான காரணங்கள் சொல்லப்படவில்லை. ஒருவேளை காலம் கடந்து விட்டால் காரணம் தேவை இல்லை என்பது ஒரு வழக்கம் அல்லது கன்வென்ஷனாக ஆகிவிடுமோ என்றுகூட நாங்கள் பயப்பட வேண்டி இருக்கின்றது. உண்மையிலேயே இதற்கான காரணம் சொல்லவேண்டுமா இல்லையா? மூன்றாண்டுகளுக்குப் பிறகு காலாவதியாகிவிட்டது என்று கண்டவுடனே அவசரச்சட்டம் வருகின்றது.

அவசரச் சட்டத்தில் என்ன குறிப்பிடுகிறார்கள் என்றால் இதுவரையிலும் ஏன் நடத்தவில்லை என்பதற்கான காரணம் சொல்லப்படவில்லை. ஆனால் அதற்குப் பதிலாக அடையாள அட்டை வருகின்றது. ஃபோட்டோ கொடுத்து அடையாளம் கண்டுபிடிக்கவேண்டும் என்பதற்காக ஏற்பாடு செய்யப்படுகின்றது என்று இப்படியெல்லாம் அதற்குக் காரணங்களைச் சொல்கிறார்கள். அடையாள அட்டையைக் கொடுத்தாலும் சரி, ஃபோட்டோவை ஒட்டினாலும் சரி, என்னவேண்டுமானாலும் செய்யுங்கள். ஆனால் மூன்றாண்டுகளாக பல்வேறு விதமான காரணங்களைச் சொல்லி அதிகாரிகளின் பதவிக்காலத்தை நீட்டித்துத் தேர்தலைத் தள்ளிப்போட்டுக்கொண்டே வருகின்ற நிலைமை சரியானதல்ல. பாராளுமன்றத் தேர்தலுக்கு அடையாள அட்டை கொடுக்கப்படுகின்றதா? சட்டமன்றத் தேர்தலுக்கு அடையாள அட்டை கொடுக்கப்படுகின்றதா? அதற்கெல்லாம் கொடுக்கப்படவில்லையே, அப்படி கொடுப்பதற்கான ஆலோசனை கூட இருப்பதாகத் தெரியவில்லையே, மாநகராட்சிக்கு மட்டும் ஏன் இப்படி வந்தது? ஒருவேளை 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கெல்லாம் வாக்குரிமை கொடுக்கின்ற நோக்கில் திருட்டு ஓட்டுக்களைப் போட்டுவிடுவார்கள் என்ற பயந்த காரணத்தால் சொல்லியிருப்பார்களோ. என்னவோ தெரியவில்லை. அல்லது இந்த கவுன்சில்களுக்கெல்லாம் தேர்தலை நடத்தினால்

[திரு. கு. ரமணி] [1985 மார்ச் 18

ஆளுகின்ற கட்சி நிச்சயமாக வெற்றி பெறும் என்ற உத்தரவாதம் வந்ததற்குப் பிறகுதான் தேர்தலை நடத்தவேண்டும் என்ற யோசனை இருக்கின்றதோ என்னவோ தெரியவில்லை. அப்படி ஒரு யோசனை இருந்தால் அதைக்கூட சொல்லி விவாதிக்கலாமே.

ஆனால் சொல்வது கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும். அப்படிப்பட்ட எதையும் சொல்லாமல் ஒரு அடையாள அட்டையைக் காரணமாகச் சொல்லி மறுபடியும் ஒரு வருஷத்திற்கு நீட்டிப்பது என்று அவசரச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அப்புறம் அந்த அவசரச்சட்டம் போன ஆண்டு இங்கே நிறைவேற்றப்பட்டு மேல்சபையிலே நிறைவேற்றப்பட முடியாமல் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உடல்நலக் குறைவு காரணமாக இந்தச் சபையை ஒத்திவைக்கும்படி ஒரு நிலைமை ஏற்பட்டு, பின்னர் சட்டசபையே கலைக்கப்பட்டு தேர்தலுக்குப் போயாகிவிட்டது. இவ்வளவுக்கும் பிறகு ஏற்கெனவே கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமல், நமது முதலமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியும் நிறைவேற்றப்படாமல் இருந்ததை எல்லாம் நினைவூட்டியதற்குப் பிறகு நிச்சயமாகத் தேர்தல் நடத்தப்படும் என்ற வகையில் ஒரு உறுதியைத் தந்திருக்கிறார்கள். இந்த உறுதியாவது நிறைவேறுமா? தேர்ந்தெடுக்கப்பட்ட முனிசிபாலிட்டி, கார்ப்பரேஷன் ஆகியவற்றைக் கண்ணாலேயாவது பார்க்க முடியுமா என்று நினைக்கவேண்டி இருக்கின்றது.

நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தை இங்கே முன்மொழியும்போது சொன்னார்கள்—ஆகஸ்டிலே நிச்சயமாகத் தேர்தல் நடத்தப்படும் என்று. அந்த உறுதிமொழி நடைமுறைக்கு வரும் என்றும் சொன்னார்கள். நல்லது. அப்படியானால் அந்த ஆகஸ்ட் மாதத்தில் எந்தத் தேதியில் இந்தத் தேர்தலை நடத்தப் போகிறோம் என்று சுமாராக ஒரு காலத்தை நிர்ணயம் செய்து ஒரு தேதியையாவது குறிப்பிடலாம். அந்த சட்டத்தை முன்மொழிகின்றபோதே அதிலேயே இதற்கான வழிவகைகளைச் செய்து அப்படிக் கொண்டு வந்திருந்தால், இங்கே எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டது போல் இந்தச் சட்ட முன்வடிவை எதிர்க்கவேண்டிய அவசியம் நிச்சயமாக வந்திருக்காது. தேர்தல் இவ்வளவு காலமும் நடக்காமல் இருந்தது, இனி கண்டிப்பாக நடக்கும் என்று நம்பிக்கை கொள்கின்ற வகையில் அப்படிப்பட்ட சமாச்சாரம்



1985 மார்ச் 18] [திரு. கு. ரமணி]

எதுவும் நடக்கவில்லை. இதற்கு முன்னாலே பல தடவைகள் இப்படிச் சொல்லப்பட்டு நாங்கள் எல்லாம் அதை நம்பி வெளியே போய்ச் சொல்வதும், பிறகு அது நடக்காமல் போவதும் என்று இருந்தது. அப்படிப்பட்ட சூழ்நிலை மறுபடியும் வராது என்பதை உறுதியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இறுதியாகப் பதில் சொல்லும்போதாவது தெளிவு படுத்துவார்கள் என்று நான் நம்புகிறேன். எனவே முடிந்தால் அரசாங்கத்தோடு கலந்து தீர்மானித்து ஆகஸ்ட் மாதத்திலே ஒரு தேதியைக் குறிப்பிட்டுச் சொன்னால் அது தேர்தல் வரும் என்ற வகையில் நம்பிக்கையூட்டுவதற்கு வழியாக இருக்கும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நான் இதைச் சொல்லும்போது ஏன் இப்படிப்பட்ட ஒரு மோசமான நிலையில் இதைப்பற்றி இவ்வளவு வேதனை படவேண்டிய அவசியம் என்ன என்பதைப்பற்றி எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமநாதன் அவர்கள் நல்லமுறையில் சொன்னார்கள். கோவை மாநகராட்சியில் அடிப்படை பிரச்சினைகள் தீர்க்கப்படாத காரணத்தால் அது ஏகப்பட்ட புதுப் பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது. ஆடட் ஏரியா என்று சொல்லி, ஏற்கனவே இருந்த முனிசிபாலிட்டி அளவுக்கு அபிவிருத்தி இல்லாமல் இருந்த பல இடங்கள், கார்ப்பரேஷனோடு சேர்க்கப்பட்டு, புதிய கார்ப்பரேஷன் வந்தது. கார்ப்பரேஷன் என்று வந்தவுடனே, வரி உயர்வு என்று வரியை உயர்த்தி விடுகிறார்கள். ஆகவே, அந்தப் பகுதி மக்களுக்குக் கோரிக்கைகள் வந்து விடுகின்றன. அந்த மக்கள் கேட்பதில் மிக முக்கியமான ஒன்று, சிறுவாணி தண்ணீர் தங்களுக்கு வேண்டும் என்பது. மற்றவர்களுக்குக் கொடுக்கிற மாதிரி எங்களுக்கும் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். போதிய சாக்கடை வசதி இல்லை; குறைந்தபட்சச் சுகாதார வசதிகள் இல்லை. குப்பைகள் எடுக்கப்படாமல், சாக்கடைகள் தூர் எடுக்கப்படாமல், விளக்கு எரியாமல் இருக்கிற சீர்கேடுகள் இருக்கின்றன.

ஆகவே, இவற்றில் உடனடி நடவடிக்கைகள் வேண்டுமென்று அவர்கள் கேட்கிறார்கள். ஆடட் ஏரியா என்று சொல்லப்படுகிற புதிய ஏரியாக்களுக்குக் கொடுக்கும்போது ஏற்கனவே இருக்கிற இடங்களுக்குக் கிடைக்காத பற்றாக்குறை ஏற்படும். இதை நாங்கள் நேரடியாக சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற

முறையிலும், அங்கே இருக்கிற நிரந்தரமான கட்சிகள் என்ற முறையிலும், பிரதிநிதிகளாகிய நாங்கள் பேசிய காலத்திலே, இதையெல்லாம் ட்வாட் போர்ட் பார்க்கிறது, அவர்கள் செய்கிறார்கள் என்று சொன்னார்கள். ட்வாட் போர்டு சமாச்சாரம் நமக்குத் தெரிந்ததுதான். இதே அவையில் குடிநீர் விநியோகத்திற்காகப் பொறுப்பேற்றிருந்த அமைச்சர் இப்பொழுது இங்கே இல்லை. அவர் இதே அவையிலே எங்களுக்கு வாக்குறுதி கொடுத்தார்கள். ஒன்பது பெரும் மேல்நிலைத் தொட்டிகள் கோவை மாநகரத்திலே கட்டப்படும். எந்த, எந்த இடம், மேடாக இருந்து, பிரஷர் இல்லாமல், தண்ணீர் பைப்பில் வராமல் இருக்கிறதோ, அங்கே கை பம்புக்கு சேர்த்து லைசென்ஸ் கொடுத்து, பைப் கனெக்ஷனும் கொடுத்தாகி விட்டது. குறைந்த பிரஷர் உள்ள இடங்களிலும் பிரஷர் கொடுத்து. தண்ணீர் விநியோகிப்பதற்கு ஒன்பது மேநிலைத் தொட்டிகள் கட்டப்பட்டு தண்ணீர் விநியோகிக்கப்படும் என்று இதே மாமன்றத்தில் நாங்கள் கேட்டபொழுது அமைச்சர் சொன்னார். அதோடு, அமைச்சர் சொன்னார். உயிர் என் உடம்பில் இருந்தால், 1982 டிசம்பர் 31 ஆம் தேதிக்குள்ளே, நிறைவேற்றப்படும் என்று சொன்னார். அவர் உயிரோடு இருக்கிறார். அவர் இருக்கட்டும், நீண்ட ஆயுளோடு இருக்கட்டும். ஆனால், ஒன்பது தொட்டிகளும் முழுவதும் வேலை செய்கின்றனவா என்றால் வேலை செய்யவில்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்காளியப்பனது சிங்காநல்லூர் தொகுதி போன்ற பகுதிகள் கார்ப்பரேஷன் ஆவதற்காக, கோவை மாநகராட்சியோடு சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அங்கே போதிய அளவுக்குத் தண்ணீர் இல்லை, பைப்புகள், பப்ளிக் டாப்புகள், போதிய அளவுக்குப் போட்டிருக்கிறார்களா என்றால் இல்லை. ஏற்கனவே, கோவை நகராட்சியிலிருந்த மக்களுக்கு என்ன எண்ணம் வந்து விட்டது என்றால், நாங்கள் வரிப் பணம் கொடுக்கிறோம். அதை எடுத்துக் கொண்டு நடந்த வேலைகள் கொஞ்சம்தான். இப்பொழுது புது ஏரியாக்களை நகராட்சியில் சேர்த்துக்கொண்டு, எங்கள் பணத்தை எடுத்து அவர்களுக்குச் செலவு செய்வதால், எங்களுக்கும் போதவில்லை, அவர்களுக்கும் போதவில்லை என்ற நிலை அந்த மக்கள் மத்தியிலே வந்தால் இதற்கு எப்படிப் பதில் சொல்வது? இதற்குப் பதில் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் இன்றைக்குச் சட்டமன்ற உறுப்பினர்





களுக்கு ஏற்பட்டு அவர்கள் பகிரங்கமாகவே தேர்தல் காலத்திலே சொன்னீர்கள், சட்டமன்றத்திற்குப் போவீர்களோ என்ன செய்வீர்களோ, தெரியாது, எங்களுக்கு வசதிகள் வேண்டுமென்று கேட்கிறார்கள்.

கோவை உறுப்பினர் திரு. இராமநாதன் சொன்னமாதிரி, சாக்கடை ஓரத்தில் சின்ன, சின்ன குன்றுகளும், மலைகளும் இருக்கின்றன. அங்கே சாக்கடையிலிருந்து மேலே எடுத்து போட்டுள்ள மண்ணைக் கொண்டு போக வண்டிகள் இல்லை, மாடு இல்லை, ஆள் இல்லை. கிட்டத்தட்ட 8 இலட்சம் மக்கள் கொண்ட மாநகராட்சிக்கு எத்தனை சுகாதாரத் தொழிலாளர்கள் வேண்டும்? இவர்களிடம் கணக்கு இல்லையா? சென்னை மாநகராட்சி கணக்கு இருக்கிறது. அந்தக் கணக்குப்படி பார்த்தால், 7,000 தொழிலாளர்களாவது வேண்டும். இன்றைக்கு வெறும் 2,000 தொழிலாளர்கள் அங்கே இருப்பதால் வேலைகள் எப்படி சரிவர நடைபெறும் என்பதைப் பார்க்க வேண்டும். 100, 200 பேர்களைக் கூட அதிகப்படுத்தி இருக்கமாட்டார்கள். இப்படிப் பட்ட நிலையில், அவர்கள் தினக்கூலி என்ற வகையில் 50, 60 பேர்களைக் கொண்டு வந்து சாக்கடை தூர் எடுக்கும் பணியை ஒப்படைக்கிறார்கள். அது தற்காலிக ஏற்பாடு, நிரந்தரமாகச் சுகாதாரப் பணியைச் செய்வதற்கு, குப்பையைக் கூட்டுவதற்கு, மண் அள்ளுவதற்கு, சாக்கடையை ஆழப்படுத்தி, சீர் செய்வதற்கு, ஏற்பாடுகள் இல்லை, ஆள் இல்லை.

இந்த மாநகராட்சித் தனி அதிகாரியின் பொறுப்பில் 4½ வருஷம் இருக்கும் என்று திருத்தம் கூறுகிறது. அம்மாநக ராட்சி ஏற்பட்டு 4½ வருஷம் ஆகிறது. 4½ ஆண்டுக் காலமாக இந்த ஆட்சிதான் இருக்கிறது. இதுதான் ஒரு மாநகராட்சியை நடத்தும்படியான நிலை என்றால், இது அரசாங்கத்தின் கடுமையான பலவீனம் என்று இன்றைக்காவது ஏற்றுக் கொண்டு, இதற்குத் தகுந்த நடவடிக்கைகள் உடனடியாக எடுக் கப்படும் என்றால், அப்படி நடவடிக்கைகள் வந்தால் நிச்சயமாக நாங்கள் சந்தோஷப்படுவோம்; அதை வரவேற்போம். அப்படிப் பட்ட சூழ்நிலை அங்கேயிருக்கிறது. பாதாள சாக்கடைத் திட்டம் என்றால் அதையும் ட்வாட்தான் செய்து கொடுக்க வேண்டும். என்னுடைய கிழக்கு தொகுதியிலே பெரிய இராட்சச பைப்புகள் புதைக்கப்பட்டு சில ஆண்டுகள் ஆகிறது.

[திரு. கு. ரமணி] [1985 மார்ச் 18

மண்ணுக்கு அடியிலே பைப்புகள் புதைக்கப்பட்டு, காண்ட்ராக்டருக்கும் பணம் கொடுத்தாயிற்று, பைப்பும் புதைத்தாயிற்று. ஆனால் சாக்கடையைக் கொண்டு போய் சேர்க்க வேண்டிய அந்த இடத்தைப் பற்றிய பிரச்னை இன்றைக்கும் முடிவுறாமல், இறுதி முடிவெடுக்கப்படவில்லை

(முற்பகல் 11-00)

யென்று நாங்கள் கேள்விப்படுகிறோம். இந்த பைப்களும் மண்ணிலே புதைந்து, பணமும் செலவாகி பாதாள சாக்கடை செயல்படாத நிலைமை. இது எத்தனை காலத்திற்கு நீடிக்கும்? இதை ஒரு அரசாங்கம் கவனிக்க வேண்டுமல்லவா? இலாக்காவை மட்டும் சுட்டிக்காட்டி பிரயோஜனம் இல்லை. மாநகராட்சி அதிகாரிகள், ஊழியர்களை கேட்டால் நாங்கள் என்ன செய்யமுடியும் என்று சொல்கிறார்கள். ஆகவே சாக்கடை திட்டம் மோசமாகி, ரோடுகள் சுத்தமில்லாமல், பல இடங்களில் ரோடு பார்மேஷன், அமைப்பே செய்யப்படாமல் இருந்து கொண்டிருக்கின்றன. இருக்கிற ரோடுகள் ரிப்பேர் செய்யப்படாமல் மக்களுக்கு கஷ்டங்கள் அதிகமாக இருக்கின்றன. இவை எல்லாவற்றையும் கவனித்து செய்வதற்கு கார்ப்பரேஷன் கவுன்சிலர்கள் இருந்து, வார்டுகளுக்கு கவுன்சிலர்கள் இருந்தால் ஜனங்கள் அவர்களுடன் சேர்ந்து வற்புறுத்தி நடவடிக்கை எடுப்பார்கள். நாமும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான். சட்டமன்றத்திற்கு வரவேண்டாம், 3, 4 மாதங்கள் கார்ப்பரேஷன் வேலையைச் செய்யுங்கள் என்று எங்களைச் சொன்னால் சரியாக இருக்குமா? ஜனங்கள் அப்படி கூட கேட்கிறார்கள். நீங்கள் எதற்காக அங்கே போகிறீர்கள்? எங்களுடைய வேலையை முதலில் செய்யுங்கள் என்று சொல்கிறார்கள். ஏனென்றால் அவர்களுடைய குறைகளைச் சொல்வதற்கு இடம் கிடையாது. அவற்றை காதிலே வாங்குவதற்கு இணக்கமான பிரதிநிதிகள் கிடையாது.

ஆகவே நாங்கள் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகிறோம். இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் விண்ணப்பம் கொடுத்தார் என்று சொன்னது கரெக்ட், நானே எத்தனையோ விண்ணப்பங்கள் கொடுத்திருக்கிறேன். சென்ற தடவை மாண்புமிகு குழந்தைவேலு அவர்கள் அமைச்சராக இருந்தபோது, குடியரசு தினத்தன்று என் வீட்டிற்குப் பக்கத்திலே இருக்கிற மேல்நிலைப் பள்ளியிலே வந்து உட்கார்ந்து, சட்டமன்ற உறுப்பினரான எனக்கு தகவல் சொல்லாமல், மக்களிடம் கோரிக்கைகளை வாங்கினார். இதை நான் கேட்டு கடிதம் எழுதினேன். அவர் எனக்கு என்ன பதில் சொன்னார் தெரியுமா? நீங்கள் வந்து அங்கே உட்கார்ந்தால் மக்கள பூராவும் சொல்ல மாட்டார்கள் என்று எனக்கு பதில் சொன்னார். இங்கே என்ன சொல்கிறார்கள்? பார்லிமெண்ட் உறுப்பினர், ஜனங்கள் கொண்டு போய் கொடுத்தார்கள், அவர்கள் வாங்கிக் கொண்டார்கள் என்று சொல்கிறார்கள். அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்று நமது அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படியென்றால் அதனுடைய அர்த்தம் என்ன? வாட் இஸ் தி இம்பிளிகேஷன்? தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் என்ற முறையிலே நிச்சயமாக பேசுவோம்; நடவடிக்கைகளில் ஈடுபடுவோம். ஜனங்களைச் சந்திப்போம், அவர்கள் கோரிக்கைகளை கேட்போம். இதையெல்லாம் செய்வதில் தவறில்லை. அங்கே அப்படி நடந்தது, இங்கே இப்படி நடக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை தான் இருக்கிறது. ஆகவே நிர்வாகத்தை சீராக நடத்தமுடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே இனியும் தேர்தல்களை ஒத்திப் போடுகிற அல்லது தேர்தலுக்கு அவகாசம் கோருகிற நிலையே இருக்கக் கூடாது. உடனடியாக தேர்தலை நடத்த வேண்டும்.



1985 மார்ச் 18] [திரு. கு. ரமணி]

நாங்கள் சொல்வதை நீங்கள் உங்களுடைய பலத்தைக் கொண்டு நிராகரிக்கப் போகிறீர்கள்; சட்டத்தை நிறைவேற்றத் தான் போகிறீர்கள். குறைந்தபட்சம் ஆகஸ்ட் மாதம் எந்த வாரத்தில் என்று, முதல் வாரம், இரண்டாவது வாரம், மூன்றாவது வாரம், நான்காவது வாரம் என்பதில் எந்த வாரத்தில் இந்தத் தேர்தல் நடத்தப்படும் என்பதையாவது நீங்கள் எடுத்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வரி உயர்வை பற்றி மாண்புமிகு இராமநாதன் அவர்கள் சொன்னார். அது ஒரு பெரிய கொடுமை என்பதை ஞாபகத்திலே கொள்ளவேண்டும். இதே மன்றத்தில் இந்தத் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு காளிமுத்து அவர்கள் ஒரு வாக்குறுதியை கொடுத்தார்கள். தண்ணீருக்கு திடீரென்று வரி உயர்வு என்று அறிவித்த போது அரசியல் கட்சித் தலைவர்கள் நாங்கள் எல்லாம் சேர்ந்து போய் கார்ப்பரேஷன் அதிகாரி அவர்களிடம் பேசினோம். அதை நிறுத்தி வையுங்கள் என்று கேட்டோம். தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சிலர்கள் வரட்டும், அவர்களே

விவாதித்து இதற்கு எத்தனை கோடி தேவைப்படும் என்பதை தீர்மானிக்கட்டும்; அதிகாரிகளே உட்கார்ந்து முடிவெடுக்க வேண்டாம் என்று நாங்கள் சொன்னோம். ஏனென்றால் அதிகாரிகள் சர்க்கார் தானே சொல்கிறார்கள் நாங்கள் செய்ய வேண்டுமென்று, நாங்கள் எப்படி செய்யாமல் இருக்க முடியும என்று அவர்களுடைய அபிப்பிராயத்தை எங்களிடத்திலே தெரிவிக்கிறார்கள். அப்போது அமைச்சர் காளிமுத்து அவர்கள் அதை நிறுத்தி வைப்பதற்கு ஏற்பாட்டைச் செய்கிறோம் என்று எங்களிடத்தில் சொன்னார்கள். அதை வரவேற்றோம். அவர்கள் நிறுத்தி வைத்தார்கள். இப்போது அது "கட்டற்ற சீட்டு போல் களித்திடவே சிந்தனை செய்" என்று சொல்கிற மாதிரி கட்டும், தளையும் இல்லாமல் சிட்டுக் குருவி போல அது பறக்கிறது. இப்போது அந்த வரிகள் கொஞ்ச நஞ்சமில்லாமல் அதிகமாகவே உயர்ந்திருக்கின்றன. நான்கு பேர்கள் இருக்கிற என் வீட்டிலே எத்தனை தண்ணீர் குடிப்போம்? எங்களுக்கு கொடுக்கிற அந்த பில்லை உங்களுக்கு அனுப்ப விரும்புகிறேன். அப்படி பல மடங்கு தண்ணீர் வரி விதிக்கப்படு கிறது. ஆகவே முனிசிபாலிட்டியும், சர்க்காரும் சேர்ந்து எங்களுக்கு குடிக்க தண்ணீர் கொடுக்கவில்லை; அந்த சிறுவாணி தண்ணீரை நாங்கள் விலை கொடுத்து வாங்கி சாப்பிடுகிறோம்.

அதேமாதிரி, வீட்டு வரி பலமடங்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. வீட்டு வாடகை என்ன என்கிற உண்மையும் உங்களுக்குத் தெரியாது, உண்மையான வரியையும் நீங்கள் விதிப்பது இல்லை. அந்த வட்டாரத்து மக்களுக்கு, பொதுஜன பிரதிநிதிகளுக்குத்தான் உண்மையான நிலவரம் என்ன என்பது தெரியும். ஆகையால் தயவுசெய்து தேர்தலை உடனடியாக நடத்த ஏற்பாடு செய்யுங்கள்.

வரி விதிப்பை எதிர்த்து வழக்கு மன்றத்திற்குச் செல்லக்கூடிய நிலைமை எல்லாம் இருக்கிறது. பலர் வழக்குப்போட்டு தடை உத்தரவும் வாங்கியிருக்கிறார்கள். ஆகையால் இந்த வரி உயர்வை நிறுத்தி வைத்து, இரண்டு வாரம் அல்லது ஒரு மாதத் தில் சம்பந்தப்பட்டவர்களோடு கலந்து பேசி, ஒரு நல்ல முடிவுக்கு வந்து, நியாயமான ஏற்பாடுகளைச் செய்து, கொடுக்கக்கூடிய அளவுக்கு வரி போட வேண்டுமென்றும், தேர்தலை உடனடியாக நடத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.





* **திரு. ஏ. எஸ். ரவீந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, இந்த நகராட்சிகளின் தனி அதிகாரிகள் பதவி காலத்தை நீட்டிக்கும் சட்டத்தை நான் எதிர்க்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறேன். இந்த விவாதம் சபையிலே எழுப்பப் பட்டபோது திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மாண்புமிகு பேராசிரியர் அன்பழகன் அவர்கள் உள்ளே நுழைந்தார்கள். உள்ளே வரும்போதே அவர்கள் மூக்கைப்பிடித்துக்கொண்டு வந் தார்கள். ஒருவேளை இங்கே எழுப்பப்பட்டிருக்கிற விஷயம் மாநகராட்சியினுடைய விவாதம் என்பதால் மூக்கைப்பிடித்தார் களோ என்னவோ. அந்த அளவுக்கு இன்றைக்கு மாநகராட் சிகள் இருந்துகொண்டிருக்கின்றன.

இந்த நேரத்தில் என்னுடைய நண்பர் மாறன் என்கிற வேணு கோபால் அவர்கள் பேசும்போது நகரமன்றம் என்று சொன் னார்கள். உண்மையிலே இப்போது இருக்கிற நகராட்சிகள் நகரா ஆட்சிகள், நகரா மன்றங்கள் தான் என்பதில் சந்தேகமில்லை. நகர்தல் என்றால் அசைதல், முன்னேறுதல் என்று பொருள் ஆனால் நகராட்சிகளில் குப்பைகள் அசையவில்லை. சாக்கடை அசையவில்லை அல்லது நகரவில்லை. எனவே நண்பர் மாறன் அவர்கள் குறிப்பிட்டதில் தவறு இல்லை. அதனால் நகரா மன்றம், நகரா ஆட்சி என்று குறிப்பிட வேண்டிய துர்பாக்கியம் ஏற்பட்டிருக்கிறது.

இதைப்பற்றி விவாதிக்கும்போது சமீபத்தில் பத்திரிகையில் நான் படித்த ஒரு துணுக்கு நினைவுக்கு வருகிறது. தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட ஒரு கைதியைப் பார்த்து 'உன்னுடைய கடைசி விருப்பம் என்ன' என்று கேட்கிறார்கள்; 'பஞ்சாயத்து, நகராட்சித் தேர்தலிலே ஒருமுறை ஓட்டுப்போட வேண்டும்' என்று சொல்லுகிறான். ஏனென்றால் அவனுக்குத் தெரியும், பஞ்சாயத்து, நகராட்சித் தேர்தல் வராது, தன்னுடைய தூக்குத் தண்டனையும் நிறைவேறாது என்று. இதை எதற்காக நான் குறிப்பிடுகிறேன் என்றால் ஆண்டுதோறும் இப்படி தேர்தலை தள்ளிக்கொண்டே போகும் வழக்கம் வந்துவிட்டது. பத்திரிகை களிலே கேலி செய்யும் நிலைமை, இழிவாகப் பேசும் ஒரு விஷய மாக ஆகிவிட்டது. இப்படி கேலி செய்வது, கிண்டல் செய்வது தவிர்க்கப்பட வேண்டுமென்றால் உடனடியாகத் தேர்தலை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

[திரு. ஏ. எஸ். ரவீந்திரன்] [1985 மார்ச் 18

கோவை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமநாதன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல மேயரையே சந்திக்காத ஒரு மாநகராட்சி உண்டென்றால் அது கோவை மாநகராட்சிதான். மூன்று ஆண்டு காலம் ஆகிறது. இப்போது நாலரை ஆண்டு காலத்திற்கு மேயர் இல்லை என்ற முறையில் தேர்தல் ஒத்திப்போடப்படுகிறது. இந்த அரசுக்கு நான் கூட்டணி சார்பிலே தேர்ந்தெடுக்கப்பட்டவன் என்ற முறையிலே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த தனி அதிகாரிகள் நீடிக்கிறவரையில் மக்களுடைய குறைகள் போக்கப்பட மாட்டாது; தனி அதிகாரிகளை நம்பி ஆட்சி நடத்தினால் நிச்சயமாக மக்கள் குறை தீராது. தனி அதிகாரிகள் இருந்தால் நகராட்சிகளில் இருக்கிற நிலைமை வேறு; மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருந்தால் இருக்கிற நிலைமை வேறு.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல இந்த தனி அதிகாரிகள் வைத்ததுதான் சட்டம், இட்டதுதான் விதி என்ற நிலை இன்றைக்கு நகராட்சிகளிலும் மாநகராட்சிகளிலும் இருந்து வருகின்றன. வரி விதிப்பைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். இந்த நேரத்தில் என்னுடைய சொந்த அனுபவம் ஒன்றை இங்கே கூற விரும்புகிறேன்.

1970 ஆம் ஆண்டில் நான் ஒரு தவறு செய்துவிட்டேன். தெரியாத்தனமாக அப்போது இருந்த பழைய காங்கிரஸ் சார்பிலே நகர மன்றத் தேர்தலில் போட்டியிட்டேன். அதுதான் நான் செய்த தவறு. எனக்கு 'ப்ரொஃபஷனல் டாக்ஸ்' 125 ரூபாய் என்று ஒரு நகரசபை அதிகாரி போட்டார். ஒரு நகரசபை அதிகாரியால் அதிகப்பட்சம் விதிக்கக்கூடிய மதிப்பு அவ்வளவுதான். அதற்குமேல் விதிக்க அவருக்கு வரம்பு இல்லை. அதனால் எனக்கு 125 ரூபாய் வரி விதிக்கப்பட்டது. நான் அப்போது வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டு 2 ஆண்டுக் காலம் கூட

(முற்பகல் 11-10)

பூர்த்தியாகவில்லை. அப்போது கட்ட சக்தியில்லை. இப்போது விதித்தால் நியாயம். இப்போதும் கட்டுகிறேன். ஆனால் தேர்தலிலே போட்டியிட்டேன் என்ற ஒரே காரணத்திற்காக எனக்கு



1985 மார்ச் 18] [திரு. ஏ. எஸ். ரவீந்திரன்]

125 ரூபாய் வரி போட்டார்கள். நான் அந்த அதிகாரியைப் பார்த்துக் கேட்டேன். உங்கள் நகராட்சிக்கு என்று ஒரு வழக்கறிஞரை வைத்திருக்கிறார்களே, அவருக்கு 6 ரூபாய்தான் வரி விதித்திருக்கிறீர்கள், எனக்கு மட்டும் 125 ரூபாய் வரி போடுகிறீர்கள் என்று கேட்டேன். அதோடு மட்டுமல்லாமல், 6 ரூபாய் வரி கட்டுகின்ற ஒரு சாதாரண வழக்கறிஞரை நீங்கள் நகராட்சிக்காக வைத்திருக்கிறீர்களே. எங்களைப் போன்று அதிகமான பணம் வரியாக கட்டுபவர்களை ஏன் வைத்துக்கொள்ளக்கூடாது என்று நான் கேட்டேன். இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால் அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிக் கொடுப்பதன் பயனாக, அந்த அதிகாரிகள், அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்பதற்காகத் தான் இதை நான் சுட்டிக் காட்டுகிறேன்.

ஆக, இந்த அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டித்துக் கொண்டு போகும்போது இன்னொன்றை நான் சொல்ல விரும்புகிறேன். அதாவது அரசு அதிகாரிகள் 3 ஆண்டுகளுக்கு மேலே ஒரே ஊரிலே இருக்க முடியாதபடி ஒரு திட்டத்தை மேற்கொள்ள வேண்டும். இந்தத் திட்டம் தற்போது நடைமுறையிலே இருக்கிறதோ, என்னவோ, ஆனால் நிச்சயமாக அமுலுக்கு வரவில்லை. தனக்கு ஒரு ஊர் பிடித்துவிட்டது என்று சொன்னால், நிச்சயமாக அந்த ஊரைவிட்டு நகரமாட்டேன் என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு வேற்று ஊருக்கு மாற்றல் உத்தரவு வந்தால், விடுமுறையிலே சென்று விடுகிறார்கள். விடுமுறை முடிந்தபிறகு அந்த ஊருக்கே மறுபடியும் வந்து விடுகிறார்கள். ஆகவே நான் இந்த மன்றத்திலே கேட்டுக்கொள்வது எல்லாம் அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டித்துக்கொண்டே போகாமல், ஜனநாயக முறைப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வந்து அவர்கள் பணிகளை ஆற்றும் வகையில் தேர்தல்கள் நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே பேசும்போது நண்பர் வேணுகோபால் அவர்கள் இந்தத் தேர்தல்களை நடத்தாததற்குக் காரணங்கள் பல சொன்னார்கள். முதலில் அடையாள அட்டை கொடுக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். பிறகு வழக்கு மன்றத்திலே தடை உத்தரவு வாங்கி விட்டார்கள் என்றும், பிறகு மக்கள்தொகை கணக்கெடுப்பு நடக்க வேண்டும் என்றும் அது

இன்னும் முடிக்கப்படவில்லை என்றும் சொன்னார்கள். பிறகு சட்டமன்றத் தேர்தல், வந்துவிட்டது, நாடாளுமன்றத் தேர்தல் வந்துவிட்டது என்று இப்படி ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு காரணம் சொல்லிக் கொண்டிருப்பதில் பயனில்லை. நமது அவை முன்னவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், ஜுலை—ஆகஸ்டு மாதத்தில் தேர்தல் கண்டிப்பாக நடக்கும் என்று. இப்போதும் மாண்புமிகு அமைச்சர் திரு. சௌந்திரராஜன் அவர்கள் உறுதிமொழி கூறினார்கள். ஆனால் என்னுடைய ஒரே கவலை என்னவென்றால், இன்றைய செய்தித்தாளில் வந்த செய்திப்படி நாளை முதல் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருக்கப்போவது இல்லை. நாளை தினம் என்னுடைய நகரத்தைச் சேர்ந்த நண்பர் அவர்கள் பொறுப்புக்கு வருகிறார்கள். அவர்கள் வந்தவுடன் நான் உறுதிமொழி கொடுக்கவில்லை என்று கூறிவிட்டால், என்ன ஆவது என்றுதான் கவலைப்படுகிறேன். ஆகவே தயவுசெய்து, எப்படியாவது வருகின்ற ஜுலை—ஆகஸ்டு மாதங்களில் கண்டிப்பாக, எந்தக் காரணத்தைக் கொண்டும் நிறுத்தாது, நகராட்சித் தேர்தலை நடத்துவோம் என்று கொடுத்த உறுதி மொழியை நிறைவேற்றவேண்டும் என்றும், தயவுசெய்து இந்த திருத்தத்தில் இருப்பதுபோல் 1 ஆண்டு, 6 மாதம் என்று இருப்பதைக் குறைத்து செப்டம்பர் மாதத்திற்கு என்று திருத்தத்தை நிறைவேற்றுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. ஆர். செங்காளியப்பன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் கோயம்புத்தூர் மாநகராட்சியி னுடைய தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டிப்பது சம்பந்த மாக நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கோயம்புத்தூர் மாநகராட்சியானது தோன்றிய காலத்திலே யிருந்து இதுவரையிலும் மாநகராட்சித் தேர்தலை கோயம்புத் தூரிலே நடைபெறவில்லை. ஆனால் மீண்டும் ஒரு ஆண்டுக் காலத்திற்கு இந்த மாநகராட்சித் தேர்தலை ஒத்திப் போட்டுக் கொண்டே போவது என்பது சரியானது அல்ல. இந்த கோவை மாநகராட்சியிலே, மக்கள் வீதிகளிலே நடக்க முடியாத ஒரு சூழ் நிலை ஏற்பட்டிருக்கிறது. ரோடுகளிலே எல்லாம் சாக்கடைகள் ஓடிக்கொண்டு, அதனால் கொசுத்தொல்லைகள் அதிகமாகி மக்கள் கொசுத் தொல்லையால் அவதிப்படுகின்ற நிலைமை ஏற்பட்டு





இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிப்பதால், அவர்கள் தன்னிச்சையாக இயங்கு றார்களே தவிர, மக்களுக்குத் தேவையான காரியங்களைச் செய் றில்லை. அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால், எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் சென்று அதிகாரிகளிடத்திலே குறைகளைச் சொன்னால், உடனே செய்கிறோம் என்று சொல்கிறார்களே தவிர, அதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

அதேபோன்றுதான் குடிதண்ணீர் பிரச்னை. இரண்டாண்டு காலத்திற்கு முன்னால் குழாய்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக் கின்றன. என்னுடைய வீட்டிற்கு முன்னாலே அப்படி இரண் டாங்களுக்கு முன்னாலே குழாய்கள் போடப்பட்டிருக்கின்றன. அந்தக் குழாய்களுக்கு இணைப்பு கொடுக்கப்படவில்லை ; இன்று மக்கள் வண்டிகளிலே வரக்கூடிய உப்புத் தண்ணீரை விலைக்கு வாங்கக் கூடிய நிலைமையிலே உள்ளார்கள். மக்கள் எங்களைப் பார்த்துக் கேட்கிறார்கள். உங்களுக்கெல்லாம் நாங்கள் வாக் களித்தோம். ஆனால் எங்கேயிருந்தோ கொண்டு வரப்படக் கூடிய இந்த உப்புத் தண்ணீரை 25 பைசா ஒரு குடத்திற்கு என்று கொடுத்து நாங்கள் வாங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறதே என்று எங்களிடத்திலே முறையிடுகிறார்கள். அப்படிப்பட்ட தன்மைகளைப் போக்கியாக வேண்டுமென்றால், மாநகராட்சி தேர்தல் நடைபெறுமானால் சம்பந்தப்பட்ட கவுன்சிலர்களை அணுகி மக்கள் இத்தகைய பிரச்னைகளையெல்லாம் எடுத்துச் சொல்லும் வாய்ப்பை பெறுவார்கள். கவுன்சிலர்களும் மாநகராட்சி அதிகாரிகளை இதற்கென்றே தினமும் பார்த்து காரியங்களை ஆற்றுவதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, அதற்காகத் தான் மாநகராட்சி தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மாத்திரம் அல்ல, எங்கு பார்த்தாலும் இருள் சூழ்ந்திருக்கிறது. காரணம் சிங்காநல்லூர் தொகுதி முதலில் முனிசிப்பாலிட்டியாக இருந்தது. இப்போது மாநகராட்சியிலே சேர்க்கப்பட்டிருக்கிறது. அப்படி சேர்க்கப்பட்டும்கூட 3 ஆண்டு களுக்கு மேலாகிவிட்டது. ஆனால் அந்தப் பகுதிகளில்

[திரு. ஆர். செங்காளியப்பன்] [1985 மார்ச் 18

எந்தவிதமாக வசதிகளும் இல்லை. அவர்களுக்கு ரோடு வசதி இல்லை, லைட் வசதி இல்லை. எந்த ஒரு அடிப்படை வசதியும் இல்லாமல் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். குடிதண்ணீர் தொட்டிகள் என்று மேல்நிலை நீர்த்தேகக்த் தொட்டிகளையெல்லாம் கூட கட்டி வைத்திருக்கிறார்கள். ஆனால் அதற்கு குழாய் கனெக்ஷன் கொடுக்கப்படவில்லை. இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் உடனடியாக மாற்றியாக வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அதேபோல கழிப்பிடங்கள். இப்போது அந்தப் பகுதி மக்கள் ஊருக்கு வெளியே போய் காலி மைதானங்களைத் தான் தங்கள் கழிப்பிடங்களாக உபயோகப்படுத்துகிற நிலைமையைப் பார்க்கிறோம். பெண்கள் எல்லாம், இரவு நேரத்திலே தான் கழிப்பிடங்களுக்கு செல்லுகிற சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, அந்தக் குறையும் தீர்க்கப்பட வேண்டுமென்றால், உள்ளாட்சி தேர்தல் நடைபெற்றாக வேண்டும். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் எல்லாம் மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை என்னுடைய சிங்காநல்லூர் தொகுதியில் மாத்திரம் அல்ல. இங்கே நம்முடைய கல்வியமைச்சராக இருக்கக்கூடிய மாண்புமிகு அரங்கநாயகம் அவர்களுடைய தொகுதியிலும் கூடத் தான் இருக்கிறது. கணபதி போன்ற ஊர்கள் அவருடைய தொகுதியிலே சேர்க்கப்பட்டிருப்பதால், இதே நிலைமைதான் அங்கேயும் இருக்கிறது என்பது அவருக்கே நன்றாகத் தெரியும். இது போன்ற பிரச்னைகளை தீர்க்க தேர்தல் உடனடியாக நடத்தப்பட்டாக வேண்டும் என்று இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அது மாத்திரம் அல்ல 10 ஆண்டு, 15 ஆண்டுகளுக்கு முன்னால் சாதாரண ஏழை மக்கள் விலை கொடுத்து நிலத்தை வாங்கி கட்டிடங்களைக் கூடக் கட்டிக் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான வசதியும் செய்துக் கொடுக்கப்பட வில்லை. கேட்டால் மாநகராட்சியின் எல்லைக்குள் இருக்கும் அந்த லே-அவுட்டாவது அப்ரூவல் ஆகவேயில்லை என்று சொல்கிறார்கள். யாரோ விற்க அதை சாதாரண ஏழை எளிய மக்கள் ஒன்றும் தெரியாதவர்கள் விலை கொடுத்து வாங்கி விட்டார்கள். வீட்டையும் கட்டிக் கொண்டு குடியிருந்து



1985 மார்ச் 18] [திரு. ஆர். செங்காளியப்பன்]

வருகிறார்கள். ஆனால் அவர்களுக்கு லே-அவுட் அப்ரூவ் ஆகவில்லை என்று சொல்லி அதனால் எந்த வசதியும் செய்துக் கொடுக்க முடியாது என்று சொல்வது சரியல்ல.

அவர்களிடம் வரி வசூல் செய்கிறீர்கள். வீட்டு வரி வசூல் செய்கிறீர்கள். தொழில் வரி வசூல் செய்கிறீர்கள். தண்ணீர் வரி வசூல் செய்கிறீர்கள். எல்லா வரிகளையும், மற்ற இடங்களில் உள்ள மக்களைப் போன்று அவர்களும் செலுத்துகிறார்கள். ஆனால் அவர்களுக்கு வசதிகளை மாத்திரம் செய்துக் கொடுக்க முடியாது என்று சொல்கிற நிலைமை ஏற்பட்டிருப்பது சரியல்ல. ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகள் உடனடியாக மாற்றப்பட வேண்டுமானால் மாநகராட்சிகளுக்கு தேர்தல் நடைபெற்று தேர்ந் தெடுக்கப்பட்ட அந்த மக்களின் பிரதிநிதிகள் இருந்தால் தான் அவர்கள் அந்த மன்றங்களுக்கு சென்று அவ்வப்போது இப்படிப் பட்ட பிரச்னைகளுக்கு தீர்வு காண முடியும் என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

நமது முன்னவர் அவர்கள் தேர்தல் வாக்குறுதி அளித்திருக் கிறார்கள் என்றாலும் கூட அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படுமா என்பதில் எங்களுக்கு ஐயப்பாடு இருக்கிறது. அதற்குக் காரணம் பலதடவைகள் இதற்கு முன்னாலே அப்படி அறிவிக்கப் பட்டு பின்னாலே ஒத்திவைக்கப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்பட்டதை பார்த்திருக்கிறோம். ஆகையினால் எங்களுக்கு இதிலே ஐயப் பாடு வருகிறது. தேதி அறிவிக்கப்பட்டு நாமினேஷன் வாங்கிய தற்குப் பின்னாலும் கூட ஒத்திவைக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் வந்திருக்கின்றன. ஆகையினால்தான் இந்த தீர்மானத்தை எங்கள் தரப்பிலிருந்து நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்லி அந்த தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாநகராட்சியின் காலத்தை ஒரு ஆண்டுக்காலம் நீட்டிக்கிற இந்தச் சட்டத்தில் நான் சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இந்த மாநகராட்சிக்கு தேர்தலே நடத்தாமல் தொடர்ந்து நாம் இந்த பதவிக் காலத்தை அரசாங்கச் சட்டத்தின் மூலம் தள்ளி வைத்துக் கொண்டே வந்தாலும், அவை முன்னவர் அவர்கள் இந்தச் சட்டம் இங்கே வருவதற்கு முன்னதாகவே தேர்தல் நடத்தப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட அறிவிப்பை மீண்டும் அறிவித்து வருவதால் கிராமத்துப் பகுதியில் உள்ள மக்கள், இந்தத் தேர்தல் அறிவிப்பை எப்பொழுதும் போல் அறிவிக்கப்படும் ஒன்றுதான் என்றும் தேர்தலைக் கொண்டு வர மாட்டார்கள் என்றும் பேசிக் கொள்கிறார்கள். அப்படி ஒரு அவநம்பிக்கை மக்களிடத்திலே உருவாகி வருகிறது. இப்பொழுதும் கூட அப்படித்தான் அப்படித்தான் வெளியிலே பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு இடம் இல்லாமல் இந்த தேர்தலை மாண்புமிகு முன்னவர் அவர்கள் அறிவித்தபடி ஆகஸ்ட் மாதம் முதல் வாரம் ஒரு தேதியினை அறிவித்து, எப்பேற்பட்ட தடைகள் வந்தாலும் அதையெல்லாம் உடனடியாக அகற்றி இந்தப் பிரச்சனைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-20)

அடுத்து கோயம்புத்தூர் மாநகராட்சி. எந்த மாநகராட்சியை எடுத்துக்கொண்டாலும், வெளிநாட்டவர்கள், வெளி மாநிலத்தி லிருந்து வரக்கூடியவர்கள், அதிகமாக வரக்கூடிய இடங்களில் உள்ள சாலைகள், மெயின் ரோடுகள் தான்—சென்னையை எடுத்துக்கொண்டால், பீச் ரோடு, அண்ணாசாலை போன்று—அழகுபடுத்தப்பட்டு வருகின்றன. அதுபோன்று கோயம்பத்தூர் மாநகராட்சியில், உள்ளுக்குள் இருக்கக்கூடிய தெருக்களை பார்த்தால், உண்மையிலேயே மிக மோசமாக மக்கள் உணவு கூட உண்ண முடியாத அளவிற்கு துர்நாற்றம் வீசி, கோயம்பத்தூர் நகராட்சி, நகராட்சியாக இல்லாமல், நரக ஆட்சியாக மாறக் கூடிய ஒரு அவல நிலை இருக்கிறது. அதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து குடிநீர் பிரச்சனையை எடுத்துக்கொண்டால் எனக்கு முன்னாலே பேசியவர்கள் எல்லாம் கடுமையான வறட்சி என்று கூறினார்கள். திருப்பூர் சட்டமன்ற உறுப்பினர் அன்றைக்கு பேசுகின்றபோது அவருடைய தொகுதியில் எப்படி தண்ணீர் பற்றாக்குறை இருக்கிறது என்று சொன்னார்கள். அந்த அவல நிலையை போக்க வேண்டும். ஆளும் கட்சியிலே எந்த சட்டமன்ற உறுப்பினர் பேசினாலும், தாய்க்குலம் எங்கள் பக்கத்திலே இருப்பதாகச் சொன்னார்கள். வாக்களித்த அந்த தாய்க்குலம், நகரத்தில் இரவு ஒரு மணிக்கு சென்றால், தண்ணீர்





பிடிக்கக்கூடிய இடத்தில் சுமார் 100 குடங்களும், தாய்க்குலமும் காத்துக் கொண்டிருக்கிறன. அந்தத் தாய்மார்களுக்கு எப்போது தண்ணீர் வரும் என்று தெரியாது. தண்ணீர் வந்து பிடிக்க ஆரம்பித்தால், 50 குடம் வரை வரும். பிறகு நின்றுவிடும். பானைகளை வைத்துக் கொண்டு தாய்மார்கள் அலைகின்றார்கள். சென்னையாக இருந்தாலும், கோயம்புத்தூராக இருந்தாலும், வீதி வீதியாக அவர்கள் காத்து நிற்பதும், அவர்களுடைய வேலைகள் பாதிக்கப்படுவதும் தொடர்ச்சியாக வழக்கமாகிக் கொண்டு வருகிறது. இதைப் போக்குவதற்கு குடிநீர் பிரச்சனை நகரங்களில் இல்லாமல் இருப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும். தாய்மார்கள் வேலைக்கு போகக்கூடியவர்கள், அவர்கள் குடும்பத்தை கவனிப்பதற்கு, அவர்களுக்கு காலத்தோடு தண்ணீர் கிடைப்பதற்கு ஒரு திட்டத்தை உருவாக்க அரசு முன்வர வேண்டும்.

சாக்கடையைப் பற்றி சொல்ல வேண்டியதில்லை. நகரங்களில் கொசுத்தொல்லை அதிகமாக இருப்பதால் தூங்கவே முடிய வில்லை. கொசுவலையை வாங்கி வைத்திருக்கின்றவர்கள் நிம்மதியாக தூங்குகிறார்கள். ஆனால் எவ்வளவு பேர்கள் கொசுவலையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்? ஒரு சில பேர்தான். இலட்சக்கணக்கான மக்கள் வேலை செய்துவிட்டு இரவு தூங்கி விடிகாலையில் வேலைக்கு போகக்கூடியவர்கள். எனவே இதற்கு காரணமான சாணி, சாக்கடைகள், குப்பைகள் இவற்றை போக்க வேண்டும். 10 வருடங்களுக்கு முன்னால் நகரங்களுக்கு எவ்வளவு தொழிலாளிகள் வைத்திருந்தார்களோ அந்தத் தொழிலாளிகள் தான் இன்றைக்கும் இருக்கிறார்கள். 10 வருடங்களுக்கு பிறகு எவ்வளவு மக்கள் தொகை பெருகியிருக் கிறது? எவ்வளவு நகரங்கள் விஸ்தீரணம் ஆகியிருக்கிறது? எவ்வளவு பகுதிகள் அதிகரிக்கப்பட்டு இருக்கிறது? கோயம்புத்தூர் மாநகராட்சி, நகராட்சியாக இருந்து பின் மாநகராட்சியாக அறிவிக்கப்பட்ட பிறகு சில கிராமங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன. இதனால் மக்கள் தொகை அதிகரிக்கப்படுகிறது. மக்கள் தொகைக்கு ஏற்ப தெருக்கள் அதிகரிக்கின்றன. சாக்கடைகள் அதிகரிக்கின்றன. அவற்றை சுத்தப்படுத்த வேண்டுமானால், தொழிலாளிகளை அதிகரிக்க வேண்டும். ஆகவே தொழிலாளிகளை அதிகரிக்காமல்,

[திரு. பொ. உத்திராபதி] [1985 மார்ச் 18

நகராட்சியை, மாநகராட்சியாக்குவது, பேரூராட்சியை நகராட்சி யாக்குவது, அதற்கு பல கிராமங்களை இணைக்கின்றபோது, மக்கள் தொகை அதிகரிக்கின்றது. சாக்கடைகள் அதிகரிக்கின்ற போது, துர்நாற்றங்களினால் மக்கள் பல தொல்லைக்கு ஆளாக்கப் பட்டு நோய் அதிகரிக்கின்றன. கொசு அதிகரிப்பதனால், அந்த கொசுக்கள் கடிக்கின்றபோது தோல் தடித்து விடுகிறது. அதை சொறிந்தால் அதனால் பல நோய்கள் பரவுகின்றன. இவற்றை நீக்கவேண்டுமானால் முன்னவர் அவர்கள் சொன்னமாதிரி, விரைவில் தேர்தல் நடத்தி, மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப் பட்டு, நகரங்களில் குடிநீர் திட்டம் சாக்கடைகளை சுத்தப் படுத்தும் திட்டம் போன்றவற்றை நிறைவேற்றித்தர அரசாங்கம் முன்வரவேண்டும். மூன்றாவது உள்ளாட்சித் துறை அமைச் சருடைய காலம் இன்னும் சில மணி நேரத்தில் முடிய இருக் கிறது. நான்காவது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வர இருக்கிறார்கள்.

முன்னவர் சொன்னதிலிருந்து அவர்கள் வருவதனாலே எனக்கு நம்பிக்கை இருக்கிறது. நான்காவது உள்ளாட்சித்துறை அமைச்சர் முன்பு உள்ளாட்சிக் துறை அமைச்சராக இருந்தவர்கள். மன்றத்திலே அறிவிக்கப்பட்ட வாக்குறுதியை இப்போதாவது ஆளுங்கட்சி சார்பாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சியினுடைய தனி அதிகாரியுடைய காலவரையறையை நீட்டிக்க வேண்டுமென்ற இந்தச் சட்டத்தின் ஆய்வின் மீது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு நல்ல கருத்துக்களை, தங்களுடைய ஆலோசனைகளாக தந்ததற்கு நான் அவர்களுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இருந்தால்தான் மக்களுடைய அன்றாடப் பிரச்சினைகளை, அத்தியாவசியமான பிரச்சினைகளை உடனடியாகக் கவனித்து, அவைகளுக்காக பரிகாரம் தேடமுடியும். மன்ற உறுப்பினர்களது கருத்துக் களுக்கு ஆளுங்கட்சி வேறு விதமான கருத்து கொண்டிருக்க வில்லை என்பதை நான் முதலில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



1985 மார்ச் 18] [திரு. ஆர். சௌந்திரராஜன்]

இங்கே உள்ளாட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்களின் தேர்தலுக்காக, உடனடியாக ஒரு தேதியை நிர்ணயித்துச் சொல்லியிருந்தால், நாங்கள் இன்னும் நம்பியிருப்போம் என்று நம்முடைய மாண்புமிகு கோவை ராமநாதன் அவர்கள் பேசுகின்றபோது எடுத்துச் சொன்னார்கள். அவருடைய ஆர்வமும், எண்ணமும் எங்களுக்குப் புரிகிறது. ஆக ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் முறையே உள்ளாட்சி மன்றங்களுக்கும், நகராட்சிமன்றங்களுக்கும் தேர்தல்கள் நடை பெறும் என்று நேற்றையதினம், நம்முடைய அவை முன்னவர் அறிவித்தபோது, பழைய முறையிலே நாம் இந்தத் தேர்தலை நடத்துவதாக இருந்தாலும், அதற்கும் ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவரவேண்டும். அது இந்தக் கூட்டத்தொடரிலேயே கொண்டுவரப்படும் என்று அவர்கள் உறுதியளித்திருக்கிறார்கள். ஆகவே ஆகஸ்ட்-செப்டம்பர் மாதங்களில் இந்தத் தேர்தல்கள் நடைபெறும் என்பதை மாண்புமிகு கோவை ராமநாதன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல, அவர்கள் பேசுகின்றபோது, குப்பை மேடுகளும், மணல் மேடுகளும், நகராட்சித் தெருக்களிலே இருக்கின்றன என்று சொன்னார்கள். அந்தக் குப்பை மேடுகளும், மணல் மேடுகளும் அகற்றப்பட வேண்டுமென்று எல்லா அதிகாரிகளுக்கும் நாங்கள் தனியாக அறிவித்து, அவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். பல இடங்களில் அவைகள் நிவர்த்திக்கப்பட்டிருப்பதாக எங்களுக்குக் கடிதங்கள் வந்திருக் கின்றன. அப்படி ஏதாவது சில இடங்களில் மேடுகள் அகற்றப் படாமல் இருக்குமானால், அவைகளைப் பற்றி கவனத்திற்குக் கொண்டு வந்தால், உடனடியாக் அவைகளின் மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு என்றைக்கும் தயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தவர் குறிப்பிட்டது, வீட்டு வரி, தண்ணீர் வரி. பொதுவாகவே மாநகராட்சியானாலும் சரி, நகராட்சியானாலும் சரி, ஊராட்சி மன்றங்களானாலும் சரி, கடந்த 10 ஆண்டுகளாக வரிகளை எந்த அளவிற்கும் உயர்த்துவதற்கு நாம் வழிவகைகள் செய்யவில்லை. வரிகளை அந்தத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் வந்ததற்குப் பிறகு, உயர்த்துவதா, உயர்த்துவதில்லையா

என்பதை அவர்களே முடிவு செய்ய வேண்டுமென்ற காரணத்தினால் கடந்த 10 ஆண்டுகளாக ரிவிஷன் ஆப் டாக்ஸ் செய்யப்படவில்லை. ரிவிஷன் ஆப் டாக்ஸ் செய்யப்படாத ஒரு காரணத்தினால் தான் இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் கு. ரமணி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. உத்திராபதி அவர்களும் சொன்னதுபோல், தேவைப்படுகின்ற அளவிற்கு அடிப்படைச் சுகாதாரப் பணியாளர்களை நாம் அதிகமாக உருவாக்கமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டதற்குக் காரணமாகும். ஆக ரிவிஷன் ஆப் டாக்ஸ் செய்யப்படாமல் இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மற்றொன்றை திரு. உத்திராபதி அவர்கள் பேசுகின்றபோது சொன்னார்கள். இதற்கு முன்னால் இருந்த இரண்டு அமைச்சர்களும் உத்தரவாதம் தந்தார்கள். மூன்றாவது அமைச்சரும் உத்தரவாதம் தந்தார்கள். நாளைய தினம் இந்தப் பொறுப்பை விட்டு வேறு பொறுப்பிற்குப் போகிறார்கள். நான்காவது அமைச்சர் அவர்கள் வருகிறார்கள். அவர்கள் உண்மையாக நடத்த வேண்டுமென்று கேட்டார்கள். 'யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே' என்பது போல. நான்காவது அமைச்சர் தேர்தலை நடத்துகிற நல்ல முன்னுதாரணமாக வருகை தந்து கொண்டிருக்கிறார்கள் என்ற அளவிற்குத்தான் இந்த ஆய்வுகள் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுபோல, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவீந்திரன் அவர்கள், அதிகாரிகளை நம்பி ஆட்சியை ஒப்படைத்து விடாதீர்கள் என்று சொன்னார்கள். அதிகாரிகளை நம்பி நாம் இந்த ஆட்சியை ஒப்படைக்க வில்லை. மக்களை நம்பித்தான் ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கிறோம் என்பதை நினைவுபடுத்துகின்றேன். மக்களை நம்பிய காரணத்தினால் தான் மீண்டும் தமிழகத்தில் புரட்சித் தலைவர் அரசு வருவதற்கு வாய்ப்பாக இருந்தது என்பதை தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மற்றொரு நல்ல கருத்தையும் இங்கே சொல்லியிருக்கிறார்கள். கொசுக்கடி அதிகமாக இருப்பதாகவும், அதை நிவர்த்திக்க வேண்டுமென்றும் சொன்னார்கள். ஒரே மருந்தைப் பயன்





படுத்திவருகின்ற காரணத்தால், ரெசிஸ்டன்ஸ் பவர் அந்தக் கொசுக்களுக்கு ஏற்படுகின்ற காரணத்தால், சாக வேண்டிய நிலைமை இல்லாமல், அவை உற்பத்தி அதிகமாகிக் கொண்டு வருகின்றன.

(முற்பகல் 11-30)

ஆகவே மருந்துகளை மாற்றுவதற்கு வழிவகை செய்திருக் இறோம். சமீபத்திலே மதுரை மாநகரத்திலே மருந்துகளை மாற்றி, அந்த மருந்துகளினால் நல்ல பலன் பெற்று வருகிறார்கள் என்ற செய்தி அங்கே இருந்து வந்துகொண்டிருக் கிறது. அதே போன்று மற்ற மாநகராட்சிகளிலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. செங்காளியப்பன் பேசுகின்றபோது இந்த குறிப்பிட்ட பிரச்சினையை எடுத்துச் சொன்னார்கள். நகராட்சியாக இருந்து மாநகராட்சியாகிய கோவை மாநகராட்சிக்கு ஒரு மேயரைக் காணவேண்டுமென்று ஆசைப்படுவதாகச் சொன் னார்கள். அவர்களுடைய ஆசை நிறைவேறுகிற வகையில் மிக விரைவில் அவர்கள் மாநகரத் தந்தையைக் காண இருக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டு இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: பேரவை முன்னுள்ள கேள்வி:

"1985-ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 6/1985) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"**1985 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு** (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1985) **நிறைவேற்றப் பெறவேண்டும்.**"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**(ஈ) நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு 1985.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) மூன்றாம் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 21/1984) இப்பேரவை நிராகரிக்கிறது என்ற தீர்மானத்தை திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், கே. எம். தங்கமணி, சி. பழனிமுத்து ஆகியோர் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் அதை முன்மொழியலாம்.

**திரு. ப. பொன்னுரங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் அவர்களால் 19—11—1984 ஆம் தேதி அன்று பிறப்பிக்கப்பெற்ற தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) மூன்றாம் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 21/1984) இப்பேரவை நிராகரிக்கிறது."

**திரு. ம. ஆபிரகாம்:** தலைவர் அவர்களே, நான் அதை வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1985)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

* 1985-ம் ஆண்டு மார்ச் 14-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. பொன்னுரங்கம் அவர்களுடைய தீர்மானமும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய தீர்மானமும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன.

**திரு. ம. ஆபிரகாம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) மூன்றாம் திருத்த அவசரச் சட்டத்தை எதிர்த்து திரு. பொன்னுரங்கம் அவர்கள் மொழிந்த தீர்மானத்தை நானும் வழிமொழிந்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தனி அதிகாரிகளுடைய ஆயுட் காலம் நீட்டித்துக்கொண்டே போகப் படுகிறது. மக்களின் அடிப்படைப் பிரச்சினையான குடிப்பதற்கு தண்ணீர் கூட இல்லாமல் பாதை வசதிகள் இல்லாமல் சாலை எல்லாம் குண்டும்குழியுமாக இருக்கின்ற இந்த 20 ஆம் நூற்றாண்டில் என்னுடைய தொகுதியிலே மின்சார விளக்குகள் இல்லாத பல வட்டங்கள் இருக்கின்றன. நகராட்சிகளிலே உள்ள மக்கள் நல்ல முறையிலே வாழ்வதற்கான சுகாதார வசதிகள் செய்துதரப் படவில்லை. நகராட்சித் தேர்தல்களை நடத்தாமல் இந்த அரசு காலம் கடத்திக்கொண்டு வருகிறது. நேற்றைய தினம் நான் சுற்றிப் பார்த்தபோது பல்லவபுரம் நகராட்சி மக்கள் என்னை அழைத்துக் காட்டினார்கள். இங்கே சாக்கடை கட்டுகிறோம் என்று தனி அதிகாரிகள் அதிகாரத்தில் சாக்கடை கட்டினார்கள். ஆனால் அந்த கழிவு நீர் வெளியேறாமல் அந்த பகுதியில் தேங்கி நின்று துர்நாற்றம் வீசுகின்றது. அதே பகுதியில் நான் சென்றபோது கொடுத்த புகார் மனுவை உங்களுக்கு முன்னால் படிக்க விரும்புகிறேன். பல்லவபுரம் நகராட்சியைச் சேர்ந்த காந்தி குடியிருப்பு நல உரிமைச் சங்கத்தின் செயலாளர் இதை எழுதியிருக்கிறார். அவர் எழுதுகின்றபோது குற்றச்சாட்டுகளை சொல்லியிருக்கிறார். அவை மிக வேதனையாக இருக்கின்றன. அங்கே நேரில் பார்க்கும் போது அங்கே சூழ்ந்துள்ள மக்கள் எல்லாம் கண்ணீரோடு சொன்ன கதையை நான் உங்களுக்கு இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சமீபகாலத்தில் நம்முடைய காந்திநகரில் புதிய குழாய் போட்டு சாக்கடையை அரசு அமைத்து . . .

**திருமதி பா. வளர்மதி:** பேரவைத் தலைவர் அவர்களே, புகார் மனுவை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த சபையில் படிக்கலாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னிடம் காட்டிவிட்டு படிப்பது நல்லது.

**திரு. ம. ஆபிரகாம்:** இது ஒரு கண்ணீர் கதை என்பதால் நான் குறிப்பிட்டுக் காட்ட ஆசைப்படுகிறேன்.

**திருமதி பா. வளர்மதி:** பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணீர் கதைகளைப் படிக்கக்கூடிய அவை இந்த அவை இல்லை.

**திரு. ப. பொன்னுரங்கம்:** கண்ணீர் கதையைச் சொல்லாமல் வேறு எந்தக் கதையைச் சொல்ல முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள் நான் அனுமதி கொடுத்தால்தான் யாரும் பேசலாம்.

**திரு. ம. ஆபிரகாம்:** அங்கு அந்த சாக்கடை தேங்கிய காரணத்தால் அதிலே குழந்தை விழுந்து இறந்த கதையை சொல்லியிருக்கிறார்கள். அதை நான் கண்ணீர் கதையாக கருதுகிறேன். அதிலே முழுக்க படிக்காமல் இரண்டொரு வரியை நான் படிக்கிறேன். இந்த நகராட்சியில் இருக்கிற தனி அதிகாரிகள் செய்கின்ற அலட்சிய போக்கால் குறிப்பாக சத்தியமூர்த்தி தெருவிலுள்ள சாக்கடை அமைப்பு மிகவும் மோசமாக இருக்கிறது. தனி அதிகாரிகளின் அலட்சிய போக்கால் கவன குறைவால் ஏற்பட்ட தவறுகளின் காரணமாக கழிவு நீர் வெளியே போகாமல் அப்படியே தேங்கியிருக்கிறது. அண்மையில் காமராஜ் தெருவில் ஒரு குழந்தை தவறி சாக்கடையில் விழுந்ததன் காரணமாக அந்தக் குழந்தை இறந்துவிட்டது. இது மட்டும் அல்ல, அந்தப் பகுதியில் உள்ள கால்நடைகளுக்குக் கூட பாதிப்பு ஏற்படுகிறது. தேங்கிய சாக்கடையை அகற்றாமல் இருப்பதால் அங்கே துர்நாற்றம் வீசுகிறது.

அது மட்டும் அல்ல, குழந்தைகள் சாகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இது என்னுடைய தொகுதியில் பல்லவபுரம் நகராட்சியில் மட்டும் அல்ல, ஆலந்தூர் தொகுதியில் கண்ணிகாபுரம் சென்னை மாநகராட்சி 112-வது டிவிஷனில் இதேபோல் மிகப் பெரிய கழிவுநீர் தேக்கம் இருந்து அதில்





ஒரு ஆள் விழுந்து இறந்து இருக்கிறார். அதிலே 3 கால்நடைகள் விழுந்து இறந்து இருக்கின்றன. தனி அதிகாரிகளின் கவனக் குறைவால் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டு துர்நாற்றம் ஏற்படுவது மட்டும் அல்லாமல் மக்களுக்கு அடிப்படைப் பிரச்சினையான பாதை வசதி இல்லை. ஆலந்தூர் நகராட்சி, பல்லவபுரம் நகராட்சி இதுபோன்ற பகுதிகளில் 12 ஆண்டுகளுக்கு முன்னால் போடப்பட்ட பாதைகள் தான் இருக்கின்றன. புதுப் பாதைகள் போடப்படவில்லை. உள்ள பாதைகள் குண்டும் குழியுமாக இருக்கின்றன.

குடிநீர் மக்களுக்கு மிகவும் அவசியமான ஒன்று. இந்த குடிநீருக்காக திராவிட முன்னேற்றக் கழகத்தின் தானைத் தலைவர் கலைஞர் ஆட்சி காலத்தில் 1972-ல் ஆலந்தூர் நகராட்சி குடிநீர் திட்டத்தைத் தந்தார்கள். அது பாலாற்று குடிநீர் திட்டம். அந்தத் திட்டம் நிறைவேற்றுகிற தருணத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்டது. அதற்குப் பிறகு கவர்னர் ஆட்சி அதை கிடப்பில் போட்டுவிட்டது. அதற்குப் பிறகு அ.இ.அ.தி.மு.க. ஆட்சி 1977 லிருந்து ஆட்சி செய்கிறார்கள். அவர்கள் அதை கவனிக்காமல் அந்த பாலாற்று குடிநீர் திட்டம் பைப்புகளை பூமிக்கு அடியில் புதைக்கப்பட்டு அவைகளில் வெடிப்புகள் ஏற்பட்டு மக்கள் குடிநீர் இல்லாமல் அவதிப்படுகிறார்கள். இப்போது அங்கே நடைபெறுவது என்ன என்றால் ஆலந்தூர் குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய அதிகாரிகள் ஜீப்பில் வருகிறார்கள், திடீர் என்று மக்களால் ஒரு குழாய் அமைக்கப்பட்டு இருக்கிறது என்றால் அந்தக் குழாயை உடைத்து எறிந்து விட்டு போய்விடுகிறார்கள். பிறகு மக்கள் கூடுகிறார்கள். எங்கே அந்த ஜீப் அதிகாரிகள் என்று தேடுகிறார்கள். ஆனால் கிடைக்கவில்லை.

(முற்பகல் 11-40)

பிறகு மீண்டும் அவர்களாகவே பள்ளம் தோண்டி, போகும் பாதையிலே உள்ள இடத்தில் குழாயைப் பதித்துக் கொள்கிறார்கள். இப்படி மக்களும் அதிகாரிகளும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எதிர் எதிரிலே சந்தித்து விட்டால் அடிதடி ஏற்படுகின்ற நிலைமை தான் ஏற்படும். அதிகாரிகளின் அலட்சியப் போக்கின் காரணமாக குடிதண்ணீர் கிடைக்கவில்லை. பலமைல் தூரம் நடந்து சென்று

தண்ணீர் எடுத்து வரக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், என்னுடைய தொகுதியில் உள்ள பல்லவபுரம் நகராட்சியில் இருப்பவர்கள், ஜி.எஸ்.டி. ரோடு என்ற அந்தப் பெரிய பாதையைத் தாண்டிச் செல்லுகின்றபொழுது தினம் தினம் ஆக்சிடெண்டுகள் நடக்கின்றன; குடத்தோடு செல்லுகின்றபொழுது லாரிகள், பஸ்கள் மோதி மரணம் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. இப்படி குடி-தண்ணீருக்காக மக்கள் அல்லற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவைகளெல்லாம் போக்கப்பட வேண்டுமானால் அதற்கு நகராட்சி மன்றத் தேர்தல்களைக் கண்டிப்பாக நடத்த வேண்டும். பாதைகளைச் செப்பனிடுவதற்கும், விளக்கு வசதிகளைச் செய்வதற்கும், அடிப்படைப் பிரச்னையான குடி-தண்ணீர்ப் பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்கும், இன்னும் இது போன்ற காரியங்களையெல்லாம் செய்வதற்கும் நகராட்சித் தேர்தல்களை இந்த ஆட்சி உடனடியாக நடத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

இன்னும் ஒன்று அல்லது இரண்டு மணி நேரம்தான் இருக்கிறது. இந்த உள்ளாட்சித் துறை அமைச்சரின் பதவி. எனவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் இந்த ஒன்று அல்லது இரண்டு மணி நேரத்திற்குள்ளாக, ஒரு தேதியை அறிவித்துவிட்டுச் சென்றால் நாங்கள் மிகவும் பெருமையோடும், மகிழ்ச்சியோடும் பகல் உணவுக்குச் செல்வதற்கு வசதியாக இருக்கும்.

இல்லையென்றால் நாளை வருகின்ற அமைச்சரவர்கள் ஒரு வாக்குறுதியைத் தருவார்கள். இப்படியே வாக்குறுதிகளை அமைச்சர்கள் மாறி மாறித் தந்துகொண்டேயிருக்கின்ற நிலையைத்தான் நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இப்படிக் கேட்டு கேட்டு அது புளித்துப் போய்விட்டது.

அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டித்து நீட்டித்து அவர்களின் கைகளிலே இந்த அதிகாரத்தைக் கொடுத்ததால், அது சர்வாதிகாரப் போக்கில்தான் நடக்கிறது. இன்னும் நிறைய விஷயங்கள் நடக்கின்றன. அதிகாரிகள் சிலரின் தான் தோன்றித் தனத்தின் காரணமாக, பாதைகள் போடுவதாகச் சொல்லிக்கூட பில்களை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் பாதைகள் போடப்படவில்லை. ஆனால் பத்திரிக்கைக்





குறிப்புகளிலே இருந்து பார்த்தால், இன்னின்ன தெருக்களிலே பாதைகள் போடுவதாகச் சொல்கிறார்கள். ஆனால் அங்கே கற்கள் கொட்டப்படுகின்றன, பிறகு இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு அந்தக் கற்களையெல்லாம் வாரி எடுத்துக் கொண்டு சென்றுவிடுகிறார்கள். இதுதான் தனி அதிகாரிகள் நடத்துகின்ற ஆட்சி. எனவே, நீங்கள் அவர்களுக்கெல்லாம் ஊக்கம் தராமல், அதிகாரிகளின் அதிகாரத்தை நீட்டிக்காமல், நகராட்சி மன்றங்களில் தேர்தல்களை நடத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று வலியுறுத்தி விடைபெறுகிறேன்.

* **திரு. சி. பழனிமுத்து**: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நகராட்சி மன்றங்களில் தனி அதிகாரிகளின் பதவிக் காலம் 1985 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் நீட்டிக்கப் படுகிறது. விரைவிலே இவைகளுக்குத் தேர்தல்களை நடத்த வேண்டுமென்பதுதான் எல்லாக் கட்சிகளின் நோக்கமுமாகும். மக்களுக்குச் செய்ய வேண்டிய பணிகள், கடமைகள் நிறைய உள்ளன. அந்தப் பணிகளையும், கடமைகளையும் செய்யாமல் இதுவரையில் நிலைமைகள் இருந்து வருகின்றன.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், குடி-தண்ணீர் விநியோகம் என்பது மக்களுக்கு மிகவும் அத்தியாவசியமானது. குடிதண்ணீர் விநியோகத்தைப் பொறுத்தவரையில் என்னுடைய ஆத்தூர் நகராட்சியில் வாரத்திற்கு இரண்டு முறைதான் கொடுக்கிறார்கள். காரணம் கேட்டால், மின்சாரம் போதவில்லை என்று சொல்கிறார்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. மா. சின்னராசு—தலைமை)

ஆனால் தேர்ந்தெடுக்கப்பெற்ற அங்கம் இருந்தால் இவைகளையெல்லாம் கவனிப்பார்கள். மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மூலமாக பொதுமக்களுக்குத் தண்ணீரை விநியோகம் செய்வதற்கு அவர்கள் முயற்சியெடுப்பார்கள். ஆனால் தனி அதிகாரிகள் அந்த அளவிற்கு அதிகக் கவனம் செலுத்துவதில்லை, மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற நோக்கமோ, எண்ணமோ அவர்களுக்குக் கிடையாது.

எல்லா இடங்களிலும் மக்கள் அதிகமாக நம்மிடத்தில் நன்மை செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறார்கள். மக்களுக்குச் செய்யப்பட வேண்டிய உதவிகளும், கடமைகளும் அதிகமாக இருக்கின்றன. ஆனால் அந்தக் கடமைகளையும், அவர்களுக்குச்

செய்ய வேண்டிய உதவிகளையும் நாம் செய்யவில்லையென்றால் நிச்சயமாக மக்கள் நம்மை நம்ப மாட்டார்கள் என்றுதான் கருது கிறேன்.

நகராட்சிகளைப் பொறுத்தவரையில் அங்குள்ளவர்கள் கூறுகின்ற காரணம் என்ன? நிதி வசதி இல்லை, 1976 ஆம் ஆண்டிலிருந்தே நிதி வசதி பற்றாக்குறையாகத்தான் இருக்கிறதே தவிர, அதை உயர்த்தியபாடில்லை, வீட்டு வரியை உயர்த்தவில்லை, ஆகவே மக்களுக்குச் செய்ய வேண்டிய வசதிகளைச் செய்வதற்கான பணம் இல்லை என்று கூறுகிறார்கள்.

மின்சார விளக்குகள் சரியாக எரிவதில்லை. இதுபற்றி அதிகாரிகளைக் கேட்டால், மின்சாரம் சரியாகச் செயல்பட வில்லை, ஆகவேதான் விளக்குகள் எரியவில்லை என்று மக்க ளிடத்தில் கூறுகிறார்கள்.

குடிதண்ணீருக்குப் போதுமான பொதுக் குழாய்கள் இல்லாத காரணத்தினால் மக்கள் நிறையச் சிரமப்படுகிறார்கள். அந்தச் சிரமங்கள் நீக்கப்பட வேண்டுமென்றால், தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கம் இருந்தால்தான் வசதியாக இருக்கும். எந்த எந்த வீதி களுக்குக் குடிதண்ணீர் வேண்டுமோ அங்கு குடிதண்ணீர் கொடுப் பார்கள். ஆனால் இப்பொழுது எல்லா இடங்களிலேயும் பார்த் தால் நகராட்சி முழுவதும் தண்ணீர் கொடுக்க இயலவில்லை. தண்ணீர் இருந்தாலும்கூட அதை மக்களுக்கு விநியோகிக்கக் கூடிய ஜெனரேட்டர்களை முனிசிபாலிட்டிகளுக்கு வாங்கிக் கொடுப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். ஜெனரேட்டர் வாங்க அரசு மானியம் கொடுக்க வேண்டும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், ஆத்தூரைப் பொறுத்தவரையில், முட்டல் குடிநீர் கிணற்றில் தண்ணீர் நிறைய உள்ளது.

ஆனால் மின்சாரம் போதாத காரணத்தால்தான் தண்ணீர் எடுக்க முடியவில்லை. எனவே அதற்கு ஒரு நல்ல ஜென ரேட்ரோ அல்லது 20 ஹார்ஸ் பவர் அல்லது 30 ஹார்ஸ் பவர் கொண்ட ஆயில் இன்ஜினோ வைத்து இருந்தால் தண்ணீரை எடுத்து ஆத்தூர் நகர மக்களுக்கு விநியோகிக்க முடியும். ஆனால் இப்போது மூன்று நாட்களுக்கு ஒரு முறை அல்லது





நான்கு நாட்களுக்கு ஒருமுறை தான் விநியோகம் செய்கிறார்கள். இதுபோன்ற நிலைமைகள் எல்லாம் தனி அதிகாரிகளால்தான் ஏற்படுகின்றன.

அடுத்து சாலைகள் மிகவும் மோசமாக இருக்கின்றன. சாலைகள் எல்லாம் போடப்பட்டு 10 ஆண்டுகள் ஆகியும் அவை பராமரிப்பு செய்யப்படவில்லை. அப்படி பராமரிக்காததால் சாலைகள் மோசமாக உள்ளன. ஏன் பராமரிக்கவில்லை என்று கேட்டால் எங்களுக்கு சம்பளத்திற்கே பணம் வரவில்லை, சாலையை எப்படி பராமரிக்க முடியும் என்று தனி அதிகாரிகள் சொல்கிறார்கள். சாலைக்கென்று அரசு மான்யம் வழங்கினால் தான் சாலையை பராமரிக்க முடியும்.

சாக்கடைகளைச் சுத்தப்படுத்துவதற்கு நியமிக்கப்படுகின்ற நகர சுத்தி தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் எப்போது அந்த நகராட்சி ஆரம்பிக்கப்பட்டதோ அப்போது என்ன எண்ணிக்கை இருந்ததோ, அதே எண்ணிக்கையில்தான் இன்றைக்கும் இருக்கிறார்கள். அந்த எண்ணிக்கையை உயர்த்தினால்தான் நகரத்தை நல்ல முறையில் சுத்தப்படுத்த முடியும். இப்போது எல்லா இடங்களிலும் சாக்கடை அடைபட்டுக் கிடக்கின்றது. தேர்தல் நேரத்திலே செல்லுகின்ற போது ஆத்தூர் நகரத்திலே கழிப்பிடங்களில் கழிப்பதற்கு வழிவகையில்லாமல் முட்புதர்களால் அடைக்கப்பட்டு இருக்கின்ற நிலைமையைக் காண முடிந்தது. உடனடியாக அவற்றை அப்புறப்படுத்தி மக்களுக்கு கழிப்பிட வசதிகளை எல்லாம் ஏற்படுத்த வேண்டும் என்றால் அதற்கு அந்த அதிகாரிகள் செவி சாய்க்கவில்லை. அவர்கள் எல்லாம் மெத்தனமாக இருக்கிறார்கள். ஆனால் கழிப்பிட வசதி என்பது குறிப்பாகத் தாய்மார்களுக்கும் மற்றும் அனைவருக்கும் வேண்டிய ஒன்றாகும். எனவே அதற்குரிய வகையில் அங்கே உடனடியாக ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக நகராட்சிகளைப் பொறுத்தவரையில் அதிகாரிகள் நினைத்ததையெல்லாம் செய்கின்ற நிலைமை இருக்கின்றது. உதாரணமாக, நகரங்களிலே புதிதாக நிலங்களை வாங்கி விற்கக் கூடியவர்கள் எல்லா இடங்களிலும் இருக்கிறார்கள். அப்படி வாங்கப்பட்ட நிலங்களில் சான்றிதழ்களைப் பெற்று வீடுகளைக் கட்டியுள்ளார்கள். அந்த இடங்களில் சாலைகள் அமைக்க

அதற்கு மேலும் 5 ஆயிரம், 6 ஆயிரம் ரூபாய் என்றெல்லாம் பணத்தைக் கட்டச் சொல்கிறார்கள். அப்படி இருக்கின்ற நிலைமையில் அதுபோன்ற அமைப்புக்களுக்கு நகராட்சி தனி அதிகாரிகளோ, அலுவலர்களோ அவர்களுக்கு அனுமதி வழங்கக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி வழங்கப் படுவதன் காரணத்தால் அந்த மக்களுக்கு நிறைய சங்கடங்கள் ஏற்படுகின்றன.

மேலும் வீட்டு வரியினைப் பொறுத்தவரையில் பலவிதமான கோளாறுகள் இந்த அதிகாரிகளால் ஏற்படுகின்றன. உதாரண மாக ஒரு வீட்டிற்கு 2,000 ரூபாய் வரி போடவேண்டும் என்றால் அதற்கு 5,000 ரூபாய் போடுவதும், 5,000 ரூபாய் போடப்பட வேண்டிய வீடுகளுக்கு மிகக் குறைவாகப் போடுவதும் என்ற நிலைமைகள் இருக்கின்றன. இப்படி பல்வேறு சீர்குலைவுகள் தனி அதிகாரிகளின் ஆட்சியால்தான் ஏற்படுகின்றன. தேர்ந் தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இருந்தால் அவற்றிற்கெல்லாம் உரிய வரி விதிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்படும். நகராட்சி களுக்கும் அதிக வருமானம் கிடைக்கின்ற நிலைமை ஏற்படும்.

1983-84 ஆம் ஆண்டிலே ஆத்தூர் நகரத்திற்குக் குடிநீர் வழங்கு வதற்காக 146 கோடி ரூபாய் என்ற வகையில் மூன்று திட்டங் களுக்கு ஒதுக்கினார்கள். அதில் 47 கோடி ரூபாயில் ஆத்தூர் நகரத்திற்குத் தண்ணீர் வரும் என்று சொல்லப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டு முதலிலே 4½ கோடி ரூபாய் செலவு செய்யப்படும் என்று நிதியமைச்சர் அவர்கள் உரையிலே குறிப்பிட்டார்கள். ஆனால் இப்போது 1984 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலே அதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டும், இன்னும் அங்கே எந்தத் தொகையும் செலவழிக்கப்படவில்லை; அவை எல்லாம் முறையாகச் செலவு செய்யப்பட்டால்தான் நகர மக்களுக்குப் போதுமான குடிநீர் கிடைக்கும். தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புக்கள் இருந்தால் உடனடியாக அந்தத் திட்டத்தை அமல் செய்ய முடியும். இந்த ஆகஸ்ட் மாதத்திலே தேர்தல் வரும் என்று அவை முன்னவர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். உடனடியாகத் தேர்தலை நடத்தியாக வேண்டும். அப்போதுதான் மக்களுக்கு உரிய சௌகரியங்கள் அனைத்தும் கிடைக்கும். எனவே, உடனடியாக நகரசபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்றும் தனி அதிகாரிகள் காலக் கெடுவை எக்காரணம் கொண்டும் இதற்கு மேல் நீட்டிக்கக் கூடாது என்றும் கேட்டுக் கொண்டு,



தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புதான் மக்களுக்கு வேண்டிய காரியங்களைச் செய்வதில் உதவியாக இருக்கும் என்று கூறி அமர்கின்றேன்.

(முற்பகல் 11-50)

**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர் களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கக் கூடிய இந்தத் திருத்தச் சட்டம் மூன்னாலே 8 ஆண்டுகள் தனி அதிகாரிகள் பதவியில் இருப்பார்கள் என்பதை, இப்பொழுது 9 ஆண்டுகள் 6 மாத காலம் பதவியில் இருப்பார்கள் என்று ஒரே நேரத்தில் 1½ ஆண்டு காலத்திற்குத் தனி அதிகாரிகள் பதவியை நீட்டித்துச் சட்ட முன்வடிவை இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள். இந்த 8 ஆண்டு காலத்திற்குள்ளே 3 அமைச்சர்கள் இந்தத் துறைக்கு வந்து, 4-வது அமைச்சரும் நாளையதினம் அவைக்கு வர இருக்கின்றார்கள். இதைப் பார்க்கும்போது ஒன்று என்னு டைய நினைவிற்கு வருகிறது. தமிழ்ப் புராணங்களிலே சொல வார்கள், இந்திரன் மாறிக்கொண்டே இருப்பான், இந்திராணி மாற மாட்டாள் என்று. அப்படி அமைச்சர்கள் இந்தத் துறையிலே மாறிக்கொண்டே இருப்பார்கள், தனி அதிகாரிகள் மட்டும் மாற மாட்டார்கள். அதுவும் 9½ ஆண்டு காலத்திற்குத் தனி அதிகாரிகள் இருப்பார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. புராணத்திலே கூட மனிதனை சனியன் பிடிப்பது 7½ ஆண்டுகள் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் அதிலே நம்பிக்கை இல்லாதவர்கள். ஆனால் தனி அதிகாரிகள் 7½ ஆண்டுகள் அல்ல, 9½ ஆண்டுகள் இருக்கப் போகிறார்கள். இந்த 9½ ஆண்டுகளில் முடியுமா என்பதுகூட. சிதம்பர இரகசியமாக இருக்கிறது.

நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், சட்ட மன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் மக்களின் பிரதிநிதிகள்தான் என்று சற்று முன் னாலே கூறியதிலேயிருந்து, இந்தப் பிரதிநிதிகளை வைத்தே, நிர்வாகத்தை நடத்திவிட முடியும் என்ற நிலைக்கு அரசு வந்திருக் கிறதோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. ஆகஸ்ட் மாதம் தேர்தல் நடக்கும் என்று அறிவித்தபோது நாங்கள் சற்றே நம்பிக்கை பெற்றோம். ஆனால், நாங்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் மக்களுடைய பிரதிநிதிகள்

தான் என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கூறுவதைப் பார்த்தால், நகராட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடந்து, நிச்சயமாக மக்களுடைய பிரதிநிதிகள் அந்த நிர்வாகத்தை நடத்துவார்களா என்ற எங்களுடைய அச்சம் மேலும் வலுப்படுகிறது. இந்த ஒரு வரி திருத்தத்தின் மூலமாக 100-க்கு மேற்பட்ட நகராட்சிகள் 9½ ஆண்டுகள் தனி அதிகாரிகள் கையிலே ஒப்படைக்கப்பட்டிருப்பதன் விளைவாக, அனைத்து நகராட்சிகளிலும் குடி தண்ணீர் பிரச்னை என்பது சொல்ல முடியாத அளவுக்கு வளர்ந்துகொண்டே இருக்கிறது. நகரங்களுக்குச் செல்லக்கூடிய அவ்வளவு பேர்களுக்கும் தெரியும், அமைச்சர்களுக்கும் தெரியும், இரவுபகல் என்று பாராமல் ஒவ்வொரு தண்ணீர் குழாயையும் சுற்றி நூற்றுக்கணக்கான குடங்களும் குண்டான்களும் வைக்கப்பட்டு, பாத்திரக் கடையிலே இல்லாத அளவுக்குப் பாத்திரங்கள் வைக்கப்பட்டுள்ளன. தண்ணீர் குழாய் அடியிலே அப்படி போட்டுவிட்டு நம்முடைய தாய்மார்களும் அருமைச் சகோதரிகளும் குழாய் அடியிலே இரவு முழுவதும் காத்திருக்கக்கூடிய சோகக் காட்சியை அத்தனை நகரங்களிலும் நம்மால் பார்க்க முடியும். இன்றைக்குக் கோடை காலம் வந்துகொண்டிருக்கிற சமயத்தில் குடிநீர் பிரச்னைக் கடுமையாகிக் கொண்டிருக்கிறது. குறிப்பாக, நாகர்கோவில் நகராட்சியில் கடந்த 4 நாட்களாக தண்ணீர் விநியோகிக்காமல் நிறுத்தி வைக்கப்பட்டு, அங்குள்ள மக்கள் அவதிக்குள்ளாகியுள்ளார்கள். அதிகாரிகளிடம் முறையிட்டால் தீர்வு காண முடியவில்லை.

என்னுடைய தொகுதியைச் சேர்ந்த நாகை நகராட்சியில், வங்கக் கடலோரத்தில், கீழ்ப்புறத்திலே தண்ணீர் இருந்தாலும், அது உப்பு நீராக இருக்கக்கூடிய காரணத்தாலே, கடலோரப் பகுதியிலே இருக்கக்கூடிய அந்த நகரம்கூட குடிநீருக்காக மிகப் பெரிய அளவுக்கு அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஏறத்தாழ வெள்ளையர் ஆட்சிக் காலத்திலே குடிநீருக்காக பதிக்கப்பட்ட குழாய்களே இப்பொழுதும் இருப்பதால், அந்த நகரம் சீர்கேடு அடைந்து, அந்தக் குழாய்களிலே தண்ணீர் வராமல் மிகவும் அவதிக்கு ஆளாகக்கூடிய நிலை நாகையிலும் நாகர்கோவிலிலும், மற்றும் தமிழகம் முழுவதும் இருக்கிற நகராட்சிகளிலும் குடிநீர் பிரச்னை தீர்க்க முடியாத பிரச்னையாக இருக்கிறது. தனி அதிகாரிகள் அந்த ஊரில் இல்லையென்றால், இன்னொரு ஊருக்கு மாற்றலாகிப் போய்விட முடியும். ஆனால்,



நகரத்திலே வாழ்கிற மக்கள் குடிநீர் கிடைக்கவில்லையென்றால், வேறு எங்கும் குடியேற முடியாது. மக்கள் பிரதிநிதிகள் இல்லை. குடிநீர் பிரச்னை இப்படி என்றால், சாக்கடை தேங்கிக் கிடக்காத நகரமே இல்லை. குடிநீர் பைப்புகளுக்குப் பக்கத்திலே சாக்கடைகள் தேங்கிக் கிடக்கிற சூழ்நிலையிலே, சாக்கடை நீரும் குடிநீரும் ஒன்றாகக் கலந்து குடிநீர் கெடக்கூடிய கொடுமைகள் நகரங்களிலே நீடித்துக் கொண்டிருக்கின்றன. அதனுடைய விளைவாக குடிதண்ணீரும், சாக்கடை தண்ணீரும் ஒன்றாகக் கலந்துவிடுவதினால் மஞ்சள் காமாலை போன்ற நோய்கள் நகரத்தில் மிகப் பெரிய அளவில் பரவக்கூடிய நிலைமை இருக்கிறது.

அதேபோல மின்விளக்குகள் போடப்பட்டிருந்தாலும், மின் கம்பங்கள் தான் இருக்கின்றன. மின் விளக்குகள் எரிவதில்லை. அதற்கு பல்புகள் வாங்கிப்போடுவதும், சீர்கெட்டு விட்டால் சீர்படுத்துவதும் இல்லை. நகராட்சிகளில் சொன்னால் மின் வாரியத்திடம் தான் அந்த பொறுப்பு இருக்கிறது என்று சொல்கிறார்கள். அவர்கள் இவர்களைச் சொல்வதும், இவர்கள் அவர்களைச் சொல்வதுமான நிலைமை தான் இருந்து வருகிறது. மக்களை பொறுத்தவரையில், இருட்டில் வாழ்கிற சங்கடங்கள் இருக்கின்றன. நகரங்களில் இருக்கிற தெருக்கள் இருளில் மூழ்கி இருப்பதால் திருட்டுகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

தெருக்கள் முழுவதும் குப்பைகள் மேடிட்டு கிடப்பதை பார்க்கிறோம். இவ்வளவு சீர்கேடுகள் காணப்படுகின்றன. துப்புரவுப் பணியாளர்களை போதிய அளவிற்கு நியமிக்க முடியவில்லை. இருக்கிற பணியாளர்களுக்கு அரசின் உத்தரவுகள் நிறைவேற்றப்படாமல் நிறைய குறைபாடுகள் இருக்கின்றன. நகராட்சி பேருந்து நிலையங்களுக்கு கிராமங்களிலிருந்தும், நகரங்களிலிருந்தும் மக்கள் அதிக அளவில் வருகிறார்கள். அப்படி அவர்கள் வருகிற அந்தப் பேருந்து நிலையங்கள் இன்றையதினம் வியாதிகளை ஏற்றுமதி செய்கிற இடங்களாக இருக்கின்றன. மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தினால் இந்தக் குறைகளை எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் மட்டும் பார்த்து விடுவார்கள் என்று கருதுவது சரியாக இருக்காது.

[திரு. கோ. வீரய்யன்] [1985 மார்ச் 18

உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், நாகை நகரத்தில் 1977 ஆம் ஆண்டு மழை பெய்து வெள்ளம் வந்தபோது இடிந்து விழுந்த சுவர் இன்னும் கட்டப்படாமல் இருக்கிறது. அந்த நகராட்சியில் இருக்கிற நாற்காலிகளையும், மேசைகளையும் பார்த்தாலே நாகை நகரத்தின் நிலைமை எப்படி இருக்கும் என்பதை புரிந்து கொள்ள முடியும். ஒரு நாற்காலி, மேசை கூட சரியாக இல்லாமல் சீர்கெட்டு இருக்கின்றன. அவற்றை சீர் செய்வதற்கு கூட முடியாமல் நகராட்சியின் நிர்வாகம் இருந்து வருகிறது. இந்த நிலைமைகளை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போதிருக்கிற நான்காவது அமைச்சர் தேர்தலை நடத்துவார் நம்புங்கள் என்று நம்முடைய முன்னவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆகஸ்ட்—செப்டம்பர் மாதங்களில் தேர்தல் நடக்குமென்றும் சொன்னார்கள். அரசு தரப்பில் நம்முடைய அமைச்சர் அவர்களிடமிருந்து ஒரு வாக்குறுதியை பெற விரும்பு கிறேன். நீங்கள் ஆகஸ்ட்—செப்டம்பர் மாதங்களில் தேர்தல் நடத்துவதற்கு அடையாளமாக, இப்போது நகராட்சிகளில் உயர்த்தி இருக்கிற வீட்டு வரி, தண்ணீர் வரி போன்றவற்றை ஆகஸ்ட்—செப்டம்பர் மாதங்கள் வரையில் நிறுத்தி வைத்தால் நீங்கள் தேர்தலை நடத்துவதற்கு ஒரு அடையாளமாக இருக்கும். அந்த எண்ணத்தில் அமைச்சர் அவர்கள் அந்த வாக்குறுதியை தருவார்களா என்று அறிய விரும்புகிறேன். ஒன்பது ஆண்டு களாக தனி அதிகாரிகளின் பொறுப்பில் நிர்வாகங்களை ஒப்படைத்திருப்பது சரியாக இருக்காது. நீங்கள் சரியாக சொல்லிவிட்டால் நாங்கள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வற்புறுத்த வேண்டிய அவசியம் இருக்காது. கல்வித் துறையைப் போல, விவசாயத் துறையைப் போல, மற்ற துறைகளைப் போல இந்த உள்ளாட்சி அமைப்புகளையும் நேரடியாக அரசே அதிகாரிகளை வைத்து நிர்வகிக்கிற முடிவிற்கு வந்து விட்டது, உள்ளாட்சி அமைப்புகள் தங்களுடைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு நாங்கள் அனுமதிக்கப் போவதில்லை என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றி விட்டால், தொடர்ந்து நேரத்தை வீணாக்காமல் இருப்பதற்கு உதவி செய்யும். இந்த நிலையில் இந்தச் சட்ட முன்வடிவை திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டு என் உரையை முடிவு செய்கிறேன்.



1985 மார்ச் 18]

(நண்பகல் 12-00)

* திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இந்த நகராட்சி தனி அதிகாரிகள் திருத்தச் சட்டத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நகராட்சிகளுக்குத் தேர்தலை நடத்தாமல் ஆண்டுக்காண்டு தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிக்கொண்டே இருக்கிறார்கள். இந்த தனி அதிகாரிகளுடைய ஆட்சியில் நகரத்தினுடைய அத்தியாவசியத் தேவைகள் கூட நிறைவு செய்யப்படாமல் இருக்கின்றன. அத்தியாவசிய வேலைகளைக் கூட அவர்கள் செய்யாமல் இருக்கிறார்கள். அதனால் நகரத்தில் நாளுக்குநாள் ரொம்பவும் சுகாதாரக் கேடு ஏற்பட்டு வருகிறது. இந்தக் கேட்டைப் போக்க வேண்டுமென்றால் விரைவிலே தேர்தலை நடத்த வேண்டும். சீக்கிரமாக தேர்தல் நடத்தப்படும் என்று இங்கே வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். அதற்காக என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இருந்தபோதிலும் இந்த அரசு ஏற்கெனவே பல தடவை தேர்தலை நடத்துவதற்கான வாக்குறுதியை தந்தும், தேர்தலை நடத்தாமல் தள்ளிப் போட்டுக் கொண்டே இருக்கிறது. அதனால்தான் இம்மாதிரியான அசாதாரண சூழ்நிலை நகரத்தில் உருவாகி, சுகாதாரக் கேடு பரவி இருக்கிறது. ஆகவே, இப்போது கொடுத்திருக்கிற வாக்குறுதியை கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த விவாதத்தில் கலந்துகொள்ளும்போது மேலப்பாளையம் நகராட்சியைப்பற்றி சில கருத்துக்களைச் சொல்ல விரும்பு கிறேன். நேற்று கூட காலையிலே வழிபாடு தலத்திற்குப் பக்கத்தில் ஒரு நாய் செத்துக் கிடந்தது. அதை அப்புறப்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அப்பகுதியில் சொன்னார்கள். அதை அப்புறப்படுத்த நான் தொழிலாளர்களைத் தேடினேன், அப்போது 11 மணியாகி இருந்தது. அவர்கள் யாரும் இல்லை. மேலாளரைப் பார்த்தேன், அவரும் இல்லை. ஞாயிற்றுக் கிழமையாக இருந்ததால் நகரமன்றத்தில் ஊழியர் யாரும் இல்லை. பின்னால் மாலையில்தான் அந்த நாயை அப்புறப் படுத்த முடிந்தது.

[திரு. வி. எஸ். டி. சமசுல் ஆலம்] [1985 மார்ச் 18

மேலப்பாளையத்தில் வக்ஃப் ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஒரு பெரியவர் ஏழை எளிய மக்களுக்கு, தொழிலாளர்களுக்கு குறைந்த வாடகையில் நல்ல வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற முறையில் சுமார் 20 ஏக்கர் நிலத்தைக் கொடுத்திருக்கிறார்கள். 6 ஆண்டுகளுக்கு முன்னால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அப்போது தொழிலாளர் நல அமைச்சராக இருந்த மாண்புமிகு இராகவானந்தம் அவர்களும் அங்கே வந்திருந்தார்கள். அப்போது அங்கே வீடு கட்டியிருப்பவர்கள் தெரு விளக்கு, குடிநீர் வசதி செய்து தர வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். அந்தக் கோரிக்கையை நாங்கள் நிறைவேற்ற முடியாது, ஏனென்றால் இது தனியாருக்குச் சொந்தமான இடம் என்று சொன்னபோது அந்த பெரியவர் நான் இலவசமாகவே நகரமன்றத்திற்கு எழுதிக் கொடுத்து விடுகிறேன் என்று சொன்னார். அப்போது முதலமைச்சர் அவர்கள் அவருக்கு நன்றி தெரிவித்து, இந்த வசதிகளை உடனடியாகச் செய்து கொடுக்க ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னார்கள்.

அந்த பொதுமக்களுக்கு இரண்டு பொது குடிநீர் குழாய்கள் அமைத்துக்கொடுக்கப்பட்டன. அதற்குமேல் எந்த வசதியும் செய்து கொடுக்கப்படவில்லை. காரணம் 6 ஆண்டுகளாகியும் அந்த நிலத்தை நகரமன்றம் எழுதி வாங்கவில்லை. நான் பல முறை நகரமன்ற தனி அதிகாரியிடமும் மற்ற அதிகாரிகளிடமும் சொல்லியும், இது சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டும் அவர்கள் இதற்கான முயற்சி மேற்கொள்ளவில்லை. இன்னும் தனியார் இடமாக இருப்பதால் அந்த இரண்டு பொது பைப்புகள் தவிர லைட் வசதி போன்ற பிற வசதிகள் எதுவும் செய்யப்படாமல் இருக்கிறது. நான் இந்த வசதிகளைச் செய்ய வேண்டுமென்று சொல்லும்போதெல்லாம் அது தனியார் இடம், அதனால் செய்ய முடியாது என்கிறார்கள். எழுதி வாங்கிக்கொள்ளுங்கள், அதற்கான ஏற்பாடுகளை நான் செய்கிறேன் என்று சொன்னால் விரைவில் அதைச் செய்கிறோம் என்று சொல்கிறார்களே தவிர முறையான நடவடிக்கை எடுக்கவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சில் உறுப்பினர்கள் இருந்தால் இத்தகைய நிலைமை ஏற்படாது, உடனடியாக நடவடிக்கை எடுப்பார்கள்.



1985 மார்ச் 18] [திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம்]

மேலும், நான் மக்கள் குழுவிலே ஒரு உறுப்பினராக இருக்கிறேன். மக்கள் குழுவிலே என்ன கருத்துக்களைச் சொன்னாலும் கேட்டுக் கொள்கிறார்களே தவிர, அதை நிறைவேற்றுவதில்லை. சுகாதார கேடுகளை எடுத்துச் சொல்கிறோம், முறைகேடுகளை எடுத்துச் சொல்கிறோம் எதையும் கவனிப்பதில்லை.

மிகவும் மோசமான கழிவுநீர் தேங்கும் ஒரு இடத்தில் இறைச்சிக் கடை வைக்க அனுமதி கொடுத்தார்கள். எவ்வளவோ கூறியும் எங்கள் கருத்தை மீறி அனுமதி கொடுத்திருக்கிறார்கள். வழிபாடு தலத்திற்குச் செல்லும் இடங்களிலே எல்லாம் கழிவுநீர் தேங்கிக் கிடக்கிறது. அதுபற்றி பலமுறை சொல்லியும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஏற்கெனவே கவுன்சில் இருந்தபோது இத்தகைய குறைபாடுகளைச் சொன்னோம் என்பதால் அப்போது இருந்த தலைவர் இந்த மாதிரியான குறை பாடுகளைச் சொல்லும் போது, அவைகளை நிவர்த்தி செய்ய ஒரு அறிக்கை சமர்ப்பித்தார். உறுப்பினர் சொன்ன குறை பாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டதற்கு அத்தாட்சியாக அந்த அந்த வார்டு உறுப்பினரிடம் செய்த வேலைபற்றி கையெழுத்து வாங்கிவரவேண்டுமென்று ஒரு விதிமுறையை வைத்தார்கள். அந்த மாதிரி திட்டத்தைக்கூட இப்போதுள்ள தனி அதிகாரி யிடம் சொன்னோம். அதேமாதிரி கவுன்சில் இப்போது இல்லை என்றாலும், மக்கள் குழு உறுப்பினர்களிடம் கையெழுத்து பெற்றுவர வேண்டுமென்ற முறையைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டோம். அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகவே, சுகாதார கேடு, சீர்கேடான சூழ்நிலை நகரம் பூராவும் பரவியிருக்கிறது.

ரோடு வசதிகள் சரியான முறையில் பராமரிக்கப்படாமல் இருக்கின்றது. மேலப்பாளையம் நகராட்சியில் ஒரு ஹைவேஸ் ரோடு இருக்கிறது. அது ஹைவேஸ் டிபார்ட்மென்டின் மேற் பார்வையிலே இருக்கின்றது. அவர்களிடம் சென்று முறையிட் டால் கூட, அவர்கள் ரோட்டைச் செப்பனிடுவது இல்லை. மேலும் எங்கே பார்த்தாலும் தெருக்களில் அசுத்தம் இருக்கிறது. இதைப்பற்றி பல முறை அவர்களிடம் எடுத்துச்சொல்லியும் அவர்கள் அதைக் கவனிக்காமலும் நடவடிக்கை எடுக்காமலும் இருக்கிறார்கள். மேலும் ரோடுகளில் குப்பைகள் அதிகமாக

[திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம்] [1985 மார்ச் 18

இருக்கின்றன. அதை அகற்றவேண்டும் என்று கேட்டால்,
குப்பை அள்ளும் வண்டிகள் இல்லை என்று சொல்கிறார்கள்.
அதற்காக தீர்மானம் போட்டு எழுதியிருக்கிறோம் என்றும், அது
வந்தவுடன் செய்கிறோம் என்று சொல்கிறார்கள்.

அடுத்து மேலப்பாளையம் நகராட்சிக்கு என்று தனியாக ஒரு
பஸ் ஸ்டாண்டு கட்டித்தரவேண்டும் என்று அந்தப் பகுதியில்
உள்ள மக்கள் கோரியிருக்கிறார்கள். சுமார் 4 ஆண்டுக்காலத்
திற்கு முன்பாகவே சொல்லியும், அதன் அடிப்படையிலே வடிவ
அமைத்து அதை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஆனால்
இதுவரையிலும் அதற்கான அனுமதி வந்து சரியான காரியம்
நடைபெறவில்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

வறட்சி ஏற்பட்டபோது, அரசு நிவாரணமாக பல லட்ச
ரூபாயை நகராட்சிக்குத் தந்திருக்கிறது. அதிலே எந்தந்த
வேலைகளைச் செய்யவேண்டும் என்று திட்டத்தைத் தீட்ட
மக்கள் குழுவை கூட்டி கேட்டால் நல்லதாக இருக்கும் என்றும்,
நாங்கள்தான் அடிக்கடி மக்களைச் சந்திக்கிறோம், எனவே எங்
களுக்கு அவர்களுடைய அன்றாடப் பிரச்சனை தெரியும் என்று
சொல்லியும், அவர்கள் எங்களுடைய நல்ல யோசனைகளை
எடுத்துக்கொள்ளவில்லை. அவர்களாகவே திட்டங்களைப்
போட்டு நிறைவேற்றி வருகிறார்கள். அப்படிப் போடுகின்ற
திட்டங்களும சரியான முறையில் இல்லை. இதுபற்றி கருத்துக்
கூறினாலும அதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். இதை
யெல்லாம் நான் அரசுக்கு உணர்த்த விரும்புகிறேன். மேலும்
எந்த வேலையாக இருந்தாலும், அவைகள் உரிய காலத்தில்
செய்யப்படாமல், காலதாமதமாக செய்வதால், பல ஊழல்கள்
நடக்க ஏதுவாக இருக்கின்றது. இதற்காக என்று கான்ட்ராக்ட்
எடுத்து இருப்பவர்களும், சரியான முறையிலே, அதற்கான
பொருள்களை வழங்குவதாகத் தெரியவில்லை. இதுபற்றி பல
முறையீடுகளைச் சொல்லியும் அவர்கள் தங்களுடைய கவனத்தில்
அதை எடுத்துக்கொள்வதாக இல்லை. நகராட்சி மன்றத்
தேர்தல்கள் நடத்தப்படாததால், நாடு முழுவதும் இப்படிப்பட்ட
நிலைமைதான் இருக்கின்றது. எனவே இதை உணர்ந்து அரசு
கொடுத்த வாக்குறுதியை கண்டிப்பாக நிறைவேற்ற சீக்கிரமாக
தேர்தல்களை நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்
னுடைய பேச்சை முடிக்கிறேன்.



1985 மார்ச் 18]

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனி நகராட்சி
களுடைய தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிக்கின்ற
இந்தச் சட்டத்தின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பல நல்ல
ஆலோசனைகளை வழங்கியும், மிக விரைவிலே தேர்தல் நடத்தப்
படவேண்டும் என்பதையும், மக்களுடைய பிரதிநிதிகள் இருந்
தால்தான் அன்றாடப் பிரச்சனைகளை நாங்கள் தீர்க்க முடியும்
என்பதையும் நகரத்திலே இருக்கின்ற சீர்கேடுகளைக் குறைக்க
முடியும என்பதையும், பணிகள் மேற்கொள்ளப்படுவதில் இருக்
கின்ற தாமதங்கள், அதை நிறைவேற்றப்படுவதிலே அதிகாரி
களுடைய மெத்தனப் போக்கையும், ஆகவே தேர்ந்தெடுக்கப்பட்ட
மன்றம் இருந்தால்தான் அது முறையாக செயல்படும் என்பதை
யும் இங்கே சொன்னார்கள்.

அதிலும் குறிப்பாக நம்முடைய ஆபிரகாம் அவர்கள் சாக்கடை
கட்டுவதில், தனி அதிகாரிகளுடைய காலத்தில் அவர்கள்
முழு கவனம் செலுத்தி கட்டவில்லை என்றும், அதிலே ஏற்பட்ட
பல்வேறு இடையூறுகளையும் எடுத்துச்சொல்லி என்னுடைய
கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். அந்த அதிகாரிகள் மீது
நடவடிக்கை எடுக்க உரிய ஆணைகள் அனுப்பப்பட்டு இருக்
கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல நம்முடைய உறுப்பினர் பழனிமுத்து அவர்கள்
பேசுகின்றபோது குடிநீர் வினியோகத்திலே இருக்கிற குறை
பாடுகளைச் சொன்னார்கள். சில இடங்களில் 2, 3 நாட்களுக்கு
ஒரு முறைதான் தண்ணீர்தரப்படுகிறது என்று சொன்னார்கள்.
கோடைக்காலத்திலே அத்தகைய சூழ்நிலைகள் ஏற்படுவது
இயல்பு. எங்கெங்கே குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுகிறதோ, அங்
கெல்லாம் உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு அரசு அவ்வப்
போது உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது. நம்முடைய அவை
முன்னவர் அவர்கள் இதுபோன்ற ஒரு கேள்விக்குப் பதில்
சொல்கிறபோது, அத்தகைய சூழ்நிலைகள் ஏற்படாத வகையில்
மக்களுக்குத் தேவையான அளவிற்கு குடிநீர்ப் பிரச்சனையை
தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்
பதை அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். புதிய குடிநீர்
திட்டங்கள் சில இடங்களில் நிறைவேற்றப்படுவதிலேயும், பணி
கள் மேற்கொள்வதிலே காலதாமதங்கள் ஏற்பட்டு இருக்கின்றது

[திரு. ஆர். சௌந்திரராஜன்] [1985 மார்ச் 18

என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்குக் காரணம் குடிநீர் வடிகால் வாரியம் சில ஆய்வுகளை நடத்தியதற்குப் பின்னாலேதான், அந்தப் பணிகளை மேற்கொள்ளவேண்டிய சூழ்நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். அதனால் அந்தக் காலதாமதங்கள் ஏற்பட்டு இருக்கலாமே தவிர, வேறு பிரச்சனை அல்ல.

(பிற்பகல் 12-10)

மேலும் அவர்கள் சொல்லும்போது 'அன்-ஆதரைஸ்டு லே அவுட்' பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். பல இடங்களில் அவர்கள் வரி மட்டுமே செலுத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு தேவையான வசதிகள் கிடைப்பதில்லை என்று சொன்னார்கள். பொதுமக்கள் தங்களுக்குக் கிடைக்கிற இடங்களை வாங்குகின்றபோது, அது ஏற்கனவே நகராட்சியால் ஒப்புதல் பெற்றிருக்கிறதா, நகராட்சியின் அனுமதியைப் பெற்றிருக்கிறதா? என்று முறையாக கவனிக்காமல், ஏதோ தங்களுக்குக் கிடைக்கிறதே என்று வாங்க ஆரம்பித்து விடுகிறார்கள் . பிறகு கட்டிடத்தையும் கட்ட ஆரம்பித்துவிடுகிறார்கள். அதற்குப் பிறகுதான் கட்டிடம் கட்டியிருக்கின்ற அந்த இடம் நகராட்சியின் அனுமதி பெறாத இடம் என்று அவர்களுக்குத் தெரிய வருகிறது. அப்படி அனுமதி பெறாமல் கட்டிய இடத்திலே இருக்கிற அந்தக் கட்டிடங்களிலே குடியிருக்கின்றவர்களுக்கு வசதிகளைச் செய்து தரவேண்டும் என்று நாம் மனிதாபிமானத்தோடு எண்ணினாலும் கூட சட்டச் சிக்கல்கள் பல இடங்களிலே ஏற்படுகின்றன. இத்தகைய நிலைமைகள் தமிழகத்தினுடைய பல்வேறு இடங்களில் இருக்கின்றன. ஆகவே, இவைகளைப் பற்றி ஒருமித்த முடிவு எடுக்கப்பட வேண்டும் என்று தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் எண்ணி அதற்கான வழிவகைகளை எடுக்க இந்த அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது. மேலும் இத்தகைய அன்-ஆத்தரைஸ்டு என்று சொல்லப்படுகிற முன் அனுமதியில்லாது கட்டப்பட்டிருக்கிற கட்டிடங்களோ, லே-அவுட்டுகளோ இனிமேல் ஏற்படாமல் இருப்பதற்கு சட்டங்கள் உருவாக்கப்பட்டு அந்தச் சட்டத்தின் மூலமாக பொது மக்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பதில் மிகுந்த ஈடுபாட்டிலே இருக்கிறோம்.



1985 மார்ச் 18] [திரு. ஆர். சௌந்திரராஜன்]

திரு. வீரய்யன் அவர்கள் பேசுகிறபோது இந்திராணி பற்றியும்
இந்திரன் பற்றியும் கதை சொன்னார்கள். இந்திராணியும்
இந்திரனும் தேவர்கள். ஆனால் இங்கே அமைச்சர்களாக இருப்
பவர்கள் மனிதர்கள். ஆகவே தேவர்களுடைய கதை, அமைச்
சர்களாக இருக்கிற மனிதர்களுக்குப் பொருந்தாது என்பதைச்
சொல்லிக் கொள்கிறேன். திரு. வீரய்யன் அவர்கள், நாகப்
பட்டிணத்தில் புயல் வெள்ளம் ஏற்பட்ட 1977 ஆம் ஆண்டு இடிந்த
சுவர், ஒன்று கட்டப்படவில்லை என்று என்னுடைய கவனத்திற்
குக் கொண்டு வந்தார்கள். கடந்த 2, 3 நாட்களாக நான் அவரு
டன் பேசிக் கொண்டிருந்திருக்கிறேன். அவர்கள் என்னிடத்தில்
இந்த சுவர் பிரச்னையை அப்போது சொல்லவில்லை. இப்
பொழுதுதான் மன்றத்திலே சொல்லுகிறார்கள். உரிய காலத்தில்
அதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லிக் கொள்
கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சம்சுல் ஆலம் அவர்கள் பல்வேறு
பிரச்னைகளைப் பற்றி இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.
அந்த 20 ஹெக்டேர் பிரச்னையைப் பற்றியும் என்னிடத்திலே
முதலிலேயே கூறினார்கள். உரிய நடவடிக்கைகளை மேற்
கொள்ளச் சொல்லி, அங்கிருக்கிற அதிகாரிகளுக்கு தாக்கீது
அனுப்பியிருக்கிறேன். ஆகவே அவர்களுடைய நீண்ட நாள்
கவலையும் விரைவில் தீர்க்கப்பட்டு விடும் என்பதைச் சொல்லி
விரைவில் தேர்தல் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கயிருக்
கிறோம்.

திரு. வீரய்யன் அவர்கள் பேசுகிறபோது இன்றோடு இந்த
அமைச்சருடைய பதவி உள்ளாட்சித் துறையை விட்டுச்
செல்கிறது. நாளைக்கு வேறு ஒரு அமைச்சர் வருகிறார்.
ஆகவே, இவர் சொல்கிற வாக்குறுதி எப்படி நிறைவேற்றப்
படுமோ என்று ஐயப்பட்டார். அவருக்கு நான் சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன். புரட்சித் தலைவர் அவர்கள்
தலைமையிலே இருக்கிற அமைச்சர்கள் கூட்டுப் பொறுப்பைக்
கொண்டவர்களே தவிர அதை விட்டு தவறிச் செல்பவர்கள் அல்ல.
ஆகவே நான் சொல்லியதை அடுத்து வருகிற அமைச்சர்
நிராகரித்து விடுவார் என்று எண்ண வேண்டாம். நிச்சயமாக
இந்தத் தேர்தல் ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில்
நடைபெறும். அவர் சூசகமாகக் கூட ஒன்றைக் கேட்டார்

தேதியைக் குறிப்பிட்டுச் சொன்னால் நலம் என்று. ஆனால், அதற்கான ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு, அதுவும் இந்த சட்டமன்றக் கூட்டத் தொடருக்குள்ளேயே கொண்டு வருவதற்கு அரசு முயலும் என்று அவை முன்னவர் அவர்கள் தெரிவித்திருப்பதனால், இதைவிட சிறந்த வாக்குறுதி வேறு எதுவும் தேவையில்லை என்று கருதுகிறேன். ஆகவே, இந்தச் சட்டத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

“தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1985) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.”

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

“தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 7/1985) நிறைவேற்றப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்டமுன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.



(உ) மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு, 1985.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

“1985 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றம் பேரவை சட்ட முன்வடிவு எண். 8/1985) * ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்”.

**திரு. ப. பொன்னுரங்கம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்த சட்டத்தை எதிர்ப்பதற்கு தனி காரணம் இருக்கிறது. இது மற்ற மாநகராட்சிகளை போல் அல்ல என்று நான் ஏற்கனவே அறிமுக நிலையிலேயே இந்தக் கருத்தைச் சொன்னேன். சென்னைக்கோ, கோயம்புத்தூருக்கோ தனி அதிகாரி போடுகிறோம். ஆனால் இந்த மதுரை மாநகராட்சிக்கு மட்டும், கலெக்டரிடம் கொடுத்துவிடுகிறோம். 1971 ஆம் ஆண்டு சட்டத்தின்படி கலெக்டரிடம் கொடுக்கலாம் என்று இருந்தாலும் கலைத்த உடனே, கலெக்டரிடம் கொடுப்பதற்கு காரணம், ஒரு மாதம்அல்லது இரண்டு மாதத்தில் தேர்தல் நடத்த முடியும் என்ற நிலைமை இருந்தால், கலெக்டரே பார்த்துக்கொள்ளட்டும் என்ற எண்ணத்திலே கொடுக்கலாம். இப்பொழுது என்ன நிலைமை? ஜுலை மாதம் 1984 ஆம் ஆண்டு கொடுக்கப்பட்டது. இப்போது மார்ச் மாதம் ஆகியிருக்கிறது. போன ஆண்டு ஆறு மாதம், இந்த ஆண்டு மூன்று மாதம். ஆக மொத்தம் 9 மாதங்கள் ஆகியிருக்கின்றன. மதுரையில், கலெக்டர் இந்த ஜில்லா வேலையை கவனித்துக்கொண்டு, இந்த மாநகராட்சி வேலையையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. ஒரே நபரின் தலை மீது இரண்டு பளுவை தூக்கி வைப்பது சரிதானா, முறைதானா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அது மிகவும் அவசியம். தவிர்க்க முடியாத காரணத்தினால் கலைக்கப்பட்டது. உடனே தேர்தல் நடத்துவதாக இருந்தால், கலெக்டரிடம் ஒப்படைப்பதில் நியாயம் உண்டு. ஒரு மாதம், இரண்டு மாதம் என்றால் பளு தெரியாது. வருடக் கணக்கிலே பார்த்துக் கொள்வதென்றால் அதில் எவ்வளவு சிரமம் இருக்கும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

* 1985 ஆம் ஆண்டு மார்ச் 14 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

மதுரை மாநகராட்சி நாற்றத்திலும், குப்பைக் கூளங்கள் மற்றும் கொசுத் தொல்லை போன்ற எல்லாவிதத்திலும் சென்னையை விட மிஞ்சிப்போய் இருக்கிறது. ஸ்டேட் பஸ் ஸ்டாண்டுக்கு போனால் ஜப்ப் பண்ணித்தான் போக வேண்டும். பஸ் ஸ்டாண்டு அந்த கதியில் இருக்கிறது. சாக்கடைகள் ஓடு கின்றன. மதுரைக்காரர்கள் எல்லாம் பார்க்கிறார்கள், உண்மை தான் என்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு அவல நிலை, ஓரே ஒரு அதிகாரி இருப்பதால், அவருக்கு பளு அதிகமாக இருப்பதால் தான் ஏற்படுகிறது. இதைத்தான் நாங்கள் மீண்டும் மீண்டும் சொல்ல வேண்டியிருக்கிறது.

என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமானால், நீங்கள் உங்கள் தேர்தல் அறிக்கையிலே, வருமான வரியினை நீக்கு வோம் என்று அறிவித்திருக்கிறீர்கள். அதன்படி இந்த சென்னை, கோயம்பத்தூர், மதுரை போன்ற மூன்று மாநகராட்சி களுக்கும் புரொபசனல் டாக்சை வாபஸ் பெற வேண்டும். வசூலிக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் சென்னை துறைமுகத்திலே பணியாற்றுபவர்களை சென்று கேட்டால், அன்லிமிடெட், அதாவது ஒரு ஸ்டேஜ் கிடையாது என்ற வகையில் கார்ப்பரேஷனில் போட்டிருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள். அதற்கும் ரீசன்சும் கிடையாது. நான் ஃபாம் லெட்டை பார்த்தேன். எனக்கே புரியவில்லை. பயித்தியம் பிடிக்கின்ற மாதிரி இருக்கிறது. இந்த டாக்ஸ் தேவையில்லை என்பதால்தான் நீங்கள் எலக்ஷன் மேனிபெஸ்டோவிலே தெரிவித் திருக்கிறீர்கள். எனவே, அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலிலே இந்த அறிவிப்பை அதாவது வருமான வரி இனி வசூலிக்கப்படமாட்டாது என்று அறிவிப்பார்களா என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நானும் சேர்ந்து அதனை வலியுறுத்துகிறேன். நாவலர் அவர்கள் ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் தேர்தல் நடைபெறும் என்று அறிவித்திருக் கிறார்கள் அவர் சொன்னால் சொன்ன வார்த்தையை மீற மாட்டார். எனவே, ஆகஸ்டிலே ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் இந்த இந்தத் தேதியிலே என்று அறிவித்துவிட்டு, மாநகராட்சிக்கு செப்டம்பர் மாதம் இந்த தேதியிலே என்று குறிப்பிட்ட தேதியோடு கூடிய பதிலை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன்.





இன்றுடன் அவருடைய அமைச்சர் காலம் முடிந்தாலும், அவ்வாறு நான் இன்றே அறிவித்துவிட்டு செல்லுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சிக்கு தனி அதிகாரி நியமனம் செய்யப்படாமல் இருப்பது என்பது மிகப் பெரிய சிரமங்களை இன்றைக்கு மக்களுக்கு ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி ஒரு தனி அதிகாரியாக கலெக்டரையே நியமனம் செய்ய வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கனவே, கோவை மாநகராட்சி ஏற்படுத்தப்பட்ட நேரத்தில் தனி அதிகாரி நியமனம் இருந்தது. இங்கே, சென்னை மாநகராட்சியை கலைத்துவிட்டு, தனி அதிகாரி நியமனம் செய்யப்பட்டது. ஆனால் அந்த நேரத்தில் மதுரை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அமைப்பு இருந்தது. ஒரு கார்ப்பரேஷன் கௌன்சில் இருந்தது. அப்போது மதுரையிலே தேர்தலுக்கான ஏற்பாடுகளைச் செய்து முடிப்பது வரை நீட்டித்துக் கொண்டு செல்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தி இருக்கலாம்.

(பிற்பகல் 12-20)

மற்ற மாநகராட்சியைப் பொறுத்தவரையில் ஏற்கனவே தனி அதிகாரிகள் இருந்து விட்டார்கள் என்ற காரணத்தாலே ஒரு தேர்தலை ஏற்படுத்தாமல் அங்கே ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட கௌன்சிலையும், மேயரையும் கொண்டுவர முடியாத ஒரு நிலை இருக்கிறது. ஆனால் மதுரையைப் பொறுத்தவரையில் அந்த அல்ல. மதுரையைப் பொறுத்தவரையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயரும், கௌன்சிலும் இருந்த இடம். ஒரு தேர்தலுக்கான ஏற்பாடுகளை ஒரு அரசு செய்து முடித்த பிறகு, அதைக் கலைத்து கலெக்டருடைய பொறுப்பிலே விட்டு [illegible] விட்டிருக்கலாம். இங்கே காங்கிரஸ் கட்சி [illegible] அங்கே என்ன நிலை என்றால், [illegible] சொன்னார்கள். உங்கள் [illegible] ளர்கள் சிலர் எடுத்துச் சொன்னார்கள். [illegible] நடைபெறக்கூடிய நேரத்தில், அங்கே ஏற்பாடுகள் [illegible] பட்டன. அதற்குப் பிறகு அந்த மாநகராட்சியைப் பொறுத்த [illegible]

வரையில் ரோடுகள் பராமரிக்கப்படவில்லை. இன்று மிக மோசமான நிலையில் அங்கே ரோடுகள் இருந்து கொண்டிருக்கின்றன. இது அந்த நகராட்சியில் உள்ள அனைவருக்கும் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் கூட சொன்னார்கள், அங்கே உள்ள ஸ்டேட் பஸ் ஸ்டாண்டின் நிலை என்னவென்று. அதைவிட மிக மோசமான நிலையிலிருக்கிறது கார்ப்பரேஷன் நடத்திவரும் கார்ப்பரேஷன் பஸ் ஸ்டாண்டு. அதற்கு அருகில் திடீர் நகர் என்ற ஒரு இடம் இருக்கிறது. பல நூற்றுக்கணக்கான மக்கள் அங்கே தங்கியிருக்கிறார்கள். அங்கே நடந்து செல்ல முடியாத அளவிற்குச் சுகாதாரக் கேடுள்ள ஒரு இடமாக இருக்கிறது.

மதுரை நகராட்சியைப் பொறுத்தவரையில், பல தெருக்களுக்கு நாம் போவோமேயானால், இப்படிப்பட்ட நிலை இருந்து கொண்டிருக்கிறது. அங்கே ரோடு ஓரங்களில் கட்டப்பட்டுள்ள கழிப்பிடங்களைப் பயன்படுத்திக்கொள்ள முடியாத அளவிற்குக் கெட்டுவிட்டிருக்கிறது. அதைப் பொறுத்தவரையில் கொஞ்சம் கூட கவலைப்படாத அளவிற்கு அந்த கார்ப்பொரேஷன் இருக்கிறது. அந்தக் கழிப்பிடங்களைப் பார்த்தாலே, அங்குள்ள நிர்வாகத்தை எடுத்துக் காட்டும். ஆக அந்தக் கழிப்பிடங்களைப் பொது மக்கள் பயன்படுத்த முடியாத நிலை இருக்கிறது.

அதுபோல லைட் வசதிகளைப் பொறுத்தவரையில், லைட்கள் ஒழுங்காக எரிவதில்லை. மின்சார ஊழியர்களைப் பொறுத்த வரையில், அவர்களிடமிருந்து சரியான முறையில் வேலை வாங்க முடியாத நிலை அங்கே ஏற்பட்டிருக்கிறது. இந்த அளவிற்கு மதுரை நகராட்சியிலே இப்படிப்பட்ட ஒரு அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. நிச்சயமாக இது அழகல்ல என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கலெக்டர் ஸ்பெஷல் ஆபீசராக வந்ததற்குப் பிறகு மக்களுக்கு ஏற்பட்ட சிரமத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். வேதமணி என்கின்ற ஒரு கார்ப்பரேஷன் ஆசிரியை ஒரு பள்ளிக்கூடத்தில் வேலை பார்த்து வந்தார். அவருடைய புருஷன் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகி, திரு. எ. பி. பழனிசாமி. அவர் இறந்து விட்ட காரணத்தால், மனக் கோளாறு ஏற்பட்டு அதன் காரணமாக அந்த அம்மையார் பள்ளிக்கு ஒழுங்காகப் போக





முடியாத நிலைமை ஏற்பட்டது. அவர்கள் நீண்ட நாட்கள் விடுப்பில் இருந்ததால், அவர்களை வேலையிலிருந்து நீக்கிவிட்டார்கள். அப்போது அவர்கள் ஒரு அப்பீலைக் கொடுத்தார்கள். அந்த அப்பீலைப் பொறுத்தவரையில், அந்த நேரத்தில் சட்ட மன்ற உறுப்பினராக இருந்த திரு. சங்கரய்யா அவர்கள் கடிதத்தோடு அந்த அப்பீல் மனு கொடுக்கப்பட்டது. இங்கேகூட ஆர். டி. எல். ஏ. செயலாளரைப் பார்த்து பேசப்பட்டது. சென்ற ஜுன் மாதத்திலே கொடுக்கப்பட்டு, அங்கே ஜுலை மாதத்திலே கலெக்டர் பொறுப்பிற்கு வந்தபிறகும்கூட, இன்றுவரை ஒரு பதில்கூட வரவில்லை. ஒரு ஆசிரியை அவருடைய புருஷன் இறந்ததன் காரணத்தினால், மனக்கோளாறு ஏற்பட்டு, பள்ளிக்கு வரமுடியாத சூழ்நிலையில் கூட, அவரைப் பள்ளியிலிருந்து நீக்கி விட்டு, அதற்கான அப்பீல் மனு கொடுக்கப்பட்டு, கடந்த பத்து மாதங்களாகியும், இன்றுவரை ஒரு பதிலும் அளிக்க முடியாத நிலையில் அந்த மாநகராட்சி இருக்கிறது. திரு. சங்கரய்யா சட்டமன்ற உறுப்பினராக மட்டும் இருந்தவர் அல்ல, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் குழுவினுடைய தலைவராகவும் இருந்தவர். அவருடைய கடிதத்துடன் அனுப்பப்பட்ட மனுவின்மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால் சாதாரண ஏழை மக்களுடைய மனுக்கள் பற்றி எந்த அளவுக்கு மாநகராட்சி கவனித்துக்கொண்டிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் நான் சொல்கிறேன்.

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மதுரை நகரத்திற்கு அருகில் இருந்து நீங்கள் வந்திருக்கிறீர்கள் என்பதால் நான் சொல்லாமலேயே மதுரையின் பிரத்தியேக நிலைமை உங்களுக்குத் தெரியும். தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு கவுன்சில் இல்லை என்ற நிலைதான் அதற்குக் காரணம். அதிகாரிகளுடைய சர்வாதிகாரம் நடக்கிறது, மக்கள் பல குறைகளைச் சொல்கிறபோது காது கொடுத்து அவர்கள் கேட்பதில்லை, சரியான முறையில் அவைகளைப் பரிசீலனை செய்து காலா காலத்தில் தீர்வு ஏற்படுவதில்லை என்று நகரத்திலே உள்ள அந்த மக்கள் பல புகார்களைச் சொல்லியிருக்கிறார்கள். நேர அவகாசம் கருதி நான் அவைகளையெல்லாம் வர்ணிக்க விரும்பவில்லை. ஒரே ஒரு எடுத்துக்காட்டைத்தான் விடுதலைக்காகப் பாடுபட்ட ஒருவரின் மனைவிக்கு ஏற்பட்ட நிலைமையைப் பற்றிச் சொன்னேன்.

ஆகவே மதுரை மாநகராட்சிக்குத் தேர்தல் விரைவிலே நடத்துவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதுதான் மக்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வழி வகுக்கும். மற்ற மாநகராட்சிகளிலிருந்து ஒரு வித்தியாசமான நிலையில் இது இருப்பதால்—போட்டோ எடுக்க வேண்டுமென்ற காரணத்தைச் சொல்வது சரியல்ல. இதற்கு முன்னாலே போட்டோ எடுக்காமல் தேர்தல் நடந்திருக்கிறது. அப்படித் தேர்தலை நடத்திவிட்டு அடுத்த தேர்தலை வேண்டுமென்றால் போட்டோ ஏற்பாடுகளைச் செய்து வைத்துக்கொள்ளலாம் என்று கூறி, உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும் என்று கூறி, தேர்தல் நடத்துவதற்கான காலத்திற்கு இடைப்பட்ட காலத்திலே இப்படிப்பட்ட ஜீவாதாரமான பிரச்சினைகளைப் பற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு இந்தச் சட்டத்தை வாபஸ் பெறவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்ந்து கொள்கிறேன்.

**திரு. ஏ. தெய்வநாயகம்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தனி அதிகாரிகள் நியமனம் மதுரை மாநகராட்சிக்கு வேண்டாம் என்று கூறுவதற்காக நான் உரையாற்றுகிறேன். மதுரை, மாநகராட்சியாக ஆகி 8 ஆண்டுக் காலமாகிறது. இந்த 8 ஆண்டுக் காலத்திலே தேர்தல் முடிந்து 4 மேயர்கள் வந்து பொறுப்பேற்று ஆங்காங்கு உள்ள பிரச்சினைகளை அவ்வப்போது கவனித்துக்கொண்டு செயல்பட்டுக்கொண்டிருந்தார்கள். இன்று தனி அதிகாரிகள் பொறுப்பேற்றவுடன் எந்த வித வேலையும் நடைபெறவில்லை.

குடிநீர்ப் பிரச்சினை மதுரை மாநகராட்சியிலே மிகப் பெரிய பிரச்சினையாகி மக்கள் எழுச்சியுறும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஏற்கனவே போடப்பட்டிருக்கிற குழாய்களில் தண்ணீர் வந்தால் போதும் என்று மக்கள் சங்கடப்பட்டுச் சொல்லும் அளவுக்கு மக்கள் எழுச்சியுற்றிருக்கிறார்கள். மணலூரிலிருந்து குடிநீர் தருகிற ஒரு திட்டம் ஒரு வருட காலமாகச் சொல்லிக் கொண்டு வரப்பட்டாலும் இன்னும் வந்தபாடில்லை. பெரியாறிலிருந்து மேலக்கால் வழியாக தண்ணீர் கொண்டு வருகிற திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டமும் இதுவரை வரவில்லை. பைப்கள் எல்லாம் இருக்கின்றன, ஆனால் தண்ணீர்



கொடுத்தால்தானே மக்களுடைய தாகம் தீரும். வைகை நதி மதுரையில் ஓடுகிறது. அங்கே கை வைத்தால்கூட தண்ணீர் இல்லை என்ற நிலைமையில் மணலாகத்தான் இருக்கிறது.

இங்கே உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொத்து வரி ரிவிஷன்பற்றிச் சொன்னார்கள். மதுரையிலே ரொம்பத் தீவிரமாக ஆரம்பித்து விட்டார்கள். இன்று ரிவிஷன் முடிந்து மறுபடியும் அரையாண்டிற்கு வசூல் செய்து அவர்கள் எல்லாம் அப்பீல் செய்யும் அளவுக்கு வந்துவிட்டார்கள். அதிகாரிகள் எல்லாம் இந்தக் கணக்காண்டு முடிவதற்குள்ளாக வசூல் செய்து விட வேண்டுமென்று சொல்கிறார்கள். கேட்டால் நீங்கள் பணத்தைக் கட்டிவிட்டு அப்பீல் செய்து கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். அதையும் நிறுத்தி வைக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சுகாதார வசதிகளைப் பொறுத்தவரையில் லாரி வசதிகள் இல்லை, அதிகாரிகளைக் கேட்டால் பழுதடைந்திருக்கின்றன என்றும் ரிப்பேர் செய்ய ஒர்க்ஷாப் இயங்கவில்லை என்றும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள், முறைகேடுகளைப் பற்றிச் சொல்கிறார்கள். நான் சார்ந்திருக்கிற மத்திய தொகுதியைப் பொறுத்தவரையில் ஆலயங்கள் நிறைந்த பகுதி, இந்து ஆலயங்களும் இஸ்லாமிய ஆலயங்களும் கிறித்துவ ஆலயங்களும் உண்டு. ஆனால் அவைகளில் எல்லாம் தண்ணீர் இல்லை என்ற நிலைமை இருக்கிறது. மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம் தென்தமிழ் நாட்டிலேயே மிகப் பெரிய ஆலயம், அதைப்போன்று மதனகோபாலசுவாமி ஆலயம் இருக்கிறது, இம்மையில் நன்மை தருபவர் கோயிலான மீனாட்சிசுந்தரேஸ்வரர் கோயில் பொற்றாமரைக் குளத்திலே தண்ணீர் இல்லை, பக்தர்கள் எல்லாம் வெறுத்துப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கார்ப்பரேஷன் இதையெல்லாம் ஏன் செய்யக்கூடாது என்று கேட்கிறார்கள்.

சாலை வசதிகள் 1981-லிருந்து 1984 வரை செய்யப்படவில்லை. உலகத் தமிழ் மாநாடு நடந்தபோது சாலை வசதி செய்யப்பட்டது. அதற்குப் பிறகு சாலை வசதி செய்து தரப்படவில்லை. அதிகாரிகள் செய்வார்கள் என்ற நம்பிக்கை இல்லை. பார்ப்போம் பார்ப்போம் என்று ஒரே குரலாகத்தான் சொல்கி

றார்கள். அவர்கள் உடனே வந்து பார்த்து செலவது சரியா
தப்பா என்று பார்ப்பதில்லை. அவற்றையெல்லாம் அவர்கள்
கண்காணிக்கச் செய்து செவ்வனே செயல்படுகின்ற முறையில்
செய்து மீண்டும் தனி அதிகாரிகள் வேண்டாம் என்று சொல்லிக்
கொண்டு தேர்தலை விரைவிலே நடத்தி மக்கள் மன்றத்திலே
தூல் எழுப்ப வகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு
முடித்துக் கொள்கிறேன், நன்றி வணக்கம்.

(பிற்பகல் 12-30)

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தனி அதிகாரிகள்
காலவரை நீட்டிப்பு என்பது நகராட்சிகள் ஆனாலும், மாநக
ராட்சிகள் ஆனாலும் வேறு உள்ளாட்சி, ஊராட்சி மன்றங்கள்
ஆனாலும் நிர்வாகத்தில் சிக்கல் ஏற்படாமல், நிர்வாகம் ஸ்தம்
பித்து விடாமல் நடைபெறவேண்டும் என்பதற்காகத்தான் இந்தத்
தனி அதிகாரிகளுடைய கால வரையறை நீட்டிக்கின்ற ஒரு
சட்டத்தை நாம் அவ்வப்போது கொண்டுவர வேண்டிய ஒரு கால
கட்டாயத்தில் இருக்கிறோம். வருகிற ஆகஸ்ட் மாதம் தேர்தல்
நிச்சயமாக நடைபெறும் என்று நம்முடைய முன்னவர் அவர்கள்
அறிவித்து இருக்கிறார்கள். ஆகவே அதற்கான சட்ட திருத்
தங்கள் கூட இந்தச் சட்ட மன்ற கூட்டத் தொடரிலேயே வரும்
என்று அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள் என்று நான் பல
முறை சொல்லியிருக்கிறேன். ஆகவே மாண்புமிகு உறுப்பினர்
களுக்கு அதைப்பற்றி எந்தவிதமான ஐயப்பாடும் தேவையில்லை
என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சொன்னுரங்கம்
அவர்கள் தேர்தல் வாக்குறுதி பற்றி நினைவுபடுத்தினார்கள்.
அ.இ.அ.தி.மு. கழகத்தைப் பொறுத்தவரையில் தேர்தலில் பல
வாக்குறுதிகளை நாங்கள் வழங்கி அவைகளை படிப்படியாக
நிறைவேற்றுவதோடு மட்டும் அல்லாமல் தேர்தலில் வழங்காத
வாக்குறுதிகளையும் நிறைவேற்றிக்கொண்டு இருக்கிறோம்
என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு





கிறேன். ஆகவே படிப்படியாக அந்த வாக்குறுதிகள் நிறை
வேற்றப்படும் என்பதையும் அவருக்குத் தெரிவித்துக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

மற்றொன்று இன்றைக்கு இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பி
னர்கள் பலரும் நகராட்சிகள், மாநகராட்சிகளுடைய வருமானம்
அங்கே இருக்கிற பணியாளர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்குக்
கூட சில நேரங்களில் போதுமானதாக இல்லை என்று அவர்கள்
மனம் திறந்து தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால் இங்கே
வசூல் செய்வதை காலதாமதம் செய்யவேண்டும். தள்ளி வைக்க
வேண்டும் என்று கோருகிறார்கள். ஏற்கனவே அந்த மாநக
ராட்சி, நகராட்சி சட்டம் எப்படி இருக்கிறது என்றால், வரியை
உயர்த்தி விடுகிறார்கள் என்றால் அந்த வரியைக் கட்டிவிட்டு
அதற்குப் பிறகு மறு பரிசிலனைக்கு அப்பீல் செய்து அந்த
வரியை குறைத்துக் கொள்வதற்கு வழிவகைகளைச் செய்ய
வேண்டும். அந்த வகையில்தான் நாம் நடவடிக்கையை மேற்
கொள்ளுகிறோம். ஆகவே வசூலிக்கப்படவேண்டிய தொகை
வசூல் செய்யப்படவில்லை என்றால் இங்கே மாண்புமிகு உறுப்
பினர் திரு. தெய்வநாயகம் அவர்கள் பேசுகிறபோது சொன்
னார்கள், தேவையான லாரிகள் இல்லை, தேவையான பணியா
ளர்கள் இல்லை என்று. அப்படித் தேவையான பணியாளர்களை
நியமிக்க வேண்டுமென்றாலும், லாரிகளை மாநகராட்சிக்கு வாங்க
வேண்டுமென்றாலும் அதற்குத் தேவையான அளவிற்கு நிதிநிலை
களைப் பெருக்கிக்கொள்ள வேண்டிய காலகட்டாயத்திலே இருக்
கிறோம். ஆகவேதான் இப்படிப்பட்ட பல்வேறு பிரச்சினைகள்
உருவாகின்றன.

மேலும் தற்போது மாநகராட்சியின் நிர்வாகம் மாவட்ட
ஆட்சித் தலைவரிடத்திலே இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கி
றார்கள். மதுரை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் அதில்
தேர்ந்தெடுக்கப்பெற்ற மேயர் இல்லாத நேரத்தில் மதுரை மாவட்
டத்தினுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அந்த மாநகராட்சியி
னுடைய தனி அதிகாரியாக இருக்க வேண்டும் என்கின்ற விதி
முறைகளுக்கு ஏற்பத்தான் அந்தப் பொறுப்பை அவர்கள் ஏற்றுக்
கொண்டிருக்கிறார்கள்.

[திரு. ஆர். சௌந்திரராஜன்] [1985 மார்ச் 18

ஆகஸ்ட் மாதத்தில் தேர்தல் நடைபெற இருப்பதால், மிக விரைவிலே நீங்கள் சொன்ன பல்வேறு குறைகள் தீர்வதற்கான வழிவகைகள் இருக்கின்றன என்பதைச் சொல்லி, நீங்கள் இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

“1985 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 8/1985) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்”.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

“1985 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 8/1985) நிறைவேற்றப்பெற வேண்டும்”.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, ஊராட்சிகள் சம்பந்தப்பட்ட மூன்று சட்ட முன்வடிவுகளையும் ஒன்றாக விவாதத்திற்கு எடுத்துக் கொள்வோம்.



1985 மார்ச் 18]

**(ஊ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1985.**

**(எ) ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு.**

**(ஏ) ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாளர்கள் கே. எம். தங்கமணி, சி. பழனிமுத்து, ப. பொன்னுரங்கம் ஆகியோர் அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானத்தைக் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் தீர்மானத்தை முன்மொழிவார்.

**திரு. சி. பழனிமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

“ஆளுநர் அவர்களால் 19—11—1984 ஆம் தேதி அன்று பிறப்பிக்கப்பெற்ற தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) மூன்றாம் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 23/1984) இப்பேரவை நிராகரிக்கிறது”.

**திரு. கே. எம். தங்கமணி:** இதை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

“தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 9/1985) * ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்”.

* 1985 ஆம் ஆண்டு மார்ச் 15ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[1985 மார்ச் 18

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், கே. எம். தங்கமணி, சி. பழனிமுத்து ஆகியோர் அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானத்தைக் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் தீர்மானத்தை முன்மொழிவார்.

**திரு. சி. பழனிமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் அவர்களால் 19—11—1984 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) மூன்றாம் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 24/1984) இப்பேரவை நிராகரிக்கிறது".

**திரு. கே. எம். தங்கமணி:** இதை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 10/1985)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், கே. எம். தங்கமணி, சி. பழனிமுத்து ஆகியோர் அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானத்தைக் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் தீர்மானத்தை முன்மொழிவார்,

**திரு. சி. பழனிமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் அவர்களால் 19—11—1984 ஆம் தேதி அன்று பிறப்பிக்கப்பெற்ற தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 25/1984) இப்பேரவை நிராகரிக்கிறது".

**திரு. கே. எம். தங்கமணி:** இதை நான் வழிமொழிகிறேன்.

* 1985 ஆம் ஆண்டு மார்ச் 15-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



1985 மார்ச் 18]

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 11/1985) * ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. பழனி முத்து அவர்களின் தீர்மானங்களும், மாண்புமிகு அமைச்சர் அவர் களின் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் படுகின்றன.

* **திரு. கே. எம். தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. பழனிமுத்து அவர்களாலே முன்மொழியப்பெற்ற தீர்மா னங்களை வழிமொழிந்து சில வார்த்தைகள் நான் சொல்ல விரும்புகிறேன். தம்முடைய தமிழ்நாட்டிலே பல ஆண்டுக் காலமாக பஞ்சாயத்துக்களுக்கும். ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தேர்தல் நடக்காமல் இருப்பது ஒரு துர்பாக்கியமான நிலைமை என்பதை ஆரம்பத்திலேயே கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு ஜனநாயக நாட்டிலே, ஜனநாயகத்தினுடைய முதுகெலும் பாகவும், நாடாளுமன்றத்தின் நாற்றங்காலாகவும், பாராளுமன்ற முறையின் அடிப்படையாக இருப்பவை ஊராட்சிகளும், பஞ்சா யத்து யூனியன்களும் என்று நம்மிலே இருக்கின்ற ஜனநாயகப் பண்பாளர்கள் சொல்லுவார்கள்.

(பிற்பகல் 12-40)

ஆனால் பல ஆண்டுகளாக பஞ்சாயத்துத் தேர்தலும், ஊராட்சி ஒன்றியத் தேர்தலும் நடக்காத சூழ்நிலையில் எந்த விதமான வேலைகளும் இன்றையதினம் கிராமப்புறங்களில் நடக்கவில்லை என்பதை நான் ஆரம்பத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இன்றையதினம் கிராமங்களுக்குச் சென்றால் அங்கே சீரான பாதை இருக்கின்றதா [illegible] இல்லை. அந்தப்போல [illegible] தண்ணீர் இருக்கின்றதா

* 1985 ஆம் ஆண்டு மார்ச் 15-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

(திரு. கே. எம். தங்கமணி) [1985 மார்ச் 18

என்றால் இல்லை. இருளகற்ற மின்சாரம் இருக்கின்றதா என்றால் அங்கே மின்சாரம் இல்லை; ஒளிதரும் விளக்குகளும் இல்லை. நல்வாழ்வு என்று சொல்லப்படுகின்ற சுகாதாரம் ஏதாவது இருக்கின்றதா என்றால் அதுவும் இல்லை. அதைப் போலவே கல்வி அறிவு தருகின்ற நிலையங்கள் என்று சொல்லப் படுகின்ற பள்ளிக்கூடங்கள் கட்டுகிறோமா என்று சொன்னால் ஒன்றுமே இல்லை என்று சொல்கின்ற நிலைமைதான் இன்றைய தினம் கிராமங்களில் இருந்துகொண்டிருக்கின்றது. இப்படிப் பட்ட ஒரு துர்ப்பாக்கியமான நிலைமை இருக்கிறது.

கிராமப்புற பகுதியில் குறிப்பாக அரிசன மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் எல்லாம் மின்சார விளக்கு தேவை என்று சொல்கின்ற நிலையில் நான் இரண்டாவது முறையாக சட்டமன்றத்திற்கு வந்திருந்தாலும் அந்தக் கிராமப்புற மக்களுக்கு நன்றி சொல்வதற்காகச் செல்கின்ற நேரத்தில் எங்கள் பகுதிக்கு மின்சாரம் கிடையாது, கிட்டத்தட்ட நான்கைந்து வருடங்களாக இருந்திருக்கின்றீர்கள். ஆனாலும். இதுவரையில் எந்த விளக்கும் போடவில்லை, எந்தவிதமான மின்சார விளக்கும், அங்கே எரிய வில்லை என்றுதான் கிராமப்புறங்களில் இருக்கின்ற மக்கள் எல்லாம் குறிப்பிடுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. ஏனென்றால் கிராமங்களிலே, இருக்கின்ற விளக்குகள் எல்லாம் சரியாக எரிய வில்லை. பொதுவாக எல்லா இடங்களிலும் அமாவாசை என்பது மாதத்திற்கு ஒருமுறைதான் வரும். ஆனால் என்னுடைய தொகுதியில் உள்ள கிராமப்புறங்களில் ஏன் தமிழகத்திலே இருக் கின்ற அனைத்து சிறிய கிராமங்களிலும் மாதம் முழுவதும் அமாவாசை என்று சொல்லக்கூடிய அளவுக்கு இருள் சூழ்ந்த நிலைமைகள் இருக்கின்றன என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்லியாகவேண்டும்.

மயிலம் பஞ்சாயத்து யூனியனைப் பொறுத்தவரையில் அங்கே மின்சாரத்திற்கான கட்டணத்தைக் கட்டவில்லை என்பதற்காக மின்சார வாரிய அதிகாரிகள் வந்து அந்த ஃப்யூஸைப் பிடுங்கி விட்டார்கள். அதன் காரணத்தால் கிட்டத்தட்ட ஒரு வார காலத்திற்கு மேலாக அங்கே மின்சாரம் இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் மாறவேண்டும் என்றால், கிராமப்புறங்களை அபிவிருத்தி செய்ய



1985 மார்ச் 18] [திரு. கே. எம். தங்கமணி]

வேண்டும் என்றால் கிராமங்கள் புத்துயிர் பெற்று, புதுவாழ்வு பெறவேண்டும் என்றால் அங்கே ஜனநாயக ரீதியில் மக்களாட்சி ஏற்படுத்தப்படவேண்டும் என்று நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி போன்ற திட்டங்களின் மூலம் மிகப் பெரிய பணிகள் எல்லாம் கிராமங்களில் நடக்கின்றன. அந்த வேலைகளை எல்லாம் அங்கே இருக்கின்ற கிராம சேவக்குகள்தான் செய்யவேண்டும் என்று விதி இருக்கின்றது. ஆனால் அந்த விதியின்படிதான் அவர்கள் அந்த வேலையினைச் செய்கிறார்களா என்றால் இல்லை. அங்கே இருக்கின்ற கட்சிக் காரர்கள் அவர்களை அணுகி இந்த வேலையை எங்களுக்குப் போட்டுத் தாவில்லை என்றால் உங்களை இந்த ஊரிலிருந்து வேறு ஊருக்கு மாற்றிவிடுவோம் என்று மிரட்டுகின்ற நிலைமை பஞ்சாயத்து யூனியன்களில் இருக்கின்றன. அப்படி நடை பெறுகின்ற வேலைகள் கூட சரியாக, முறையாக நடக்காத சூழ்நிலையில் அவற்றிற்கான பில்களைப் போட்டு பணம் வாங்கிக் கொள்கின்ற நிலைமை இருக்கின்றது. இப்படி நடக்காத வேலைகளுக்கு நடந்ததாகப் பணம் பெற்றுக் கொள்ளக்கூடிய நிலைமை இருக்கின்றது. பி.டி.ஓ., ஈ.ஓ.பி., பஞ்சாயத்து யூனியன் இன்ஜினியர்கள் ஆகியோரெல்லாம் சேர்ந்து கூட்டுக் கொள்ளை அடித்துக்கொண்டிருக்கின்ற நிலைமைதான் இருக்கின்றது. பஞ்சாயத்துக்களைப் பற்றி கணக்கிடுகின்றபோது அந்தந்த கிராமங்களின் நிதியாதாரங்கள் எவ்வளவு என்பதைப் பாருங்கள், இருக்கின்ற நிதியினை வைத்து என்னென்ன செய்ய முடியும் என்பதைக் கணக்கிடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். இன் றைக்கு பஞ்சாயத்துக்களிலே இருக்கின்ற ரோடுகள் சரியாக சீரமைக்கப்படாமல் இருக்கின்றனவே என்று கேட்டால் அதற்கு நிதியில்லை; மின்சார விளக்கு போடவில்லையே என்று கேட்டால், அதற்கு நிதியில்லை; புதிதாகப் பள்ளிக்கூடம் வேண்டும் என்றால் அதற்குப் போதிய நிதிவசதி இல்லை என்றெல்லாம் சொல்லக் கூடிய அவல நிலைமை இருந்து கொண்டிருக்கின்றது. ஆனால் செய்யாத வேலைக்குச் செய்ததாக பில் எழுதப்படுகின்ற நிலைமை இருக்கின்றது. எத்தனையோ கிராமப்புறங்களில் இப்படிப்பட்ட நிலைமைதான் இருந்து கொண்டிருக்கின்றது என்பதை நான் சொல்லவேண்டிய நிலையில் இருக்கிறேன்.

நம்முடைய தேசத் தந்தை மகாத்மா காந்தி அவர்கள் பஞ்சாயத்து ராஜ்யம் என்று சொன்னார்கள். கிராம ராஜ்யம் என்று சொன்னார்கள். அந்த அளவுக்குக் கிராமங்கள் எல்லாம் புதிய வாழ்வு பெறவேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் இன்றையதினம் அதிகாரிகளுடைய சாமராஜயமாகத்தான் கிராமங்களும், கிராம அலுவலகங்களும் இருந்து கொண்டிருக் கின்றன.

பஞ்சாயத்து யூனியன்களுக்குத் தேர்தல் நடந்து பல ஆண்டுகள் ஆகின்றன. எனவே, நாம் சொல்கின்றோம், அவசரமாக, உடனடியாகத் தேர்தல் நடத்த வேண்டும் என்று. இதிலே எந்த அளவுக்கு நியாயம் இருக்கிறது என்று உங்களுக்கே தெரியும். இன்றைய தினம் பஞ்சாயத்து யூனியனுக்குத் தேர்தல் வைக்க எந்த அச்சமும் தேவையில்லை. சமீபத்திலே நடைபெற்ற நாடாளு மன்ற, சட்டமன்றத் தேர்தல்களில், ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சி யான காங்கிரஸ் கட்சியும் சேர்ந்து கூட்டணியாகப் பெரும் பான்மையான இடங்களைப் பெற்றிருக்கிறோம். மெஜாரிட்டி இடங்களில் வந்து தமிழக அரசை அமைத்திருக்கிறோம். எனவே, பஞ்சாயத்துத் தேர்தல்களை நடத்த வேண்டும். பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடத்த எந்தவித அச்சமும் பயமும் வேண்டாம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

சமீபத்திலே ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத் திற்குப் பதில் அளித்து, அவை முன்னவர் பேசும் பொழுது நிச்சயமாக ஆகஸ்ட், செப்டம்பர் திங்களிலே தேர்தல் வரும் என்று சொன்னார். இது ஆறுதலான ஒரு விஷயம். பசித்தவனுக்குப் பசுந்தயிர் சோறு கொடுப்பதைப் போல், அது எங்களுக்கு இருந்தது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்பு கிறேன்.

இன்றையதினம் அந்த வாக்குறுதி கூட நிறைவேறுமா, நிறை வேறாதா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. ஏற்கனவே பெரிய அமைச்சர்களாக இருந்தவர்கள் எல்லாம், அப்படிப்பட்ட வாக்கு றுதிகள் பல தடவைகள் தந்து, கடைசியாக, கடந்த சட்ட மன்ற பட்ஜெட் கூட்டத்தொடரில் தமிழக முதலமைச்சரே வாக்குறுதி தந்து, அந்த வாக்குறுதி நடக்கவில்லையென்ற நிலை





யிருக்கிறது. ஆனால், அவை முன்னவர் அவர்கள் தற்போது, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவதற்குள்ளாகவே ஒரு நாளைக் குறிப்பிட்டு சட்டத் திருத்தம் கொண்டு வருகிறேன் என்று சொன்னார். எங்களுக்கு மிகுந்த சந்தோஷம் அளிக்கக் கூடிய விஷயம் அது. ஆகவே, கிராமங்களிலே சாலை போட வேண்டுமென்றால், பள்ளிக்கூடங்கள் துவக்க வேண்டு மென்றால், சில அத்தியாவசியப் பணிகள் செய்யவேண்டு மென்றால், அதற்கு மிகமிக அவசியம் பஞ்சாயத்துத் தேர்தல். அந்தத் தேர்தல்களின் மூலம் மக்கள் பிரதிநிதிகள் ஆட்சி வர வேண்டுமென்று கூறி, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ஆ. நடராசன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1985 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியங்களுடைய தனி அதிகாரிகளுடைய நியமனத்தை மேலும் நீட்டிப்பதற்காக இங்கே கொண்டு வந்திருக்கிற சட்ட முன்வடிவை நான் எதிர்க்கிறேன். தனி அதிகாரிகள் தேவை இல்லை என்று நாங்கள் சொல்வதற்குக் காரணம், அந்த அதிகாரிகள் ஏதோ சிற்றரசர்களைப் போல், ஊராட்சி ஒன்றியங்களையும் ஊராட்சிகளையும் ஆக்கிரமித்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் செய்கின்ற தவறுகளின் காரணமாக மக்களுக்கு அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை இருக்கிறது. ஆனால், இந்த அரசாங்கத் தைப் பொறுத்த அளவில் நீங்கள் அதிகாரிகளை நியமிக்கின்ற காரியத்தைத்தான் செய்வீர்கள். காரணம், உங்களுடைய கட்சியே அமைப்பாளர்களை நியமிக்கக்கூடிய கட்சியாக இருக் கிறது. உங்களுடைய அரசாங்கமே அமைப்பாளர்களை நியமிக் கக்கூடிய அரசாங்கமாக இருக்கிற காரணத்தால், கூட்டுறவுத் துறைக்கும் மற்ற துறைகளுக்கும் அமைப்பாளர்களையும் தனி அதிகாரிகளையும் நியமித்து அதன்மூலம் நாட்டிலே இருக்கிற ஏழை, எளிய மக்கள் தங்களுக்குத் தேவைப்பட்ட குடிநீர், மின்சார விளக்குகள், பாதைகள் போன்ற தேவைகளை நிறை வேற்றிக் கொள்ள முடியாத கொடுமையான சூழ்நிலை நாட்டிலே இருந்து கொண்டிருக்கிறது. ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசுகின்றபொழுது கூட எங்களுடைய அரசாங்கம் சிறப்பாகப் பணியாற்றுகிறது என்று வார்த்தைக்கு வார்த்தைச் சொல்லி, முதலமைச்சரைப் பாராட்டிப் பேசிக் கொண்டிருக்கிற நேரத்தில், வேகமாகத் தங்களுடைய நேரம் முடிகிறபொழுது, ஊராட்சி

ஒன்றியங்களிலே, ஊராட்சிகளிலே எந்தக் காரியங்களும் சிறப்பாக நடைபெறவில்லை என்பதைக் குறிப்பிடாமல் எந்த உறுப்பினரும் பேச்சை முடிப்பது இல்லை.

அதே நேரத்தில், ஒன்றைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன். தனி அதிகாரிகள் மூலம் நடத்தப்படுகிற நிர்வாகத்தினால் இன்றையதினம் பல இடங்களிலே மிகப் பெரிய கொள்ளைகள் நடந்து கொண்டிருக்கின்றன. எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போல, பொறியாளர்களும் ஆணையாளர்களும்; முன்னாலே பெருந்தலைவர்கள் ஊராட்சி மன்றத் தலைவர்களாயிருந்த பொழுது அடித்துக் கொண்டிருந்த கொள்ளை போய், இன்றைய தினம் தனி அதிகாரிகளும், ஏனைய அதிகாரிகளும் பங்கு போட்டுக் கொண்டு எந்த வேலையும், பணியும் சிறப்பாக நடைபெறாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஒரு நல்ல ஒன்றியத்திற்கு ஏராளமான நிதி வசதி இருக்கிறது, அந்த ஒன்றியத்திற்குப் பதவி பெற்று போக வேண்டுமென்றால், தனி அதிகாரிகள், அரசியல்வாதிகளிடத்திலே பேரம் பேசி, இலட்சக்கணக்கான ரூபாய்களைக் கொடுத்து, தகுந்த இடங்களைத் தேர்ந்தெடுக்கின்ற கொடுமைகளைப் பார்க்கிறோம். எனவே, தனி அதிகாரிகள் என்ற நிலைமை தேவையில்லை; ஒப்புக்கொள்ள முடியாத நிலைமை அது.

(பிற்பகல் 12.50.)

நம்முடைய மாண்புமிகு முன்னவர் அவர்கள் தேர்தல் நடக்கும் என்று சொல்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரையிலே அது நிச்சயமாக நடக்காது என்பதிலே நம்பிக்கையோடு இருக்கிறோம். அப்படி நடந்தால் நிச்சயமாகப் பெருமைப்படுவோம், ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். அரசாங்கத்தின் பணிகளை நடத்துவதற்கு ஊராட்சி மன்றங்களும், ஊராட்சி ஒன்றியங்களும் மிகவும் தேவையான அமைப்புகளாகும். மக்களின் எண்ணங்களை எடுத்துச்சொல்வதற்கான ஒரு இடம் என்ற அடிப்படையில் நான் இதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போலவே அங்கு பணியாளர்கள் புதியதாக நியமிக்கப்படுவதில்லை. துப்புரவுப் பணியாளராக இருந்தாலும் அல்லது வேறு எந்தப் பணியாளராக இருந்தாலும் வேலையிலிருந்து விலகிக் கொள்கிற நிலைமை இருந்தால், அல்லது அவர்கள் பணிக்காலம் முடிந்து ஓய்வுபெறுகிற நிலைமை



ஏற்பட்டாலும் அரசாங்கத்தின் உத்தரவு காரணமாக புதியதாக நியமிக்க முடிவதில்லை. அப்படி நியமிக்காத காரணத்தால் மக்களுக்கு சுகாதார வசதிகள் சரியாக செய்யப்படவில்லை. அதே போல பல இடங்களில் மின்சார விளக்குகள் எரிவதில்லை. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருப்பதால் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். இன்றைய தினம் மோட்டார் பம்ப் செட்டுகள் மின்சாரம் இல்லாததால் வேலை செய்யாமல் குடிதண்ணீர் விநியோக முறையில் மிகப்பெரிய சங்கடம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலை காரணமாக ஏழை, எளிய பொது மக்கள் மிகவும் துன்பத்திற்கும், தொல்லைக்கும் ஆளாகியிருக்கிறார்கள்.

அதைப்போல விவசாயிகள் மின்சாரம் சரியாக கிடைக்காததால் தங்களுடைய நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்ச முடியாமல் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எந்தவேளையில் மின்சாரம் வருகிறது என்பது யாருக்கும் தெரிவதில்லை. இந்த [illegible] இலவசமாக தருகிறது; உணவை [illegible] இலவசமாக தருகிறது. அதைப்போல விவசாயிகளுக்கு காலிங்-[illegible]ல் ஒன்றையும் இலவசமாக தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மின்சாரம் வருகிறபோது காலிங்-பெல் அடிக்கும்படி செய்தால் அந்த நேரத்தில் விவசாயிகள் தங்கள் நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சிக்கொள்ள வசதியாக இருக்கும். அதைப்போல [illegible] நான் 1978-ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராக [illegible] பகுதியில் மக்களுக்கு [illegible] வேண்டுமென்று கேட்ட போது 75 ஆயிரம் ரூபாய் [illegible] திட்டத்தை போட்டது. அந்தத் திட்டம் [illegible] என்றே தெரியவில்லை. காரணம் பக்கத்திலே [illegible] கழிப்பிடங்கள் கட்டி[illegible] விற்கிறவர்கள் அந்த இடத்தில் [illegible] இடங்கள் நல்ல விலைக்கு போகாது [illegible] அந்தத் திட்டத்திற்கு தடை செய்து [illegible] காரணத்தால் [illegible] கட்சியைச் சேர்ந்தவர்களும் துணை [illegible]ர்கள். அதற்கு [illegible] பகுதியிலே ஏராளமான மக்கள் [illegible]றார்கள். அங்கு [illegible] கழிப்பிட வசதி இல்லாமல், [illegible] தண்ணீர் வசதி இல்லாமல், விளக்குகள் எரியாமல் தொல்லைக்கும் துயருக்கும் ஆளாகி இருக்கிறார்கள். ஆகவே இந்தத் திட்டங்கள் தனி அதிகாரிகள் இருந்தால் நிச்சயமாக நிறைவேறாது.

(திரு. ஆ. நடராஜன்) [1985 மார்ச் 18

அதைப்போல கோவை, புதூர் என்பது அந்தப் பகுதியில் வளர்ந்து வருகிற நகரமாகும். அங்கே 300 ஏக்கர் நிலத்தில் ஏராளமான வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. அங்கே குடி-தண்ணீர் பத்து நாட்களுக்கு ஒரு முறை விடப்படுகிற பரிதாபமான நிலைமை இருந்து வருகிறது. அங்கே இருக்கிற பேரூராட்சி மன்றத்திற்கு அந்த மக்கள் ஏராளமான அளவில் ஆயிரக்கணக்கில் வரியாக கட்டுகிறார்கள். அந்த வீட்டு வரியைப் பெற்றுக் கொண்டு அந்தப் பேரூராட்சி மன்றம் அங்கே இருக்கிறவர்களுக்கு குடி-தண்ணீர் வசதியைச் செய்து தரவில்லை. அந்த வளர்ந்து வருகிற கோவைப்புதூர் நகரத்தில் பாதைகள் சரிவர செப்பனிடப் படவில்லை. அந்த மக்களுக்கு சுடுகாடு வசதி இல்லை. அந்த மக்கள் மிகுந்த துயரில் இருக்கிறார்கள். ஆரம்பப் பள்ளிக்கூடம் கிடையாது. உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்தக் குறைகளைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் வடக்கு, தெற்கு என்று இரண்டு ஹவுசிங் யூனிட்டுகள் இருக்கின்றன. அங்கே செப்டிங் டாங்குகள் நிரம்பி அதன் துர்வாசனை அந்தப் பகுதி மக்களுக்கு சொல்ல முடியாத கஷ்டத்தைக் கொடுக்கிறது. கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே ஏழை மக்களுக்காக கட்டப்பட்ட அந்த வீடுகள் இன்றையதினம் மிகப் பெரிய நரகமாக இருக்கிற நிலைமை இருக்கிறது. மாநகராட்சி அதிகாரிகளிடம் கேட்டால், அது ஹவுசிங் யூனிட்டைச் சேர்ந்த இடம் என்று சொல்கிறார்கள். இந்த நிலைமைகளைப் பரிசீலித்து அந்த மக்களின் துயரங்களைப் போக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல எட்டிமடை பேரூராட்சி பகுதியில் மூன்று ஆண்டு காலத்திற்கு முன்னாலே கட்டப்பட்ட நிலமட்டத் தொட்டி, குடி-தண்ணீர் தொட்டி மக்களுக்கு பயன்படாமல் இருக்கிறது. குடி-தண்ணீர் குழாய் கொண்டு வந்து போட்டிருக்கிறார்கள். ஆனால் இணைப்பு கொடுக்கவில்லை. இதற்கெல்லாம் என்ன காரணம்? ஆட்சியாளர்களுக்கு தேவையானவர்கள் அந்த வேலைகளை எடுக்கிறார்கள். அந்த அதிகாரிகளை விரட்டி தங்களுக்கு வேண்டியவர்களுக்கு வேலைகளைப் போட்டு அவர்களால் அந்த வேலைகள் சரிவர



1985 மார்ச் 18] [திரு. ஆ. நடராசன்]

நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. இப்படிப்பட்ட பரிதாபமான நிலை இருந்து வருகிறது. இவைகள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒன்றிய ஆலோசனைக் குழுக்களைப் பற்றி எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். என்னுடைய தொகுதியில் ஒன்றிய ஆலோசனைக் குழு கூட்டப்படவில்லை. அப்படியே கூட்டினாலும் பிரச்சனைகள் தீர்க்கப்படுவதில்லை என்று பல உறுப்பினர்கள் சொன்னார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில் 2 ஒன்றியங்கள் இருக்கின்றன. கடந்த இரண்டரை மாத காலத்தில் ஒருமுறை கூட கூட்டப்படவில்லை. இந்த நிலை மாற்றப்பட வேண்டும்.

கோவை மாநகராட்சியில் வரி கட்டுவதற்கு நோட்டீஸ் அனுப்புகிறார்கள். வரியைக் கட்டிவிட்டு, பின்னால் அப்பீலுக்குப் போக வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் ஏ.சி.சி. கம்பெனி ஒன்று இருக்கிறது. அவர்களிடமிருந்து கோடிக்கணக்கான ரூபாய் வரி வரவேண்டியிருக்கிறது. அவர்கள் வழக்கு மன்றத்திற்குப் போயிருக்கிறார்கள், பணம் கட்டவில்லை. பணத்தைக் கட்டிவிட்டுத்தான் அப்பீலுக்குப் போக வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறவர்கள். மிகப் பெரும் பண பலம் படைத்த அவர்களிடம் பணத்தை வசூல் செய்யவில்லை; அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால் சாதாரண மக்கள், ஏழை எளிய மக்கள் வீட்டு வரி பத்து ரூபாய் கட்டவில்லை என்றால் தட்டுமுட்டு சாமான்களை ஜப்தி செய்து தூக்கி வெளியே எறிகிற நிலைமை இருக்கிறது. சாதாரண மக்களின் நிலைமையை எண்ணிப் பார்த்து, இதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றியமைக்க, தனி அதிகாரிகளுடைய ஆட்சியை மாற்ற, ஆகஸ்ட், செப்டம்பர் மாதத்தில் தேர்தல் நடக்கும் என்று சொன்னார்கள். நிச்சயமாக மாதத்தில் தேர்தல் நடக்கும் என்றால் தனி அதிகாரிகள் காலத்தை ஓராண்டுக்கு நீட்டிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதால் இந்தச் சட்டத்தை எதிர்த்து அமர்கிறேன்.

*திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்கள் மற்றும் ஒன்றியக் குழுக்கள் ஆகியவை பற்றிய இந்தச் சட்டங்களை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் ஊராட்சி மன்றங்கள், ஒன்றியங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இல்லாத காலத்திலும் அந்தக் குறையை நிறைவு செய்கின்ற வகையில் கல்வி முதலிய திட்டங்களும் மற்ற வளர்ச்சிப் பணிகளும் சீராக, செம்மையாக நடந்து வந்திருக்கின்றன. ஊராட்சி மன்றங்களுக்கு தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்ற கருத்தில் இருப்பவர்கள் தான். தேர்தல் நடைபெற வேண்டும், தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஊராட்சி மன்றங்களில் இருக்க வேண்டும் என்பதிலே யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. அந்த வகையிலே தேர்தல் தேதியை அறிவித்திருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அந்த ஜனநாயகத்தில் வைத்திருக்கிற நம்பிக்கையை இங்கே யாரும் சந்தேகிக்க வேண்டியதில்லை.

இன்னும் சொல்லப் போனால் ஜனநாயக அடிப்படையில், ஜனநாயகத் தொட்டிலாக விளங்குவதை ஊராட்சி மன்றங்கள். அந்த ஜனநாயகத் தொட்டிலை கீழே இறக்கி வைத்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர்தான். 1975-ல் நடத்த வேண்டிய தேர்தலை நடத்தாமல் இரண்டாண்டு நீட்டித்து வைக்க எந்தக் காரணத்தைக் கூறினார்களோ அந்தக் காரணத்தைச் சொல்லி தேர்தலை தள்ளி வைக்க மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் விரும்பவில்லை.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தேர்தலை தள்ளி வைத்தார்கள். அதைப்போன்று காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில், அதாவது ஜனாதிபதி காலத்தில், ஊராட்சி மன்றங்களிலிருந்து தலைவர், உறுப்பினர்களை எல்லாம் நீக்கிவிட்டார்கள். ஆக, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஜனநாயகத் தொட்டிலை கீழே இறக்கி வைத்தார்கள். காங்கிரஸ்காரர்கள் தொட்டிலிலே இருந்த குழந்தையை வெளியே எடுத்து வைத்துவிட்டார்கள். ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பாதுகாப்



அந்த ஜனநாயகத் தொட்டிலை பழுதுபார்த்து, வளர்ந்துவிட்ட குழந்தைக்கு ஏற்ப அந்தத் தொட்டிலை சீர்செய்வதற்கு, சிறிது காலதாமதம் ஏற்பட்டாலும், இன்றைக்கு தேர்தலை நடத்த முன்வந்திருக்கிறார்கள்.

இன்றைக்கு மாறி வருகிற காலகட்டத்திற்கு ஏற்ப, வளர்ந்து வருகிற சமுதாய தேவைகளுக்கு ஏற்ப நகராட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி மன்றங்களுக்கும் தேர்தலை நடத்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு திட்டங்களை வகுத்திருக்கிறது. ஜனநாயகத்திலே நம்பிக்கையும், மக்களுடைய ஜனநாயக உணர்வுகளில் மதிப்பும் வைத்திருக்கிற புரட்சித் தலைவர் அவர்களுடைய எண்ணங்களை, திட்டத்தை எதிர்த்து நீதிமன்றத்திற்குச் சென்று, நீதிமன்றத்திலே வழக்கு முடிய ஏற்பட்டிருக்கிற காலதாமதத்தின் காரணமாக அதைக்கூட நிறுத்தி வைத்து, மக்களுடைய அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்ற, ஊராட்சி மன்றங்களுக்குத் தேர்தலை நடத்த அரசு முன்வந்திருக்கிறது.

(பிற்பகல் 1.00)

ஆகவே நீதிமன்றங்கள் அதற்குரிய காலத்தை இன்னும் சொல்லப் போனால், அது விரும்புகிற காலத்தை எடுத்துக் கொள்வதிலே, அவர்களை நாம் கேள்வி கேட்க முடியாது. அது நீதிமன்றத்தினுடைய சுதந்திரத்திற்கு உட்பட்ட விஷயம் என்று சொல்லக்கூடும். இருந்தாலும்கூட இது போன்ற சமுதாய நலத் திட்டங்கள், சமுதாய மறுமலர்ச்சிக்காக, மாற்றத்திற்காக எடுக்கக்கூடிய ஒரு அரசின் கொள்கையாக இருந்தாலும், முடிவுகளை எதிர்த்து வழக்கு மன்றத்திற்கு செல்லும்போது, அதற்காகவாவது ஒரு காலக் கெடுவை வைத்து, அந்தத் தீர்வுகளை, அந்த வழக்குகளை தீர்ப்பதற்கான ஒரு முயற்சியை இனிமேலாவது உயர்நீதிமன்றமும், தலைமை நீதிமன்றமும் எடுக்குமா என்பதை கேள்விக் குறியாக என்னைப் போன்றவர்கள்கூட கேட்டுக் கொண்டு இருக்கிறோம். ஆகவே இதிலே ஒரு மாறுதல் ஏற்பட வேண்டும். ஆகவே இதுபோன்ற கொள்கை குறித்த வழக்குகள் மட்டுமல்ல, அது வரி வசூல் என்று போனாலும், அல்லது உள்ளாட்சிக்கு வருகின்ற வரி என்று சொன்னாலும், நகராட்சிக்கு வருகின்ற வரி என்று சொன்னாலும், எக்சைஸ் வரி என்று சொன்னாலும், ஏதோ பிரைமா பேசி கேஸ் 'இருக்கிறது என்று மேலெழுந்தவாரியாக

காரணங்கள் இருக்கிறது என்பதை அடிப்படையாக வைத்து பல கோடிக்கணக்கான பணம் உள்ளாட்சிகளுக்கு நகராட்சிகளுக்கு வரவேண்டிய பணத்தை நிறுத்தி வைக்கிற அதிகாரமும், வழக்கு மன்றத்திற்கு இருக்கிறது. அப்படி கணக்கு எடுத்துப் பார்த்தால், அரசாங்கத்தினுடைய பணம் பல கோடிக்கணக்கான அளவிலே, வந்து சேர வேண்டிய பணம் வராமல் இருப்பதற்குக் காரணம்கூட வழக்கு மன்றத்திலே ஏற்பட்டு இருக்கிற கால தாமதம் என்பதையும் நான் இந்த நேரத்திலே ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

ஆகவே, இதற்கு ஒரு மாற்று வழியாக, அரசு சம்பந்தப்பட்ட கொள்கை குறித்த வழக்காக இருந்தாலும், அல்லது அரசு எடுத்துக் கொண்டிருக்கிற திட்டம் குறித்த வழக்காக இருந்தாலும், அல்லது ஒரு ஆக்கிரமிப்பை அகற்றுவதாக இருந்தாலும், வரி வசூலிலே ஏற்படுத்தப்பட்ட தடையாக இருந்தாலும் ஒரு குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் அவைகள் நடத்தி முடிக்கப்பட வேண்டும் என்ற ஒரு வரைமுறையை நாம் நீதிமன்றத்திற்கு மத்திய அரசாங்கத்தின் மூலம் ஏற்படுத்துவதில் எந்த ஜனநாயக முரண்பாடும் இருக்காது, அது நீதித் துறையிலே தலையிடுவதாகவும் ஆகாது என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆகவே சமுதாயக் கடமையை அடிப்படையாக வைத்து, நீதி மன்றமும், நாட்டினுடைய மாறுதலுக்கு உட்பட்டு தன்னுடைய பணிகளை ஆற்றுகிற வகையிலே அதனுடைய ஆதிபத்தியத்தில் இருக்கிற அந்த பணி முறைகளை நாம் காலத்திற்கு ஏற்றவாறு மாற்றி அமைக்க வேண்டும் என்று நாம் வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதுபோன்று பேரூராட்சி மன்றங்களுக்கு வரவேண்டிய நிதிகள் இப்படி தடுக்கப்பட்டு இருப்பதை நாம் பல இடங்களில் காண்கிறோம். அந்தத் தடையை தனியாரும் வாங்குகிறார்கள். பல இடங்களில் சங்கத்தின் மூலம் ஒட்டுமொத்தமாக நகராட்சிக்கும், அல்லது பேரூராட்சிக்கும் வருகிற வரியையும் தடுத்து விடுகிறார்கள். இதுபோன்ற நிலை இன்றைக்கு கோவை மாநகராட்சிக்கும் ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே இந்த நிலைக்கு நாம் ஒரு தீர்வு ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





அதுபோன்று, பேரூராட்சி மன்றங்களுக்கு, இந்த சினிமாக் கொட்டகைகளுக்கு காம்பவுன்டிங் டாக்ஸ் வந்த பின்னால், அதற்கு வருகிற வருமானம் குறைக்கப்பட்டு இருக்கிறது. காம்பவுன்டிங் டாக்சிலே கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு வருகிற பணம் பேரூராட்சிகளுக்கு வருவதில்லை, என்கிற நிலை காம்பவுன்டிங் டாக்சிற்குப் பின்னாலே இருக்கிறது. பேரூராட்சிகள் என்று சொன்னால், எங்கள் கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே அவைகள் பெயரளவிற்குத் தான் இருக்கின்றனவே தவிர, பேரூராட்சிக்கான நிதி வசதிகள் அவைகளிடம் இல்லை. ஆகவே இந்த நிதி ஆதாரத்தை, ஏற்கனவே பெற்று வந்த நிதி ஆதாரத்தை, தொடர்ந்து பெறுவதற்கு அரசு தகுந்த ஆணையைப் பிறப்பிக்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு பேரூராட்சிக்கு தனியாக தனி அதிகாரிகள் என்று போட்டு இருக்கிறார்கள். முதலில் பேரூராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி மன்றங்களுக்கும் ஒரே தனி அதிகாரி, ஆணையாளர், பி.டி.ஓ. மட்டும் இருந்தார். ஆனால் இப்போது பேரூராட்சி மன்றங்களுக்கு, அதனுடைய தரத்திற்கு ஏற்ப, செகன்ட் கிரேட் பேரூராட்சிக்கு, பர்ஸ்ட் கிரேட் நிர்வாக அதிகாரி தனி அதிகாரியாக போடப்பட்டு இருக்கிறார். நிர்வாக அதிகாரி, தனி அதிகாரியாக போடப்பட்டு இருக்கிறார். ஆகவே ஒரு பேரூராட்சி மன்றத்தினுடைய நிர்வாக அதிகாரி மற்றொரு பேரூராட்சி மன்றத்திற்கு தனி அதிகாரியாக இருந்து செயல்பட வேண்டிய நிலையிருக்கிறது. அதிலே அந்த கிரேடுக்கு ஏற்ப 2, 3 விதமான நிர்வாக அதிகாரிகள் தனி அதிகாரிகளாக நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். இது கடந்த 2, 3 மாத காலமாக நடைமுறைக்கு வந்திருக்கிறது. அதனாலே ஒரு கவுன்சிலிலே ஒரு பி.டி.ஓ. மட்டுமல்லாமல் 2, 3 தனி அதிகாரிகள், அந்த பி.டி.ஓ.வினுடைய பணிகளை ஆற்ற வேண்டிய கட்டாய சூழ்நிலைக்கு வந்திருக்கிறார்கள். இது நமது தேவைக்கு ஏற்ப பணிகளை வேகப்படுத்த வேண்டும் என்ற நல்ல நோக்கத்திலே அரசு ஏற்படுத்தி இருந்தாலும், அந்த நோக்கம் நிறைவேறுவதாக இல்லை. இதன் மூலம் நிர்வாகத்திலே தாமதங்கள் ஏற்படுகின்றன. ஒரு நிர்வாக அதிகாரி இன்னொரு நிர்வாக அதிகாரியை கட்டுப்படுத்துகிற அளவிற்கு தகுதியைப் பெற்றவர்

[திரு. மா. சின்னராசு] [1985 மார்ச் 18

என்று இந்தச் சூழ்நிலையிலே நாம் சொல்ல முடியாது. ஆகவே இதை மறுபரிசீலனை செய்து, மீண்டும் அந்த பி.டி.ஓ.வே, ஆணையாளரே தனி அதிகாரியாக—ஒரே ஆணையாளராகத்தான் இருக்க வேண்டும்—ஒரு கவுன்சிலினுடைய சேர்மன், தனி அதிகாரியாக நியமிக்கப்பட்ட சேர்மனுக்கு பதிலாக இருக்கிறார். அவருக்கான பணியை ஆற்றுவதற்கு ஒரு தனி அதிகாரி தான் இருக்க முடியும் என்கிற நிலையில் நிர்வாகத்தைத் துரிதப் படுத்தவும், இன்று மக்களுடைய பிரச்சனைகளை உடனுக்குடன் தீர்க்கவும், ஒருவர் ஆணையாளர். (பி.டி.ஓ.) ஆபீசுக்குச் செல்வதும், அருகில் இருக்கிற இன்னொரு பஞ்சாயத்திலே இருப்பவர் கலெக்டர் ஆபீசிற்குச் செல்வதும், இது நிர்வாகத்திலே ஏற்படுகின்ற தாமதத்திற்குக் காரணமாக இருக்கும் என்பதை நான் பணிவோடு சொல்லிக் கொள்கிறேன். ஆகவே அந்தத் தனி அதிகாரிகளை எந்த இடத்தில் பேரூராட்சிகளுக்கு தனி அதிகாரிகளை, நிர்வாக அதிகாரிகளை நியமித்து இருக்கிறார்களோ, அவர்களை நீக்கி மீண்டும் ஆணையாளரிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மிகப் பெரிய திட்டமாக புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் நிறைவேற்றியிருக்கிற திட்டம் என்னவென்றால் குடிதண்ணீர் திட்டம். பழைய காலங்களில் ஒரு யூனியனுக்கு 50-க்கு உட்பட்ட குழாய் கை பம்புகள் இருப்பதே அரிது. இன்று ஒவ்வொரு யூனியனிலும் கிட்டத்தட்ட 200 வரை அவை பெருகியிருக்கின்றன. ஆனால் அந்த கை பம்புகளை பராமரிப்பதற்கு நாம் தினசரி 5 ரூபாய் தினக் கூலியில் ஒரு பிட்டரை வைத்திருக்கிறோம். அவரை வைத்து இந்த 200 கை பம்புகளை பழுது பார்ப்பது என்பதை நினைத்துக் கூட பார்க்க முடியாத காரியம். ஆகவே அந்த பிட்டர்களை ஆங்காங்கு இருக்கிற குழாய்களுக்கு ஏற்ப போட வேண்டும், அத்தோடு அவர்களுடைய சம்பளங்களையும் உயர்த்த வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

குடிதண்ணீர் கை பம்பு, மின்விசைப் பம்பு இவைகளைப் பராமரிப்பதில்தான் பல இடங்களிலே குறைபாடுகள் இருக்கின்றன. இவற்றைப் பராமரிப்பதற்காக குடிதண்ணீர் வாரியமும், மின்சார வாரியத்தினுடைய அதிகாரியும்,



1985 மார்ச் 18] [திரு. மா. சின்னராசு]

உள்ளாட்சித் துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு மாதம் ஒரு முறையாவது கலந்து அந்தந்த ஊராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் இருக்கிற பிரச்னைகளைப் பற்றி பேசித் தீர்க்க வேண்டும். அங்கேதான் குறைபாடே இருக்கிறது. குடிதண்ணீர் வாரியமும் உள்ளாட்சித் துறை அதிகாரிகளும் தங்களுக்குள் கலந்து பேசுவதில் காலதாமதத்தை ஏற்படுத்துகிறார்கள். கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அவசரமாக மின்சார மோட்டாரை பழுது பார்க்க வேண்டுமென்றால் இந்த மூவரும் மாதம் ஒரு முறையாவது கூடி அவர்களுடைய பகுதியின் பிரச்னைகளை பரிசீலனை (செய்து) செய்வதற்கான வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பேரூராட்சி மன்றங்களில் பல மன்றங்கள் சிறிய கிராமங்களை கொண்டிருக்கிற மன்றங்கள். ஆனால் அந்தக் கிராமங்களுக்கு டவுன் பஞ்சாயத்து என்று பெயர் வைத்திருக்கிறோம். அந்தப் பெயர் காரணமாக, மத்திய அரசாங்கத்திலிருந்து கிராமப்புற குடிநீர் திட்டத்திற்காக வரக் கூடிய நிதி உதவி, அவைகளுக்கு கிடைக்காமல் போய்விடுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே தமிழகத்தில் இருக்கிற நான்கில் ஒரு பாகம் கிராமங்களுக்கு இப்படி டவுன் பஞ்சாயத்துக்கள் என்ற பெயர் இருக்கிற காரணத்தினாலேயே மத்திய அரசாங்கத்தின் குடிநீர் தருவதற்கான மானியத் தொகை வராமல் இருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டி, மற்ற மாநிலங்களில் இந்த நிலைமை இல்லை என்பதையும் கூற விரும்புகிறேன்.

அங்கே பஞ்சாயத்துக்களை மேஜர் பஞ்சாயத்து என்றும் மைனர் பஞ்சாயத்து என்றும் வைத்திருப்பதால், மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், எல்லாப் பஞ்சாயத்துக் களும் கிராமப் பஞ்சாயத்தாகவே வைத்து நிதி உதவி கொடுத்துக் கொண்டு வருவதால், இந்த உதவி எல்லாப் பஞ்சாயத்துக்களுக்கும் அவர்களுக்கு கிடைக்கிறது. ஆனால் நாம் மட்டும் டவுன் பஞ்சாயத்து என்று கிளாசிபிகேஷனை வைத்திருக்கிற காரணத்தால், பெயர் கொடுத்திருக்கிற காரணத்தால் அந்த உதவிகள் கிடைக்கவில்லை. இதனால் நம்முடைய மாநிலப்

பணத்தை வைத்து இந்தப் பேரூராட்சி மன்றங்களுக்கு குடிதண்ணீர் தருவதற்காக திட்டங்கள் செயல்படுத்தி பெரும் அளவிற்கு செலவழித்து வருகிறோம். இந்த நிலையை கவனித்து மத்திய அரசாங்கத்திடமிருந்து பெற வேண்டிய உதவியும் பெற முடியவில்லை என்பதற்கான காரணத்தை அரசு பரிசீலிக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

ஆக அத்தோடு அல்லாமல், சுகாதாரப் பணியாளர்கள் என்று ஏற்கெனவே எல்லா ஊராட்சிகளிலும் நியமிக்கப்பட்டிருக் கிறார்கள். அவர்கள் 90-லிருந்து 150 ரூபாய் வரை சம்பளம் பெற்றுக் கொண்டு வருகிறார்கள். ஒரு சாதாரண விவசாயக் கூலிக்கு எங்கள் பகுதியில் பத்திலிருந்து 15 ரூபாய் வரை அதுவும் 5 மணி நேரம் வேலை செய்தால் போதும், பெறுகி றார்கள்.. ஒரு கூலி வேலைக்கு 10, 15 பெறுகிறபோது, மாதம் 90 ரூபாய், 150 ரூபாய்க்கு துப்புரவு வேலைக்குப் பணியாளர்கள் வர மறுக்கிறார்கள். இருக்கிறவர்களும் வேலை செய்வது இல்லை. ஆகவே, இந்த நிலையை தடுப்பதற்கு கிராமத்தில் உள்ள துப்புரவுப் பணியாளர்களுக்கு ஓரளவு நியாயமான சம்பளம் கொடுப்பதற்கு அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டும் அல்லாமல், பேரூராட்சியில் காலியான இடங்களுக்கு அது பில் கலெக்டர் பணியானாலும் சரி, தொழிலாளர் பணியானாலும் சரி, துப்புரவுத் பணியானாலும் சரி, சுகாதாரப் பணியாளர்களின் மீண்டும் அந்தப் பதவி நிரப்பப்பட வேண்டுமென்றால், இங்கே செயலகத்தில் இருக்கிற அதிகாரிகள் அதற்கு அனுமதி வழங்குவதில்லை. கேட்டால் பேன் ( ban ) இருக்கிறது—தடை ஆகிவிட்டது. தடை செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஊராட்சி மன்றங்கள் ஊராட்சி நிதியிலிருந்து காலியான பணிகளுக்கு பணியாளர்களை நியமித்துக் கொள்ள முன்வந்து கேட்கிறபோது, அதற்குத் தடை இருக்கிறது என்று பல ஆண்டுகளாக மறுத்து வருவதால், ஊராட்சி மன்றங்களுக்கு வர வேண்டிய வசூல் போன்றவைகளில் ஈடுபட முடியாத அளவிற்கு தடை செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே அந்தத் தடையை நீக்க வேண்டும். நம்முடைய அரசினுடைய நிதியைக் கேட்கவில்லை. அந்த மன்றங்களே



அதற்கான சம்பளம் கொடுக்கிறது. அவைகளும் ஏற்கெனவே சாங்ஷன் செய்யப்பட்ட இடங்கள். ஆகவே அதை நிரப்புவதிலே தடை செய்வது எந்தவித நியாயத்திற்கும் உட்பட்டது இல்லை. ஆகவே அப்படி தடை விதிக்காமல் தேவைப்படுகிற பணிகளை ஊராட்சிகள் தங்களுடைய நிதியிலிருந்து செய்வதற்கு தடையாக இருப்பது நியாயமல்ல. இதை பலமுறை எடுத்துச் சொல்லியும் அதற்குத் தடை போடப்பட்டிருக்கிறது என்ற காரணத்தைக் காட்டி மறுப்பதால், அந்த மன்றங்கள் தாங்கள் ஈட்ட வேண்டிய நிதியை ஈட்ட முடிவதில்லை. இந்த நிலையை நமது அமைச்சருக்கும் அரசின் கவனத்திற்கும் கொண்டு வர விரும்புகிறேன்.

அதேபோல பேரூராட்சிகளுக்கு பொறியாளர்கள் தேவை. நிதிநிலை வசதியிருக்கிற மன்றங்களுக்கு பொறியாளர்கள் தனியாக வேண்டும் என்று கேட்டால், அவர்களைப் போட்டுக் கொள்ள அனுமதிக்க வேண்டும். சில பகுதிகளில் அப்படி பொறியாளர்கள் இல்லாத காரணத்தினாலேயே திட்டங்களை மதிப்பீடு செய்ய முடிவதில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் வந்தாலும் இந்தப் பிரச்னை இருக்கும். ஆகவே, அரசினுடைய திட்டங்கள் ஊராட்சி மன்றங்களுடைய திட்டங்கள் உடனுக்குடன் நிறைவேறுவதற்கு ஒரு தனி பொறியாளரை, வசதியுள்ள பேரூராட்சிகளுக்காவது போட்டுத் தருவதற்கும் அரசு உத்திரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

எனது தொகுதியிலே இருக்கிற காரமடை பேரூராட்சியும் சிறுமுகை பேரூராட்சியும் தன்னிறைவுத் திட்டத்திலே சேர்க்கப் பட்டு, அந்தப் பணிகள் இன்னும் முடிக்கப்படாமல் இருக்கின்றன. மார்ச் மாதம் வரை காலகெடு கொடுத்துவிட்டு அது முடிக்கப் படாமல் இருப்பது, அரசினுடைய திட்டத்திற்கு குந்தகம் விளை விப்பதாகவும், மாசு கற்பிப்பதாகவும் இருக்கும். எனவே இந் நிலைமையை மாற்றி உரிய காலத்திலே அப்பணிகளை முடிப் பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். புரட்சித் தலைவரின் தன்னிறைவுத் திட்டப் பணிகளை பழுது பார்ப்பதற்கு தனித் திட்டங்கள் வேண்டும். தன்னிறை வுத் திட்ட சாலைகளானாலும், பள்ளிக் கட்டிடங்கள் ஆனாலும், நீர்நிலைத் தொட்டிகளானாலும் ஒன்று மூன்று, நான்கு ஆண்டு

[திரு. மா. சின்னராசு] [1985 மார்ச் 18

காலங்கள் ஆகின்றபோது அவைகளில் சில ரிப்பேர்கள் இருக்கும். ஆனால் அவற்றை நிவர்த்தி செய்வதற்கு திட்டங்கள் இல்லை என்று ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளும், மாவட்ட ஆட்சித் தலை வர்களும் கூறுகிறார்கள். பலமுறை புரட்சித் தலைவர், உள்ளாட் சித்துறை அமைச்சர் மூலம் சொல்லியிருக்கிறார்கள். பழுதுபடு கின்ற தன்னிறைவுத் திட்டப் பணிகளை நிறைவு செய்வதற்கு அரசாங்கம் எல்லா நடவடிக்கையினையும் எடுக்கும் என்று சொல்லியிருந்தாலும், அந்த நடவடிக்கை எடுக்கப்படாதகதன் காரணமாக பலயிடங்களில் தன்னிறைவு திட்டத்தில் போடப் பட்ட சாலைகள் போக்குவரத்திற்கு தகுதி அற்ற நிலையில் இருக்கின்றன. மழை வந்து பழுது அடைந்தால் உடனடியாக ரிப்பேர் செய்யாவிட்டால் சாலைகள் எல்லாம் மக்களுக்குப் பயன் படாது, அரசாங்கம் செலவு செய்தும் பயன் இல்லை என்ற நிலை ஏற்படுகிறது.

குடிநீர் திட்டங்களில் தொட்டிகள் கட்டப்பட்டு இருக் கின்றன. குழாய் இருக்கிறது, மின்விசை பம்ப் இருக் கிறது. ரிப்பேராகிவிட்டால், உடனடியாக பழுதுபார்க்க வில்லையென்றால், அந்த மக்கள் வெறுப்பை காட்டுகிறார்கள். அதனுடைய விளைவு கோவை மாவட்டத்தை பொறுத்தவரை யில் மாற்று கட்சிக்காரர்கள் சொன்னது இந்த விஷயத்தில் ஓரளவு உண்மை என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். அதனால் தேர்தல் நேரத்திலே அவர்களுக்கு கொஞ்சம் லாபம் ஏற்பட்டது என்பதை மறுக்க முடியாது. உள்ளாட்சி, ஊராட்சி மன்ற தேர்தல்கள் பற்றி குறிப்பிடும்போது மாண்புமிகு நாவலர் அவர்கள் ஒரு கருத்தை தெரிவித்தார்கள். கோ-ஆப்டெட் மெம்பர் பற்றி. கூடுதலாக உறுப்பினர்களை, பெண்கள் இல்லாத ஒன்றி யக் குழுக்களில் சேர்த்து ஆதிதிராவிடர்கள் போதிய அளவு இல்லை என்ற இடத்தில், ஆதிதிராவிட மக்களுக்கான பிரதிநிதித் துவம் தந்து அந்தச் சட்டத்திலே மாறுதல் செய்யப்படும் என்று சொன்னார்கள். கோ-ஆப்டெட் மெம்பர் என்று இணைத்துக்கொள் கின்ற மெம்பர் ஏற்கனவே இருக்கின்ற சட்டத்தில் இருந்தாலும் அவர்களுக்கு வாக்குரிமை கொடுக்கப்படவில்லை. ஆக தேர்தல் நேரங்களில் தலைவரை தேர்ந்தெடுக்கவோ, மற்ற குழுக்களை தேர்ந்தெடுக்கவோ அதிகாரம் இல்லை என்றாலும் கூட நிதிநிலை சம்பந்தப்பட்ட மற்ற இடங்களில், மற்ற தீர்மானங்களை கொண்டு வருகின்றபோது, அவர்களுக்கு முழு அதிகாரம்



1985 மார்ச் 18] [திரு. மா. சின்னராசு]

கொடுக்கப்படுகின்ற அளவில் அந்த உறுப்பினர்களை கௌன்சிலில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற விருப்பத்தை தெரிவித்து. பேரூராட்சி மன்றங்கள், உள்ளாட்சி மன்றங்கள், இவைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இல்லாத நேரத்தில், இவ்வளவு சிறப்பாக திட்டங்களை நடத்தி, எல்லா வசதிகளையும் ஏற்படுத் திக்கொடுத்து, தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக மக்களுக்கு எந்தவித குறைபாடும் தெரியாத அளவிற்கு நல்ல பல திட்டங் களை கிராம மக்களுக்கு செய்து கொடுத்த புரட்சித் தலைவர் அரசை வாழ்த்தி, வணங்கி என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி.

* திரு. எம். செல்லமுத்து: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட மன்றத்தில் பணியாற்றுவதற்காக, இரண் டாவது முறையாக வாக்களித்து என்னை இந்த சட்டமன்றத் திற்கு தேர்ந்தெடுத்த திருவாரூர் தொகுதி வாக்காள பெருமக் களுக்கு என்னுடைய நன்றியை தெரிவித்து ஒரு சில கருத்துக் களை கூற விரும்புகிறேன். ஊராட்சி ஒன்றியம், ஊராட்சி ஒன்றிய தனி அதிகாரிகள், ஊராட்சிகளுடைய தனி அதிகாரி களுடைய பதவிக் காலத்தை நீட்டிக்கக்கூடிய இந்த சட்டமுன் வடிவினை, அதிமுகக் கட்டத்திலேயே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாங்கள் எதிர்த்து இருக்கிறோம். இப்போது கொண்டு வரக்கூடிய சட்டத்தையும் நான் மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பிலே எதிர்த்திருந்தேன். இந்த சட்டத்தில் 1985 ஜூன் வரையிலும் அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிப் பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் ஆகஸ்ட், செப்டம்பர் மாதத்திலே தேர்தல் வரும் என்று சொன்னார்கள். ஆனால் இந்தச் சட்டத்தில் கூட இன்னொரு அரசியல் சட்டமோ, அல்லது இன்னொரு நீட்டிப்பு சட்டமோ மீண்டும் கொண்டு வரக் கூடிய இந்த அவசியம் இந்தச் சட்டத்திலே இருக்கிறது என் பதை நான் எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி வரக் கூடிய காலத்தில், ஒரேயடியாக இன்னொரு ஆண்டுக்குக் கூட நீட்டிக்கக் கூடிய சூழ்நிலையை உருவாக்குவார்களோ என்ற அச்சம் எங்களுக்கு எல்லாம் இருக்கிறது. [illegible] கழக அரசு 1977 லேயிருந்து [illegible] சட்டமன்றத் தேர்தல் தான் ஆட்சிப் பொறுப்பில் [illegible] அமையப்பெற்றிருக்கிறது. நடைபெற்றது. இங்கே [illegible] சட்டமன்றம்

அதேபோல் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்று பாராளுமன்ற அமையப்பெறுகிறது. ஆனால் கிராமங்களின் அடிப்படை நலனைப் பாதுகாக்கின்ற ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியத் தேர்தல்கள் எல்லாம் ஒத்திபோடப்பட்டு, ஸ்பெஷல் அதிகாரிகளுடைய கண்காணிப்பிற்கு விடப்பட்டு, இன்றைக்கு ஊராட்சி நிர்வாகம் முழுவதும் சீர்குலைக்கப்பட்டு, கிராமப்புற ஜனநாயகமும் பாழாக்கப்பட்டு, இன்றைக்கு தமிழ்நாட்டில் கிராமப்புற ஜனநாயகத்தை படுகொலை செய்திருக்கின்ற ஒரு அவலநிலையை நாம் பார்க்கிறோம்.

இன்றைக்கு இருக்கக் கூடிய ஊராட்சி ஒன்றியத்தினுடைய ஸ்பெஷல் அதிகாரிகளானாலும் சரி, அங்கே இருக்கின்ற தனி அதிகாரிகளானாலும் சரி, அவர்களால் ஏற்படுத்தப்படுகின்ற நிலைமைகளையெல்லாம் எண்ணிப் பார்க்கின்றபோது, மிக வேதனைத்தரத் தக்க அளவிற்கு மாறியிருக்கின்றன.

இங்கே தன்னிறைவுத் திட்டம் பற்றி ஆளுங்கட்சி தரப்பிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் சிறப்பாக எடுத்துச் சொன்னார்கள். தன்னிறைவுத் திட்டத்திற்காக பணம் ஒதுக்கியது என்பது உண்மை தான். இப்பொழுது குறிப்பாக நீங்கள் தஞ்சை மாவட்டத்தைப் போய்ப் பாருங்கள். தன்னிறைவுத் திட்டத்தில் போடப்பட்ட எந்த ஒரு சாலையும் இப்போது இல்லை. ஏற்கனவே தஞ்சாவூரில் பழுதடைந்த சாலைகள் இருக்கின்றன. தஞ்சைக்கு மேற்கே உள்ள வல்லத்து மண்ணைக் கொண்டுவந்து கொட்டிவிட்டு, அதுவும் போதுமான அளவிற்குக் கூட கொட்டாமல், அதைக் கொட்டி, பணத்தை வாங்கிக் கொண்டு போனார்களே தவிர, போட்ட சாலைகள் முழுவதும் இருக்கிறதா என்று பார்ப்போமேயானால், நிச்சயமாக அந்தச் சாலைகள் மண்ணோடு மண்ணாகக் கலந்து, அந்தச் சாலைகளே இல்லாத அளவிற்கு, சாலைகள் போடப்பட்டதே தெரியாத அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன. அங்கே சாலைகளே இல்லை. போடப்பட்ட கருங்கல் சல்லிச் சாலையைக் கூட பராமரிப்பதற்கு இல்லாமல், அது இருக்கமுடியாத அளவிற்கு போடப்படுகின்றது; ஏதோ அள்ளித் தெளித்தது போல், அதுவும் தண்ணீர் கூட ஊற்றாமல், அதிலே ரோட் ரோலர் கூட உருட்டப்படாமல் போட்டு, அமுக்கி அந்தச் சாலை கூட, மழை பெய்ததும், வயலிலே கரைந்





து, அந்தச் சாலைகள் முழுவதும் பழுதுபட்டிருக்கக் கூடிய சூழ்நிலையில் தன்னிறைத்திட்டத்திற்காக போடப்பட்ட பணங்கள் எல்லாம் இன்றைக்கு எங்கெங்கேயோ போய் விட்டது.

இன்றைக்கு சாலை வசதிகள் இல்லாமல் மிகப் பெரிய அவதிக்கு பொதுமக்கள் உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஊராட்சி மன்ற சாலை என்றும், ஊராட்சி ஒன்றியச் சாலை என்றும், கிராம ரூரல் ஹைவேய்க்குச் சொந்த சாலைகள் என்றும் மூன்று விதமான சாலைகள் இருக்கின்றன.

ஒரு காலத்தில் ஊராட்சி ஒன்றியம் இருந்த காலத்தில், பஸ் விடக்கூடிய சாலைகள் என்று ஹைவேஸ் எடுத்த சாலைகளில் எல்லாம் பஸ் விடமுடியாமல், அந்தச் சாலைகளுக்காக இலட்சக் கணக்கான பணங்கள் செலவு செய்து, அந்தச் சாலைகள் இன்றைக்கு பழுதுபட்டு, பஸ் விடமுடியாத அளவிற்கு இருந்த இடம் தெரியாத அளவிற்கு நிலைமைகள் சீர்கெட்டு இருக்கின்றன.

சாலை வசதிகள் என்பதே இன்றைக்கு கிராமங்களிலே மிகப் பெரிய சிக்கலாக இருக்கின்றன. ஒரு மழை பெய்தாலும்கூட, அந்த ரோட்டிலே மக்கள் நடக்கமுடியாத அளவிற்கு, இன்றைய தினம் சாலைகளுடைய நிலைமை இருக்கிறது என்பதை நான் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

அதேபோன்று மின் விளக்குகள் பற்றி இங்கே பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகளிலே மின் விளக்குகள் இன்றைக்கும் எரியாத ஒரு பொதுவான கதையாகத்தான் இருக்கிறது. ஒரு காலத்திலே ஒரு மினிமம் சார்ஜ் என்று வைத்து லைட் வசதி கொடுக்கப்பட்டது. அந்த லைட்கள் எல்லாம் இன்றைக்கு எரியவில்லை. ஆனால் லைட் எரியவில்லை என்றாலும், அதற்கும் பணம் கொடுக்கவேண்டும் என்ற நிலையிலும், பல்புகள் போடப்பட்டு, மறுதினமே, அல்லது இரண்டு தினங்களிலே ப்யூஸ் போய்விடுகிறது. காரணம் கேட்டால், வேடிக்கையாக பல விதமான கதைகளைச் சொல்கிறார்கள். பணம் கொடுப்பது, ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய மக்கள், அதை நிர்வகிப்பது மின்வாரியம். ஊராட்சி ஒன்றியத்தில் லைட் எரியவில்லையென்று ஊர் நல அலுவலரிடம் சொன்னால், என்னிடம் சொல்லாதீர்கள், நீங்கள் மின்வாரியத்தில் சொல்லுங்கள் என்று

சொல்கிறார்கள். கலெக்டரிடம் போய் கேட்டால், என்னிடம் சொல்லாதீர்கள். நீங்கள் மின் வாரியத்தில் சொல்லுங்கள் என்று சொல்கிறார்கள். மின் வாரியத்திலே கேட்டால் எங்களுக்குப் பணம் கட்டவில்லை என்று சொல்கிறார்கள். நாங்கள் வளர்ச்சி மன்றங்களிலே கேட்டால், பணம் கட்டினாலும், பணம் கட்டாவிட்டாலும் லைட் எரியவேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் லைட் எரியவில்லை. ஆக இப்படி பார்த்தோமேயானாலும் மின் விளக்கு வசதிகள் இல்லாமல் இன்றைக்கு கிராமங்கள் முழுவதும் இருள் சூழ்ந்திருக்கக்கூடிய நிலையில்தான் தஞ்சை மாவட்டம் முழுவதும் இருக்கிறது. இதுதான் தமிழகத்தின் நிலையுங்கூட என்பதை எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச்சொன்னார்கள்.

(பிற்பகல் 1.20.)

அடுத்து சுகாதார வசதியைப் பற்றிச் சொன்னார்கள். தன்னிறைவுத் திட்டத்திலே கழிப்பிட வசதிகள் எல்லாம் இங்கே சிறப்பாகக் கட்டப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது கழிப்பிடங்கள் கட்டப்பட்டிருக்கின்ற இடங்களுக்கு நீங்கள் சென்று அவை சரியாகச் செயல்படுகின்றனவா என்று பாருங்கள். அங்கே இருக்கின்றனவா என்று பாருங்கள். அவை ஒரு வாரத்திற்குள்ளாக உடைந்து நாசமாகி யாரும் பயன்படுத்த முடியாத அளவுக்கு இருக்கின்றன. நான் ஏற்கெனவே இந்த அவையிலே சொல்லியபடி கிராமப்புறங்களில் தண்ணீர் இல்லாத சூழ்நிலையில் கழிப்பிடங்களைக் கட்டுவது பொருந்தாது என்று சொல்லியும் கேட்காமல் இந்த அரசு செய்தது. இன்றைக்கு மோசமான நிலை ஏற்பட்டு பணம்தான் வீணாக்கப்பட்டிருக்கிறது.

வேலைவாய்ப்புத் திட்டங்களுக்கு மத்திய அரசு பணம் ஒதுக்கீடு செய்கிறார்கள். என்.ஆர்.இ.பி. போன்ற பல திட்டங்களைச் சொல்கிறார்கள். ஒவ்வொரு திட்டத்திற்கும் ஒவ்வொரு ஸ்பெஷல் ஆபிசர் போடுகிறார்கள். அவர்கள் வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்று பார்த்து தங்களுடைய இஷ்டப்படி கொடுக்கிறார்கள். எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் சொல்லியதைப்போன்று செய்யாத



வேலைக்கு செய்ததாக கணக்கு எழுதி பணம் எடுத்துக் கொள்கிறார்களே தவிர திட்டத்தினுடைய பலன் மக்களுக்குப் போய்ச் சேரவில்லை. ஆடு மாடு லோன், வண்டி லோன், சைக்கிள் லோன், இட்லி பானை லோன் என்று பலவற்றிற்கு அரசு மானியம் கொடுக்கிறது, அவைகளுக்கு வங்கிகள் கடன்களும் கொடுக்கின்றன. அரசு மானியத்தைப் பெறுவதற்காக அந்த அதிகாரிகள் தனக்கு வேண்டியவர்களைப் பிடித்து சிபாரிசு செய்து கொடுத்துவிட்டு வங்கிகள் கொடுக்கிற பணத்தை டெபாசிட் செய்துவிடக்கூடிய நிலைமை இருக்கிறது. அரசு மானியத்தை பங்கு போட்டுக் கொள்கிறார்கள் என்ற நிலைமை இருக்கிறது. அடுத்து மாட்டுக் கடன். கீழத்தஞ்சையின் மையமாக இருக்கக்கூடிய திருவாரூர் நகரத்தில் ஆயிரக்கணக்கான மாடுகள் வாங்குவதற்கு கடன்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் மாடுகள் இல்லை, இன்றைக்கும் திருச்சியிலிருந்துதான் திருவாரூருக்கு பால் வருகிறது. மாடு வாங்குவதற்காகக் கடன் கொடுக்கப்படுகிறது. மாடு வாங்காமல் அரசு கொடுக்கிற மானியத்தைப் பங்கு போட்டுக் கொள்வது என்ற நிலைமைதான் இருக்கிறது. எனவே விரைவிலே உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை நடத்தவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. பொ. உத்திராபதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் தனி அதிகாரிகளுடைய காலத்தை ஒரு ஆண்டுக்காலத்திற்கு நீடிக்கக்கூடிய சட்டத்தை நாங்கள் ஆரம்பத்திலேயே எதிர்த்தோம். இப்போதும் எதிர்க்கிறோம். 1970 ஆம் ஆண்டு தேர்தல் நடந்தது. 1975 ஆம் ஆண்டு நடக்கவேண்டிய தேர்தல் நடக்கவில்லை, 1980 ஆம் ஆண்டு தேர்தல் நடக்கவேண்டியது, நடக்கவில்லை, 1985 ஆம் ஆண்டு நடத்தப்போகிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம்.

தனி அதிகாரிகள் என்று சொல்கிறபோது அதிகாரிகள் ராஜ்யமாகத்தான் செயல்படுகிறதே தவிர ஜனநாயக முறையில் இருக்கிறமாதிரி அந்த நிர்வாகம் இல்லை. தன்னிறைவுத் திட்டம் ஊரக வளர்ச்சித் திட்டம், வேலைவாய்ப்புத் திட்டம் என்று பல திட்டங்கள் வருகின்றன. அவைகளுக்கான பணம் ஒதுக்கப்படுகிறது. எனக்கு முன்னாலே பேசியவர் பினாமி பற்றி எல்லாம்

மடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தில் சில பிரமுகர்களுக்கு பல லட்ச ரூபாய் பினாமியாக வேலை செய்யாமலே வேலை செய்ததாக மோசடி நடந்துள்ளதாக சொல்லப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் இருந்தால் இப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல் பார்த்துக் கொள்ளமுடியும் என்பதால் தான் நாங்கள் தேர்தலை வற்புறுத்த வேண்டியிருக்கிறது.

கைடம்புகள் ஒரு யூனியனுக்கு 2,000, 3,000 இருக்கின்றன. அவைகளிலே பெரும்பகுதி சும்மா கிடக்கின்றது. கேட்டால் பஞ்சாயத்துக்குப் பணம் இல்லை என்று சொல்கிறார்கள். அதிகாரிகள் இ.ஓ.பி. போன்றவர்கள் வேலை செய்த மாதிரியே பில்போட்டு பாஸ் செய்துவிடுகிறார்கள். கைடம்பு இல்லை, வறட்சி வருகிற நேரத்திலே அந்த கைடம்புகளை வேலை செய்கின்ற முறையிலே ஏற்பாடுகளைச் செய்ய சர்க்கார் நடவடிக்கை மடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முத்துப்பேட்டை, திருத்துறைப்பூண்டி, கோட்டூர் ஆகிய இடங்களில் 100-க்கு மேற்பட்ட மேல்நிலைத் தொட்டிகள் கட்டி அப்படியே இருக்கின்றன. மேல்நிலைத் தொட்டியை கட்டுவது ஒரு காண்டிராக்டர், பைப்பை போடுவது ஒரு காண்டிராக்டர், டாப் வைத்து சுவர் எழுப்புவது ஒரு காண்டிராக்டர். அவர்கள் அவர்கள் வேலையை செய்துவிட்டு பில்லை போட்டு பணத்தை வாங்கிக்கொண்டு போய்விடுகிறார்கள். ஆனால் தண்ணீர் சப்ளை இல்லை. யூனியனிடம் போய் கேட்டால் அது எங்களுக்கு சம்பந்தம் இல்லை. குடிநீர் வாரியத்தை போய் கேட்கவேண்டும் என்று சொல்கிறார்கள். குடிநீர் வாரியத்தை போய் கேட்டால் நாங்கள் அதை தஞ்சாவூருக்கு எழுத வேண்டும் என்று சொல்கிறார்கள். மேல்நிலைத் தொட்டியின் மூலம் அங்குள்ள மக்களுக்கு குடிநீர் வாரியம் மூலமும், யூனியன் மூலமாகவும் தண்ணீர் கிடைக்கவில்லை. இதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

சாலைப் போக்குவரத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியும். தஞ்சை மாவட்டத்தில் போன வெள்ளத்தில் எல்லா சாலைகளும் வீணாக போய்விட்டன. அப்போது மாண்புமிகு முதலமைச்சர்





அவர்கள் கூட எலிகேப்டரில் போய் பார்த்துவிட்டு வந்து தஞ்சை ஜில்லா சொல்லமுடியாத அளவுக்கு சேதம் அடைந்து இருக்கிறது என்று சொன்னார்கள். தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் ஒரு யூனியனுக்கு 50 லட்சம் ரூபாய் செலவு செய்தார்கள். ரோடு இருக்கிறதா? நான் கூட முன்பு சொன்னேன். தஞ்சாவூர் வள்ளத்து மண்ணை அள்ளிக் கொண்டு வந்து சிவப்பு கப்பி போட்டு வைகாசி மாத காற்றில் பறந்து போய்விட்டது என்று நான் ஒரு முறை பேசியிருக்கிறேன். ஒரு ரோடு கூட இப்போது இல்லை. உங்களுக்குத் தெரியும், தேர்தல் காலத்தில் ஓட்டு போட மாட்டோம் என்று நோட்டீஸ் போட்டார்கள். நோட்டீஸ் போடாத கிராமம் ஒரு சில கிராமமே தவிர மற்ற எல்லா கிராமங்களிலும் நோட்டீஸ் போட்டார்கள். ஆனால் வோட்டு போட்டு விட்டார்கள். தங்கள் எதிர்ப்பை இதன் மூலம் தெரிவித்தார்கள். ஆனால் சாலை போக்குவரத்து உண்மையிலேயே பெரும்பகுதி பாதித்து இருக்கிறது. இதை எதிர்காலத்தில் செய்வதற்கு அரசு உறுதியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரத்தைப் பற்றி பல உறுப்பினர்கள் பேசி விட்டார்கள். அதைப்பற்றி நான் அதிகம் சொல்ல தயாராக இல்லை. எங்களுடைய வேண்டுகோள், எரிந்தாலும் சரி, எரியாவிட்டாலும் சரி ஒரு பல்புக்கு 3 ரூபாய் என்று சொல்லி பஞ்சாயத்து பணத்தை எல்லாம் அப்படியே வாரிக்கொண்டு போய்விடுகிறார்கள். பணம் கட்டவில்லை என்றால் ப்யூசை எடுத்து விடுகிறார்கள். அப்போது கிராமம் முழுவதும் இருண்ட சூழ்நிலையில் இருக்கிறது. தயவு செய்து ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் மீட்டர் வைக்க வேண்டும். மீட்டர் வைத்து மீட்டர் எவ்வளவு ஓடுகிறதோ அந்த அடிப்படையில் பணத்தை கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தால் பஞ்சாயத்து பணம் கொஞ்சம் மிச்சப்படும். இல்லை என்றால் ஊராட்சி மன்றத்திற்கு வரும் பணம் அவ்வளவும் மின்சார வாரியத்திற்கு போய் சேர்ந்துவிடும். மின்சாரமும் எரியாமல் ஊராட்சி மன்றத்தினுடைய பணத்தை வாரிக்கொண்டு போய்விடுகிறார்கள். இதை தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வறட்சி வரப்போகிறது. முன்பு வறட்சி வந்து தஞ்சை ஜில்லா முழுவதும் கஷ்டத்தை அனுபவித்தது. குளம் முழுவதும் தூர் எடுக்காமல் மேடு இட்டு போய்விட்டது. குளங்கள் மீன்

வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டு அவர்கள் அதை ஏலம் விட்டு பணத்தை கொண்டு போய் விடுகிறார்கள். ஊராட்சி மன்றங்களுக்கு பணத்தை கட்டவில்லை. ஊராட்சி ஒன்றியத்திற்குப் பணம் இல்லாமல் மீன் வாரியம் குளத்தில் உள்ள மீன்களை பிடித்துக்கொண்டு போய்விடுகிறார்கள். கிராமங்களில் உள்ள குளங்கள் முழுவதும் தூர் எடுக்காமல் மேடு இட்டு போய்விட்டன. கோடை வரும்போது கிராமத்தில் உள்ள ஆடு மாடுகளுக்கு தண்ணீர் இல்லாமல் மனிதர்களுக்கு தண்ணீர் இல்லாமல் போய் விடும் நிலைமை இருக்கிறது. ஆகவே இந்த ஆண்டு ஆகிலும் மீன் வாரியம் எடுக்கக்கூடிய அந்த குளங்களுக்கான பணத்தை ஊராட்சி ஒன்றியங்கள் பெறுவதற்கு வழி செய்து அவர்கள் நல்ல காரியங்கள் செய்வதற்கு முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கழிப்பிடங்கள் கட்டிக் கொடுப்பதாக சொல்கிறார்கள். ஆனால் கட்டி எம்.எல்.ஏ.க்களுக்கே அதுபற்றி தெரியும். ஆனால் அவர்கள் என்ன காரணத்தாலோ சொல்லவில்லை. அவைகள் முழுவதும் நாற்றம் எடுத்துக்கொண்டு இருக்கிறது. என்னுடைய அபிப்பிராயம் அந்தத் திட்டத்தை நீங்கள் தாய்மார்களுக்காக என்று சொன்னாலும் அந்த திட்டத்தை கைவிட்டு அந்தப் பணத்தைச் செலவு செய்யாமல் ஊராட்சிமன்ற அலுவலகமும், கடல் ஓரப் பகுதிகளில் புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டுவதற்கு போன்ற நல்ல காரியங்களுக்கு இந்த பணத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கழிப்பிடங்கள் என்ற பெயரில் கட்டி அதை வீணாக துர்நாற்றம் எடுக்கவைத்து, அதிலிருந்து தண்ணீர் எடுத்து கொட்ட ஆள் இல்லாமல் வீண் விரயம் ஆகிறது. ஆகவே அந்தத் திட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

திருத்துறைப்பூண்டி ஒரு பேரூராட்சியாக இருக்கிறது. அந்த அதிகாரியை 3 வருடமாக என்னால் பார்க்க முடியவில்லை. காரணம் அவர் அங்கே தங்குவதே இல்லை.

(பிற்பகல் 1-30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.





**திரு. பொ. உத்திராபதி:** திருத்துறைப்பூண்டி நகரம் நகரமாக இல்லை; நரகமாகக் காட்சியளிக்கிறது. அங்கே ஒரு பேருந்து நிலையம் இருக்கிறது. அதைச் சுற்றியுள்ள மதில்கள் இடிந்து விட்டன. அதைச் சுற்றி வீடுகள் இருக்கின்றன, அவைகளில் பெண்கள் இருக்கிறார்கள். அதை விரைவில் கட்டித் தர வேண்டும்.

அந்தப் பேரூராட்சி சீர்கெட்டிருக்கிறது. அதிகாரிகளாக வருபவர்கள் அங்கேயே தங்கியிருக்க வேண்டும் என்று செய்ய வேண்டும். தஞ்சாவூரில் இருந்துகொண்டு திருத்துறைப்பூண்டி பேரூராட்சியில் உத்தியோகம் பார்க்கிறார். இரவில் கடைசி பஸ்ஸில் ஊருக்குப் போய்விடுகிறார். மறுநாள் ஒரு மணிக்குத் தான் வருகிறார், 4 மணிக்குப் புறப்பட்டுப் போய்விடுகிறார். அவரால் பேரூராட்சியை எப்படிக் கவனிக்க முடியும். எனவே, இதைக் கறாராகச் செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.

திருத்துறைப்பூண்டி பேரூராட்சி சாலைகளின் நிலைமையைப் பற்றி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் சொல்லியாகி விட்டது. வரவர சீர்கெட்டுத்தான் போய் இருக்கிறது. சாக்கடைத் திட்டத்தைப் பொறுத்தவரையில், திருத்துறைப்பூண்டியில் மழை பெய்தால் தேங்கி நிற்கிறது. ஏனென்றால் அவைகள் சரியாகக் கட்டப்படவில்லை. சிமெண்டை விற்று விட்டிருக்கிறார்கள். முத்துப்பேட்டை பேரூராட்சியைப் பொறுத்தவரையில், அங்கே பணம் இல்லை, ஏழை பேரூராட்சியாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை வரும் பொழுது இதையெல்லாம் பேசலாம். பில்லின்மீது சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

**திரு. பொ. உத்திராபதி:** தலைவரவர்களே. வருமானம் உள்ள பேரூராட்சி, வருமானம் இல்லாத பேரூராட்சி என்றெல்லாம் பார்க்காமல், எல்லாவற்றையும் சமமாகப் பாவித்து, இப்படிப்பட்ட குறைகளை எதிர்காலத்தில் தீர்த்து வைக்க வேண்டுமென்றால், அவை முன்னவரவர்கள் அறிவித்ததைப் போன்று, ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் தேதி குறிப்பிட்டு இந்த அவையிலேயே அறிவிக்கின்ற அளவிற்குச் செய்தால்தான் ஜனநாயகத்தைப்

[திரு. பொ. உக்கிரபதி] [1985 மார்ச், 18

பார்துகாக்க முடியும். எனவே, கிராமப்புற மக்களை எதிர்
காலத்தில் ஏமாற்றாமல் இருக்க இந்த ஆட்சி கண்டிப்பாகத்
தேர்தல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த
நேரத்தில் இப்படிப்பட்ட ஒரு சட்ட முன்வடிவு தேவையில்லை
என்று கூறி அமர்கிறேன்.

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்:** மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, ஆளுநர் உரையிலே நான் கருத்து தெரிவித்த
போது, சட்டமன்றத்தினுடைய இந்தத் தொடரிலேயே ஊராட்சி,
பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சிகளுக்கான தேர்தலுக்கான
திட்டவட்டமான தேதி அறிவிக்கப்பட வேண்டுமென்று
வற்புறுத்திக் கேட்டுக்கொண்டேன். எதிரணியிலேயிருந்த
தலைவர்களும் அதையே வற்புறுத்தினார்கள். நாங்களெல்லாம்
மகிழ்ச்சியடையத்தக்க வகையிலே, அடுத்த நாளே, சபையி
னுடைய முன்னவரவர்கள் ஆகஸ்ட், செப்டம்பரில் இதற்கான
தேர்தல்கள் நடத்தப்பெறும் என்று அவர்கள் உறுதியளித்திருப்
பதை நாங்கள் மனமார வரவேற்கின்றோம்.

அந்த அறிவிப்பு இல்லாமல், இந்தத் தனி அதிகாரிகளினுடைய
காலகட்டத்தை நீட்டித்துத் தர வேண்டுமென்ற இந்தத் திருத்தப்
பிரேரணை இந்த அவை முன்னால் வைக்கப்பட்டிருக்குமே
யானால், இந்த அவையினுடைய உணர்வே வேறுபட்டதாக இருந்
திருக்கும். அந்த அறிவிப்பு இந்த விவாதத்தின் தன்மையை
மாற்றியமைத்திருக்கிறது.

நம்முடைய நாட்டின் அரசியல் சாசனத்திலேகூட, தேர்ந்
தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்
றத்தின் அதன் உறுப்பினர்களும் இருந்து, அதன் அடிப்படை
யிலே அமைக்கப்படக்கூடிய அமைச்சர்களேகூட ஐந்தாண்டுக்
காலத்திற்குத்தான் பதவி வகிக்க முடியும் என்ற விதி இருக்கிறது.
ஆனால், இன்றைக்கு நாமே நியமித்த தனி அதிகாரிகளுக்கு,
எட்டாண்டுக் காலத்திற்கும் மேலாக பதவியை நீட்டித்துக்
கொடுப்பதற்கு நாம் இங்கே திருத்தங்களைக் கொண்டு வருகி
றோம் என்று சொன்னால், நாம் நம்முடைய அரசியல் சாசனத்தி
னுடைய உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு, கடந்த காலத்தில் செய
லாற்ற, ஏதேதோ காரணங்களினாலே நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கி
றோம் என்பதையே அது காட்டுகின்றது. இனியொரு முறை
இந்தத் தனி அதிகாரிகளின் கால கட்டத்திற்கு நீட்டிப்பு கேட்டு



1985 மார்ச், 18] (திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்)

இந்தச் சபை முன்னால் ஒரு திருத்தத்தைக் கொண்டுவர முடியாத
அளவிற்கு விரைவாக தேர்தலுக்கு ஏற்பாடுகள் செய்யப்படு
மென்று நான் நம்புகிறேன்.

முன்னவரவர்கள் உறுதிமொழி அளித்துப் பேசும்பொழுது,
இதுநாள் வரையிலேயும், இப்படித் தேர்தல்கள் நடத்தப்படாமல்
இருப்பதற்குத் தடங்கலாக இருந்த காரண காரியங்களையெல்
லாம் அப்புறப்படுத்துவதற்கு ஒரு திருத்தத்தையும் கொண்டு
வருகிறேன் என்று உறுதிமொழி வழங்கியிருக்கிறார்கள்.
அதையும் அவர்கள் விரைவிலேயே அளிக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, கலைக்கப்பட்ட இந்த இடைக்காலத்தில் நகரங்
களிலேயும், கிராமங்களிலேயும், பேரூராட்சிகளிலேயும் மக்கள்
தொகைப் பெருக்கம் நிகழ்ந்திருக்கிறது, அதன் அடிப்படையிலே
பிரச்னைகள் அதிகமாகியிருக்கின்றன. ஐந்தாண்டுகளுக்கு ஒரு
முறை வரியை அதிகரிக்க வேண்டுமென்ற கொள்கையின் அடிப்
படையில் வீட்டு வரி போன்றவைகளை மிக அதிகமாக பல பகுதி
களிலே அதிகரித்திருக்கிறார்கள். அது, பொதுமக்களிடத்திலே
ஒரு கிலேசத்தை உண்டாக்கியிருக்கிறது. எனவே, இப்பொழுது
அறிவிக்கப்பட்டிருக்கின்ற இந்தத் தேர்தல்கள் நடந்து முடிந்து
புதியவர்கள் பொறுப்புக்கு வந்தால், அவர்கள் இப்படிப்பட்ட வரி
விகிதத்தை மக்களிடையே ஏற்படுத்தினால் மக்களுடைய கசப்
புணர்ச்சியைத்தான் அவர்கள் எதிர்நோக்க வேண்டியிருக்கும்.
ஆகவே, இந்தத் தேர்தல்களை நடத்துவதற்கு முன்னால், அபரி
மிதமான வரிகளை வசூல் செய்யும் நிலைமைகளையெல்லாம்
தள்ளி வைத்தால் அது சுமுகமான சூழ்நிலைகளை ஏற்படுத்தும்
என்று நான் கருதுகிறேன்.

நேரம் மிகக் குறைவாக இருக்கக்கூடியதன் காரணத்தால்
தான் மிகச் சுருக்கமாக ஒரே ஒரு கருத்தை மட்டும் கோடிட்டுக்
காட்ட விரும்புகிறேன். குடிநீரைப் பற்றித்தான் எல்லா பிரதி
நிதிகளும் இங்கே மிக ஆழமாக வற்புறுத்திப் பேசினார்கள். நாள்
எல்லாம் கடல் நீரிலே மிதந்து கொண்டு இருக்கக்கூடிய மீன
வர்கள் கரைக்கு வரும்போது அவர்கள் குடிக்கத் தண்ணீர்
இல்லாமல் அவர்கள் படக்கூடிய வேதனையான நிகழ்ச்சி
சென்னை நகரத்திலே கூட இருக்கின்றது. குறிப்பாக என்னு
டைய தொகுதியிலே உள்ள, உலகத்திலேயே புகழ் பெற்ற
மெரினா கடற்கரையை அடுத்து இருக்கக்கூடிய அயோத்தியா

குப்பம், நடுக்குப்பம் போன்ற பகுதிகளில் வாழக்கூடிய மீனவர்கள் குடிநீருக்கு மிகுந்த சிரமப்படுகிறார்கள். எனவே இது குறித்து ஒரு யோசனையை அரசுக்கு நான் சொல்ல விரும்புகிறேன். வேறு வகையிலே இந்த குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க முடியாவிட்டாலும் கடல் நீரைக் குடிநீராக மாற்றக்கூடிய திட்டம் பற்றி அரசு ஆழமாகச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கடல் நீரின் உவர்ப்பை நீக்கி அதனைக் குடிநீராக மாற்றுவது என்பது பல கோடிக்கணக்கான ரூபாய் செலவிட்டுத்தான் செய்ய முடியும் என்ற எண்ணம் பலருக்கும் இருந்து வருகின்றது.

ஆனால் அண்மையில் நம்முடைய இந்திய நடுவண் அரசு இதற்கென ஒரு திட்டத்தை வகுத்து சில பகுதிகளுக்குச் சென்று கடல் நீரிலேயிருந்து குடிநீரைத் தயாரித்து ஆங்காங்கே இருக்கக்கூடிய பகுதிகளுக்கு வழங்க முடியும் என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். நான்கு மாதங்களுக்கு முன்னாலே நம்முடைய மாநிலத்தில் இராமேஸ்வரம் போன்ற பகுதிகளுக்கு வந்து அவர்கள் அதை நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட திட்டங்களின் மூலமாகவாவது கடுமையான நீர்ப் பஞ்சம் இருக்கக்கூடிய கடலோரப் பகுதிகளில் குடிநீர் வழங்குவதற்குரிய தன்மை பற்றி அரசு ஆராயவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்தத் தனி அதிகாரிகளின் காலகட்டத்தை நீட்டித்துக் கொடுக்கக் கூடிய தன்மை இத்தோடு முடிவடையவேண்டும் என்றும், இதுவே கடைசியாக இருக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

* **திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவையினுடைய தலைவர் அவர்களே, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் தனி அதிகாரிகள் நியமனத்தை இன்னும் ஓராண்டு நீட்டிக்கின்ற இந்தத் திருத்த மசோதாவிற்கு அகில இந்திய பார்வர்டு ப்ளாக் கட்சியின் சார்பிலே எதிர்ப்பு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தலைவர்கள் இல்லாததன் காரணத்தால் சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற நம்மை மக்கள் எந்த முறையில் அணுகிக்கொண்டிருக்கிறார்கள் என்றும் எந்த அளவிலே மிகக் குறைவாக நம்மை தரக் குறைவாக நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றியும் எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எதிர்க்கட்சி வரிசையிலே இருந்து





சொல்லியிருக்கிறார்கள். இதைப்போன்ற நிலை நீடிக்கக் கூடாது என்பதை வலியுறுத்தி இப்படிப்பட்ட தலைவர்கள் வந்து அங்கே அவர்களுடைய பொறுப்புக்களை கவனிக்காத நிலைமை இருப்பதால்தான் நம்மை மக்கள் அங்கே அந்த அளவுக்கு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மேலும் அவர்களுடைய குறைகள் நீடித்துக்கொண்டே இருக்கின்றன. இந்தக் குறைகள் நீடிக்க வேண்டாம் என்ற ஒரு கருத்தைத்தான் நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

தன்னிறைவுத் திட்டம் போன்றவை எல்லாம் இந்தக் காலகட்டத்திலே வந்திருக்கின்றன. மக்களுடைய குறைகளைப் போக்க திட்டங்கள் இவ்வாறு தீட்டப்பட்டு வருகின்றன என்று சொன்னார்கள். தன்னிறைவுத் திட்டம் என்பது மிக நல்ல திட்டமாக இருந்தது. பல பகுதிகளில் அதனுடைய செயல் இருப்பதன் காரணத்தால் நன்மைகள் விளைந்திருந்தாலும், சில பகுதிகளில் அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகளுக்கும், அவர்களைச் சேர்ந்தவர்களுக்கும் மட்டும் நன்மையும், தன்னிறைவும் ஏற்படுகின்ற நிலையில் காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறார்களே தவிர எந்தத் தொகுதியில் எந்தக் கிராமத்தில் தன்னிறைவு ஏற்பட்டிருக்கின்றது? எனவே நாம் மிகக் கூர்ந்து கவனிக்க வேண்டிய காலகட்டத்திலே இருக்கிறோம். அந்த அளவுக்கு வளர்ச்சிப் பணிகளும் திட்டங்களும் செயல்படுகின்ற நிலைமைகள் ஆங்காங்கே இருக்கின்றன. எனவே தேர்தல் ஒரு காலத்தில் நிச்சயமாக நடக்கும் என்ற நிலைமை இருந்தால், உள்ளாட்சி மன்றங்களுக்கு ஜனநாயக ரீதியாக வாக்கு கேட்கச் செல்கின்ற போது மக்கள் நம்மை எந்த அளவுக்கு நடத்துவார்கள் என்பதை மனதில் கொண்டு உள்ளாட்சி மன்றங்களுக்கான உறுப்பினர்கள் எண்ணிச் செயல்படுவதற்கு வாய்ப்பு இருக்கும். இங்கே அவை முன்னவர் அவர்கள் ஆகஸ்ட் மாதத்திலே தேர்தலை நடத்துவதாகச் சொன்னார்கள். அதைக் கேள்வியுற்று நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியிலே இருக்கிறோம். அப்பேர்ப்பட்ட ஒரு நிலை வரவேண்டுமென்பதைத்தான் நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1.40.)

மக்களிடத்திலே இருக்கக்கூடிய பல பிரச்னைகளிலே முக்கியமான ஒன்றாக இருப்பது குடிநீர்த் திட்டம். அத்திட்டத்தை எடுத்துக்கொண்டால், அடிப்படைகள் இருக்கின்றன, மேநிலைத்

தொட்டிகள் இருக்கின்றன. ஆனால் பராமரிப்புக் குறைவாக இருக்கிற காரணத்தாலே, குடிநீர் கிடைக்கவில்லை. மதிப்பிற்குரிய ஆளுங்கட்சி வரிசையிலே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் கூட அந்தக் குறைகளைச் சொன்னார்கள். பராமரிப்பு இல்லாத நிலையிலே குடிநீர்த் திட்டங்கள் நிறைவேறாத நிலையிருக்கிறது. அக்குறையை நிச்சயமாகக் களைய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நேரத்திலேயும் மதிப்பிற்குரிய மாண்புமிகு முதல்வர் தொகுதியிலே போர்க்கால நடவடிக்கை அடிப்படையிலே அங்கே குடிநீர்த் திட்டம், மேநிலைத் தொட்டிகள் அமைக்கப்பட்டு, மிகச் சிறப்பாகச் செயல்பட ஆரம்பித்திருக்கிறது என்பதை நாங்கள் பார்க்கிறோம். என்னுடைய தொகுதிக்கும் கருணை பார்வை விழவேண்டுமென்று கேட்டு, ஆண்டிப்பட்டிக்குப் பிறகே இருக்கிற உசிலம்பட்டி தொகுதிக்கும் குடிநீர் தரக்கூடிய அளவுக்கு அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் சுகாதாரத்தைப் பொறுத்தவரையிலே கழிவறைகள் மிக முக்கிய தேவையாக இருக்கின்றன; பல இடங்களிலே கட்டப்பட்டிருக்கின்றன, பல இடங்களிலே கட்டப்பட திட்டங்கள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். குறிப்பாக, தாய்மார்கள், மானக் குறைவான நிலைக்கு ஆட்படுகிறார்கள். எனவே, தாய்மார்களின் பெரும்பான்மையான ஆதரவைப் பெற்று இங்கே ஆட்சிக்கு வந்திருக்கிற அரசு — தங்களுக்கு முழு ஆதரவைக் கொடுத்த தாய்மார்களுக்கு ஆதரவு தருகிற அரசு என்று ஆளுநர் உரையிலே சொல்லியிருக்கிறார்கள்—கழிவறை பிரச்சினையில் கவனம் செலுத்தும் என்றும் சொல்லியிருக்கிறது. அது சொன்ன அளவிலே இல்லாமல், செயல்வடிவத்திலே இருக்க வேண்டுமென் பதை வலியுறுத்தி, இந்தச் சட்ட முன்வடிவை நான் எதிர்த்து, இந்த நீடிப்பு இன்னும் இருக்கக்கூடாது என்று கூறி முடிக்கிறேன், ஜெய்ஹிந்த்.

*திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத் தேர்தல்களை இன்னும் ஓராண்டுக் காலத்திற்கு ஒத்தி வைக்க வேண்டுமென்று ஊராட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த இந்த மசோதாவிற்கு





மாண்புமிகு திரு. பழனிமுத்து கொடுத்திருக்கக்கூடிய திருத் தத்தை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இன்றைக்கு நமது நாட்டில் குடியரசு ஜனநாயகத்தை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஜனநாயகத்திலே 5 ஆண்டுகளுக் கொருமுறை பாராளுமன்றம், சட்டமன்றம், ஊராட்சி ஒன்றியம், ஊராட்சி தேர்தல்கள் நடைபெற வேண்டுமென்று இன்றைய நியதியிலே நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அந்த நியதியின் அடிப்படையிலே ஊராட்சி, ஊராட்சி ஒன்றியத் தேர்தல்கள் நடைபெற்று 15 ஆண்டுகள் முடிவு பெற்றிருக்கின்றன என்பதை நாம் உணர்வோம். 1977-க்குப் பிறகு ஊராட்சி ஒன்றியங் களுக்கும் தேர்தல் நடைபெறவில்லை. ஜனநாயகத்திலே, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் கிராமாந்திரத்திற்கு இருக்கிற அடிப்படை அத்தியாவசிய திட்டங்களை நிறைவேற்றுவதற்காக அமைந்திருக்கிற அமைப்பாகும் என்பதை நாம் ஏற்றுக்கொண் டிருக்கிறோம்.

அந்த அடிப்படையிலே பார்த்தால், இன்றைக்கு ஊராட்சிகள் இல்லை, ஊராட்சி ஒன்றியங்கள் இல்லை. கிராமந் திரங்களிலே அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய நிர்வாகப் பொறுப்பு மக்கள் கையிலே இல்லை. இன்றைக்கு நிர்வாகங்கள் எல்லாம் அதிகாரிகள் பொறுப்பிலே நடைபெற்று வருகின்றன. ஜனநாயகத்திலே அதிகாரிகளும் பொதுமக்களும் இணைந்து நடப்பதுதான் அரசியலமைப்புச் சட்டத்திலே இப்படிப்பட்ட அமைப்புகளுக்கு உள்ள ஒரு உரிமையாகும். அதையெல்லாம் நாம் கவனத்திலே கொண்டு பஞ்சாயத்துக்கும், ஊராட்சி ஒன்றியத்திற்கும் தேர்தல்கள் நடத்துவதுதான் இன் றைக்குச் சரியான முறையாகும் என்பதை அரசினுடைய கவனத் திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஏனென்றால், அண்மை யிலே நடைபெற்ற தேர்தல்களிலே, ஆளுங்கட்சியும், அதோடு இணைந்த தோழமைக் கட்சியாகிய நாங்களும் தேர்தல்களிலே போட்டியிட்டபொழுது, நாங்கள் எல்லாம், கிராமங்களிலே வாக் காளர்களைச் சந்தித்தபொழுது, கேட்டார்கள், சட்டமன்றத்திற்கு 5 ஆண்டுகளுக்கொருமுறை தேர்தல் வருகிறது, ஏன், இரண்டு மூன்று ஆண்டுகளுக்கொருமுறை தேர்தல் வருகிறது. இதற்கு மட்டும் ஏன் 15 ஆண்டுகளாகத் தேர்தல் வரவில்லை என்று கேட் டார்கள். இல்லை, புரட்சித் தலைவர் நிச்சயமாகத் தேர்தலை நடத்துவதாக உறுதி கொடுத்திருக்கிறார்கள்; அவர்கள் உடல்

நலம் பெற்று உறுதியாக வந்து ஆட்சிப் பொறுப்பிலே முதலமைச்சராக இருப்பார்கள். விரைவில் ஊராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தேர்தல் நடக்கும் என்று வாக்கு கொடுத்து இருக்கிறோம். எங்களுடன் சேர்ந்து ஆளும் கட்சி நண்பர்களும் வாக்கு கொடுத்திருக்கிறார்கள்.

ஆகவே உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல்கள் நடைபெறாத காரணத்தால் கிராமப்புறங்களில் பல பிரச்னைகள் தோன்றி இருக்கின்றன. ஒரு கிராமப் பஞ்சாயத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கிற நிர்வாகம் குடிதண்ணீர், சுகாதார வசதி, வைத்திய வசதி, கிராமப்புற சாலைகள் வசதி, மின்சார வசதி போன்ற அத்தியாவசியமான வசதிகளை அந்த கிராம நிர்வாகம் செய்து வரும். அதற்காக அந்த கிராமப் பஞ்சாயத்து அமைப்பு இருக்கிறது. அந்த அமைப்புகள் சேர்ந்து ஊராட்சி ஒன்றியங்களாக இணைந்து அந்த நிர்வாகம் நடந்து வருவதை நாம் எல்லோரும் அறிவோம். அப்படிப்பட்ட அமைப்புகளுக்கு 15 ஆண்டுகளுக்கு மேல் தேர்தல் நடக்காமல் தனி அதிகாரிகளின் நிர்வாகத்தில் நடந்து வருகிறதென்பது சிறப்பானதாக இல்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இன்றைக்குப் பல பிரச்னைகள் கிராமப்புறங்களில் தோன்றியிருப்பதற்கு காரணம் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு இல்லாததுதான் காரணம.

இன்றைக்கு சத்துணவுத் திட்டம் கூட கிராமப்புறங்களில் நடைபெறுகிறது என்றால் அதிலேயும் முறைகேடுகள் வந்திருக்கின்றன. கிராமப்புறங்களில் அபிவிருத்தித் திட்டங்களின் பணிகளில் ஒழுங்கு இல்லை. அங்கே தெரு விளக்குகள் எரியவில்லை என்றால் யாரிடம் போய் சொல்வது? இன்றைக்கு கிராம சேவக்குகளும், ஆணையாளர்களும், ஓவர்சீர்களும், என்ஜினியர்களும்தான் கிராம நிர்வாகத்தை நடத்துபவர்களாக இருக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இருந்தால் திட்டப்பணிகளை எப்படி செய்வதென்றும், எந்த எந்த வேலைகளுக்கு முதலிடம் கொடுப்பது என்றும், மற்ற முக்கியமான பிரச்சினைகளையும் அந்த அமைப்பில் இருப்பவர்கள் தீர்மானிப்பார்கள். ஆனால் இன்றைக்கு அந்த ஒன்றியங்களில் இருக்கிற ஆணையாளர்களும், டிவிஷனல் பஞ்சாயத்து அதிகாரிகளும் யூனியன் என்ஜினியர்களும் மற்ற அதிகாரிகளும் தீர்மானிக்கிறார்கள்.





ஒரு பஞ்சாயத்தில் 4, 5 கிராமங்கள் இருக்கும். ஒரு கம்யூனிட்டி வெல் அமைக்க வேண்டுமென்றால் அந்த நான்கைந்து கிராமங்களுக்கு பொதுவான இடமாக தேர்வு செய்து அமைக்க வேண்டியது இந்த அதிகாரிகளுக்கு இருக்கிற பொறுப்பு. அவர்கள் ஏதோ ஒரு இடத்தில் அமைத்து விடுகிறார்கள். பஞ்சாயத்து மன்றங்கள் இருந்தால் தலைவரும், அங்கத்தினர்களும் பரிசீலித்து அந்தக் கிணற்றை எந்த இடத்தில் அமைப்பது என்பதை சரியாக தீர்மானிப்பார்கள். அதைப்போல டானிடா என்ற திட்டத்தைப் பற்றி உங்களுக்கு நன்றாக தெரியும். வெளிநாட்டிலிருந்து உதவி செய்கிறார்கள். முழு தொகையும் கொடுக்கிறார்கள். அது பிரசவ விடுதிக்காக கட்டிடம் கட்டுகிற திட்டம். அந்தத் திட்டத்தில் கட்டிடம் கட்டுவதற்கு அந்தப் பஞ்சாயத்திலே நான்கைந்து கிராமங்களுக்கு ஒரு பிரசவ விடுதி என்ற முறையில் ஏதோ இடத்தை தேர்வு செய்து தேவையில்லாத இடத்தில் கட்டிடத்தை கட்டி விடுகிறார்கள். பொதுமக்களுடைய தேவையை தீர்மானிக்க வேண்டியவர்கள் அந்தப் பகுதி கிராம மக்களே தவிர அதிகாரிகள் அல்ல. ஆகவே இதுபோன்ற முடிவுகள் எல்லாம் முறையாக எடுக்கப்படுவதில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அரசாங்கத்திடம் பல பிரத்யேக நிதிகள் இருக்கின்றன. என்.ஆர்.இ.பி., ஐ.ஆர்.டி.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. போன்ற திட்டங்கள் மூலமாக பிரத்யேக நிதிகளை அரசாங்கம் ஒதுக்கிக் கொடுக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் ரூரல் டெவலப்பெண்ட் திட்டத்தின் மூலமாக இன்றைக்கு 'ஃபேமின் ரிலீப்' என்றும் 'டிரவுட் ரிலீப்' என்றும், 'ப்ளாட் அபெக்டட் புரொக்ராம்ஸ்' என்றும் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒதுக்கிக் கொடுக்கிறார்கள். நானெல்லாம் முன்பு ஒன்றியத்தில் தலைவராக இருந்தவன். அன்றைக்கு ஆர்.எம்.பி. என்ற ஒரு திட்டத்தில் ஒரு ஒன்றியத்திற்கு ஒரு லட்ச ரூபாய் பிரத்யேக நிதியாக பெறுவதே மிகவும் கஷ்டமாக இருக்கும். ஏதோ பலவிதங்களில் தேர்ந்தெடுத்து ஒரு ஒன்றியத்திற்கு கொடுப்பார்கள். அந்தப் பணத்தை செலவு செய்து பல திட்டங்களை நாங்கள் நிறைவேற்றி இருக்கிறோம். இன்றைக்கு அந்த நிலை இல்லாமல் பல லட்சக்கணக்கான ரூபாய் ஒன்றியத்திற்கு கிடைக்கிறது. ஏராளமான பணம் வருகிறது. இருந்தும் திட்டங்கள் சரிவர நிறைவேறவில்லை.

[திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்] [1985 மார்ச், 18

குடிதண்ணீர் பஞ்சம் இருக்கிறதென்றால் அதற்குக் காரணம் என்ன? அந்தப் பணமெல்லாம் எங்கே போகிறது? குடிதண்ணீர் வசதிக்காக மத்திய அரசாங்கம் ஏராளமான பணத்தைக் கொடுக்கிறார்கள்.

(பிற்பகல் 1-50)

மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராசு அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். குடிநீர் வழங்குவதற்காக மாநில அரசாங்கம் எவ்வளவு திட்டங்களைத் தீட்டினாலும் மத்திய அரசு குறைந்த அளவு நிதியைத்தான் கொடுப்பதாகச் சொன்னார்கள். குடிநீருக்காக எவ்வளவு கேட்டாலும், மத்திய சர்க்கார் அதைக் கொடுப்பதிலே எத்தகைய இடையூறும் இருப்பதாகத் தெரியவில்லை; ஏராளமாகக் கொடுக்கிறார்கள். அது நல்ல முறையில் பொதுமக்களுக்குப் போய்ச் சேரவேண்டும்; மக்களுக்கு அதன் பலன் கிடைக்க வேண்டும். ஏராளமான திட்டங்களைப் போடுகிறோம்; ஏராளமாகச் செலவிடுகிறோம். அந்தத் திட்டங்களின் பயன் சாதாரண மக்களுக்கு முறையாகப் போகிறதா? அந்தச் சூழ்நிலை இருக்கிறதா என்பதை சரிவர கண்காணிக்க ஊராட்சி மன்றங்கள் அவசியம் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியாகிய மொரப்பூரில் சிட்டிலிங்கி என்ற பஞ்சாயத்தில் 16 கிராமங்கள் இருக்கின்றன. மிகப் பெரிய அளவில் இருப்பதால் அதை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று 1970-ல் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். அதைப்போன்று பட்டுகோணாம்பட்டியில் 14 கிராமங்கள் இருக்கின்றன. அதையும் இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள். இந்த இரண்டு பஞ்சாயத்துக்களும் மலைவாழ் மக்கள் வாழும் பகுதி. சுமார் 14 ஆண்டுகளுக்கு முன்னால் போட்ட தீர்மானம் நிறைவேற்றப்படாமல் எங்கோ ஒரு மூலையில் முடங்கிக் கிடக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இருந்தால் நிச்சயமாக இந்த நிலை ஏற்பட்டிருக்காது. மலைவாழ் மக்களுக்காக இலட்சக்கணக்கான ரூபாயைச் செலவழிக்கிறார்கள். முறையாக அந்த மக்களுக்கு அது போய்ச் சேருகிறதா என்று பார்க்க ஆள் இல்லை. போடுகின்ற திட்டங்கள், பயன்கள் முறையாக மக்களுக்குப் போய்ச் சேரவேண்டும்.



1985 மார்ச், 18] [திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்]

அதற்கு உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும்; இப்படிப்பட்ட பெரிய பஞ்சாயத்துக்களை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர்ப் பிரச்சினை இன்றைக்கு பெரிய பிரச்சனையாக இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர், முதலமைச்சர், தலைமைச் செயலாளர் ஆகியோரை அணுகி ஒரு மெமோராண்டம் கொடுத்திருக்கிறேன். நான் நேற்றையதினம் கூட பல கிராமங்களுக்குச் சென்றிருந்தேன். போன இடங்களில் எல்லாம் தண்ணீர், தண்ணீர் என்று கேட்கிறார்கள். ஓவர் டாங்க் இருக்கிறது. ஆனால் தண்ணீர் இல்லை. ஆறு மாதமாகத் தண்ணீர் இல்லை. இப்படி பல இடங்களில் இருக்கிறது. கிணறை ஆழப்படுத்த வேண்டுமென்றால் காண்ட்ராக்டர் வேலை செய்யவில்லை. என்னுடைய தொகுதியில் நலமுட்லஹள்ளி என்ற கிராமத்தில் 6 மாதமாக தண்ணீர் இல்லை; காண்ட்ராக்டர் வேலை செய்யவில்லை.

அது மட்டுமல்ல. மொரப்பூர் ஒன்றியத்தில் 84 கைப்பம்புகள் வேலை செய்யவில்லை. அதைப்போன்று பாப்புரெட்டிபட்டியில் ஏறத்தாழ 52 கைப்பம்புகள் வேலை செய்யவில்லை. அரசாங்கம் இந்தக் கணக்கை அண்மையில் எடுத்திருக்கிறது. குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அவர்களைக் கேட்டால் பழுதுபார்க்கும் இயந்திரம் சரியாக இல்லை, தேவையான உபகரணங்கள் இல்லை என்று சொல்கிறார்கள். ஏதோ ஒன்றிரண்டைச் செய்கிறார்கள், மற்றவற்றை விட்டுவிடுகிறார்கள். கிட்டத்தட்ட மூன்றுக்கு ஒன்று என்ற அளவில் செய்கிறார்கள். அப்படிச் செய்தாலும் ஒரு மணி நேரம் தண்ணீர் வருகிறது, மீண்டும் நின்று விடுகிறது. கிராம மக்கள் ஒரு மைல், இரண்டு மைல் தூரம் போய் தண்ணீர் கொண்டு வருகிறார்கள். அந்த அளவுக்கு வறட்சியாக இருக்கிறது. இதை எல்லாம் அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

இன்னொரு குறை. ஏரிகளை கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு ஒப்படைத்திருக்கிறார்கள். ஏரிகளில் 'பிளான்டேஷன்' போடும் திட்டம் அரசாங்கத்திடம் இருக்கிறது. காட்டு இலாகா மூலம் அதைச் செய்கிறார்கள். அப்படிச் செய்யும்போது பஞ்சாயத்து ஒப்புதல் கொடுக்க வேண்டும். பஞ்சாயத்து ஒப்புதல் கொடுக்கும்போது வருமானத்தில் பாதி பஞ்சாயத்துக்கு, பாதி காட்டு இலாகாவுக்கு என்ற நிபந்தனையின் பேரில் பிளான்டேஷன்

போட ஒப்புதல் கொடுக்கிறார்கள். ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு காட்டு இலாகாவே வருமானம் முழுவதையும் எடுத்துக்கொள்கிறது; பஞ்சாயத்துக்களுக்கு ஒன்றும் கொடுப்பதில்லை. பஞ்சாயத்துக்களுக்கு ஏன் கொடுக்கவில்லை என்று கேட்க ஆணையாளர் தகுந்த நடவடிக்கை எடுப்பதில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பஞ்சாயத்தில் இருந்தால் சம்பந்தப்பட்டவர்களை அணுகி, கேட்பார்கள்; வரவேண்டிய பணம் ஒழுங்காக வந்து சேரும். கேட்க ஆள் இல்லாததால் இப்போது பணம் கிடைக்கவில்லை.

நான் ஊராட்சி ஒன்றியத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, மூன்று முறை ஒன்றியத்தில் இருந்திருக்கிறேன். நாங்கள் ஒன்றியத்திலிருந்து ஒதுங்கி வரும்போது 8 இலட்சம் ரூபாயை பொது நிதியில் வைத்திருந்தோம். இப்போது பணம் இல்லை. பொதுக் காரியங்கள் எதற்கும் பணம் இல்லை. பொதுக்காரியங்களைக் கவனிப்பாரும் இல்லை. ஏன் என்று கேட்டால் தெரு விளக்குகள் எரிவதற்கான பணத்தை, அதனுடைய வரியை ஒன்றியம் செலுத்தவில்லை என்று சொன்னார்கள். நான் ஒன்றிய ஆணையாளரைச் சந்தித்து என் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தவில்லை என்று கேட்டால், அவர்கள் தேடிப்பார்த்து, இவரைப் பார்த்து, அவரைப் பார்த்து, 10 நாளைக்குப் பிறகு, அந்தப் பணத்தைக் கட்டி, மறுபடியும் ரீ-கனெக்ஷன் வாங்கினார்கள். இப்படிப்பட்ட அவல நிலைமைகள் எல்லாம் பஞ்சாயத்துக்களிலே இருக்கின்றது. அப்போது நான் இருந்தபோது 8 லட்சம் வைத்திருந்தோம். ஆனால் இன்றைக்கு பஞ்சாயத்திலே வரி செலுத்தக்கூட நிதி இல்லாமல் ஒன்றியங்கள் இருக்கக்கூடிய அவல நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. ஏன் அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இன்றைக்கு அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நிர்வாகத்திலே பல தவறுகளும், சீர்கேடுகளும் ஏற்பட்டு இருக்கின்றன. இதையெல்லாம் திருத்தி நிர்வாகத்திலே கவனம் செலுத்த வேண்டும். புரட்சித் தலைவர் ஆட்சியிலே இவைகள் எல்லாம் நன்றாக இருந்தால்தான் பொதுமக்களுக்கு நன்மை ஏற்படும். பொதுமக்களும் எப்படி நமக்கு நல்ல ஆதரவை நம் மீது நம்பிக்கையை வைத்திருக்கிறார்களோ, அந்த நம்பிக்கையை வீணாக்காமல், இந்தத் தேர்தலை நடத்த வேண்டும் என்று நண்பர் பழனிமுத்து அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை வலியுறுத்தி அமைகிறேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இந்த அவையினுடைய விவாதத்திற்கு வைத்து நிறைவேற்றப்பட்ட நிலையிலேயும் நிறைவேற்றப்படுகின்ற நிலையிலேயும் உள்ளாட்சி மன்றங்களுடைய தனி அதிகாரிகள் நியமனத்தைப் பற்றிச் சொன்னார்கள். இந்த உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடைபெற வேண்டியதனுடைய இன்றியமையாத் தன்மைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். நேற்று முன்தினம் ஆளுநர் உரைக்கு பதில் உரை நிகழ்த்துகின்ற நேரத்திலே கூட இதிலே இந்த அரசுக்கு மாறுபட்ட கருத்து இல்லை என்பதையும் நான் எடுத்துச் சொன்னேன்.

ஆகவே உள்ளாட்சி மன்றங்களுக்கு எல்லாம் விரைவிலே தேர்தல் நடைபெறவேண்டிய இன்றியமையாமையை நாம் உணர்கிறோம், என்பது மட்டுமல்லாமல், இந்தத் தேர்தல் நடைபெறாமல் இருப்பதால், என்னென்ன கேடுகள், குறைபாடுகள் நிகழ்கின்றன, அவற்றின் மூலமாக பொதுமக்களுடைய எதிர்பார்க்கிற தன்மைகள் எப்படி நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன என்பதற்கான காரண காரிய விளக்கங்களை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அனுபவத்தை வைத்தும், ஆங்காங்கு இருக்கிற நிலைமைகளை ஒட்டியும் இங்கே தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். ஆகவே தேர்தல்கள் விரைவிலே நடைபெற வேண்டும் என்பதும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கையிலே, உள்ளாட்சி மன்றங்கள் எல்லாம் ஒப்படைக்கப்பட்டால்தான், அதிகாரிகளோடு இணைந்து நின்றும், அதிகாரிகளுடைய ஒத்துழைப்போடும், பணிகள் மிகச் சிறப்பாக நடைபெற முடியும், நடைபெற வேண்டும் என்பதையும், முழு அதிகாரத்தையும், முழு நிர்வாக பரிபாலனத்தையும் அதிகாரிகள் கையிலே முழுக்க முழுக்க ஒப்படைத்துவிடுவதன் மூலமாக ஏற்படுகின்ற கேடுகளையும் குறைபாடுகளையும் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினார்கள். அவற்றிலே மாறுபட்ட கருத்து யாருக்கும் இருக்க இயலாது. அந்த எண்ணத்தின் அடிப்படையிலேதான் தேர்தல் நடைபெற வேண்டும், அதிலே ஒரு தெளிவான ஒரு நிலைமை ஏற்பட வேண்டும் என்ற கருத்தினுடைய அடிப்படையிலே, ஆளுநர் உரைக்கு பதில் உரை அளிக்கின்றபோது, வருகிற ஆகஸ்ட்-செப்டம்பர் திங்களிலே இந்த உள்ளாட்சிகள்

அனைத்திற்கும் தேர்தல்கள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள், முறைப்படி, வழிப்படி செய்யப்படும் என்பதற்கான காரண காரிய விளக்கங்களை நான் இங்கே குறிப்பிட்டுக் காட்டுகின்றேன். உள்ள படியே இந்தத் தேர்தல்களை நடத்தக்கூடாது என்பதல்ல. சாதாரணமாக பஞ்சாயத்துக்கள் என்று எடுத்துக்கொண்டால், இப்போது, 12232 ஊராட்சி மன்றங்கள் தமிழகத்தில் இருக்கின்றன. இதற்குக் கடைசியாக தேர்தல் நடைபெற்றது 1970 ஜூலைத் திங்களில். அதனுடைய காலம் முடிவு அடைந்தது 1975 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் முதல் நாள். முதல் நாள் முடிவு அடைந்துவிட்டாலும் கூட அப்போது இந்த ஊராட்சி மன்றங்கள் எல்லாம் கலைக்கப்படாமல், ஏற்கனவே இருந்த ஊராட்சி மன்றத் தலைவர்கள், ஊராட்சி மன்ற உறுப்பினர்களே, தேர்தல் நடக்காததன் காரணமாக அவர்களுடைய பதவி போகாமல் தனி அதிகாரிகள் நியமிக்கப்படாமல், தொடர்ந்து அவர்களே, தலைவர்களாகவும், உறுப்பினர்களாகவும், இருக்கட்டும் என்ற நிலை நீட்டிக்கப்பட்டு, அது 11-9-1979 ஆம் ஆண்டு வரையில் அவர்களுடைய காலம், 75-லே முடிந்தாலும்கூட, அதே தலைவர்கள் இருக்கலாம், அதே உறுப்பினர்கள் இருக்கலாம். பொதுமக்களுக்குத் தொண்டுகள் செய்யலாம் என்ற நிலையில், 11—9—1979 வரையில் நீட்டிக்கப்பட்டு, 12—9—1979-லேதான் தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள்.

அப்போதுகூட தேர்தல் நடத்த வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருந்தது. தேர்தல் நடத்த வேண்டும் என்ற எண்ணம் இருந்ததன் காரணமாகத்தான் மதுரை மாநகராட்சி மன்றத்தைப் பொறுத்தவரையில் ஆட்சிப் பொறுப்பை 1977-லே அண்ணா தி.மு. கழகம் ஏற்றுக்கொண்டாலும், 1978-லே மதுரை மாநகராட்சியினுடைய தேர்தல் முறைப்படி நடந்தது. அதற்குப் பிறகு, 1979-லே நடத்தலாம் என்பதற்கான தன்மைகள் வருகின்றபோது— அவ்வப்போது ஏற்பட்ட கால நிலைகளை விரிவாக எடுத்துச்சொல்ல எனக்கு நேரம் இல்லை என்றாலும்—பெரும் வெள்ளம், அதற்குப் பிறகு பஞ்சம், அதற்குப் பிறகு 1980-லே தேர்தல் வந்துவிடும் என்ற நிலை வந்துவிட்ட காரணத்தால், நாடாளுமன்றத் தேர்தல்களுக்கான முஸ்தீபுகள், பிறகு மாநில அரசு கலைக்கப்பட்ட நிலை எல்லாம் ஏற்பட்டது. மறுபடியும் நான்கு மாதங்கள் கழித்து மாநில அரசின் தேர்தல் நடைபெற்ற நிலை. அதற்குப்



(பிற்பகல் 2-00)

பிறகு வறட்சி ஏற்பட்ட நிலை. அந்த வறட்சியும் கூட மிகக் கடுமையான வறட்சியாக இருந்ததினால் தான், அப்பொழுது அதை நடத்தலாமா வேண்டாமா என்ற எண்ணம் ஒருபக்கம் இருந்தது. அந்த வறட்சி நிலை கூட கடந்த 72 ஆண்டுகளிலே தமிழகத்தினுடைய வரலாற்றை நாம் புரட்டி பார்ப்போமேயானால், 1982-83, 1983-84-லே இருந்த அளவிற்கு வேறு எப்போதும் இருந்தது இல்லை. அதைவிட மிக முக்கியமான காரணம்; ஒரு கருத்தினுடைய அடிப்படையான நிலைதான் இவ்வளவு காலதாமதம் ஏற்படுவதற்கும் காரணம்.

நான் ஏற்கெனவே எடுத்துச் சொல்லிய மாதிரி ஆதி திராவிட பழங்குடி மக்களுக்காக, ஊராட்சிகளிலும் சரி, ஊராட்சி ஒன்றியங்களிலும் சரி, நகராட்சி மன்றங்களிலும் சரி 18 சதவீதம் அவர்களுக்கு ஒதுக்கவேண்டும், பெண்களுக்கும் ஒரு கணிசமான அளவுக்கு உரிமை வழங்குவது நல்லது என்ற வகையில்தான் 15 சதவீதம் வழங்கவேண்டும் என்ற ஒரு கருத்தை மேற்கொண்டதன் காரணமாக, அந்தக் கருத்து எல்லாத் தரப்பினர்களாலும் ஏற்றுக் கொள்ளப்படாமல் அதற்கு தடை ஆணை வாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு, அது உயர்நீதி மன்றத்திற்கும் சென்று பிறகு உச்ச நீதிமன்றத்திற்கும் சென்று பல்வேறு நிலைமைகள் ஏற்பட்டதன் காரணமாக காலத்தாழ்வு ஏற்பட்டது.

இப்பொழுது கூட ஆக்ஸ்ட்--செப்டம்பர் திங்களில் இந்தத் தேர்தல் நடைபெறுமா அல்லது அது இன்னும் ஐயத்திற்கு உரியதுதானா என்று கேட்டார்கள். நாம் ஏற்கெனவே வைத்திருந்த சட்டத் திருத்தத்தின்படி அந்த 18 சதவீத அடிப்படை 15 சதவீத அடிப்படையில்தான் தேர்தல் நடைபெற வேண்டும் என்று சொல்லி இருப்பேனேயானால் செப்டம்பர் மாதத்தையும் என்னால் உறுதியாகச் சொல்ல முடியாது, ஆக்ஸ்ட் மாதத்தையும் என்னால் உறுதியாகச் சொல்ல முடியாது. எந்த ஒரு உறுதி மொழியையும் வழங்கவே முடியாது. அப்படியே தீர்ப்பு இப்போழுது தொடுக்கப்பட்ட வழக்கிற்கு வந்தாலும் கூட, அந்தச் சட்டங்களிலே வேறு ஒரு வழக்கைத் தொடுப்பதற்கு இண்டு இடுக்கு பார்த்துக் கொண்டுதான் இருப்பார்கள்.

ஆகவே, இப்பொழுது செப்டம்பர், ஆகஸ்ட் மாதங்களில் கட்டாயம் தேர்தல் நடக்கும் என்று சொல்வதற்குக் காரணமே பழைய முறையிலேயே எந்தவித மாச்சரியத்திற்கும் இடம் இல்லாமல், தகராறுகளுக்கு இடம் இல்லாமல், யாருக்கும் வேறுபட்ட கருத்துக்களுக்கு இடம் இல்லாமல் இருக்கவேண்டும் என்ற ஒரே காரணத்தினால்தான் பழைய முறையிலேயே நடத்த லாம் என்று சொல்லியிருக்கிறோம். அதனால்தான் ஆகஸ்ட் — செப்டம்பர் மாதங்களில் தேர்தல் கட்டாயம் நடைபெறும் என்று உறுதியாகச் சொல்லியிருக்கிறோம். இந்த உறுதியை முதலிலேயும் கூறினேன். இரண்டாவது முறையாக இன்றும் நான் உறுதி அளிக்கிறேன். அப்படி ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் நடத்து வதற்கு, காரணமாக இடைக்காலத்தில் உள்ள சில தன்மைகளை எடுத்துச் சொன்னேன்.

இடையிலே வர இருக்கிற தேர்தல், மே மாதம் ஏற்படுகிற வெப்ப நிலை, நம்முடைய மாநியக் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்ற தன்மை, ஆகியவைகளை வைத்துத்தான் ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் என்று சொன்னேன். இது போன்று மாநகராட்சி தேர்தலைப் பொறுத்தவரையிலும் கூட சென்னை மாநகராட்சி மன்றத்தில் தேர்தல் கடைசியாக நடைபெற்றது 1968-ல். அதனுடைய காலம் முடிவடைந்தது 1973 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் தேதி. அதற்குப் பிறகு அதனுடைய காலத்தை சிறிது காலம் நீட்டிப்புச் செய்தோம். 20—11—1973 வரை நீட்டிக்கப்பட்டது. அதற்குப் பிறகு 10—11—1973-லே தனி அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டார்கள். அந்தத் தனி அதிகாரியினுடைய காலம், நான் முதலிலே சொன்னது மாதிரி, இந்த மாமன்றத்திலே அவ்வப்போது திருத்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு இதுவரையிலும் நீட்டிக்கப்பட்டது.

மதுரை மாநகராட்சியைப் பொறுத்தவரையிலும் கடைசித் தேர்தல் நடைபெற்றது 1978-ல். அதனுடைய காலம் முடிவு அடைந்தது 1984 ஆம் ஆண்டு ஜூலை 29 ஆம் தேதி. தனி அதிகாரி நியமனம் 29 ஜூலை 1984 ஆம் நாளன்று. அதற்குப் பிறகு அதனுடைய கால நீட்டிப்பு இந்த அவையினால் நிறை வேற்றப்பட்டிருக்கிறது.





பொறுத்தவரையில் கோயம்புத்தூர் மாநகராட்சியைப் அதனுடைய கடைசி தேர்தல் நடந்தது 1969-ல். அதற்கு 1—7—1975-ல் தனி அதிகாரி நியமிக்கப்பட்டார். அதை அப்-கிரேட் பண்ணியது 1—5—1981 ஆம் ஆண்டு. அது கார்ப்பொரேஷனாக ஆகியதற்குப் பிறகு ஏற்பட்ட நிலைமை களையெல்லாம் கூட இங்கே உறுப்பினர்கள் சிலர் எடுத்துப் பேசினார்கள். அந்தத் தனி அதிகாரியினுடைய காலமும் நீட்டிக்கப்பெற்று வருகிறது.

96 நகராட்சிகளுக்கு நகராட்சிகளைப் பொறுத்தவரையில் நாம் தேர்தலை நடத்தியாக வேண்டும். கடைசித் தேர்தலை நடத்தியது 1969 ஏப்ரல் திங்களில். அதனுடைய காலம் முடிவடைந்தது 1974 ஏப்ரல் 30 ஆம் நாள். பிறகு அதனுடைய காலத்தை 76-வது ஆண்டுவரை இரண்டாண்டுகளுக்கு அதே தலைவரை வைத்து உறுப்பினர்களை வைத்து நீட்டிக்கப்பட்டு நடத்தப்பட்டது. இருந்தாலும் கூட பிறகு தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள். இப்பொழுது வந்திருக்கிற திருத்தங்கள் எல்லாம் அந்தத் தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை ஒரு ஆண்டிற்கு நீட்டிக்க வேண்டும் என்று தான். ஆகஸ்ட் — செப்டம்பரிலே இந்தத் தேர்தல் நடத்தப்படும் என்று ஒரு திட்டவட்டமான கொள்கையை எடுப்பதற்கு முன்னாலேயே இங்கே அறிமுகப்படுத்தப்பட்டு ஒரு ஆண்டு கால நீட்டிப்புக் கேட்கப்பட்டிருக்கிறது.

ஒரு ஆண்டுக் காலம் கால நீட்டிப்பு கேட்பதன் காரணமாகவே ஒரு ஆண்டு வரையில் அவர்கள் இருப்பார்கள் என்பது அல்ல. அதற்குள்ளாக எவ்வளவுக்கு எவ்வளவு விரைவில் இந்த தேர்தலை நடத்த முடியுமோ, அந்த அளவிற்கு நடத்தி முடிக்கப்பட்டால் அந்த தனி அதிகாரிகளுடைய பதவிக் காலம் அன்றோடு முடிவு அடைந்துவிடும். ஒரு ஆண்டுக் காலம் என்று இங்கே கொண்டு வந்திருந்தாலும்கூட, அந்த ஓராண்டிற்குள் தேர்தல் நடத்தப் பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வந்து முறைப்படி தலைவரையும், துணைத் தலைவரையும் தேர்ந்தெடுத்ததற்குப் பிறகு தனி அதிகாரிகளுடைய காலம் முடிவு அடைந்து விடுகின்றன.

இதிலே எடுத்துச் சொல்கின்றபோது, ஏப்ரல் முதல் வாரத்திற்குள்ளாக இந்தச் சட்ட திருத்தத்தை கொண்டுவரவேண்டும் என்ற அளவிற்கு ஆய்ந்து கொண்டிருக்கிறோம். சட்ட திருத்தமும் கொண்டுவரப்படும். மாண்புமிகு உறுப்பினர்கள், திருத்தம் கொண்டுவரப்படுகின்றபோது தங்கள் கருத்துக்களை தெளிவாகவும், திட்டவட்டமாகவும் எடுத்துச் சொல்வதற்கு வழிவகைகள் இருக்கின்றன. அதுபோன்று ஆதி திராவிடர், பழங்குடியினர், பெண்களுக்கு நாம் கொடுப்பது எந்த விகிதத்தின் அடிப்படையில் இருக்கலாம், எந்த அளவில் இருக்கலாம் என்று ஓரளவிற்கு நகல் திட்டத்தினை வைக்கின்றபோது மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்து அதிலே தெரிவிக்கப்படும். கோ-ஆப்ட் செய்கின்ற அளவிற்கு நியமனம் செய்வது, தலைவர், துணைத் தலைவர் தேர்தல் நடப்பதற்கு முன்னாலேயே செய்வது நல்லதா அல்லது, தலைவர், துணைத் தலைவர் தேர்தலுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை வைத்து நடத்தி முடித்ததற்கு பிறகு செய்வது நல்லதா என்று ஆலோசனை நடத்திய பிறகு அநத பில் முழுவதும் இங்கே கொண்டு வந்து வைக்கின்றபோது உங்களுடைய முழு கருத்தையும் அறிந்ததற்கு பிறகு நாட்கள் கட்டாயம் கணக்கிடப்பட்டு ஆகஸ்ட்-செப்டம்பரிலே நடத்தலாம். எல்லா தேர்தலும், இப்பொழுது நாடாளுமன்ற தேர்தலும், சட்டமன்ற தேர்தலும் ஒரே நாளில் நடப்பதை போல, நடத்துவதற்கு வழி உண்டா என்று பார்க்கலாம். ஊராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றியம், நகராட்சி, மாநகராட்சி இவைகளை இன்னொரு கட்டத்திலே நடத்தலாமா என்று பார்க்கலாம். இதிலே உட்கார்ந்து யோசிக்கின்றபோது தெளிவு உண்டாகும். இந்தத் தேதி எக்காரணம் கொண்டும் ஆகஸ்ட்—செப்டம்பரை தாண்டாத அளவிற்கு பார்த்துக்கொள்ள முடியும். போதுமான அளவிற்கு காலவரை இருக்கிறது.

இதில் மாற்று ஓட்டுக்கள், கள்ள ஓட்டுக்கள் போடாத அளவிற்கு, அவற்றை தடுக்கின்ற அளவிற்கு ஐடெண்டிபிகேஷன் முறை என்று இருக்கிறது. இதுகுறித்து மத்திய அரசிற்கு எழுதினோம். இதில் பெரும் செலவாகும் என்பதினால் மத்திய அரசு இதில் பங்கு ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே இதனை நடத்துவதென்றால் நாம் தான் நடத்த வேண்டும். இதற்கு பெரும் செலவு ஏற்பட்டாலும் கூட, இதில்





உள்ள குறைபாடுகள் என்ன என்பதை பார்க்க வேண்டும். ஆகவே போட்டோ எடுப்பதென்றால், எங்கே எடுப்பது எந்த சமயத்தில் எடுப்பது, எடுக்கின்றபோது வீட்டில் உள்ளவர்கள் எல்லோரும் இருப்பார்களா, இல்லாவிட்டால் என்ன செய்வது என்ற பிரச்சனைகளை கவனிக்க வேண்டும். அவர்கள் தப்பித் தவறி போட்டோவை தொலைத்து விட்டு நிர்பார்களேயானால் ஓட்டு போட அவர்களுக்கு உரிமை இருக்கிறதா, இல்லையா என்றும், ஒருவேளை அவர்கள் வழக்கு மன்றத்திற்கு சென்றால்— வழக்கு மன்றம் என்ன கருதும் என்றால். போட்டோவைவிட, இந்த உரிமை தான் முக்கியமே தவிர என்று — ஒருவருடைய உரிமையை தடுக்கக்கூடாது என்று அவர்கள் தீர்ப்பு அளித்து விடுவார்களேயானால் பல சங்கடங்கள் வரும். அதையும் அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. போட்டோ வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி, ஆகஸ்ட்—செப்டம்பர் மாதங்களில் தேர்தல் உண்டு என்பதை நான் தெளிவுபட சொல்கிறேன். வந்துவிட்டால், சுமுகமாக நிறைவேறிவிடுமானால், ஆகஸ்ட்—செப்டம்பரில் நடத்தலாம். நிறைவேறாவிட்டாலும் பழைய முறைப்படி இங்கு கொண்டு வந்து நிறைவேற்றுகின்ற சட்டத்தின் அடிப்படையில், நாம் நிறைவேற்றலாம.

ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாநகராட்சிகள், நகராட்சிகள் செய்கின்ற வேலைகளை தனி அதிகாரிகள் செய்ய வேண்டும். இந்த தனி அதிகாரிகளை நியமிக்காமல் நிறுத்தி விட்டால், ஒரு பெரிய பூட்டு வாங்கிக்கொண்டு போய் பூட்டிவிட்டு தேர்தல் நடத்தியதற்கு பிறகு தான் திறக்க வேண்டிய அவசியம் ஏற்படும். காரியங்களை நடத்துவதற்கு தனி அதிகாரிகளை வேண்டாம் என்று சொல்லிவிட முடியாது. நாம் எடுத்து சொன்னபடி தேர்தலை கூடுமான வரையில் விரைவாக நடத்துவதற்கு இருப்பதால் தனி அதிகாரிகளுடைய காலத்தை இனியும் நீட்டிக்க வேண்டிய நிலை ஏற்படாது. திருத்தப்பட்ட சட்டத்தை கொண்டு வந்தால் நிச்சயமாக சொல்ல முடியாது, நடத்துவதா வேண்டாமா முடியுமா முடியாதா என்று. அந்த பழைய நிலையில் நடத்துவது என்ற முடிவிற்கு வந்ததன் காரணம், பழைய சட்டத்தை வைத்து நடத்துவதால், தகராறுகளோ, மாச்சரியங்களோ, காலதாமதமோ ஏற்படுவதற்கு இடம் இல்லை என்று திட்டவட்டமாக, தெளிவாக இந்த அரசு கருதுகிறது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 மார்ச், 18

மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச்சொன்ன கருத்துக்
களுக்கு மதிப்பு அளித்து, அந்த கருத்துக்களின் அடிப்படையிலே,
செய்யப்பட வேண்டிய பணிகள் செய்து, உள்ளாட்சித் துறை மூல
மாக மேற்கொள்ள வேண்டிய பணிகள் எல்லாம் மேற்கொள்ளப்
படும். மாண்புமிகு உறுப்பினர்களின் குரலில் ஒலித்த கருத்துக்
களை அந்தந்த துறையைச் சேர்ந்த, அந்தந்த நிலையைச் சேர்ந்த
அதிகாரிகள் செவி மடுத்து, அதில் உள்ள குறைபாடுகளை
போக்குவதற்கு முயற்சிகளை எடுத்துக்கொள்வார்கள் என்று
சொல்லி, இந்த திருத்த தீர்மானங்களை நிறைவேற்றுவதன்
மூலமாக நல்லதொரு சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் எனக்கு
அடுத்து பேசவிருந்தால் பேசலாம்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்** : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை
பேரும் ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகளுக்கான சட்ட
திருத்தத்திற்கு பல்வேறு நல்ல கருத்துக்களை தந்திருக்
கிறார்கள்.

(பிற்பகல் 2.10)

மாண்புமிகு திரு. நடராஜன் அவர்கள் இந்தத் தேர்தல்
நடக்காது, நிச்சயமாக நடக்காது என்று சொன்ன வாதத்திற்கு,
அவை முன்னவர் அதற்குரிய பதிலைத் தந்திருக்கிறார்கள்.
ஆகவே உங்களுடைய எண்ணங்களை இந்த அரசு மதிக்கின்றது
என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

அதைப்போலவே திரு. தங்கமணி அவர்கள் பேசுகின்றபோது,
கிராம ராஜ்யம் வந்தால் தான், ராம ராஜ்யம் வரும் என்று
சொன்னார்கள். ராமராஜ்யம் வந்ததற்குப் பின்னர் கிராம
ராஜியம் வந்ததற்குப் பல சான்றுகளை என்னாலே எடுத்துச்
சொல்லமுடியும்.

இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் வந்ததற்குப் பிறகு
தான் கிராமங்களிலே நல்ல பல திட்டங்கள் தீட்டப்பட்டு, செயல்
பட்டு, அவைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. திரு. மூக்கா
ராமலிங்கம் அவர்கள் தெரிவித்தார்கள். பல நல்ல திட்டங்கள் பல



1985 மார்ச், 18] [திரு. ஆர். சௌந்திரராஜன்]

இடங்களிலே நல்ல முறையிலே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன
சில இடங்களில் குறைபாடுகள் இருக்கின்றன என்று
சொன்னார்கள். மிகப் பெரிய பணிகள் நடைபெறும்போது
அங்கே ஒன்றிரண்டு தவறுகள் நடைபெறலாம். அதற்குரிய
நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் சமத் ஒரு நல்ல
கருத்தைச் சொன்னார்கள். கடல் நீரை, நல்ல நீராக மாற்று
கின்ற ஒரு நிலைமையை உருவாக்கலாம் என்று. அந்தத்
திட்டத்தை பரிசீலித்து, அதற்கு மிகவும் செலவாகும் என்ற ஒரு
நிலையிலே, இப்போதும் அதை ஆய்வில் வைத்துக்கொண்டிருக்
கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமங்களிலே இருக்கின்ற மக்களுடைய நீண்ட கால
வேண்டுகோள், கழிப்பிடங்கள் கட்டப்பட வேண்டுமென்பது
தான். அதற்காக இந்த அரசு, குறிப்பாக நம்முடைய தமிழக
முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள் தான் ரூ. 22 கோடியை
ஒதுக்கி, இதுவரை 11,400 ஊராட்சிகளில், ரூ. 16 கோடி செலவில்
இன்றையதினம் அந்தக் கழிப்பிடங்களை உருவாக்கியிருக்
கிறார்கள். அவைகள் ஒழுங்காக இயங்கவில்லை என்று
சொன்னார்கள். அதை இந்த அரசு கவனத்தில் வைத்துக்
கொண்டு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும். அங்கே
தண்ணீர் பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினை. கழிப்பறைகளைக்
கூட வார்தா டைப்பில் கட்டலாமா என்பதை இந்த அரசு
ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

சென்னிமலைப் பேரூராட்சியில் வீட்டு வரியை மிக வேகமாக
வசூலிக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அந்த வரிகளை
வசூலித்தால் தான், நிர்வாகம் நல்லமுறையில், எந்த வித
சங்கடமும் இல்லாமல் நடைபெறும். எனவே வசூலிக்க வேண்டிய
சூழ்நிலை அங்கே வேகமாக இருக்கிறது. இங்கே தெரிவிக்கப்
பட்ட எண்ணங்களின்படி, தேர்தல் ஜனநாயக முறையில் நடத்தப்
படும் என்று அவை முன்னவர் உறுதியளித்திருக்கிறார்கள்.
உங்கள் குறைபாடுகளும் முறையாக கவனிக்கப்படும் என்று
சொல்லி இந்தச் சட்டத்தை நிறைவேற்றித்தருமாறு கேட்டுக்
கொள்கிறேன்.

[1985 மார்ச் 18

**ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1985.**

**திரு.** சி. பழனிமுத்து அவர்களுடைய தீர்மானம், **பேரவையின்** அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

**மாண்புமிகு** பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1985) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள், 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1985) நிறைவேற்றப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.



1985 மார்ச் 18]

**ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1985.**

**திரு.** சி. பழனிமுத்து அவர்களுடைய தீர்மானம், **பேரவையின்** அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

**மாண்புமிகு** பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1985-ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1985) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

"தமிழ்நாடு 1985-ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 10/1985) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

[1985 மார்ச், 18

ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1985.

திரு. சி. பழனிமுத்து அவர்களுடைய தீர்மானம், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி;

"தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1985) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 11/1985) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (19—3—1985) காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-17 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



1985 மார்ச், 18]

2. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(ஆ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

100. செங்கல்பட்டு மாவட்டம், வரதராஜபுரத்தில் ஓர் சோதனைச் சாவடி அமைப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைத் துறையின் 30—10—1984 ஆம் நாளிட்ட 1203 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) ஆம் பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

101. வடிவமைப்புடன் கூடிய அச்சிட்ட சலவைத் தாள், திருமண அழைப்பிதழ் அட்டை முதலியவற்றிற்கு விதிக்கப்பட்ட விற்பனை வரி, கூடுதல் வரி மற்றும் மேல்வரி ஆகியவற்றை தள்ளி விடுதல் குறித்து வணிக வரிகள் — சமய அறக்கட்டளைத் துறையின் 3—12—1984 ஆம் நாளிட்ட 1309 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) ஆம் பிரிவின் கீழ் பேரவை முன்வைக்கப்பெற்றது.]

102. கால்நடைத் தீவனம் நீங்கலாக, தவிடு, உமி, பயறு வகைகள், தானியங்கள் இவற்றின் தொய் ஆகியவற்றின் விற்பனை மீது 4—3—1974 ஆம் நாளிலிருந்து 8—5—1979 ஆம் நாள் வரை விதிக்கப்பட்ட வரி, கூடுதல் வரி, மேல்வரி ஆகியவற்றைத் தள்ளி விடுதல் குறித்து வணிக வரி-சமய அறக்கட்டளைத் துறையின் 10—9—1984 ஆம் நாளிட்ட 992 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) ஆம் பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

103. உசிலம்பட்டி பேக்கர்ஸ் ஆண்டு கன்பெஷனர்ஸ் அசோசியேஷனைச் சேர்ந்த பதினான்கு உறுப்பினர்களிடமிருந்து 16—9—1981 ஆம் நாளிலிருந்து 7—3—1983 ஆம் நாள் வரையிலான கால அளவில் விற்பனை செய்த பேக்கரிஸ் பொருள்களின் விற்பனை மீது விதிக்கப்பட்ட வரி, கூடுதல் வரி, மேல் வரி ஆகியவற்றைத் தள்ளிவிடுதல் குறித்து வணிக வரி-சமய

அறக்கட்டளைத் துறையின் 12—11—1984 ஆம் நாளிட்ட 1237 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) ஆம் பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

104. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தம் செய்வது குறித்து, உள் துறையின் 10—5—1984 ஆம் நாளிட்ட 1065 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) ஆம் பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

105. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு விதி முறைகளில் திருத்தம் செய்வது குறித்து, பணியாளர்மைப்பு—நிருவாகச் சீர்திருத்தத் துறையின் (பணியாளரமைப்பு-எம்) 21—1—1985 ஆம் நாளிட்ட 60 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசியமைப்புச் சட்டத்தின் 320 (5) ஆம் பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

106. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான பத்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

107. சேரன் போக்குவரத்துக் கழகத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான பதிமூன்றாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

108. மருது பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான இரண்டாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]



109. தமிழ்நாடு பீங்கான் நிறுவனத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான பத்தாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

## (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

29. 1985-ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 1/1985) நகலும், இணைப்பும்.

30. 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1985) நகலும், இணைப்பும்.

136369